[illegible]

[illegible] நடவடிக்கைகள்

இயக்க வெளியீடு

தொகுதி - 2 எண் - 3

[illegible] - 1992

D
211,31 NS
N92 22.3
164774

வெளியீடு 5-11-1992 Issued 5-11-1992

82-2/93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 3, 1992 - தொகுதி 22 எண். 3
Friday the 3rd April, 1992 - Volume 22 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat,**
**Madras-600 009**

விலை ரூ. 3-00] [Price Rs. 3 00

# உள்ளடக்கம்

3-4-1992 பக்கங்கள்


**வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் .. 483—520

**கவன ஈர்ப்பு—**

(அ) உதகமண்டலம்-கூடலூர் கல்லட்டி காட்டுச் சாலையில் வாகனங்கள் செல்லத் தடை விதித்துள்ளது குறித்து. 521—524

(ஆ) சேலத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படாததால் சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது குறித்து. 524—527

**மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.**

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள் .. 527—617

(ஆ) கோரிக்கை எண் 54— தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா .. 528, 529, 533, 559, 568, 576, 577, 578, 579, 584, 585, 587, 588, 589, 591, 592, 606, 609, 612

*திரு. மா. சுந்தரதாஸ்.. .. .. .. 530—540

திரு. மு. தென்னவன் .. .. .. .. 540—545

*திரு. நா. சா. பழனிசாமி .. .. .. 546—551

திரு. கோ. காளன் .. .. .. .. 551—558

| | பக்கங்கள் |
|---|---|
| *திரு. எஸ். திருநாவுக்கரசு .. .. .. .. | 559—568 |
| திரு. கு. தங்கமுத்து .. .. .. .. | 569—573 |
| திரு. ஜி. பழனிசாமி .. .. .. .. | 574—581 |
| *திரு. ச. இராமச்சந்திரன் .. .. .. | 581—592 |
| *திரு. ச. காந்திராஜன் .. .. .. | 592—597 |
| திரு. கே. செல்வராஜ் .. .. .. .. | 597—600 |
| *திருமதி கே. மரியமுல் ஆசியா .. .. .. | 600—603 |
| திரு. பி. வி. இராஜேந்திரன் .. .. .. | 604—615 |

4. அரசினர் தீர்மானம்—

| | |
|---|---|
| விதி 32-ஐத் தளர்த்தல் .. .. .. | 616—617 |

5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் . 617


164974

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 21, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு, 2023

1992 ஏப்ரல் 3, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.''

பெருமைக்குரிய பண்புகளுக்குரியோர் செய்தற்கரிய செயல்களைச் செய்தற்கானஏற்ற வழிகளில் செய்து முடிக்கக் கூடியவர் ஆவர்.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா எண் 455, திரு. செ. பெருமாள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

455—

#### வாழப்பாடியில் தாலுகா அலுவலகம்.

*3987 திரு. செ. பெருமாள்:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சேலம் தாலுகாவைப் பிரித்து, வாழப்பாடியில் தாலுகா அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இச் செயற்குறிப்பு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அவரது அறிக்கை கிடைத்த பிறகு அரசால் முடிவெடுக்கப்படும்.

[1992 ஏப்ரல் 3

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி, வாழப்பாடிக்கு வருகைதரும் போது வாழப்பாடியை மையமாக வைத்து தாலுகா அலுவலகம் அமைக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அந்த உத்தரவினை மிக விரைவில் நிறைவேற்றி வைப்பதற்கு, அமைச்சர் அவர்கள் முன் வாருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கிற அந்த இடம் சுமார் 4 உள் வட்டங்களும், 64 வருவாய் கிராமங்களும், ஜமீன் தாருடைய கிராமங்களாக இருந்தன. அதை இன்றைக்குத் தனியாக ஆதீன மேலாளர், அதாவது 'எஸ்டேட் மேனேஜர்' பார்த்துக் கொண்டு இருக்கிறார். அதாவது துணை வட்டாட்சியர். இது இன்றைக்கு சேலத்தில் இருக்கிறது. சேலத்தில் இருக்கிற இந்த எஸ்டேட் மேனேஜரை, அதாவது துணை வட்டாட்சியரை அங்கே மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. மாற்ற வேண்டும் என்று மட்டுமல்ல. அதை வட்டாட்சியர் அலுவலகம் என்ற அளவுக்கு உயர்த்த வேண்டும் என்றும் இருக்கிறது. அரசு இதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஏழை எளிய மக்கள் மற்றும் மாணவர்கள் பயன் பெறும் வகையில் சேலத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிற ஆதீன மேலாளர் அலுவலகத்தை, வாழப்பாடியில்—இடம் தருகிறார்கள் அங்கே—அமைத்தால் நல்ல முறையில் இயங்குவதற்கு பொதுமக்கள் உறுதுணையாக இருப்பார்கள். எனவே, அதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதால்தான் அந்தச் செயற்குறிப்பு ஆய்வில் இருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம், வாழப்பாடியிலேயே இருக்க வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், தானைத் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களுடைய ஊரில் இந்தத் தாலுக்காவை அமைப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்த அறிவிப்புக்கு மிக்க நன்றி



1992 ஏப்ரல் 3]

யினை மனப்பூர்வமாக, உளப்பூர்வமாக, இதய பூர்வமாக தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்படி உடனடியாக அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய உத்தரவுப்படி நாங்கள் எப்போதும் நடப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

456—

வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

*4095 திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வணிகர் நல வாரியத்தில் (Traders welfare Board) இதுவரை உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இவ்வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து இன்னும் அதிக அளவிற்கு விளம்பரம் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வணிகர் நல வாரியத்தில் இதுவரையில் 3,147 வணிகர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

(ஆ) இந்த வாரியத்தின் நலன் குறித்து, தமிழ்ப் பேப்பர்களில் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கு எவ்வளவு கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசில் வணிகர்களாகப் பதிவு செய்து கொள்பவர்கள், ஆண்டுச் சந்தா 25 ரூபாய் செலுத்தி உறுப்பினர்களாக ஆகலாம்.

[1992 ஏப்ரல் 3

முற்பகல் 9–35

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வணிகர் நல வாரியத்தில் இதுவரை 3,500 க்கும் குறைவாகவே உறுப்பினர்கள் சேர்ந்திருப்பதாக இங்கே தெரிவித்தார்கள், வாரியத்தில் சேருவதனால் கிடைக்கும் பலன்களைப் பற்றி, இன்னும் கூடுதலாக நமது வியாபாரிகள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் தெரியப்படுத்தினால், இந்த வாரியத்தில் சேரக்கூடிய உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாக வாய்ப்பு இருக்கிறது. எனவே, இதை அதிகப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முதலிலேயே செய்தித்தாளிலே வந்து இருக்கிறது, இந்த வாரியத்தில் அவர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு என்னென்ன நன்மைகள் என்பது அங்கேயிருக்கின்ற வணிகர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், வணிகர்களுக்குத் தெரிந்த விஷயத்தை திருப்பிச் சொல்லத் தேவையில்லை என்றுதான் சொல்லவில்லை, தேவைப்பட்டால் அறிவிக்கிறோம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு, சி, ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சட்டமன்ற உறுப்பினர்கள் யாரையும் இந்த வணிகர்கள் நல வாரியத்திலே உறுப்பினர் ஆக்காமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்றத்தில் பல்வேறு விவரங்களை எடுத்துப் பேசுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன, அதைப்போல, வணிகர்களைப் பற்றி நல்லதும் கெட்டதும் தெரிவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன, ஆகையினால் வணிகர்களை மட்டுமே போட்டால், அவர்களைப் பற்றிப் பேசுவார்கள் என்பதற்காகத்தான் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்,

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாநில அளவில் இருப்பதைப் போல வணிகர் நல வாரியத்தை மாவட்ட அளவிலே, அதாவது ஒரு டிஸ்ட்ரிக்ட் போர்ட் ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்,



1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பொது மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று எண்ணித்தான் மாவட்டந்தோறும் அவைகளை நீடிக்க வேண்டும். ஆனால், வணிகர்களுக்குச் செய்கிறபோது, வணிகர்கள் இன்றைக்கு 3,000 பேர்கள்தான் வந்திருக்கிறார்கள். ஒரு இடத்தில் இருந்தால்தான் அதைப் பற்றி யோசித்து, அதுவும் முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இருக்கிறபோது, அது வணிகர்களுடைய நலனை நிச்சயமாகப் பாதுகாக்கும், இது மாவட்டந்தோறும் தேவையில்லை என்பதை உறுதியாகவே தெரிவித்துக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 457, திரு. ப. கலிய பெருமாள், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

457—

திருவையாறு ஒன்றியத்தில் பிற்பட்டோருக்கான மாணவர் விடுதி

*5259 திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருவையாறு ஒன்றியத்தில் பிற்பட்டோருக்கான மாணவர் விடுதி ஒன்று கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை. ஏனெனில், பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி இல்லாததால், கட்டிடம் கட்டுகிற பிரச்சினை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடுதியே இல்லாமல் கட்டடம் கேட்டீர்கள் என்றால் எப்படி ? விடுதி கேளுங்கள்.

திரு. ப, கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். திருவையாறு ஒன்றியத்தில் திருவையாறு பேரூராட்சியிலும், திருப்பரங்குறிச்சி பேரூராட்சியிலும் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதோடு, அரசர் குறவர் கல்லூரியும் அங்கே இருக்கின்றது. வெளி மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள் அந்த அரசர் கல்லூரியிலே வந்து சேர்ந்து படிக்கிறார்கள். இந்த உயர்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்கள் கிராமப் பகுதியிலே இருந்து, தொலை தூரத்திலிருந்து 6 மைல் 8 மைல் தூரம் வந்து படிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள், அந்த கிராமப் பகுதியிலே பேருந்துகள் ஒரு தடவை, இரண்டு தடவைதான் போகிறது. பேருந்தை நம்பி அல்லது சைக்கிள்

களை நம்பி அவர்கள் இருக்கின்றார்கள், அதுவும் பேருந்தை விட்டுவிட்டால், அவர்கள் சைக்கிளிலே வந்து போக வேண்டிய நிலை இருக்கிறது. பேருந்தை விட்டுவிட்டால் அவர்கள் வருவது சிரமம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஹாஸ்டல் கேட்கப் போகிறீர்களா? பேருந்து கேட்கப் போகிறீர்களா? ஹாஸ்டல் ஆரம்பிக்கப்படுமா என்று கேளுங்கள்.

<u>திரு. ப. கலியபெருமாள் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவையாறு ஊராட்சிக்குட்பட்டு மாணவர் விடுதி அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோன்று, திருவையாறு ஒன்றியத்திலே இப்போது மாணவர்கள் விடுதி இல்லை என்று தெரிகிறது. இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு புதிய விடுதி தொடங்க இயலுமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். அப்படி தொடங்குவதானாலும் அது மாணவியருக்குத்தான் விடுதி தொடங்குவதற்கு அரசு இப்போது முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 458, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

458—

<u>பட்டணம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம்.</u>

*4218 <u>திருமதி க. பழனியம்மாள் :</u>

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராசிபுரம் தொகுதி பட்டணம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஹட்கோ நிதியுதவி மூலம் 1991–92 ஆம் ஆண்டில் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட தேர்வு செய்யப்பட்டுள்ள 64 பள்ளிகளுள், பட்டணம் அரசு உயர்நிலைப் பள்ளியும் அடங்கும்.



(ஆ) கட்டுமானப் பணிக்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

<u>திருமதி க. பழனியம்மாள் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இராசிபுரம் பட்டணம் அரசு உயர்நிலைப் பள்ளி கட்டுவதற்காக அனுமதி வழங்கியிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு, அங்கே எத்தனை வகுப்பறைகள் கட்டித் தரப்படும் என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பள்ளிக்கு 3 வகுப்பறைகள் வீதம் வகுப்பறைக் கட்டிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்குரிய அந்த செலவுத் தொகைப் பற்றிய விவரம் இதிலே இல்லை. தனியே கேட்டால் தரப்படும்.

<u>திருமதி க. பழனியம்மாள் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்பட்டு, மாணவர்களுடைய பயனுக்காக வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஆகவே, செலவுத் தொகை கொஞ்சம் ஏறுகின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தால், அதைப்பற்றி எல்லாம் முடிவு செய்து, கூடிய விரைவிலே அந்தக் கட்டிடத்தை முடிப்பார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 459, <u>திரு. எ. ஏகாம்பர ரெட்டி,</u> மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அரசு கலைக்கல்லூரிகளில் இட ஒதுக்கீடு.</u>

459—

*4300 <u>திரு. எ. ஏகாம்பர ரெட்டி :</u>

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1990–91-ல் இலங்கைத் தமிழ் அகதிகளின் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு தமிழ்நாட்டில் உள்ள அரசு கலைக் கல்லூரிகளில் ஒதுக்கப்பட்டு வந்த இடங்களை ரத்து செய்ய அரசு உத்தரவிட்டுள்ளதா ?

[1992 ஏப்ரல் 3

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்காலிகமாகத்தான் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது ; ரத்து செய்யவில்லை.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியில் மருத்துவக் கல்லூரிகளையும் சேர்த்து கேட்டிருந்தேன். அது விடப்பட்டிருக்கிறது. நான், காரணம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி கல்வி அமைச்சரின் கீழ் இல்லை.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரத்து செய்யவில்லை, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ரத்து செய்யவில்லையென்றால் ஏற்பட்ட காலியிடங்களில் நம்முடைய தமிழ்நாட்டிலே காத்து இருப்போர் பட்டியலில் இருக்கின்ற கேன்டிடேட்ஸ் அனுமதி பெற்று அவர்களை அட்மிட் செய்ய இருக்கிறார்களா, இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இலங்கையிலிருந்து வந்திருக்கின்ற இலங்கைத் தமிழர்களுடைய அந்த மாணவர்களுக்கு நாம் இடம் தருவதிலே இந்த முடிவை எடுத்திருக்கிறோம். அந்த இடங்கள் தமிழ்நாட்டு மாணவர்களுக்குக் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள், மருத்துவக் கல்லூரி பற்றிக் கேட்ட அந்த ஒரு பகுதி, மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வந்த உடன், தனியாக எடுத்துக்கொள்ளப்படும். திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து அகதிகளாக இங்கே வந்து பள்ளிகளில் சேர்பவர்கள் மறைமுகமாக தீவிரவாத கும்பலோடு சேர்ந்து, பயிற்சி முகாமில் ஈடுபடுவதாக அறிகிறோம். குறிப்பாக கோயம்புத்தூரிலுள்ள உடுமலைப்பேட்டை பகுதியில்



992 ஏப்ரல் 3]

விடுதலைப் புலிகளுடைய பயிற்சி முகாம் நடந்து கொண்டிருந்தது. அந்தப் பயிற்சி முகாமில் இந்த மாணவர்கள் கலந்துகொள்வதாக எங்களுக்குத் தகவல் வந்து, நாங்களே கூட போய்ப் பார்த்தோம். ஆகவே, அப்படி தீவிரவாத இயக்கங்களோடு கலந்துகொள்கிற மாணவர்களைத் திரும்ப இலங்கைக்கு அனுப்ப இந்த அரசு அவர்களுக்கு அளித்திருக்கின்ற கல்விச் சலுகையை ரத்து செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தவறான காரியங்களில் ஈடுபடுகிற காரணத்தினால்தான், அப்படி அங்கிருந்து வருகின்ற யாருக்கும் இடம் தருவதில்லை என்ற முடிவை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, இது அந்நிய நாட்டைச் சார்ந்தவர்கள், அந்நிய நாட்டைச் சார்ந்தவர்களுக்கு ஒரு மாநில அரசு இடம் தருவது என்பது, மத்திய அரசுக்குத் தெரியாமல் நாம் தருவது என்பது அது ஒரு முறைகேடுதான். இருந்தாலும் இதற்கு முன்னாலே இந்த முறைகேட்டை செய்து, நாம் அவர்களுக்கு அனுமதி தந்துகொண்டு இருந்தோம், இப்பொழுது அந்த முறைகேட்டை நாம் செய்ய வேண்டிய தேவையில்லை என்கிற காரணத்தினால், அதை நாம் நிறுத்தி வைத்திருக்கிறோம், இப்பொழுது இங்கு படிக்கின்ற இலங்கை மாணவர்கள், எந்த மாணவர்களாக இருந்தாலும், தீவிரவாதிகளோடு சேர்ந்துகொண்டு நாட்டினுடைய அமைதிக்கு விரோதமாக, நாட்டினுடைய நலனுக்கு விரோதமாக, நாட்டுக்கே விரோதமாகச் செயல்படுவதாகத் தெரிந்தால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை இருக்கின்ற சட்டங்களின் அடிப்படையில் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை அகதிகளுக்குக் கொடுக்கும் இடங்களை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாக நம் இந்தியாவிலேயே பின்தங்கிய மாகாணங்களாக இருக்கின்ற, செவன் ஹில்ஸ் ஸ்டேட்ஸ் என்று சொல்லக்கூடிய அருணாச்சலப் பிரதேசம், அஸ்ஸாம், மிஸோராம், மேகாலயா, நாகலாந்து, ஹிமாச்சலப் பிரதேசம் போன்ற நார்த் ஈஸ்டர்ன் பிராவின்சஸ்-ல் வசிக்கும் தமிழர்களின் பிள்ளைகளுக்குக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு எல்லாம் இடம் வாங்கிக்கொள்வதற்கு இப்பொழுதே நடைமுறையில் பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன. இது வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களுக்கு, அந்த நாட்டிலே வாய்ப்பு இல்லை என்ற காரணத்

தினாலேதான் நாம் இங்கே கொடுத்து, தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள், தமிழ் மொழியைப் பேசுகின்ற காரணத்திற்காக இந்த வாய்ப்புகளைத் தந்தோம். ஆனால், அவர்கள் தவறாகப் பயன்படுத்துகின்ற நிலைமைகள் உருவானபிறகு, நாம் அதைத் தருவது என்பது தவறு. அது தவறு என்கிற முடிவு காரணமாக இப்பொழுது சேர்த்துக் கொள்ளவில்லை என்று முடிவெடுத்திருக்கிறோம்.

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 460. திரு. ப. ரங்கநாதன். மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்,

460—

புறநகர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்குகள்.

*4549 திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்கான அரங்குகள் திறக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கென தனி சிறப்பு நிபுணர்கள் அங்கு நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னை, பெரியார் புறநகர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்கான அரங்குகள் ஏற்கனவே நான்கு உள்ளன. ஆகவே, இச்கேள்விக்கு இடமில்லை.

(ஆ) இம் மருத்துவமனையில் மருத்துவர் பொறுப்பு குடிமை மருத்துவ அலுவலர் ஆவார். அவர் அறுவை சிகிச்சை தனிசிறப்பு மருத்துவ நிபுணரும், கூடுதல் பேராசிரியரும் ஆவார். மேலும் உதவி மயக்க மருத்துவ அலுவலரும் பணியாற்றி வருகிறார்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 அறுவை சிகிச்சைப் பிரிவுகள் அங்கே இருக்கிறதென்று அமைச்சரவர்கள் பதிலிலே குறிப்பிட்டுள்ளார்கள். அங்கே 4 சிறிய அறுவை சிகிச்சை அரங்குகள் இருக்கிறதே தவிர, சென்னை பொது மருத்துவமனையிலே உள்ளதுபோல, ஸ்டான்லி, கே. எம். சி. மருத்துவ மனைகளில் உள்ளதுபோல முழு அளவுக்கு



அறுவை சிகிச்சை அரங்குகள் இல்லை. எனவே அத்தகைய அறுவை சிகிச்சை அரங்குகளை அமைக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையைப் பொறுத்த வரையில் ஆப்பரேஷன் தியேட்டர்கள் போதிய அளவிலே இப்போது இருக்கிறது. அருகாமையிலேயே ஸ்டான்லி மருத்துவ மனை இருக்கிறது. சென்னைக்குள்ளே மற்ற எம்.எம்.சி. போன்ற மருத்துவமனைகள் இருக்கிற காரணத்தால் அங்கே புதிதாக அமைக்க வேண்டிய அவசியமில்லை என்றுதான் நான் கருதுகிறேன். ஏற்கெனவே 100 படுக்கைகளைக் கொண்ட இந்த மருத்துவமனைக்கு அதிகமான எண்ணிக்கையிலே நோயாளிகள் வராத நிலைமை இருக்கிறது. எனவே புதிய துறைகளை இங்கே மாற்றி, அதைச் சீர்படுத்த முடியுமா, அங்கே பொதுமக்கள் வருவதற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியுமா என்ற நடவடிக்கையை நாங்கள் ஆய்ந்து கொண்டிருக்கிறோம்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம. ஜி. ஆர். ஆட்சிக் காலத்தில் அவருடைய திருக்கரங்களால் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ மனை, பெரியார் நகர் மருத்துவமனை. ஏறத்தாழ 3, 4 கோடி ரூபாய் செலவு செய்து அமைக்கப்பட்ட பெரியதொரு மருத்துவ மனையாக இருக்கிற காரணத்தால், அந்த மருத்துவமனையில் முழு நேரப் பணியை முடுக்கிவிடும் அளவில், அருகாமையில் உள்ள 10, 12 காவல் நிலையங்களை அந்த மருத்துவ மனையோடு இணைத்து அவசர சிகிச்சைப் பிரிவை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனை பற்றி நான் ஏற்கெனவே சொன்னேன், அங்கே 100 படுக்கைகள் இருக்கின்றன. இந்த 100 படுக்கைகளையும் முழுமையாகப் பயன்படுத்தினால், சென்னையிலே உள்ள மற்ற மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் ப்ரெஷர் குறையுமென்று நாங்கள கருதுகிறோம். இப்படிப்பட்ட பெரிய மருத்துவமனைகளாக இருப்பதை முறையாகப் பராமரித்து, அதில் பொதுமக்களுக்குத் தேவையான வசதிகளை ஒழுங்காக ஏற்படுத்த வேண்டுமென்பதில் இந்த அரசுக்குக் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை. பத்து காவல் நிலையங்களை அதோடு இணைத்து, அதன்மூலமாக ஆக்சிடன்ட் போன்ற கேஸ்களை அங்கே கவனிக்க வேண்டுமென்ற கருத்திலே அவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றித் தனியாக ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 461, திரு. ம. சின்னசாமி (குறுக்கீடு) சரி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

461—

**மருத்துவர்கள் வெளிநாட்டுப் பணிக்குச் செல்வதை தடை செய்தல்.**

*6229 திரு. ம. சின்னசாமி :
மாண்மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மருத்துவர்கள் வெளிநாட்டுப் பணிக்குச் செல்வதைத் தடை செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வெளிநாடு செல்லும் மருத்துவர்களை அரசு தடை செய்யுமா என்று கேட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர், நான் வெளிநாடு சென்றுவிட்டதாக எண்ணி, இருக்கையில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கீழே குனிந்து கொண்டிருந்தீர்கள்.

திரு. ம. சின்னசாமி : தலைவரவர்களே, ஒரு மருத்துவரை உருவாக்குவதற்கு அரசு பல லட்சக் கணக்கில் செலவு செய்கிறது. இப்படி பல லட்சம் ரூபாய்களை விழுங்கிவிட்டு, மருத்துவர்களாகப் படித்து முடித்துவிட்டு வருபவர்கள், நாட்டு மக்களுக்குப் பணியாற்றுவதை விட்டுவிட்டு, வெளி நாடுகளுக்குச் சென்று விடுகிறார்கள். இது ஒரு தேசிய நஷ்டம். இந்த முறைகேட்டைத் தடுப்பதற்கு அரசு இனிமேலாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், இது தேசிய நஷ்டமல்ல; தேசியத்திற்கு ஒரு லாபகரமான காரியம். காரணம், இது அன்னியச் செலாவணியை ஈட்டுகிறது. படித்தவர்கள் நம்மிடம் இல்லை என்று சொன்னால், போதிய அளவுக்கு, நமக்குத் தேவையான அளவுக்கு டாக்டர்கள் இல்லை என்றால், நாம் அனுப்புவதில்லை. ஏற்கனவே அரசு உத்தியோகத்தில் சேர்ந்து, பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு வெளிநாடுகளிலே வாய்ப்பு கிடைத்தால் 5 ஆண்டுகள் அவர்களுக்கு விடுமுறை கொடுக்கப்படுகிறது. அவர்கள் சம்பளம் இல்லாத விடுப்பில் சென்று, அங்கே அந்தப் பணியை ஆற்றிவிட்டு திரும்பி வந்துவிட வேண்டுமென்ற முறையிலேதான் நாம் இப்போது செய்துகொண்டிருக்கிறோம். அதிலேகூட அனெஸ்திஷியா போன்ற பிறவும் ஸ்கேர்சிடி இருக்கின்ற துறைகளில் இருந்து யாரையும் அனுப்புவதில்லை. எனவே இவர்கள் சென்று வருவதைப் பொறுத்தவரையில் நாட்டுக்கு நல்லது என்றுதான் கருதுகிறேன். இன்னும் சொல்லப்போனால் அவர்கள் சிறப்பாகப் பெற்ற பயிற்சிகளை இங்கே வந்து பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளும் நமக்குக் கிடைக்கிறது.

முற்பகல் 9-50

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில டாக்டர்கள் வெளிநாடுகளிலே நிரந்தரமாகத் தங்கிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்போய் தங்கவேண்டுமென்ற நிலையில் இருப்பவர்கள், அரசாங்கத்தின் பதவியை ராஜிநாமா செய்துவிட்டுப் போனால் இந்தப் பிரச்சினையே இல்லை. நம்மைப் பொறுத்தவரையில் படித்தவர்கள் எவ்வளவு பேருக்கு இங்கே வேலை கொடுக்க முடியுமோ அவ்வளவு பேருக்கும் வேலைவாய்ப்புக் கொடுக்கிறோம். முடியாதவர்கள் வெளிநாடுகளில் என்ன, சந்திர மண்டலத்திலே போய் வேலை செய்தால் கூட நாம் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். எனவே அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய அனுமதி இல்லாமல் போனால் தவறு. அல்லது கொடுத்த காலத்திற்குமேல் அங்கே தங்கியிருந்தால் தவறு. அதற்கு மேல் அவர்களுக்கு அங்கே வாய்ப்பு சிறப்பாக இருக்கிறது என்று அவர்கள் கருதினால் அரசாங்கப் பதவியை ராஜிநாமா செய்துவிட்டால், அவர்களை நாம் தாராளமாக அனுமதிக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லத ம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : பேரவைத் தலைவர் அவர் களே, நமது அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, மருத் துவக்கல்லூரி மாணவர்களுக்கு அரசு அதிகபட்சமாக செலவு செய்தாலும் கூட, சிறந்த பயிற்சி பெற்ற நிபுணத்துவம் உடைய டாக்டர்களை உற்பத்தி செய்தும், இங்கே அவர்களுக்கு வேலையில்லாத பிரச்சினை இருக்கிறபடியால், வெளிநாடு களுக்கு அவர்கள செல்ல அனுமதிப்பதன் மூலம் நமக்கு அன்னியச் செலாவணி கிடைக்கிறது. அவர்களுக்கு செலவு செய்த பணத்தைத் திரும்பப் பெறுகின்ற வகையில், வெளி நாடுகளில் இருக்கின்ற நமது டாக்டர்கள் அரசுக்கு ஆண் டொன்றுக்கு இவ்வளவு தொகை கொடுக்கவேண்டுமென்ற நிலையை உருவாக்கி அதைச் சரி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு வருமானம் வரு வதற்கு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையைச் சொல் கிறார்கள். ஆனால் நடைமுறையில் அது சரியாக இருக்காது, அவர்களே வெளிநாடுகளுக்குப் போய் சிரமப்பட்டுத்தான் சம்பாதிக்கிறார்கள், எனவே அவர்கள் தலையில் கை வைப்பது நியாயமாக இருக்காது என்று கருதுகிறேன். நியாயமாகப் போடப்பட்டு முறைப்படி அரசாங்கத்திற்குக் கட்டவேண்டிய வரிகளை ஒழுங்காகக் கட்டினாலே இந்தப் பிரச்சினை நமக்கு இருக்காது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 492, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

462—

சதுப்பு நிலத்தில் சமூகக் காடுகள் வளர்ப்பு.

*5825—டாக்டர் அ. ஸ்ரீதரன் :
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தேயிலைத் தோட்டங்களிலுள்ள சதம்பு நிலத்தில் சமூகக்காடுகள் வளர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



தேயிலைத் தோட்டங்களிலுள்ள சதுப்பு நிலத்தில் சமூகக் காடுகள் வளர்க்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை,

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுடைய கொள்கை முடிவாக எடுத்து, ரிசர்வ் பாரஸ்டுக்குப் பக்கத்தில் உள்ள தனியார் தொடர்புடைய இடங்களை சமன்படுத்தி, சமூகக்காடுகள், குறிப்பாக ஈக் ராண்டிஸ் போன்ற மரங்களை நட்டால் அங்கே அதிகமாக மழையும் கிடைக்கும், அது மட்டுமல்லாமல், சுற்றுப் பயணிகளைக் கவரும் வகையிலும் அது அமையும், எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வருவாரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதுப்பு நிலக்காடுகள் என்பது மழைக்காலங்களில் நீரைத் தேக்கி வைப்பதற்கும் வனவிலங்குகள் அதை உட்கொள்வதற்கும் பயன்படுகிறது ஆகவே அப்படி தேங்கியுள்ள தண்ணீர் நிறைந்த பகுதிகளை சமன்படுத்தி தேக்கு மரங்களை நடுவது முடியாத ஒன்று. எப்போதும் அங்கே சேறு இருப்பதால் தேக்கு போன்ற மரங்கள் வளரமுடியாது என்பதை தெரிவித்துக் கொள் கிறேன்,

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் அதிகமாக இருக்கின்ற காலங்களில் வாய்க்கால்கள் மூலம் அதிகப்படியான தண்ணீரை வெளி யேற்றிவிட்டு, எஞ்சிய பகுதியில் மரங்களை நட்டால் சிறப் பாக வளரும் என்று கருதப்படுவதால், அமைச்சர் இதை பரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : கால் வாய்கள் வெட்டி தண்ணீரை வெளியேற்றலாம் என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள், மலைப் பகுதி களில் சதுப்பு நிலங்களில்தான் மழைத் தண்ணீர் தேங்கும், அந்த நீரின் ஆதாரத்தில்தான் மற்ற மரங்களை நாம் வளர்க்கமுடியும். ஆகவே உறுப்பினர் அவர்கள் குறிப் பிடுவது, சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் அது கைவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. முனிவெங் கடப்பன்,

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் ஏரிகளின் கரைகளில் மரங்களை, நட்டுக் கொண்டு வருகிறோம். அதே மாதிரி, அணைகள் பகுதியிலும் இத்திட்டத்தின் கீழ் மரங்களை நட்டால் கோடிக்கணக்கான மரங்களை நாம் உற்பத்தி செய்ய முடியும். ஆகவே அணைகளின் ஓரங்களில் மரங்களை நட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதுப்பு நிலங்கள் போல அணைகள் என்பதும் தண்ணீர் தேங்குகின்ற இடம்தான். அதன் கரையோரப் பகுதிகளில் மரங்கள் நட வேண்டுமென்றால் அதுபற்றி பொதுப்பணித் துறையிடம் அனுமதி பெற வேண்டும். ஆகவே உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பற்றி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரோடு அல்லது அந்தத் துறையோடு கலந்து பேசி நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 9—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டங்களில் உள்ள சதுப்பு நிலக் காடுகள் என்பது மலைகள் இருபுறம் சந்திக்கும் இடத்தில் உள்ள சிறு நிலப் பரப்பாகும். அங்கே நீர் எப்போதும் தேக்கி வைக்கப்படுவதில்லை, ஏனென்றால் அந்த நீர் வடிந்து விடுகிறது. அந்த சரிவுகளில் சதுப்பு நிலக்காடுகளின் ஓரங்களில் மரங்களை நட்டால் மழை பெய்ய வசதியாக இருக்கும், மேலும் நீர்பிடிப்பு குறையாமல் இருக்கும், ஆகவே அந்த சதுப்பு நிலக் காடுகளில் மரம் வளர்க்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சதுப்பு நிலம் என்பது ஏரிகளாக இருக்கின்ற இடம், அதிலே தண்ணீர் இருக்கிறதோ இல்லையோ. சேறாக இருந்தாலும் கூட அதிலே மரங்களை நட்டு வளர்க்க முடியாது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஓரப் பகுதியிலே இருக்கின்ற இடங்களிலே வளர்க்க வேண்டுமானால் அரசு பரிசீலிக்கும்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 463, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

463—

போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகள் விற்பனை,

*6008 திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகள் என்ன நெறிமுறைகளின்படி பயனற்றவை என தீர்மானிக்கப்படுகிறது?

(ஆ) இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளில் பயனற்றவை என தீர்மானிக்கப்பட்டு 1988—89 முதல் 1990—91 ஜனவரி முடிய அறிவிக்கப்பட்ட பேருந்துகள் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இவ்வாறு தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட. பேருந்துகள் எவ்வகையில் விற்பனை செய்யப்படுகின்றன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர பிற போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளைப் பொருத்த வரையில் அவைகள் மொத்தமாக 6 ஆண்டுக் காலம் ஓடியிருந்தால் அல்லது ஏழு இலட்சம் கி.மீ. ஓடியிருந்தால்—இதிலே எந்த நிபந்தனையை பூர்த்தி செய்திருந்தாலும் அத்தகைய பேருந்துகள் கண்டெம் செய்ய கூடிய நிலையை அடைந்தன என தீர்மானிக்கப்படுகிறது, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளைப் பொறுத்த வரையில் ஏழு இலட்சம் கி.மீ. ஓடியிருந்தாலும் அல்லது மூன்றாண்டுகள் பயன்படுத்தினாலும் அவற்றைக் கண்டெம் செய்யக் கூடிய நிலை அடைந்ததாக தீர்மானிக்கப்படுகிறது.

(ஆ) 1988—89 முதல் 1990—91 வரையில் மொத்தமாக 165 பேருந்துகள் இவ்வாறு பயனற்றுப் போனதாக—கண்டெம் செய்யப்பட்டதாக இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தால் அறிவிக்கப்பட்டன.

(இ) இவ்வாறு கண்டெம் செய்யப்பட்ட பேருந்துகள் கல்வி நிறுவனங்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள விலையிலும், ஏனையோருக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு— டெண்டர் மூலமாக விற்கப்படுகிறது. இந்த வகையான பேருந்துகள் அரசு நிர்ணயித்துள்ள விலையைக் காட்டிலும் அதிகமான தொகைக்கு ஏலத்தில் எடுக்கப்படுகின்றன.

திரு. எம். ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்திலே—தனியாருக்கு 6 ஆண்டுகள் கழித்துத்தான் இந்த பஸ்களை ஏலம் விட வேண்டும் என்று ஒரு கொள்கை அரசுக்கு இருக்கிறது— ஆனால் இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகளுககுள்ளாக தனிப்பட்டவர்களுக்கு ஏலம் விட்டிருப்பதாக தெரிய வருகிறது. எனவே அமைச்சர் அவர்கள் அந்த மாதிரி இல்லாமல் ஆறாண்டுகள் கழித்து ஏலம் விடுவதைப் பற்றி பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாண்டுக் காலம் என்று சொல்லுவதற்குக் காரணம், மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கின்ற பேருந்துகள் குறைந்த தூரத்தில் ஓடும் பேருந்துகள், 7 இலட்சம் கி.மீ. ஓடினால்தான் அதைக் கண்டெம் செய்ய வேண்டும் என்று நம்முடைய அரசுத் துறையிலேயிருந்து அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குள் விற்கப்படுவதாக குறிப்பிட்டார்கள். இது போன்ற குறிப்பு இதுவரை அரசுக்கு வரவில்லை. அப்படி ஏதாவது இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டால், உடனடியாக அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், சமூக சேவை நிறுவனங்களுக்கு விற்கப்படுவது சலுகை அடிப்படையில் விற்கப்படுகிறதா? எந்த மாதிரி சலுகை அடிப்படையில் விற்கப்படுகிறது? அப்படி விற்கப்படும் பஸ்கள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நிறுவனங்களுக்காக சலுகை அடிப்படையில் நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அரசால் அங்கீகரிக்கப்பட்டு, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு நீண்ட சேசிஸ் பேருந்துகளை ரூ. 80,000-க்கும், குறுகிய சேசிஸ் பேருந்துகளை ரூ. 20,000, க்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற கல்வி நிறுவனங்களுக்கு நீண்ட சேசிஸ் பேருந்துகள் ரூ. 85,000-க்கும். குறுகிய சேசிஸ் பேருந்துகள் ரூ. 25,000-க்கும். அரசு அங்கீகாரம் பெறாத கல்வி நிறுவனங்களுக்கு. நீண்ட சேசிஸ் பஸ்கள் ரூ. 95,000-க்கும், அதே போல





குறுகிய சேசிஸ் பேருந்துகள் ரூ, 80,000-க்கும் சுயநிதி கல்லூரிகளுக்கு நீண்ட சேசிஸ் பேருந்துகள் ரூபாய் ஒரு இலட்சத்திற்கும், குறுகிய சேசிஸ் பேருந்துகள் ரூ, 90.000-க்கும், அதே போல திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பொறுத்த வரையில் ரூ, 1,25,000-க்கும்—அது சிறந்த பேருந்துகளாக இருக்கின்ற காரணத்தால்—சூப்பர் டீலக்ஸ் என்று சொல்லப்படுகிற திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் ரூ, 1,40,000-க்கும் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லும் போது 3 ஆண்டுகளில் இந்த பஸ்கள் எல்லாம் 'கண்டெம்' பண்ணப்படுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடு) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு வேறு கார்ப்பரேஷன்களிலிருந்து பழைய பஸ்களை வாங்கி ஓட்டுவதனால், அதாவது அங்கு வண்டிகள் இல்லை என்பதனால் இந்த மாதிரி வாங்கிக் கொண்டு இருக்கிறோம் என்று சொல்லி இருக்கின்றார்கள்; அவற்றை அப்படி விடும்போது ஏராளமான மெயின்டினன்ஸ் காஸ்ட் தான் ஆகின்றது. இதேபோல பழைய பஸ்களை வாங்கி அங்கே ஓட்டுவதனால் மெயின்டினன்ஸ் காஸ்ட் தான் அதிகமாகிறது. அதனால் லாபம் ஒன்றும் இல்லை என்று நான் நினைக்கின்றேன். எனவே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய பஸ்களை விடுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினா அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் வேண்டுமானால் 3 ஆண்டுக் காலம்; அது எதற்காக என்று சொன்னால், ஏறத்தாழ நாள் ஒன்றுக்கு 600, 700 கிலோ மீட்டர் தொலைவு பேருந்து செல்கிறது. வேறு போக்குவரத்துக்கழகங்களில் 6 ஆண்டிற்கு ஒரு முறை தான்; 7 இலட்சம் கிலோ மீட்டர் தாண்டினால்தான் 'கண்டெம்' செய்கிறோம். அது குறிப்பிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பழைய பேருந்துகளை வேறு போக்குவரத்துக் கழகத்தில் இருந்து வாங்கி ஓட்டுவதால், அந்த வண்டிகள் பிரேக் டவுன் ஆகிறது; அதனால் நஷ்டம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகம் துவங்கிய நாளிலிருந்து இன்று வரையில் நஷ்டத்தில் இருக்கின்ற காரணத்தினால், அதிலே பணம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அங்கே சேசிஸ் வாங்க வேண்டுமென்று

சொன்னாலும் கூட இப்போது தான் ஓரளவிற்கு நிதி பெருகிக் கொண்டு இருக்கின்ற காரணத்தினால், நல்ல பேருந்துகளை வாங்க வேண்டுமென்று நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்ததன் காரணமாக, நம்முடைய தமிழகத்தின் வரலாற்றில் 2,500 பேருந்துகளை ஒரே ஒரு ஆண்டிடிலே புதுப்பித்த சரித்திரம் இப்போது தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். 2,500 பேருந்துகளும் 1992 டிசம்பர் முடிவதற்குள் புதுப்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள், நீண்ட தூர போக்குவரத்திற்காக வயதான கவர்ச்சியற்ற போக்குவரத்து பேருந்துகளை இயக்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் நெடுந்தூரப் பயணிகளுக்கு சிரமம் ஏற்படுகிறது. அந்த நிலையைப் போக்க இளமையான ,கவர்ச்சியான (சிரிப்பு) பேருந்துகளை விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேருந்தில் என்ன கவர்ச்சி வேண்டி இருக்கிறது? மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயதான பேருந்துகலை நீண்ட தூரம் ஓட்டுவதாகச் சொன்னார்கள். வயதானவர்கள் எல்லாம் காசி, இராமேஸ்வரம் என்று நீண்ட தூரம் பயணம் செய்கிறார்கள். (சிரிப்பு) ஆகவே, உறுப்பினர்கள் அவர்கள் குறிப்பிடுவது, இளைய வயதாக இருக்கிற பேருந்துகள் விடப்படுமா என்று கேட்டார்கள். இளைஞர்களை இங்கே சென்னை மாநகரிலே நீங்கள் பார்க்கிறீர்கள். ஒரு பஸ் ஸ்டாப்பிலே இருந்து இன்னொரு பஸ் ஸ்டாப்பிலே அவர்கள் இறங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதையும் கருத்திலே கொண்டுதான் நல்ல பேருந்துகளை இயக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டு இருக்கின்றார்கள். உடனடியாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கின்ற சில பேருந்துகளை உடனுக்குடன் மாற்றப்பட வேண்டுமென்று கருத்துரை வழங்கப்பட்டு இருக்கிறது. அதை அரசு கருத்திலே கொண்டு உடனுக்குடன் இந்தத் துறை நடவடிக்கை மேற்கொள்ளும்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 464, திருமதி என். சி. கனகவல்லி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல துறை அமைச்சர்.

464—

நெசவாளர்களுக்கு குறைந்த விலையில் நூல் அளித்தல்.

* 3398 திருமதி என். சி. கனகவல்லி:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திக்குளம் தொகுதியில் புதூர், நாகலாபுரம், கரிசல்குளம் ஆகிய ஊர்களில் நெசவுத் தொழிலையே நம்பி வாழும் நெசவாளர்களுக்கு நூல் தேவையான அளவு குறைந்த விலையில் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விளாத்திக்குளம், தொகுதியில் உள்ள புதூர், நாகலாபுரம், கரிசல்குளம் போன்ற ஊர்களிலுள்ள நெசவாளர்கள் அருகாமையில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக ஆவதோ அல்லது அவர்களாகவே புதிய கூட்டுறவு சங்கத்தை அமைத்துக் கொண்டாலோ, அரசுதருகிற குறைந்த விலையிலான நூலைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி என். சி. கனகவல்லி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவுத் தொழிலாளர்களுக்குத் தேவையான அளவு நூல்கள் மானிய விலையில் கூட்டுறவுத் துறை மூலம் வ்ழங்க அரசு முன்வருமா எனவும், இந்த ஆண்டுக்கான நூல்களை ரகம் பிரித்து நூல் வழங்க உத்தேசம் உள்ளதா எனவும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்கு கோ-ஆப்டெக்ஸின் வாயிலாக குறைந்த விலையில் நூல் விநியோகிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 465, திரு. கே. சிங்காரம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

[1992 ஏப்ரல் 3

465—

## மொரப்பூரில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.

*5159—திரு. கே. சிங்காரம்

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், மொரப்பூரில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணிகள் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்ட மக்களுக்கு இரயில் போக்குவரத்துக்கு ஒரு மைய இடமாக விளங்கி வருவது மொரப்பூர் பகுதியாகும். தர்மபுரி மாவட்டம் முன்னேறுவதற்கு பலவகையிலும் இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்தக் காலக் கட்டத்திலே, இந்த ஒரு செயல்பாட்டினையும் கருத்தில் கொண்டு, வருகின்ற நிதி ஆண்டிலேயாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெயில்வே மேம்பாலங்களைப் பற்றி நேற்றைக்கு கூட விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு ஒவ்வொரு பகுதியிலும் ரெயில்வே மேம்பாலம் கட்ட வேண்டுமென்ற உணர்வு இருக்கிறது. அதற்கான விதிமுறைகள்படி ரெயில்வே நிர்வாகமும், நம்முடைய அரசும் சேர்ந்து ஆளுக்கு 50 சதவீதம் என்ற அளவில் நிதியைக் கொடுத்து அந்த மேம்பாலங்களைக் கட்டுகிற பணியில் ஈடுபட்டிருக்கிறோம். இந்த இடத்தைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ ரூ. 1½ கோடி செலவில் கட்ட வேண்டியிருக்கிற காரணத்தால் இன்றைக்கு கருத்துருவில் இந்தப் பாலத்தைச் சேர்க்க வாய்ப்பில்லையென்ற காரணத்தால் அதை எடுத்து செய்வதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 466, திரு ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

466—

## பம்பையாறு அணை கட்டும் திட்டம்.

*5285 திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி ஆண்டியப்பனூர் கிராமத்தில் பம்பையாறு அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை இது. ஆண்டியப்பனூர் கிராமம் ஜவ்வாது மலை அடிவாரத்தில் உள்ளது. பம்பையாறு அணை கட்டுவதால் சுமார் 15,000 ஏக்கர் நிலம் இதனால் பயன் அடைகிறது. திருப்பத்தூர் தொகுதியின் குடிதண்ணீர் பிரச்சினை பாதியாகக் குறையும். இங்கே அணை கட்டுவதால் சுமார் 300 கிராமங்கள் பயன்பெறும். ஆகவே, அணையைக் கட்டித்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிட்டிருக்கிற அணை என்பது ஆண்டியப்பனூர் கிராமத்தின் அருகில் பம்பையாற்றின் கிளை நதியாக இருக்கிற ஆண்டியப்பன் ஓடையின் குறுக்கே ஏறத்தாழ எட்டு கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட வேண்டிய ஒரு நீர்த் தேக்கம் என்று இன்றைக்கு குறிப்பிலே தந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. நிலத்தை கையகப்படுத்துவதற்கான விவரங்களும் கேட்டிருக்கிறோம். இன்றைக்கு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல 15,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற முடியாது. 2,000 ஏக்கருக்கு பாசன வசதி கொடுக்க முடியும். ஆகவே, இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியர், நில நிர்வாக ஆணையர் மற்றும் நம்முடைய வருவாய்த்-

துறை அதிகாரிகளிடத்தில் கையகப்படுத்துவதற்கான கோரிக்கையை பொதுப்பணித் துறை இன்றைக்கு கொடுத்து ஆயத்த வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே நம்முடைய தலைமைப் பொறியாளர் (டிசைன் அண்ட் பிளானிங்) அவர்களின் அறிக்கை எல்லாம் வந்ததற்குப் பின்னாலே இதை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 467, திருமதி கே. மரியமுல் ஆசியா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

467—

கல்வி நிறுவனங்களின் மீதான சொத்துவரி நீக்குதல்.

*2912 திருமதி கே. மரியமுல் ஆசியா:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வி நிறுவனங்கள் மீது சொத்துவரி விதித்ததன் காரணமாக கல்வி நிறுவனங்களுக்கு வரிச்சுமை ஏற்பட்டுள்ளதால் இதனை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கட்டிடத்தைப் பயன்படுத்தும் ஒருவர் அல்லது பலர் அதற்காக வாடகை செலுத்த வேண்டியிருந்தால் அக் கட்டிடத்துக்கு வீட்டு வரியினின்றும் விலக்கு இல்லை. பள்ளிக் கட்டிடம் அப்பள்ளியின் நிர்வாகத்திற்கே சொந்தமாயின் வரி விதிப்பு இல்லை. ஆனால் பள்ளி வாடகைக் கட்டிடத்தில் செயல்படின் அக்கட்டிடத்தின் உரிமையாளர் இந்த விதியின் கீழ் வரிவிலக்கு கோர இயலாது.

திருமதி கே. மரியமுல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்தக் கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரி விதித்து இருக்கிறார்கள். அதன் மூலம் கல்வி நிறுவனங்களை தொடர்ந்து நடத்த முடியாமல் சிரமப்படுகிறார்கள். மேலும் இந்த சொத்து வரி கட்டாத கல்வி நிறுவனங்களின் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்த அரசு அறியுமா? அதைத் தடுக்க ஆவன செய்யுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வீட்டு வரி தரை பரப்பு அல்லது வீட்டின் ஆண்டு வாடகை மதிப்பு அல்லது மூலதன மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. கீழே குறிப்பிட்டுள்ள கட்டிடங்களுக்கு வீட்டு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

1. பொது வழிபாட்டுக்கு மட்டும் பயன்படுத்தும் கட்டிடங்கள்.

2. மாணவ விடுதிகள் உள்ளிட்ட கல்வி சம்பந்தமான கட்டிடங்கள்.

3. பொது மக்கள் வரக்கூடிய நூலகக் கட்டிடங்கள்.

4. ஆதரவற்றவர்கள் அல்லது விலங்குகள் புகளிடமாகப் பயன்படுத்தும் மற்றும் அறச் செயல்களுக்காகப் பயன்படுத்தும் கட்டிடங்கள்.

5. நோயாளிகளுக்கு தனிப் படுக்கை தொகுதிகள் அல்லது படுக்கை உடைய மருத்துவமனைகள்.

மேலே குறிப்பிட்டிருக்கிற காரியங்களுக்காக ஒரு கட்டிடத்தைப் பயன்படுத்தும் ஒருவர் அல்லது பலர் அதற்காக வாடகை செலுத்த வேண்டியிருந்தால் அந்தக் கட்டிடங்களுக்கு வீட்டு வரியிலிருந்து விலக்கு இல்லை. பள்ளிக் கட்டிடம் அப்பள்ளியின் நிர்வாகத்திற்கு சொந்தமாயின் வரிவிதிப்பு இல்லை. பள்ளி வாடகைக் கட்டிடத்தில் செயல்படின் அந்தக் கட்டிடங்களின் உரிமையாளர் இந்த விதிகளின் கீழ் வரி விலக்கு கோர இயலாது. எனவே, எந்தப் பகுதியில் எந்தக் கல்வி நிறுவனத்திடமிருந்து வரி வசூல் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்தால் மேற்கொண்டு விசாரித்து தக்க விவரங்களை வழங்க இயலும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல ஜப்தி செய்யுப்படுகிற நிலைமைகள் இருந்தால் அதுபற்றி என்னிடம் தெரிவித்தால் மேற்கொண்டு நடவடிக்கை யெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் (திருமதி) பீட்ரிக்ஸ் டி'சோசா.

Dr. THIRUMATHI BEATRIX D'SOUZA : Hon, Speaker, is the Goverment aware that this property tax is being passed on to the students, as the only source of ircome for the schools is the fees collected ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பள்ளிகளுக்கு இருக்கிற ஒரே சோர்ஸ் பீஸ் கலெக்சனாக இருக்கிற காரணத்தால், இத்தகைய வரி விதிப்பு மாணவர்களைத் தானே பாதிக்கும் என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மேலே சொன்ன மூன்று காரணங்களுக்காக வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையிலே அந்தப் பள்ளியினுடைய கட்டிடங்கள், அந்தப் பள்ளி நிர்வாகத்திற்குச் சொந்தமாக இருப்பின், அதற்கு நிச்சயமாக வரி விலக்கு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வரி விலக்கு அளித்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், இந்தச் சிறுபான்மைக் கல்விநிறுவனங்களில் வரி வசூலிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட 3 அடிப்படைக் காரணங்களுக்காக வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அப்படி வரி விலக்கு அளிக்கப்படுகிற கட்டிடங்களுக்கு வரி வசூலிப்பதாக இருந்தால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக் கூடிய எல்லாப் பள்ளிகளுக்கும், அது சொந்தக் கட்டிடமாக இருந்தால்கூட, டிமாண்ட் நோட்டீஸ் முனிசிபாலிட்டி மூலமாக, திருப்பத்தூர் ராமகிருஷ்ணா ஹைஸ்கூல் போன்ற பல பள்ளிகளுக்கு இப்போது அனுப்பப்பட்டு இருக்கிறது. ஆகவே, இது போன்ற டிமாண்ட் நோட்டீஸ்களைக் கொடுத்து, நகராட்சிகளும், லோக்கல் அட்மினிஸ்ட்ரேசன் அதிகாரிகளும் இன்று கெடுபிடி செய்வதை அரசு நிறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கட்டிடங்களைப் பற்றி என்னிடத்திலே எடுத்து வைத்தால், அதைப் பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 468, டாக்டர் (திருமதி) வெ. சரோஜா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

468—

சங்ககிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் நீட்டித்தல்.

* 4841 டாக்டர் (திருமதி) வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சேலம் மாவட்டம், நெடுங்குளம் இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சங்ககிரி தொகுதி மல்லசமுத்திரம் வரை கொடுக்கப்பட்ட திட்டம் வையப்பமலை, சப்பையாபுரம் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாரிய விதிமுறைகளின்படியும், தொழில் நுட்ப ரீதியாகவும் வையப்பமலை மற்றும் சப்பையாபுரம் கிராமங்களை இடப்பாடி இராசிபுரம் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள இயலாது என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய துணைத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

டாக்டர் (திருமதி) வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லசமுத்திரம் ஒன்றியம், வையப்பமலை பொது மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினைக்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வையப்பபாளையம் கிராமத்தில் தற்போது மக்கள் தொகை 660. இதில் ஆதி திராவிடர் 100. அந்தப் பகுதி குடிநீர் வசதி பெற்ற கிராமம். அதிலே ஒரு திறந்தவெளி கிணறு மூலமாக நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 10 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. 1984-85-ல் நிறைவேற்றப்பட்ட கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் நீர் ஆதாரம் குறைந்துவிட்டது. மாற்று நீர் ஆதாரம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் (திருமதி) வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்துளைக் கிணறுகள் மூலம் தற்காலிகமாக குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டாலும், கோடைக் காலங்களில் வையப்பமலை மற்றும் அதைச் சுற்றியுள்ள மக்களுடைய

குடிநீர்ப் பிரச்சினை தீர்க்க முடியாத பிரச்சினையாக இருப்பதால், திருச்செங்கோட்டிலிருந்து, குருசாமிபாளையம் வரை உள்ள காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில், இதை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வையப்பபாளையம் மற்றும் சுப்பையாபுரம் கிராமங்களில் தற்போதுள்ள மக்கள் தொகை 2,500. ஆதி திராவிடர் 600. அந்தப் பகுதி குடிநீர் வசதி பெற்ற கிராமம். அங்கே சாதாரண திறந்தவெளி கிணறும், விசையிறைப்பானுடன் கூடிய ஒரு திறந்தவெளி கிணறும், ஒரு கையிறைப்பானும் உள்ளன. அதன் மூலம் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 12 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. ஒரு விசையிறைப்பானை அமைக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. நீர் உந்து மற்றும் குழாய்கள் பதிக்கப்பட்டுவிட்டன. வரும் ஜூன் 1992-க்குள் முடிக்கப்பட்டு, பயனுக்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. க. பழனிசாமி.

<u>திரு. க. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எனது எடப்பாடி தொகுதியில்— நெடுங்குளத்திலிருந்து— எடுக்கப்பட்டு, ராசிபுரம் வரையில் செல்கிறது. எனது எடப்பாடி தொகுதியில் பல ஊர்கள் இதிலே விடுபட்டுப் போய்விட்டன. எனவே, அந்த ஊர்களை அமைச்சர் அவர்கள் சேர்த்துக் கொள்வார்களா? இந்தத் திட்டம் எப்போது முடிக்கப்பட்டு, குடிநீர் வழங்கப்படும் என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி— ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் சுமார் 20 கோடி மதிப்பீட்டில் 26—4—1982-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. வருடாந்திர பராமரிப்புச் செலவுக்காக சுமார் ரூ. 52 இலட்சம் அனுமதிக்சப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் இராசிபுரம் எடப்பாடி நகராட்சிகள், 90 நகரப் பஞ்சாயத்துக்கள், மற்றும் 155 வழியோரக் கிராமங்கள் பயன் அடைகின்றன. பொதுவாக, நீர்க் குழாய்களின் இரண்டு பக்கங்களிலும், 2 கிலோ மீட்டர் தூரம் வரை உள்ள கிராமங்கள் தான் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன். இதை விரைவில் முடிப்பதற்கு பொறியாளர்களுக்கு எல்லாம் ஆலோசனை வழங்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண். 469, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



469—

<u>விளைபொருள்கள் ஈட்டுக்கடன் அளித்தல்.</u>

* 4439 <u>திரு. நா. சா. பழனிசாமி :</u>
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

விளைபொருள்கள் ஈட்டுக்கடன் அனைத்து விளைபொருள்கள் மீதும் கொடுக்கப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அழுகும் பொருட்கள் தவிர்த்து, மற்ற அனைத்து வேளாண் விளைபொருட்கள் மீதும் பாகுபாடின்றி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாகவும், ஈட்டுக்கடன் (பிளட்ஜ் லோன்) கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

<u>திரு. நா. சா. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய விளைபொருட்களுக்கு எல்லாம் பெரும்பாலும் அறுவடை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திலேதான் வருகிறது. அந்த அறுவடைக் காலங்களிலே குறிப்பாக அறுவடை பொருள் விலை வீழ்ச்சி ஏற்படுவது ஆண்டுதோறும் நடக்கின்ற சம்பவமாக இருக்கின்ற நேரத்தில் இந்த ''கி லோன்'' என்று சொல்லப்படுகின்ற அந்த விவசாய விளைபொருள் மீது கொடுக்கப்படுகின்ற கடன்கள் பெரும்பாலும் எங்களது கோவை மாவட்டம் போன்ற பகுதியில் வணிகப் பொருட்களுக்குத்தான் குறிப்பாக நிலக்கடலை, புகையிலை, பருத்தி இப்படிப்பட்ட பொருட்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். நெல் போன்ற பொருட்களுக்கு கொடுப்பதில்லை. அதனால் அந்த தானியங்களுக்கும் அந்த ''கி லோன்'' கொடுக்கின்ற நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்பிகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே உணவுப் பொருட்கள், விளைபொருட்களுக்கும் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். உணவுப் பொருள் விளைபொருளாக இருப்பதனால், அதனுடைய மதிப்பிலே 70 சதவீதமும், பணப் பொருள் விளைபொருளாக இருந்தால் அதற்கு 60 சதவீதமும், அந்தக் கடனைக்

கொடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படி எங்காவது கொடுக்கப்படவில்லை என்றால், உடனடியாக நடவடிக்கை எடுத்து, கோவை மாவட்டத்திலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 470, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

470—

கனிமச் சுரங்கத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம்.

*4072 திரு. ஆர். பி. பரமசிவம் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கனிமக்கற்களை வெட்டியெடுக்கும் சுரங்கங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியே கூலி எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சுரங்கத் தொழிலானது மத்திய அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டதால், தமிழக அரசால் ஊதிய விகிதங்கள் நிர்ணயம் செய்யப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிம கற்களை வெட்டி எடுக்கும் சுரங்கத்தில் கடந்த தி. மு. க. அரசின் கொள்கை தவறாக இருந்ததால் தமிழகத்திலுள்ள நிறைய சுரங்கங்களில் வேலை நின்றுவிட்டது. அதில் வேலை செய்த தொழிலாளர்கள் அண்டை மாநிலங்களுக்கு சென்று பிழைக்க நேரிட்டது. ஆகவே இதை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தி, அவர்களுக்கு தகுந்த கூலி கிடைக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள சுரங்கத் தொழிலானது மத்திய அரசினுடைய அதிகாரத்திற்



குட்பட்டதால் இவ்வரசால் அத்தொழிலுக்கு ஊதிய விகித நிர்ணயம் செய்ய முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய ஆலோசனையை ஏற்று, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிமக் கற்களை வெட்டி எடுக்கின்ற ஆண்கள், பெண்கள் கூலி வேலை செய்கின்றவர்களுக்கு அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அதனால் அவர்கள் கைகால்களை எல்லாம் இழந்துவிடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்குத் தக்க பாதுகாப்பை, அவர்களுடைய எதிர்காலத்தைக் கருதி, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய ஒரு சட்டத்தை, இதில் சேர்க்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலம் காக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு தொழிலாளர்களுடைய நலனைப் பேணி, பாதுகாத்து வருகிறது. அந்த வகையில் குவாரிகளிலே மற்றும் மலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய உடல்நலம் பாதிக்காதவாறு அவர்களுக்கு இயன்றவரையில் பாதுகாப்பு அளிக்கும். அதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஜி. வேணுகோபால்.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குவாரிகளிலே வேலை செய்து கொண்டிருக்கின்ற தொழிலாளர்கள் மிகவும் ஆபத்தான நிலைமையில் வேலை செய்துக் கொண்டு வருகிறார்கள். அதுவுமின்றி அவர்களுக்கு மருத்துவ வசதியும் அங்கே கொடுக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்து, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும்போது மருத்துவ வசதியும் அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்பதையும் சேர்த்து பரிந்துரை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. ரகுபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆபத்தான வேலை என்று தெரிந்துதான் இதிலே தொழிலாளர்கள் ஈடுபடுகிறார்கள். இன்றைக்கு தொழிலாளர்களுக்கு ஆங்காங்கே ஈ. எஸ். ஐ. மருத்துவ மனைகளும், மருந்தகங்களும் இருக்கின்றன. அதன்மூலம் உரிய வகையிலே தொழிலாளர்கள் மருத்துவ வசதி, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த அளவிலே என்னென்ன கனிமச் சுரங்கங்கள் இருக்கின்றன. அதிலே பணியாற்றக் கூடிய ஆண், பெண் தொழிலாளர்கள் எண்ணிக்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. ரகுபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 471, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

471—

### திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கட்டிடம்

***4306 திரு. வெ. பழனிசாமி :**
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோயமுத்தூர் மார்க்கெட்டிங் கமிட்டி மூலம் திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?



**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. வெ. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் மூலமாக கோவை மாவட்டத்திற்கு செஸ் வரி மூலமாக நிறைய வருமானம் வந்துக் கொண்டிருக்கிறது. அங்கே விலை மதிப்புள்ள பூமி இருக்கிறது. காம்பிளக்ஸ் கடைகள் கட்டக் கூடிய சூழ்நிலை வருமேயானால் அதிகமான வருமானம் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே இப்படி கட்ட வாய்ப்பு இருப்பதாக அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆகவே, அவை விரைந்து கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடத்தில் இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் இயங்கி வருகிறது. புரட்சித் தலைவி அவர்களின் புனித ஆட்சியில், புதிய கட்டிடங்கள் பல புதிதாக கட்டப்பட இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 472, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்,

472—

### பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டிட வசதி,

***5100 திரு. வே. பெரியசாமி :**
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் வேளாண்மைத் துறை மூலம் இயங்கும் பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டிட வசதி இல்லாமல், பருத்தி போன்ற பொருட்கள் எல்லாம் மழையில் நனைவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிட வசதி செய்து கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பூதப்பாடியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கட்டிட வசதி இல்லாமையினால் பருத்தி மற்றும் விளைபொருட்கள் மழையில் நனையும் நிகழ்வு ஏதும் நடைபெறவில்லை,

(ஆ) கட்டிடம் கட்ட நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் அம்மா பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட பூதப்பாடி என்ற இடத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அந்த பூதப்பாடியில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் இல்லாத காரணத்தால் மரத்திற்கு அடியிலே பருத்தி மூட்டைகளைப் போட்டு ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டு என்னிடத்திலே புகார்களைக் கொடுத்தார்கள். விரைவிலே அந்த கட்டிடத்தைக் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வருகிற பொருட்கள் அன்றைக்கே விற்பனை ஆகிறது. அன்றே விற்பனை செய்யாமல் இருக்கக் கூடிய பொருட்கள் அங்கே உள்ள அறைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கையை மேற்கொண்டது. அதன் விளைவாக 3.93 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. ஆனால் நிலத்திற்கு சொந்தக்காரர்கள் அந்த நிலத்தை அரசுக்கு தர மறுத்து நீதிமன்றத்திற்கு சென்று தடை ஆணை பெற்றிருக்கிறார்கள் அந்த தடை ஆணையை நீக்குவதற்கு அரசு முயற்சிகளை. மேற்கொண்டிருக்கிறது. தடை ஆணை நீங்கியவுடன் கட்டிடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைந்து நடவடிக்கை எடுத்து தடை ஆணையை நீக்கி அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுடைய கண்ணீரைப் போக்குவதற்கு நான் வணங்கிக் கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அதனை நிறைவேற்றுவதற்கு விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடைகளைக் கடந்து வெற்றி பெற்றது தான் மாண்புமிகு புரட்சித்தலைவியினுடைய அரசு. எனவே இந்தக் கோர்ட்டினுடைய தடையை நீக்கி புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 473, திரு. ஆர். தங்கராஜ் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

473—

ஆதிதிராவிட மக்களுக்கு விவசாயத்திற்கு நீர்மூழ்கி மோட்டார் அமைத்துத் தருதல்

*2958 திரு. ஆர். தங்கராஜ் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், ஆத்துக்குறிச்சி, ராங்கியம் காலனி ஆதிதிராவிட மககள் விவசாயத்திற்காக நீர்மூழ்கி மோட்டார் அமைத்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம் திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம், ஆத்துக்குறிச்சி காலனி ஆதிதிராவிட ராங்கியம் மக்கள் விவசாயத்திற்காக மின் மோட்டார் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஆண்டிமடம் பேரூராட்சியில் உள்ள பல கிராமங்களில் ஆத்துக்குறிச்சி பெரியாத்துக்குறிச்சி, ராங்கியம், கருக்கை, நாகமந்தூர், மெலூக் திருச்சேரி, ஸ்ரீராமன் விழுதுடையான் ஆகிய கிராமங்களில் வாழ்கிற ஆதிதிராவிட மக்கள் தங்களுடைய வறுமையைப் போக்கிக் கொள்வதற்காக 1983 ஆம் ஆண்டு ஆழ்க் குழாய்க் கிணறு வாரியத்தின் மூலமாக, ஆழ் குழாய்க் கிணறுகளை அமைதது கொட்டகை அமைத்து பைப்லைன் போட்டிருந்தும் இதுநாள் வரையில மின் இணைப்பு வழங்கப்படாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

முற்பகல் 10-25

தமிழ்நாடு ட்யூப்வெல் கார்ப்பரேஷன் மூலமாக அமைத்துக் கொடுக்கப்பட்டது. அந்த அமைப்பு சரியாக செயல்படவில்லை என்ற ஒரு நோக்கத்திலே அரசே கலைத்துவிட்டதாம். அதை தாட்கோவிலே ஹேண்ட்ஓவர் பண்ணினார்கள் ஆனால் இதுநாள் வரை அவர்களுக்கு மின் இணைப்பும், மின் மோட்டாரும் வழங்காத ஒரு சூழ்நிலை இருப்பதால் அவர்கள். மிகவும் சிரமப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின் இணைப்புக் கொடுப்பது மின்சார அமைச்சருடைய நிர்வாகத்திலே வருவது. ஆதி திராவிடர் அமைச்சர் அவர்களுக்கு மின் மோட்டார் வாங்கிக் கொடுப்பார். எனவே, அவரிடம் கேட்கின்ற கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) அவர் மின் இணைப்பைக் கொடுக்கவில்லை என்கிறார். மின் இணைப்புக்கு தாட்கோ விண்ணப்பம் செய்து அவர்கள் வாங்கிக் கொடுக்க வேண்டும். மின் இணைப்புக் கொடுக்கவில்லை என்று சொல்வது அந்தத் தலைப்பிலே வந்துவிடும்.

திரு. ஆர். தங்கராஜ் : எனவே அந்தத் தொகுதியில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்களுடைய வறுமையைப் போக்குவதற்காக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே வெகு விரைவிலே அவர்களுடைய வறுமையைப் போக்கிட அரசு மின இணைப்பும், மின் மோட்டரும் வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நமது இதய தெய்வம் டாக்டர் எம்.ஜி.ஆர். காலத்தில் வந்தத் திட்டம். இந்தத் திட்டம் ஆதிதிராவிடர் மக்களின் இதய தெய்வமாக விளங்குகின்ற புரட்சித் தலைவர் திட்டம் இன்றைக்கு நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி காலத்தில் நிச்சயமாகப் பரிசீலிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் விரும்புகின்ற வகையில் உறுதியாக செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 474, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.



1992 ஏப்ரல் 3]

474—

தமிழ்நாடு மரைன் பிளாஸ்ட் நிறுவனத்தின் பங்குகளை ஜார்ஜ் மேஜோவின் பங்குக்கு மாற்றுதல்.

*762 திரு. மா. சுந்தரதாஸ் :
மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராயபுரத்தில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் ஜார்ஜ் மேஜோ நிறுவனம் இணைந்து நடத்தும் தமிழ்நாடு மரைன் ப்ளாஸ்ட் நிறுவனத்தில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பங்குக்கான படகு கட்டும் தளத்தை ஜார்ஜ் மேஜோவின் பங்கிற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்று சொன்னதற்கு நன்றி. ஏனென்றால் அங்கே இருக்கின்ற தொழிலாளிகள் எல்லாம் ஜார்ஜ் மேஜோவிற்கு கொடுப்பதாகச் சொல்லி பீதி அடைந்துக்கொண்டிருக்கிறார்கள். இனிமேலாவது நம்முடைய அரசு நிறுவனம் பங்கை கொடுப்பதில்லை என்று சொல்வதிலே சந்தோஷமாக இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொண்டு அங்கே பணிபுரிகின்ற தொழிலாளிகளை நிரந்தரம் செய்யும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு கூட்டு முயற்சியில் அந்த நிறுவனம் நடைபெற்று வந்ததால் அங்குள்ள தொழிலாளர்கள் தனிப்பட்ட முறையிலே ஒப்பந்தம் செய்யப்பட்டனர். அவர்கள் அரசு ஊழியர்கள் அல்ல. எனவே, இக்கேள்வி இங்கு எழ நியாயம் இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நிறுவனம் லாபத்தில் இயங்குகின்றதா, நஷ்டத்தில் இயங்குகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் வருடம் கண்ணாடி இழைப் படகுகள் கட்டி விற்பனை செய்ய தமிழ்நாடு மரைன்பிளாஸ்ட் நிறுவனம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கூட்டு முயற்சி நிறுவன மாக சில பங்குதாரர்களுடன் துவக்கப்பட்டது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பங்கு 31 சதவீதம், திருவாளர்கள் ஜார்ஜ்மேஜோ 19 சதவீதம், திருவாளர்கள் அக்குவா மரைன் 10 சதவீதம், திருவாளர்கள் ஐ. எஃப். யு. 20 சதவீதம், திருவாளர்கள் மரைன்பிளாஸ்ட் ஃபெரோ ஐலண்ட் 20 சதவீதம், ஆக இந்த நிறுவனத்திற்கு மொத்த மூலதனம் ரூபாய் 48 இலட்சம் என்று கணக்கிடப்பட்டு அதில் ரூபாய் 18 இலட்சம் பங்கு மூலதன மாகவும், மீதி ரூபாய் 30 இலட்சம் கடனாகவும் பெற முடிவு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் 5 ஆண்டுகளில் 1,240 படகுகள் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று இலக்காகும். அந்த வகையில் மிகக் குறைவான 54 படகுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டது. அந்த வகையிலே இது அந்தக் காலத்தில் அங்கு கடல் சூழ்நிலைக்கு ஏற்றதாக இல்லை என்பதால் இதற்கு பெருவாரியான ஒரு வரவேற்பு இல்லாத காரணத்தால் இந்த நிறுவனம் மூடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி : பேரவைத் தலைவர் அவர்களே, மரைன்பிளாஸ்ட் நிறுவனத்தைப்போல் படகு கட்டும் தளம் தமிழகத்தில் புதிதாக வேறு எங்கேயாவது ஒரு இடத்தில் கட்டும் செயற்குறிப்பு வரும் ஆண்டிலாவது நிறைவேற்றப்படுமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் வருடம் அப்போது மரைன் பிளாஸ்ட் அந்தச் சூழ்நிலைக்கேற்ப இந்த கண்ணாடி இழைப் படகுகளை துவக்க ஆரம்பித்தது. அந்த வகையில் அப்போது அந்த டெக்னாலஜி வளர்ந்து வராத சூழ்நிலையில் அது ஏற்றதாக இல்லை. ஆனால் தற்போது 50 மீட்டரில் கடலில் 5 நாள், 6 நாள் என்று தங்கி தொழில் செய்யும் வகையில் உரிய நேரமாக இருப்பதால் தேவையான படகு கட்டும் தளத்தை அதே நேரத் தில் கூட்டு முயற்சியில் வரும் நிறுவனத்திற்கு நாங்கள், மாண்பு மிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் முன்னுரிமை அளிப்போம் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

---

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



1992 ஏப்ரல் 3]

## 2. கவன ஈர்ப்பு.

### (அ) உதகமண்டலம்–கூடலூர் கல்லட்டி காட்டுச் சாலையில் வாகனங்கள் செல்லத் தடை விதித்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எச். எம். ராஜு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச் சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எச். எம். ராஜு.

*திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' உதகமண்டலம்–கூடலூர் கல்லட்டி காட்டுச் சாலையில் வாகனங்கள் செல்வதற்கு மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

தலைக்குந்தாவிலிருந்து கல்லட்டி வழியாக தெப்பக்காடு செல்லும் வழி அதிக அளவில் மிருகங்கள் நடமாடும் பகுதியாகும். அவைகளால் பயணிகளுக்கு ஆபத்து ஏற்படக்கூடும். மேலும், அதிக அளவில் வாகனங்கள் அவ்வழியாகச் செல்வதால் இயற்கை வனச்சூழலும் மற்றும் வன விலங்குகளின் சுதந்திரமும் பாதிக்கப் படும். ஆகவே, சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் அரசு ஊர்திகள் தவிர வேறு தனியாருக்குச் சொந்தமான வாகனங்கள் அப்பாதையில் செல்லக் கூடாதென நீலகிரி மாவட்ட நிர்வாகம் 1—2—1992-ல் தடை செய்து அறிக்கை வெளியிட்டது.

பொது மக்கள் மாவட்ட நிர்வாகத்திடம் விண்ணப்பித்துக் கொண்டதன் பேரில் மாவட்ட நிர்வாகம் மீண்டும் 17—3—1992 அன்று கீழ்க்கண்ட திருத்திய உத்திரவினைப் பிறப்பித்துள்ளது.

அதன்படி தனியாருக்குச் சொந்தமான ஜீப், கார் மற்றும் இரு சக்கர வாகனங்கள் காலை 8-00 மணியிலிருந்து இரவு 8-00 மணி வரை மேற்படி சாலை வழியாகச்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும், சுற்றுலாப் பேருந்துகள் உபயோகப்படுத்த

அனுமதிக்கப்படவில்லை. இரவு வேளைகளில் அப்பகுதி மக்கள் பயணம் செய்வதற்கு பிரத்தியேக அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளது. மசினக்குடியிலும் அதைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு பயணம் செய்யும் அவசர நிலை ஏற்பட்டால் இதற்கென மசினக்குடி காவல் நிலையத்தினர் மூலமாக மாவட்ட ஆட்சியரின் பிரத்தியேக அனுமதி பெற்று டூரிஸ்ட் டாக்சிகளில் செல்ல வழி வகுக்கப்பட்டுள்ளது.

எனவே, தலைக்குந்தாவிலிருந்து கல்லட்டி வழியாக தெப்பக்காடு செல்லும் வழி பொது மக்களுக்கும், விவசாயிகளுக்கும், பள்ளி மாணவ, மாணவியர்க்கும், சுற்றுலா பயணிகளுக்கும் பாதிப்பு ஏற்படா வண்ணம் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சில விதிகள் தளர்த்தப்பட்ட நிலையில் தடை செய்யப் பட்டுள்ளது.

***திரு. எச். எம். ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் அறிக்கைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நீலகிரி மாவட்டம், ஊட்டியிலிருந்து தெப்பக்காட்டு வழியாக மைசூர் செல்லும் குறுக்கு பாதை 'காட்டு ரோடு' ஆனது தலைகுந்தா, கல்லட்டி, சீகூர், மாவநல்லா, மசினகுடி வழியாக சென்று ஊட்டி—கூடலூர்—மைசூர் பிரதான சாலையைத் தெப்பக்காடு என்னுமிடத்தில் சந்திக்கின்றது.

ஊட்டியிலிருந்து தெப்பக்காட்டுக்கு கூடலூர் வழியாகச் சென்றால் அதன் தூரம் சுமார் 72 கிலோ மீட்டராகும். ஊட்டி— தெப்பக்காட்டுக்கு கல்லட்டி 'காட்டு ரோடு' வழியாகச் சென் றால் அதன் தூரம் சுமார் 39 கிலோ மீட்டராகும்.

அதனால் எரி பொருளையும் பொன்னான நேரத்தையும் சேமிக்க இந்த சாலை மிகவும் முக்கியமாக பயன்படுகிறது. தூரத் தில் சுமார் 33 கிலோ மீட்டரையும் காலத்தில் சுமார் 1 மணி நேரத்தையும் சேமிக்க இந்த சாலை மிகவும் பயனுள்ள வகையில் உதவுகிறது.

இந்தச் சாலையின் மூலம் பொதுமக்களும் முக்கியமாக விவசாயப் பெருங்குடி மக்களும், மாணவர்களும், உள்நாட்டு, வெளி நாட்டு சுற்றுலா பயணிகளும் பயனடைகிறார்கள்.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இருந்து சிறந்த வகையில் பயன்பட்டு வரும் இந்தச் சாலையை நீலகிரி மாவட்ட நிர்வாகம் 1—2—1992 முதல் அரசு வாகனங்களைத் தவிர மற்ற வாகனங் கள் செல்ல முடியாமல் இருக்கும் பொருட்டு உத்திரவு ஒன்று பிறப்பித்துள்ளார்கள்.



இந்தச் சாலை ஆரம்பித்த காலத்திலிருந்து வாகனங்கள் சென்று வருவதால் வன விலங்குகளின் சுதந்திரத்திற்கு பாதிப்பு கண்டிப்பாக இல்லை. இக்கால வன விலங்குகள் வாகன போக்குவரத்துக்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆகவே, வன விலங்குகளுக்கு இதனால் போக்குவரத்தினால் இடையூறு ஒன்றும் இல்லை.

இந்தக் கடுமையான நடவடிக்கையினால் பொதுமக்கள் மிகுந்த துன்பத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளும், வியாபாரிகளும், மாணவர்களும், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் மிகுந்த பாதிப்படைந்திருக்கிறார்கள். 17—3—1992 லிருந்து சில விதிகள் தளர்த்தப்பட்டதாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களது அறிக்கையில் உள்ளது. மாவட்டப் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எச். எம். ராஜு, கேள்விகேட்க உங்களை அழைக்கிறேன்.

**திரு. எச். எம். ராஜு :** தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களிலிருந்து வேன்கள் மூலமாக வருகைதரும் பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் அந்த வழியாக வருவதற்கும் போவதற்கும் தடையுள்ளது. மற்ற மாநிலங்களிலிருந்து பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும் அதிக அளவில் நீலகிரிக்கு வருகை தந்து கொண்டிருக்கிறார்கள் ஆகவே மேற்படி மற்ற மாநிலங்களிலிருந்து வரும் பொதுமக்களுக்காகவும் உள்ளூரிலிருந்து வெளியூர் செல்லும் நம் பொதுமக்களின் வசதிக்காகவும், பழையபடி முன்பு இருந்தது போல அந்த சாலையை உடனடியாக எல்லா வாகனங்களும் பயன்படுத்தும் வகையில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை பயன்படுத்தும் வகையில் போர்க்கால நடவடிக்கையில் மக்களுக்கு உதவும் வகையில் முன்வருவார்களா என மாவட்ட மக்கள் சார்பாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு நன்றி சொன்னார்கள். அது அந்த நன்றி சொல்வதற்கு நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த கவன ஈர்ப்பு வந்த உடனே வாயுவேகத்தில் வருகின்ற அம்பு போல ஆணை பிறப்பித்தார்கள். அது வனத் துறைக்குச் சொந்தமான பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும் அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிற வன விலங்குகளை பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை பேருந்துகளை யார் வேண்டுமானாலும்

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1992 ஏப்ரல் 3

அங்கே இயக்கலாம். இரவு நேரங்களில் அந்த பேருந்துகள் மட்டு மல்ல, மற்ற வாகனங்களை இயக்குகின்றபோது ஜீப்பில் செல் கின்றவர்கள் அங்கே சென்று வன விலங்குகளுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையை உருவாக்குவதோடு அதை சுடுகிறார்கள். அந்தக் காட்டுக்குள் சென்று வேட்டையாடுகிறார்கள். அந்த நிலையைப் போக்குவதற்கு அரசு காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் அந்தப் பகுதியில் யார் வேண்டுமானா லும் எந்த வாகனத்தை வேண்டுமானாலும் ஓட்டி செல்லலாம் என்ற உத்தரவை நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கி றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10—35

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரியான மிகவும் முக்கியமான பிரச்சினை களைத் தீர்வு காணும் வகையில் நமது மாவட்ட நிர்வாகம், நீலகிரி மாவட்டத்து பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினரும் 3 சட்டமன்ற உறுப்பினர்களான எங்களையும் கலந்து ஆலோசித்து முடிவு செய்ய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட நிர்வாகத்துக்கு அறிவுரை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனவிலங்கு சரணாலயம் இருக் கின்ற இடத்தில், இதற்கு முன்னாலே ஆணை பிறப்பித்ததைப் போல, முழுமையாகத் தடை செய்வதாக இருந்தாலும் கூட, காலை 8 மணியிலிருந்து இரவு 8-00 மணி வரையிலும் பேருந்து களை இயக்க வேண்டுமென்றாலும், உங்களைப் போன்ற சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கலந்து ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிவுரை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சேலத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப் படாததால் சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. க. அர்ச்சுனன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. க. அர்ச்சுனன்.



1992 ஏப்ரல் 3]

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறை வேற்றப்படாததால் ஏற்பட்டுள்ள சுகாதாரக் கேடு குறித்து" மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

விவர அறிக்கை.

சேலம் நகராட்சிக்கு முழுமையான பாதாள சாக்கடை வசதிகள் அளிக்க அரசு ஆணை எண் 1529 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 4—10—1980-ல் பாதாள சாக்கடைத் திட்டம் நிர்மாணிக்க ரூ. 910 இலட்சத்திற்கும், பராமரிக்க ஆண்டொன்றுக்கு ரூ, 15.60 இலட்சத்திற்கும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் 50 சதவீத செலவு நிதியை திட்டம் தொடங்குமுன் ஹட்கோவிடமிருந்து பெறு மாறு மேலே குறிப்பிட்டுள்ள ஆணையில் வரையறுக்கப்பட் டது. போதுமான முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் ஹட் கோவிடமிருந்து நிதி கிடைக்காததால் இரண்டு வருடமாகி யும் திட்டம் தொடங்க இயலவில்லை. எனவே திட்டமானது திருத்தியமைக்கப்பட்டு அரசு ஆணை எண் 286 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 8—3—1983-ல் ரூ. 1200 இலட்சம் செலவில் திட்டத்தை எல்.ஐ.சி. உதவியுடன் செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. இதன்படி சேலம் வட மண்டலப் பகுதியின் 1,3 மற்றும் 6 பிரிவுகளில் 19 கி.மீ. நீளத்திற்கு சுட்ட மண் ( Store Ware ) குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. மேலும் 2,766 வீட்டு இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

2. இக்கழிவு நீர் திட்டத்தின் சுத்திகரிப்பு பணிகளுக்கான இடம் முதலில் பூலாவாரி கிராமத்தில் தேர்வு செய்யப்பட் டது. ஆனால் அதற்கான இடத்தை கையகப்படுத்தும் பொழுது கிராமத்தாரிடமிருந்து பலத்த எதிர்ப்பு ஏற்பட்ட தால் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய இயலவில்லை, இதனால் சட்ட ஒழுங்கு பிரச்சனை உருவாகுமென மாவட்ட ஆட்சித் தலைவர். சேலம் அவர்கள் கு, எண், 74467—83;-13-9, நாள் 13—1—1984-ல் அரசுக்கு தெரியப்படுத்தினார், ஆதலால் இதர பணிகளை மேற்கொள்ள கால தாமதம் ஆயிற்று,

3. இதற்கிடையில் சேலம் உருக்காலை அருகிலுள்ள முருங்கம்பட்டி, பெத்தம்பட்டி, சங்ககிரி சாலையில் உள்ள உத்தம சோழபுரம். புத்தூர், அக்ரஹாரம். தர்மபுரி சாலை யில் உள்ள பாரப்பட்டி. எருமபாளையம் பகுதிகளில் சுத்தி

கரிப்பு நிலையம் அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், தொழில்நுட்ப ரீதியாலும் நிலம் கையகப்படுத்தலின் சிக்கல்களினாலும் இவைகள் கைவிடப்பட்டன.

4. இறுதியாக இத்திட்டத்தை மேலும் காலதாமதமின்றி பயனுக்கு கொண்டு வரும் பொருட்டு சேலம் நகராட்சியின் சம்மதத்தின்பேரில் நகராட்சிக்கு சொந்தமான சுமார் 2100 ஏக்கர்கள் பரப்புடைய பனைமரத்துப்பட்டி ஏரியில் கழிவு நீர் சுத்திகரிப்பு பணிகளுக்கான இடம் அரசு ஆணை எண் 587, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 15–6–1988-ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கான திருத்திய திட்ட மதிப்பீடு ரூ. 2260 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு வாரிய ஒப்புதலுக்குப்பின் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இக் கோப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

5. பனைமரத்துப்பட்டி ஏரியில் ஆய்வு நடத்துகையில் நில ஆக்கிரமிப்பு செய்துள்ள மக்களால் குறுக்கீடு ஏற்பட்டு. சென்னை உயர் நீதிமன்றம் ஏரியில் வேலை மேற்கொள்ளாதபடி இடைக்கால உத்திரவு வழங்கியுள்ளது.

6, எனவே கழிவுநீர் பண்ணை அமைப்பதற்கான இடம் கிடைக்காததால், முழு அளவிலான சுத்திகரிப்பு நிலையம் அமைத்து கழிவுநீர் சுத்தம் செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதற்கான கூடுதல் செலவினங்களையும் பராமரிப்பு இடையூறுகளையும் கருத்தில் கொண்டு நகராட்சி இத்திட்டத்திற்கு சம்மதிக்கவில்லை. இந்நிலையில் மாற்று ஏற்பாடாக கான்பூரில் புதிதாக செயல்படுத்தப்பட்டுள்ள UASB (Upflow Anerobic Sludge Blanket) முறையை சேலம் கழிவுநீர் திட்டத்தில் செயல்படுத்த சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சியின் முடிவு ஏப்ரல் மாதத்தில் (1992) எடுக்கப்பட்டு தொடர்ந்து சுட்ட மண் ( Stone ware ) குழாய்கள் பதிக்கும் வேலைகளும் இத்திட்டத்தின் இதர வேலைகளும் மீண்டும் மேற்கொள்ளப்படும்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூ.ஏ.எஸ்.பி. ஸ்கீம் சேலம் போன்ற பெரிய நகரத்திற்கு ஒத்துவராத திட்டம். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சேலத்தை கார்ப்பரேஷனாக அறிவித்து இருக்கிறார்கள், தேர்வு செய்யப்பட்ட பனைமரத்துப்பட்டி ஏரியாவில் ஒதுக்கப்பட்ட இடம் தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டதனால் இந்தத் திட்டம் நீண்டகாலமாக நிலுவையில் இருக்கிறது. பல ஆண்டுக்காலமாக, 1981-லேயிருந்து சேலத்தின் முன்னேற்றத்திற்கான 12 கோடி ரூபாய் வழங்கப்படவில்லை. கொசுத் தொல்லையும் தாங்கவே முடியவில்லை. எனவே,





கொண்டலாம்பட்டி ஏரியில் 150 ஏக்கர் நிலமும், அருகில் வாய்க்கால் வெட்டப்பட்டிருக்கிற பூலாவாரி ஏரியில் 150 ஏக்கர் நிலமும், ஆக மொத்தம் 300 ஏக்கர் நிலம் தயாராக இருக்கிறது. எனவே. அந்த நிலத்தைப் பயன்படுத்தி, அந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கிடைக்காத காரணத்தினால்தான் இந்தத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதே தவிர, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிலம் கொடுப்பதற்குத் தயாராக இருந்தால். இந்தத் திட்டத்தை வேகமாக, விரைவாக முடிப்பதற்கு தமிழக அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேலம் பாதாள சாக்கடைத் திட்டம்தற் போதைய நகராட்சி பகுதிக்குள் அடங்கி விடுகிறது. டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சேலத்தை மாநகராட்சியாக அறிவித்து இருக்கிற காரணத்தினால் இப்போதைய பாதாள சாக்கடைத் திட்டத்தை, மாநகராட்சியில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிற எல்லா பகுதிகளுக்கும் இப்போதைய திட்டத்திலேயே விரிவுபடுத்தி, திட்டச் செலவு ரூபாய் 12 கோடியாக இருப்பதை திருத்தி அமைக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியினுடைய எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அப்படி வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் இந்த ஏரிகள் வருமானால் அவற்றைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு இந்தத் திட்டத்தை மாற்றி அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. மானியக் கோரிக்கைகள். 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்.

(ஆ) கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

[1992 ஏப்ரல் 3

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 15,95,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1584. திரு. எம். ஆண்டி அம்பலம்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைக் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,95,31,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1631, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகப்பட்டினம்' காயிதே மில்லத் மாவட்டம்-திருத்துறைப்பூண்டி தொழில் துறையில் பின்தங்கியிருப்பதால் 'டிக்' மற்றும் 'சிப்காட்' ''மூலம் சிறிய தொழில்களைத் தொடங்கும் அவசியத்தைக் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில்கள் பற்றிய 24—ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,95,31,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1992 ஏப்ரல் 3] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

''தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு'' பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 18,68,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் எண் 1644, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் படித்த இளைஞர்களுக்குத் தொழில் செய்ய வழங்கப்படும் கடன்களை ஒழுங்குபடுத்தி உடனுக்குடன் வழங்க வேண்டுதல் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 54—ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,68,63,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற பொருள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன. அதிலே தமிழில் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அதை இந்த அவைக் குறிப்பில் பதிவு செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.@ இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில் உறுப்பினர்களது கருத்துக்களுக்கு என்னுடைய பதிலுரையையும், அரசு எடுக்க எண்ணியுள்ள சில முக்கிய முடிவுகள் பற்றியும் தெரிவிக்கிறேன் என்று கூறி அமைகிறேன்.

---

@ 169—164 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

*திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த மானியக் கோரிக்கையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன். நம்முடைய அரசு ஒரு புதிய தொழில் கொள்கையை 20–1–1992 இல் உருவாக்கியிருக்கிறது. அதை நள் வரவேற்கிறோம். பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறது. அதை நாங்கள் மனதார வரவேற்று, பாராட்டுகிறோம்.

ஆனால் பல்வேறு நல்ல காரியங்களைச் செய்யும் போது இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்—ஐ நாங்கள் வசதிப் படுத்துவோம் என்று கூறப்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொன்னால், இரயில்வே வசதியைப் பற்றித்தான் நான் முக்கியமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக நம்முடைய தர்மபுரி மாவட்டத்திலே ஓசூரிலே நம்முடைய தொழில் பேட்டை இருக்கிறது. ஆனால் அங்கே நேரடியாக டிரெயின் வசதி இல்லை. டிரெயின் வசதி இல்லை என்று சொல்லும்பொழுது, இப்பொழுது குறிப்பாக கர்நாடகத்திலே இருக்கின்ற பிரச்சினையின் காரணத்தால் பெங்களூருக்கும் நம்முடைய ஆட்கள் போக முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால் முதன் முதலாக எந்தெந்த இடங்களில் தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ அந்தந்த இடங்களில் இரயில் வசதி செய்து கொடுப்பதற்காக மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய கருத்து என்னவென்று சொன்னால், அரசியல் ரீதியாக எஸ்.எஸ்.ஐ. யூனிட்டிலே இருக்கின்ற ஒரு சிக்கலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய ஜானகி அம்மாள் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், அதற்குப் பின்னால் தொடர்ந்து வந்த கவர்னர் ஆட்சிக் காலத்திலும் பல்வேறு எஸ்.எஸ்.ஐ. யூனிட்டுகள், ஸ்மால் ஸ்கேல் யூனிட்டுகள் துவங்கப்பட்டன. ஆனால் அன்று மானியம் கொடுக்க முடியவில்லை. கொள்கை முடிவு எடுக்க முடியவில்லை என்ற காரணத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்னால் வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அவர்கள் தொடங்கிய எஸ்.எஸ்.ஐ. யூனிட்களுக்குத்தான் கொடுப்போம் என்று சொல்லி மானியம் கொடுத்தார்கள். அன்று நம்முடைய அந்த அமைச்சரவையிலும்; அதற்குப்



பின்னால் கவர்னர் ஆட்சியிலேயும் தொடங்கப்பட்ட எஸ்.எஸ்.ஐ. யூனிட்டுகளுக்கு மானியம், சப்சிடி கொடுக்கப்படவில்லை என்பது ஒரு குறையாக இருக்கிறது. நம்முடைய முதலமைச்சரவர்கள் தயவு செய்து அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்டஸ்ட்ரி என்று சொன்னவுடனேயே, பணம் லோன் கொடுத்த உடனேயோ அல்லது மின்சாரத்தைக் கொடுத்த உடனேயோ வந்து விடும் என்று எனக்கு நம்பிக்கை இல்லை. ஏன் என்றால், there must be revolution. There must be spon'aneous response from them நான் இன்று லோன் கொடுத்தவுடனேயே வருகிறார்கள். அவர்களுக்கு அந்த இன்டஸ்ட்ரியைப் பற்றித் தெரிந்திருக்கிறதா என்றால் இல்லை, ஏதோ லோன் கொடுக்கிறார்களே என்று தொடங்குகிறார்கள். ஆகவே, 90 சதவீத இன்டஸ்ட்ரிகள் ஃபெயிலியராகி இருக்கிறது.

குறிப்பாகச் சொன்னால் ரா மெட்டீரியல்ஸ் இருக்க வேண்டும், அந்தப் பகுதியிலே. அதற்காகத் தெரிந்த ஆள் இருக்க வேண்டும். இல்லாமல் இருந்தால் நிச்சயமாக நடத்த முடியாது. குறிப்பாகச் சொன்னால், எங்களுடைய மாவட்டத்திலே டைட்டானியம் இருக்கிறது. அங்கே தொழிற்சாலை கிடையாது; இரப்பர் இருக்கிறது, அங்கே தொழிற்சாலை இல்லை. கடந்த வருஷம் நம்முடைய முதலமைச்சரவர்கள் அறிவித்தார்கள். நான் குறையாகச் சொல்லவில்லை. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே கோக்கனட் ஹஸ்க் இருக்கிறது. அதனுடைய ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதற்குக்கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கடந்த முறை அறிவித்தார்கள். அதை அங்கே தொடங்குவதிலே பல பிரச்சினைகள் இருக்கலாம் என்று நினைக்கிறேன். நிச்சயமாகத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த மாதிரி இடங்களிலே—எந்த இடத்திலே மூலப்பொருள் இருக்கிறதோ அந்த இடங்களில்—தொடங்கினால் தான் நன்றாக இருக்கும். ஆனால், தொடங்காமல் இருப்பதற்கான பிரச்சினை வேறு ஒன்று.

இங்கே இருக்கின்ற பெரிய முதலாளிகள் இந்தத் தொழிற்சாலைகளை வளர விடுவதில்லை என்ற முக்கியமான கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். The moropols Businessmen டிக், டான்சி நிறுவனங்கள் சரியாக வராததற்குக் காரணமே, டான்சி

யில் உள்ள அதிகாரிகளால் அல்ல; தொழிலாளர்கள் வேலை செய்யாததால் அல்ல. ஆனால் நம்முடைய புராடக்ட்டை மார்க்கெட்டிலே விற்கவிடாத அளவிற்கு அவர்கள் உடனே விலையைக் குறைத்து விடுகிறார்கள். அதுதான் முக்கியமான பிரச்சினை. அதனால்தான் டான்சியில் உள்ள பல நிறுவனங்களை நாம் மூடுகின்ற நிலைமைகளை எட்டி இருக்கிறோமே தவிர நம்முடைய தொழிலாளர்களையோ, நம்முடைய அரசு நிர்வாகத்தையோ குறை சொல்ல முடியாது என்பதுதான் என்னுடைய கருத்து.

குறிப்பாக நம்முடைய தொழிற்சாலைகளைப் பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக வாணியம்பாடியில் இட்டாலியன் கொலாபரேஷனிலே ஒரு தொழிற்சாலை, லெதர் இண்டஸ்ட்ரி, தொடங்கப்பட்டது. அது மூடப்பட்டது. ஏன் என்று சொன்னால்— நான் பெயர் சொல்ல விரும்பவில்லை? பெரிய ஒரு அளவிலே, இந்திய அளவிலே உள்ள பெரிய கம்பெனிகாரர்கள் தான் அதை மூடுவதற்கான காரண காரியம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று, மொபட், டான்சி நிறுவனத்தினுடைய "ரு வீலர்ஸ்". எவ்வளவோ ரு வீலர்ஸ் தேவைப்படுகின்றன. ஆனால் நாம் மூடுகின்ற நிலைமை வரக் காரணம், இங்கே தனியாரிடத்திலே இருக்கின்ற ரு வீலர்ஸ் கம்பீட் பண்ணி, விலையைக் குறைத்து விடுகிறார்கள். ஆகவே, நாம் மார்க்கெட்டிலே விற்க முடியாத காரணம் இருக்கிறது.

அது போன்றுதான் நம்முடைய போரெக்ஸ். அதை டிட்கோ நிறுவனத்தின் மூலமாகத் தொடங்கினோம். அதை மூடி இன்றைக்கு ஏஜன்சி நடத்தும் நிலைமை இருக்கிறது. வட இந்தியாவில் உள்ள போரெக்ஸ் மொரார்ஜி என்ற ஒருவர் தான் மொனாபலைஸ் செய்து அவர் நடத்திக் கொண்டு இருக்கிறாரே தவிர நம்மால் நடத்த முடியாத நிலைமைகள் வந்து கொண்டிருக்கின்றன. எதற்காக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்றால், ஒரு கமிஷனை நாம் நியமித்து ஏன் நம்முடைய இந்த நிறுவனங்கள் எல்லாம் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன, அதற்குக் காரணம் என்ன என்று ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-45

அதே போன்று, நம்முடைய இண்டஸ்ட்ரீஸ் பாலிசியை அறிமுகம் செய்ததற்குப் பின்னால், எந்த ஒரு பெரிய முதலாளியும் நம்முடைய தமிழகத்திலே வந்து தொழில் தொடங்கி



தாக எனக்குத் தெரியவில்லை. அதற்குக் காரணம் என்ன வென்று அறிய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், இங்கே பல தொழிற்சாலைகளை இப்போது தொடங்க வேண்டுமென்றாலும் கூட, மெத்தன நிலைமையே இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய 'அரோமேடிக்' தொழிற்சாலையை ரூ. 1,700 கோடிக்கு, எம்.ஆர்.எல்.-ம், ஜே.கே. நிறுவனமும் தொடங்க முன் வந்தது. இப்போது இருக்கிற சூழ்நிலை என்ன வென்றால், அவர்கள் அதைத் தொடங்கவில்லை ; அது ஏன் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்குக் கிடைத்த தகவல்படி, எம்.ஆர்.எல்.-ல் பணம் இல்லை. இதை மத்திய அரசினுடைய . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் புதிய தொழில் கொள்கையை அறிவித்த பின்னர், பெரிய தொழில் களை இங்கே துவங்க யாரும் வரவில்லை என்பது சரியான தகவல் அல்ல. என்னுடைய பதிலுரையில், என்னென்ன புதிய பெரிய தொழில்கள் துவங்கியிருக்கின்றன என்பதை விளக்க இருக்கிறேன். 'அரோமேடிக்' தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், மத்திய அரசின் ஒப்புதலுக்காகத்தான் அது காத்திருக்கிறதே தவிர, வேறு எந்தத் தடையும் இல்லை. Cabinet Committee on Economic Affairs என்ற மத்திய அரசின் குழுதான் இதற்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் இதற்கு சாங்ஷன் வழங்க வேண்டும். அந்த ஒரு ஒப்புதலுக் காகத்தான் அது காத்திருக்கிறதே தவிர, மற்றபடி அந்தத் தொழிற்சாலையைத் துவக்குவதற்கு வேறு எந்தத் தடையும் இல்லை என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூரில் இருக்கிற 'டேன்சம்'— தமிழ்நாடு சிமெண்ட்ஸ், இன்று 3 கோடி ரூபாய் லாபத்தில் இயங்கி வருகிறது. அதை தமிழக அரசே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். தனியாருக்கு அதை விட்டு விடக் கூடாது என்பதை என்னுடைய கருத்தாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் Hindustan Photo Films அதனுடைய ஷேர் பத்து சதவிகிதத்தை, இப்போது திரு. அம்பானி வாங்கிவிட்டு, அடுத்த யூனிட் போடும்போது, அதை தமிழகத்

திலே வைக்க வேண்டுமே தவிர, அது பம்பாய்க்குச் சென்று விடக்கூடாது என்பதைத் தான் என்னுடைய கருத்தாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று, 'எஸ்.ஆர்.எல். ஷிப்பிங் கம்பெனி' என்று சொல்லக் கூடிய நிறுவனம் பல கோடி ரூபாய் அளவில் ஏறத்தாழ 500 கோடி ரூபாய் அளவில் தமிழகத்திலே மூலதனம் செய்து, அரசிலே செய்தோம். அதை தனியார் நடத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 'ஹிந்து' பத்திரிகையிலே வந்திருக்கிறது :

''Ongoing projects for nearly Rs. 4,00,000 Cr.' என்ற தலைப்பிலே,

The magnitude of investments under way in development projects as revealed in the latest annual survey by the Centre for Monitoring Indian Economy gives an idea of the likely growth of different setors of the economy'

என்று கொடுக்கப்பட்டிருந்தது. நம்முடைய தமிழகத்திலே, இவையெல்லாம் தனியார் நடத்துகிற 'இன்வெஸ்ட்டுமெண்டு' கள். தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, அதனுடைய சதவிகிதம் குறைவாக இருக்கிறது. மகாராஷ்டிரத்திலே அது ஒன்றாவது இடத்திலே இருக்கிறது. இரண்டாவது, குஜராத்திலே இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியிலே, நிச்சயமாக அந்த அளவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல், 'ரா-மெட்டீரியல்ஸ்' இருக்கிற இடங்களில் தொழில்களைத் தொடங்கினால் தான் நல்லது. Industrially baekwara area என்று சொல்லி தொழிற்சாலைகளை ஆங்காங்கே தொடங்கினால், அது சிக்கலாக வந்து நிற்கும். தொடங்குகிறவர்கள் அதைப் பற்றிய அறிவு பெற்றிருக்க வேண்டும். 'சிக் இண்டஸ்ட்ரீஸ்' என்று வந்தவுடனேயே அதிகாரிகள் அதைக் கண்காணித்து செய்ய வேண்டும். 'சிக் இண்டஸ்ட்ரீஸ்' என்று சொல்வதற்கு காரணம், 'சப்சிடி' வாங்கிவிட்டு, பல பேர் 'இண்டஸ்ட்ரீஸ்' தொடங்காமல் இருக்கிறார்கள். 'பேக்வார்டு' என்று சொன்னவுடனேயே 'சப்சிடி' வாங்கிவிட்டு, எந்த அளவிலாவது லோனை வாங்கி விடுகிறார்கள். அதுவும் 'சிக் இண்டஸ்ட்ரீஸ்' என வருவதற்குக் காரணமாக இருக்கிறது. அதற்கு நிச்சயமாக ஒரு கமிஷனைப்



போட்டு, ஏதாவது செய்தால் தான் அது சரியாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

அதே போன்று, பெரிய தொழிற்சாலைகள், சிறிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஒரு பெரிய தொழிற்சாலை இருக்கிறது என்று சொன்னால், அந்தத் தொழிற்சாலையின் அதிபதிதான் ஷமால் இண்டஸ்ட்ரீஸ் வைத்தால், அதை நடத்த விடுவார்களே தவிர, அதற்குத் தேவையான பொருட்களை நாம் எஸ்.எஸ்.ஐ. மூலமாகக் கொடுத்தால், அதை நடத்த விடுவது இல்லை. . அந்த அளவுக்கு மொனாபலி பிசினஸ்தார்கள்—கோடீஸ்வரர்கள் சிறிய தொழிலை நடத்த விடுவதில்லை. எனவே, நான் கேட்டுக் கொள்கிறேன் : அந்த மாதிரி வரும் போது, உதாரணத்திற்கு, ஹாண்ட்லூம்ஸ் மற்றும் பவர்லூம்ஸ் என்று வரும்போது, பவர்லூம்ஸுக்கு அதிகமாக நாம் ''டாக்ஸ்'' போடலாம்; ஆனால், ஹாண்ட்லூம்ஸ்ஸைப் பொறுத்த வரை பேலன்ஸ்டயில், ''டாக்ஸ்'' குறைக்கத்தான் வேண்டும். எகானமி என்ற அந்த வகையிலே ஒரு கொள்கையை வைத்தால் தான், நிச்சயமாக சிறு தொழில்கள் வளர முடியும். ஏனென்றால் நம்முடைய தமிழகத்திலே எந்தத் தொழிற்சாலையை தொடங்கினாலும் சரி, தனியார் தொடங்கினாலும், அங்கே இருக்கிற ''மொனாபலி இண்டஸ்ட்ரியலிஸ்ட்ஸ்'' அதை எந்த அளவிலாவது ''க்ளோஸ்'' செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், விலையைக் குறைத்து விடுகிறார்கள். வட இந்தியாவில் மார்க்கெட்டில் நம்முடைய ஒரு பொருள் இருக்கிறது என்று சொன்னால், அதற்கு இணையாக நம்முடைய ஊரிலே சாதாரண ஒருவர் 100 அல்லது 50 கோடிக்கு ஒரு தொழில் தொடங்கினால், அந்தப் பொருளின் விலையை உடனே குறைத்து விடுகிறார்கள்.

உடனே இந்த பொருள் மார்க்கெட் ஆக முடியாது. இதை மார்க்கெட்டுக்கு விட்டால் ''லாஸ்'' வருகிறது. உடனே ''சிக் இண்டஸ்ட்ரீஸ்'' ஆகி விடுகிறது. தொழிலாளிக்கு அங்கே வேலை இல்லை. இதை நம்முடைய அரசு நிச்சயமாக மனதிலே கொண்டு அந்தக் கொள்கையை, பணக்காரர்களை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் பணக்காரர்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்களும் தொடங்கட்டும். ஆனால், எஸ்.எஸ்.ஐ. யூனிட்-ஐ ஊக்குவிக்கும் போது இத்தகைய குறைபாடுகள் இருக்கிறதா என்று நம்முடைய அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-50

அதே போல, ''கன்ஸ்யூமர் ஐடம்ஸ்''. நீங்கள் பாலிசி நோட்டிலே பல அயிட்டங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். மக்கள் அன்றாடம் உபயோகிக்கின்ற பொருள்களை அதிகமாகத்

[திரு. மா. சுந்தரதாஸ்] [1992 ஏப்ரல் 3

தயார் செய்வது இல்லை. குறிப்பாகச் சொன்னால், இலவச
மாக, குழைந்தைகளுக்குத் துணி கொடுக்கிறோம். 2½ கோடி
மாணவர்கள் படிக்கிறார்கள். இந்த யூனிபார்ம் தொழிற்
சாலையை அரசே எடுத்துச் செய்தால், பெண்களுக்கு அதிக
வேலை வாய்ப்புக் கிடைக்கும். 2½ கோடி மாணவர்கள் படிக்
கின்ற தமிழகத்திலே நிச்சயமாக ஒரு இண்டஸ்டிரியை வைத்தால்,
பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செய்தால் நன்
றாக இருக்கும். இன்று ஒவ்வொரு கடையிலும் ஒவ்வொரு
விலை் சொல்லுகிறார்கள். யூனிபார்ம் என்று சொன்னால்
ஸ்கூலிலே குறிப்பிட்ட கடையைச் சொல்லி அங்கே போய்
வாங்குங்கள் என்று சொல்கிறார்கள். 3,00, 500, 400 என்று
ஜோடிக்கு வாங்குகிறார்கள் அதை நம்முடைய அரசு கட்டுப்
படுத்தி, எல்லோருக்கும் கிடைக்கின்ற வகையிலே செய்ய வேண்
டும். இந்தத் தொழிற்சாலையைத் தொடங்கினால் பெண்
களுக்கு அதிகமாக வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லக்
கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்போது கூட இரண்டு நாட்களுக்கு முன்பு பார்த்தேன்.
மேட்டூரில் இருக்கின்ற தமிழ்நாடு அலுமினியம் கம்பெனியை மூடுவ
தாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. ஏறக்குறைய
1,500 தொழிலாளர்கள் அங்கே வேலை செய்கிறார்கள். இத்
தகைய தொழிற்சாலையை மூடுவதனால் பல தொழிலாளிகள்
வீட்டுக்குச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அது
லாபத்தில்தான் இயங்குகிறது. முந்தைய அரசில் கூட அதனு
டைய எலக்ட்ரிசிடி பிரச்சினை பற்றி இந்த அவையில் விவாதிக்கப்
பட்டு, அரசியல் ரீதியாக தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்குள்
நான் செல்ல விரும்பவில்லை. ஆனால் அந்தத் தொழிற்
சாலையை மூடிவிடக் கூடாது என்று சொல்லிக் கொண்டு,
மேலும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தை தொடங்கிவைத்
தார்கள். பின்னி தொழிற்சாலையைத் திறப்பதற்கும் கடும்
முயற்சியை எடுத்துக் கொண்டுள்ளார்கள். அதற்கு என்னுடைய
பாராட்டுக்களைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கி
றேன். அதே போல் பல "சிக் இண்டஸ்டிரீஸ்'' இருக்கின்
றன. அதற்கு நிச்சயமாக நாம் ஒரு சட்டம் கொண்டு வந்து,
அவைகளை நடத்துகின்ற வகையிலே செய்ய வேண்டும். ஏன்
என்று சொன்னால், ''சிக் இண்டஸ்டிரீஸ்'' என்று
சொல்லும் போது, பல கோடி ரூபாய் கொடுக்கிறோம். அங்கே
தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிலாளி
வீட்டுக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. உடனே அந்த
முதலாளி என்ன செய்கிறார். வேறு ஒருவர் பெயரிலே தொழிற்
சாலையைத் தொடங்குகிறார். Nearly 80 percent of the investment
made by these people has been available, from the public Exchequer,
by the Central Government and the State Government.



1992 ஏப்ரல் 3] [திரு. மா. சுந்தரதாஸ்]

மாநில அரசிடமிருந்தும் ''லோன்'' வாங்குகிறார். மத்திய அரசிட
மிருந்தும் ''லோன்'' வாங்குகிறார். இப்படி வாங்கி விட்டு,
''சப்சிடி'' யும் வாங்கிக் கொள்கிறார். அவ்வாறு வாங்கிவிட்டு,
அடுத்தவர் பெயரிலே வேறு தொழிலைத் தொடங்குகிறாரே
தவிர, அவர்களுக்கு ஒரு பிரச்சினை என்று வந்தால், உடனே
அந்தத் தொழிற்சாலையை ''சிக்இண்டஸ்டிரீஸ்'' என்று சொல்லி
விடுகிறார். இதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்
கவனிக்க வேண்டும். வேண்டுமென்றே முதலாளிகள் ''சிக்
இஸ்டஸ்ட்ரி'' என்று சொல்லிவிட்டு, மத்திய மாநில அரசுகளிட
மிருந்து பணம் வாங்க வேண்டும். தொழிலாளர்களை மிரட்ட
வேண்டும். இப்படிப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். உதாரணத்
திற்கு சொன்னால், மேட்டூரில் இருக்கின்ற அந்தத் தொழிற்
சாலை கூட நட்டத்தில் ஓடியது அல்ல. பல்வேறு காரணங்
களுக்காக அது மூடப்படுகிறது. அதை மூடக் கூடாது. மேலும்
இண்டஸ்டிரீஸ் அதிகம் வரவேண்டும் என்றால், இருக்கின்ற ''சிக்
இண்டஸ்டிரீஸ்களைப் பொறுத்தவரை ஒரு சட்டத்தைக்
கொண்டு வந்து, பொது மக்களுக்கு தொழிலாளர்களுக்கு
நன்மை கிடைக்கின்ற வகையிலே செய்ய வேண்டும் என்று கேட்
டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே எந்த ஒருதொழிற்சாலையும்
கிடையாது. இருக்கின்றதோ ஒரு ''கேஷ்யூ நட்'' தொழிற் சாலை.
எந்த சப்சிடியும் கொடுக்கமாட்டார்கள். அதிலே கொத்தடிமை
வேலை நடத்துகின்றார்கள். கேரளாவிலே இருக்கின்ற முதலாளி
கள் அங்கே வந்து, இம்ஃப்போர்ட்டட் கேஷ்யூ நட் கொண்டுவந்து
தொழிற்சாலை நடத்துகிறார்கள். என்னுடைய பகுதியில்
124 பாக்டரி இருக்கிறது. அங்கே ஏழைக் குழந்தைகளை பெண்
களை வைத்து வேலை வாங்குகிறார்கள். அதிக வேலை வாங்கி
விட்டு, ரூ. 2, ரூ. 3 என்றுதான் சம்பளம் கொடுக்கிறார்கள்.
'மினிமம் வேஜஸ்' அறிமுகம் செய்தும்கூட, அந்த தொழிற்
சாலைகளில் மினிமம் வேஜஸ் கொடுப்பதில்லை. அதிகாரிகள்
இருக்கிறார்கள். லேபர் இன்ஸ்பெக்டர் என்று இருக்கிறார்கள்.
இவர்கள் அங்கே வந்து பார்ப்பது இல்லை. மாமூல் வாங்குவதற்கு
என்று அதிகாரி. கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டத்திற்கு
என்று இரண்டு ஜில்லாவிற்கும் சேர்த்து அதிகாரிகள் போடுவார்
கள். இவர்கள் மாதா, மாதம் வருவது எனக்கு நன்றாகத்
தெரியும். அவர்கள் 7, 8 முதலாளிகளை வரவழைத்து காசு
வாங்குகிறார்களே தவிர, ஏழைப் பெண்களுடைய குழந்தை
களுடைய கஷ்டங்களைக் கேட்கத் தயாராக இல்லை. கேட்டால்
பேசத் தயாராக முதலாளிகள் இல்லை என்று மிரட்டுகிறார்கள்.
மத்திய அரசு நிறுவனம் எர்ணாகுளத்தில் இருக்கிறது. அவர்
களிடம் பேச முடியாது. நம்முடைய தமிழகத்திலே இருக்கிற
லேபர் ஆபீசர்கள் இந்தத் தொழிற்சாலைகளைப் பார்க்கிறார்
களா ? அங்கு தொழில் செய்பவர்கள் , தொழிலாளர்களுக்கு

வேண்டிய எந்த ஒரு எந்தஅடிப்படை வசதியும் இல்லாமல் பேக்டரியைக்கட்டுகிறார்கள். பேக்டரி இன்ஸ்பெக்டர் எதற்கு இருக்கிறார் என்று ஒரு முறை கேட்டேன். நீங்கள் எதற்கு இருக்கிறீர்கள்; டெவலப்மெண்ட் ஆபீசர்கள் வரமாட்டார்கள். நீங்கள்வந்து பாருங்கள் என்று கூடச் சொன்னேன். எங்கள் விளவன்கோடு கல்குளம் தாலுக்காவில் இந்த மாதிரி தொழிற்சாலைகளை 3 மாதங்கள் நடத்துவார்கள். 3 மாதங்களுக்குப் பிறகு கேரளாவிற்கு கோட்டாவை விற்று விடுவார்கள். இந்த அளவு என்னுடைய பகுதியிலே கேஷுநட் பேக்டரியில் பெண்கள் மிகவும் மோசமான நிலையிலே வேலை செய்கிறார்கள். அதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அதே போன்று நம்முடைய இராமநாதபுரம் பகுதிகளிலும் சிவகாசி பகுதிகளிலும் பச்சிளம் குழந்தைகள் எல்லாம் வேலை செய்கிறார்கள். நான் ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குழந்தைகள் அங்கே வேலை செய்யும்போது thought child-labour is against the law, the child workers should be given opportunities to get some education அதாவது அந்த முதலாளிமார்களே முன்வந்து அங்கே ஒரு பள்ளிக்கூடம் கட்டி அவர்களுக்கு அறிவையும் கற்றுக்கொடுத்தால் நிச்சயமாக அதை நாம் வரவேற்கலாம். ஏனென்றால் அவர்களுக்குச் சம்பளமும் கிடைக்கிறது. அத்துடன் கல்விக்கும் வசதி இருக்கிறது என்று ஆகும். அப்படி என்றால் பிரச்சினை இல்லை. ஆனால் அவர்களைக் கொத்தடிமைகளாக ஆக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. அதாவது அந்தப் பகுதிகளில் அந்த முதளாளிகளே முன்வந்து நாங்களே அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கிறோம் என்று சொன்னால் அவர்கள் அவ்வாறு நடத்திக் கொள்ளட்டும். ஆனால் அதற்கு அவர்கள் தயாராக இல்லை. அவர்கள் 3 மணிக்கும் நான்கு மணிக்கும் காரிலே வந்து அந்தக் குழந்தைகளை கூட்டிக்கொண்டு போய் வேலை வாங்கி 2 ரூபாய், 3 ரூபாய் சம்பளம் கொடுத்து, 'சைல்டு லேபர்' நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதைத் தடை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய மாவட்டத்திற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்பு அறிவித்த அந்த 420 கோடி திட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைய அளவிலாவது நடைமுறைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும். நான் கலெக்டரிடம் கேட்டதற்கு ஏதோ, முதலாளிகள் எல்லாம் அது கம்யூனிஸ்ட் ஏரியா என்பதால் வரமாட்டேன் என்று சொல்வதாகச் சொன்னார்கள். நான் அவர்களிடம் பேசினேன். எங்கள் பகுதி



கம்யூனிஸ்ட் ஏரியா என்பதால் வராவிட்டால் கூட அதாவது கல்குளம், விளவங்கோடு போன்ற பகுதிகளுக்கு வரமாட்டேன் என்கிறார்கள் பயந்துகொண்டு என்றாலும் கூட (குறுக்கீடு) ஆமா, சார் வரமாட்டேன் என்கிறார்கள் பயந்துகொண்டு. (குறுக்கீடு) ஃபேக்ட் இஸ் எ ஃபேக்ட். முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். (குறுக்கீடு) இஷ்யூ இல்லை சார். நான் நேரடியாகக் கேட்டேன். முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்களே, நீங்கள் வர....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உட்கார்ந்துகொண்டு, திரு. ஜி. பழனிச்சாமி அவர்கள் பேசுவதும், அவ்வாறு உட்கார்ந்து அவர் பேசுவதற்கு திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் பதில் சொல்வதும் முறையல்ல.

<u>திரு. மா. சுந்தரதாஸ் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் தெளிவான பதிலைச் சொல்ல இருக்கிறார்கள். அதுவரையில் திரு. பழனிச்சாமி அவர்கள் பொறுத்திருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் கலெக்டரிடம் கேட்டேன். அப்போது அவர்கள் சொன்னார்கள், பல நிறுவனத்தினர் வந்தார்கள். உங்கள் பகுதி எல்லாம் கம்யூனிஸ்ட் ஏரியா என்பதால் வரமாட்டேன் என்கிறார்கள் என்றார்கள், எனக்கு தெரியும். கட்டடம் கட்டி முடிந்தவுடன் அவர்கள் வேலை கேட்பார்கள் அதாவது after the masorary job is cver they will ask for another job அங்கே தொழிற்சாலை தொடங்க வேண்டும் என்று கூட ஒரு சிலர் வந்தார்கள். ஆனால் அப்படி தொழிற்சாலை தொடங்க வேண்டும் என்று வந்தால் அங்குள்ளவர்களை மேஸன் வேலைக்குக் கூப்பிடுவார்கள். அந்தவேலை முடிந்தவுடன் அவர்கள் கேட்பார்கள் எனக்கு வேலை தரவேண்டும் என்று. இப்படிக் கேட்டால் எப்படிக் கொடுக்க முடியும்? அந்தப் பிரச்சினையைத் தான் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் தவறாகச் சொல்லவில்லை. நான் கலெக்டரிடம் சொன்னேன். நீங்கள் பெரிய பணக்காரர்கள் வந்தால் ஊக்குவிக்கவேண்டும் என்று. முதலமைச்சர் அவர்களும் தொழிலுக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்வதாகச் சொன்னார்கள். எனவே, என்னுடைய பகுதியிலே இல்லை என்றால் கூட எங்கள் மாவட்டத்திற்கு வருகிற வகையில் நம்முடைய திரு. அம்மமுத்துப் பிள்ளை அவர்களுடைய பகுதியிலேயாவது வையுங்கள். ஏனென்றால் அங்கே அவ்வளவு கம்யூனிஸம் இல்லை. நான் உண்மையைச் சொல்கிறேன். என்னுடைய பகுதியில் பலர் வர விரும்பவில்லை. அப்படித்தான் இருக்கிறது. எனவே தோவாளை தாலுக்கா, 'இண்டஸ்ட்ரியலி பேக்வர்ட் ஏரியா' என்பதால் தோவாளையில் வைத்தால் கூட போதும். எனவே எங்கள் மாவட்டத்திற்கு இண்டஸ்ட்ரீஸ் வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில்தான் வேண்டும் என்று நான் கேட்கவில்லை.

கல்குளம் தாலுகாவில் இல்லை என்றால் கூட தோவாளை தாலுகாவிலாவது அந்த இண்டஸ்ட்ரி-யைக் கட்டுவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்கள் தெய்வத்திடம் போய் வரம் கேட்பார்கள். ஆனால் வரம் கொடுக்கிற அந்தத் தெய்வத்திற்கே வரம் கொடுத்த, வாழ்வு கொடுத்த தெய்வத்தின் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கிற இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் (மேசையைத் தட்டும் ஒலி) கோரப்படுகிற இந்தத் தொழில் துறை மானியக் கோரிக்கையினை வரவேற்று சில கருத்துக்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வீழ்ச்சியுற்ற தமிழகம் எழுச்சி பெற வேண்டும்; தொழில் வளர்ச்சியில் தமிழகம் முன்னேற வேண்டும்; வேலையற்றோரே இல்லை என்கிற நிலை உருவாக வேண்டும் என்கிற உணர்வை நெஞ்சிலே தாங்கி மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது தமிழ் மாநிலம் தொழில் துறையிலே முதல் மாநிலமாகத் திகழ வேண்டும் என்கிற பெருநோக்கோடு, தொலை நோக்கோடு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நினைத்ததை முடிக்கிற ஆற்றல் மிக்க முதலமைச்சர். மயில் இறகையும் மரகதமாக மாற்றுகிற ஆற்றல், கூழாங்கல்லையும் வைரக் கல்லாக ஆக்குகிற ஆற்றல், புல்லைக்கூட போர்களத்து வில்லாக மாற்றுகிற சக்தி நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு தொழில் அதிபர்களை எல்லாம் அழைத்துப்பேசி தொழில் துவங்குபவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அறிவித்து தமிழகத்தின் தொழிற்கொள்கையிலே ஒரு மறுமலர்ச்சியை, புதுப் புரட்சியை ஏற்படுத்துகிற வகையில் புதிய தொழிற்கொள்கையை உருவாக்கி தமிழகத்தைத் தொழில் வளம் மிக்க மாநிலமாக ஆக்குவதற்கு முனைப்பான நடவடிக்கை எடுத்து வருவதன் மூலம் பல தொழில்கள் வருவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒரு மாநிலம் தொழில் வளர்ச்சி பெறவேண்டுமென்று சொன்னால் மூலதனம் இருந்தால் மட்டும் போதாது.



மூலப்பொருள்கள் மட்டும் இருந்தால் போதாது. மின்சார சக்தி இருந்தால் மட்டும் போதாது. போக்குவரத்து வசதி இருந்தால் மட்டும் போதாது. ஒரு நல்ல சர்க்கார் இருக்க வேண்டும். நல்ல சர்க்கார் இருந்தால் மட்டும் போதாது. அந்த சர்க்காரை இயக்குகிற நல்ல முதலமைச்சர் இருக்கவேண்டும். ஆகவே நம்முடைய முதலமைச்சர் நல்லவராக, வல்லவராக, எதையும் சாதிக்கின்ற முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தினால் தமிழகம் தொழில் துறையிலே ஒரு முன்னேறுகின்ற மாநிலமாக நிச்சயமாக மாறும் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–00

இங்கே முன்னே பேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் தருமபுரி மாவட்டத்திலே ரயில் வசதியே இல்லை என்று வருத்தப்பட்டார்கள். நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட நெடுங்காலமாக கரூர்— தூத்துக்குடி அகல ரயில் பாதைத் திட்டம். அதைப்போல, கரூர்–திண்டுக்கல் அகல ரயில் பாதை திட்டம், சேலம்—பெங்களூர் அகல ரயில் பாதை திட்டம், இன்னும் அனுமதிக்கப்படாமலே மத்திய சர்க்கார் கிடப்பிலே போட்டிருக்கிறது என்பதனை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கரூர்— திண்டுக்கல் அகல ரெயில் பாதை திட்டம், தூத்துக்குடி அகல ரயில் பாதை திட்டம், 1980-லே ஆரம்பித்து 1987–லே முடியும் என்று அறிவித்தார்கள். ஆனால் இப்போது 6 கோடி ரூபாய் தான் அதற்கு ஒதுக்கி அந்தத் திட்டத்தினை கிடப்பிலே போட்டிருக்கிறார்கள் என்பதனை அவர்களுக்குச் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மாத்திரமல்ல, தமிழ்நாட்டிலே மத்திய அரசினுடைய முதலீடு குறைந்து கொண்டே வருகிறது. நாட்டின் மொத்த முதலீட்டில் 10 சதவிகிதமாக இருந்தது இன்றைக்கு 5 சதவிகிதமாக குறைந்திருக்கிறது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசின் முதலீடு மிகவும் அவசியமானது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். 10 ஆண்டு காலத்தை எடுத்துக்கொண்டு பார்ப்போமானால் ஆந்திரத்திற்கு 10 ஆண்டுகளுக்கு முன் இருந்ததை விட 99 மடங்கு அளவுக்கு மத்திய அரசு தொழில் முதலீடு செய்து இருக்கிறது. மராட்டியத்திற்கு 90 மடங்கு குஜராத்துக்கு 33 மடங்கு, ராஜஸ்தானுக்கு 25 மடங்கு, உத்தரபிரதேசத்திற்கு 25 மடங்கு. இப்படி வட புலத்திலே இருக்கின்ற மாநிலங்களுக்கு மத்திய சர்க்காருடைய முதலீடு அதிகமாக இருக்கிறது. ஆனால் தமிழகத்திற்கு 10 மடங்குதான். ஆகவே பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே தொழில் துறையிலே முதன்மை மாநிலமாக

தமிழகம் திகழ்ந்தது திகழ்ந்தது என்று மார் தட்டினார்களே, அன்றைக்கு மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி, மாநிலத்திலே காங்கிரஸ் ஆட்சி, ஆகவே தமிழகத்தில் ஒரு தொழில் தொடங்க வேண்டும் என்றால், மத்திய சர்க்காரின் அனுமதி இருந்தாக வேண்டும். அவர்களுடைய ஒப்புதல் இருந்தாக வேண்டும்.

இன்றைக்கு 1,433 கோடி ரூபாய் செலவில் நேஷனல் ஆரோமேடிக் திட்டம், பாம்பே ஹை பகுதியிலிருந்து தமிழ் நாட்டிற்கு எரிவாயு கொண்டுவர தென் மாநிலங்களுக்கு எரிவாயு இணைப்பு அமைக்கும் திட்டம், ரூ. 250 கோடி செலவில் இந்துஸ்த்தான் போட்டோ பிலிம் நிறுவனம், வண்ணப் படச் சுருள் தயாரிக்கும் திட்டம், சேலத்தில் ஒருங்கிணைந்த உருக்காலை அமைக்கும் திட்டம், 314 கோடி ரூபாய் செலவில் மணலியில் உள்ள சென்னை உரத் தொழிற்சாலையை நவீனப்படுத்தும் திட்டம், இப்படிப்பட்ட திட்டங்களை மாநில சர்க்கார் பல தடவைகள் வலியுறுத்தியும் இந்த மத்திய சர்க்கார் அனுமதி கொடுக்கவில்லை என்பதனை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் வளம் பெருகுகின்ற செந்தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமான சேதுசமுத்திரம் திட்டத்தை மத்திய சர்க்கார் கண்டுகொள்ளவே இல்லை. இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். குறிப்பாக சேது சமுத்திரம் தொகுதியைச் சார்ந்த இராமநாதபுரம் ஒன்றியம், மண்டபம் ஒன்றியப் பகுதியிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்கள் அங்கே குடியிருக்கின்ற வீடுகளுக்குப் பட்டா வாங்க முடியவில்லை. அந்த இடத்தை சொந்தம் ஆக்க முடியவில்லை. காரணம் சேது சமுத்திரத் திட்டம் வரும் வரும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தடை செய்து வைத்து இருக்கிறோம் என்று சொல்லி பட்டா கொடுக்க மறுக்கிறார்கள். சேது சமுத்திர திட்டமும் வந்த பாடில்லை. அங்கேயிருக்கின்ற மக்களின் கோரிக்கையும் நிறைவேறிய பாடில்லை. அந்த அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மத்திய அரசாங்கத்துக்கு பல அதிகாரங்கள் இருக்கின்றன. மத்திய அரசாங்கத்துக்கு 99 அதிகாரங்கள் இருக்கின்றன. ஒரு மாநில அரசாங்கத்திற்கு 66 அதிகாரங்கள் இருக்கின்றன. மத்திய மாநில அரசுகளுக்கு 47 அதிகாரங்கள் இருக்கின்றன. மிஞ்சிய அனைத்து அதிகாரங்களும் மத்திய சர்க்காருக்கே சொந்தம். ஆகவே, இன்றைக்கு அரிசி விலை



உயர்ந்தால், மண்ணெண்ணெய் விலை உயர்ந்தால் மாநில சர்க்காரைத் தான் கேட்கிறார்கள். இங்கே தொழில் வளர்ச்சி இல்லையென்றால், இங்கே தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லையென்றால் மாநில சர்க்காரைத் தான் கேட்கிறார்கள். மாநில சர்க்காரின் தாழ்வாரத்தில் நின்றுகொண்டு தான் உரிமைக் குரல் எழுப்புகிறார்கள் மத்திய சர்க்காரை கேட்பதில்லை. ஆகவே மத்திய சர்க்காரிடத்தில் மக்கள் இல்லை. மாநில சர்க்காரிடத்தில்தான் மக்கள் இருக்கிறார்கள். இதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள்.

முற்பகல் 11–05

'' மத்திய அரசு அனுமதியுடன், ஒப்புதலும் தர வேண்டும். மத்திய அரசினுடைய நிறுவனங்கள், அதனுடைய வருமானங்கள் அந்த மாநிலத்தின் வளர்ச்சிக்கு பயன்பட வேண்டும் '' என்று சொன்னார்கள். இன்றைக்கு அந்த நிலைமைதான் — அந்தக் கோரிக்கையை வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலை உருவாகுமானால் நிச்சயம் தமிழகம் பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் இருந்ததைபோல தொழில் துறையில் முதல் மாகாணமாக திகழும் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டில் சிறு சேமிப்பில் இன்றைக்கு முதலிடம் வகிக்கிறோம். ஆனால் 1992–93 ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு பங்கீடாக மத்திய அரசு 1,200 கோடி ரூபாயைத்தான் கொடுத்திருக்கிறது. சென்ற ஆண்டைவிட 1,165 கோடி ரூபாய் குறைவு. மாநிலங்கள் தொழில் வளர்ச்சிக்கு, மாநிலங்கள் வளர்ச்சிக்கு குறைந்த வட்டியில் பெறுகின்ற கடன் தொகை இன்றைக்கு குறைந்திருக்கிறது. ஆகவே, இன்றைக்கு தொழில் துறையிலே முன்னேற வேண்டுமென்று சொன்னால் அந்த அளவிற்கு நிதியைப் பெருக்க வேண்டும்.

இனறைக்கு நிலவரியைத் தவிர, விற்பனை வரியைத் தவிர மாநில சர்க்காருக்கு எந்த வரியிலும் பங்கு கிடைப்பதில்லை. இன்றைக்கு மாநிலத்திலே உள்ள கார்ப்பரேஷன் டாஸ்க், என்று சொல்லப்படுகிற அத்தனை வரிகளும் மத்திய சர்க்காருக்கு சொந்தம். அதைப்போல ஹெல்த் டாக்ஸ், அதைப்போல கிப்ட் டாக்ஸ், இப்படி பல வரிகள் மத்திய சர்க்காருக்குச் சொந்தமாக்கப்படுகின்றன. அதுபோல வருமான வரியில்கூட பெருந்தொகை மத்திய அரசாங்கத்திற்குதான் சொந்தம். ஆகவே, அத்தனை நிதிகளும் மாநில சர்க்காரிலிருந்து மத்திய சர்க்காருக்கு போகிறது. ஆகவே, அந்தப் பணத்தையாவது இந்த மாநிலத்திற்குக் கொடுத்தால் இந்த மாநிலத்திலே தொழிற்சாலைகளை உருவாக்கலாம்.

ஆகவே, இந்த நிலையில் ஒரு மாநிலஅரசு மத்திய அரசைத் தான் நம்பி இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, மத்திய அரசு மாகாண வளங்களை தங்களுடைய கண்காணிப்பிலே வைத்திருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையானது மின் சாரம், இன்றைக்கு புரட்சித் தலைவி ஆட்சியில் மின்சார உற் பத்தி அதிகரித்திருக்கிறது. கோடைக்காலத்திலே கூட, 'மின் சார வெட்டு இல்லை' என்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு புரட்சித் தலைவி அரசு சீராக, சிறப்பாக செயல் பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இராமநாதபுரம் மாவட்டத்தை சார்ந்தவன். இராம நாதபுரம் மாவட்டத்திலே எந்தத் தொழிற்சாலையும் இல்லை. மிகவும் மின்தங்கிய மாவட்டம். ஆனால் மண்டபம், பாம்பன் கடலுக்கடியில் சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது. அந்த சுண்ணாம்பு கல் ராஜபாளையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே சிமெண்ட் ஆலைக்கு பயன்படுத்துகிறார்கள். ஆகவே, மண்டப கடலுக்கடி யில் இருக்கிற அந்த சுண்ணாம்புக்கல்லை பயன்படுத்தி மண்டபத் திலே ஒரு சிமென்ட் தொழிற்சாலை உருவாக்கித் தர வேண்டு மென்று மெத்தப் பணிவன்புடன் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அத்துணையும் தரிசு நிலங் கள், மணல் மேடுகள், உப்பளங்கள் காடுகள் நிறைந்துள்ளது. மாவட்டத்திலே நிலத்தடி நீர் 69 சதவிகிதம் உப்பாகவே உள்ளது. இந்தியாவிலேயே நீண்ட கடற்பகுதி 265 கிலோ மீட்டர் உள்ள மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம்தான். ஆகவே, கடல் வளத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் தொடங்க வேண் டும். குஜராத் மாநிலம் கடல்வளத்தை பயன்படுத்தி முன்னேறி உள்ளது.

குஜராத் மாநிலத்தில் மண் உப்பை எடுத்து வளரும் மரம், செடி கொடிகளை வளர்க்கிறார்கள். இராமநாதபுரத்திலும், அதுபோல் செய்ய வேண்டும். இராமநாதபுரம் தரிசுப் பகுதிகளில் பேப்பர் தயாரிக்கப் பயன்படுகின்ற புல் வளர்க்கலாம். இந்தப் புல் மூங்கிலை விட மலிவானது.

இராமநாதபுரம் உப்பங் காட்டுப் பகுதியில் சோப்பு எண்ணெய் தயாரிப்பதற்கான செடிகளை வளர்க்கலாம். இந்தி யாவின் உப்பு உற்பத்தியில் 60 சதவிகிதம் குஜராத்தில் கிடைக் கிறது. இந்தஆண்டு குஜராத்தில் 4,000 கோடி ரூபாய் முதலீட்டில் கடல் வள தொழில்களை குஜராத் அரசு தொடங்க இருக்கிறது. அதுபோல, இராமநாதபுரத்திலும் உப்பு உற்பத்தி சம்பந்தப் பட்ட தொழில்களை உருவாக்க வேண்டும். கடல் உப்பி லிருந்து குரோமின் உற்பத்தி செய்யலாம். இதன் மூலம் உலகில் கிராக்கியாக உள்ளகுளோரின் தயாரிக்கலாம்.



கடல்பாசி அதிகம் கிடைப்பது இராமநாதபுரம் கடற்பகுதி யில்தான். இதன் மூலம் அகர் அகார் எடுக்கப்பட்டு வருகிறது. இதில் இருந்து ஆக்ரோஸ் என்ற இராசாயன பொருள் பிரித்து எடுக்கப்படுகிறது. இது விலை மதிப்பற்றது. ஆகவே, கடற் பாசிப் பண்ணையை மண்டபத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இது தவிர கடற் பாசியில் இருந்து கிராக்கியாக உள்ள அயோடின் உற்பத்தி செய்யலாம். அயோடைட் என்ற உப்பு தயாரிக்கலாம். ஆகவே, உப்பு வளத்தை அடிப்படையாக கொண்ட தொழில்களைத் தொடங்க வாய்ப்பு அதிகமாக இராமநாத புரத்தில் இருக்கிறது. ஆகவே எந்தத் தொழில் தொடங்கா விட்டாலும் கடல் வளத்தைப் பயன்படுத்தியாவது அங்கே தொழில் வளத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்தை மட்டுமே நம்பி இருக்கிற அந்த மக்கள் பருவ மழை அடிக்கடி தவறுவதால் அங்கே பஞ்சத்திலே வாடிக் கொண்டிருக் கிறார்கள். அங்கே தொழில் வளம் இல்லை. ஆகவே உப்பைப் பயன்படுத்தி, கடல் வளத்தைப் பயன்படுத்தி இராமநாதபுரம் பகுதியிலே அத்தகைய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டு மென்று கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11—10.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னவன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே தமிழகத்திலே தொழிற்சாலை கள் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசு இடையூறாக இருக்கிறதென்று எல்லாம் பேசினார்கள்...................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இடையூராக இருக் கிறதென்று சொல்லவில்லை. அனுமதி தர வேண்டுமென்றுதான் சொன்னார்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக் காலத்தில் மத்திய அரசுடன் நல்லுறவு இல்லாத காரணத்தால் பிரச்சினை இருந்திருக்கலாம். இன்றையதினம் தமிழகத்தின் முதலமைச்சரவர்கள் புதிய தொழிற் கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். ஆகவே தமிழகத் திலே தொழில்கள் ஆரம்பிப்பதற்குத் தடைக் கற்கள் எல்லாம் நீக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே நாங்கள், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களாகிய நாங்களும் உங்களோடு சேர்ந்து மத்திய அரசுடன் போராடி, தமிழகத்திலே தொழில்கள் தொடங்கு வதற்கு பாடுபடுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மூ. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மத்திய அரசோடு போராடுகின்ற எண்ணம் எங்களுக்கு இல்லை, மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக, வாதாட வேண்டுமென்ற உணர்வு எங்களுக்கு இருக்கிறது, அந்த உணர்விலே உங்களையும் இணைத்துக் கொண்டால் நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைவோம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா சா, பழனிசாமி, 10 நிமிடங்கள்,

திரு, நா, சா, பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய தலைமையிலே இயங்குகின்ற தொழில்கள். தொழில் வளர்ச்சிகள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு உழவர்-உழைப்பாளர் கட்சியின் சார்பாக எனது சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஒருசில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற கவிஞர் பாரதி கனவு கண்டதை. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இன்று நனவாக்கி வரும் நாளிலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு நாட்டினுடைய இரண்டு கண்களாக இருப்பது உழவும். தொழிலும், அந்த இரண்டு தொழில்களும் ஒன்றினுடைய வளர்ச்சிக்கு ஒன்று உறுதுணையாக இருந்து. வளர்ந்தால்தான் அந்த நாடு பொருளாதாரத்திலே ஒரு ஆரோக்கியமான வளர்ச்சி அடையும். அந்த வகையிலே மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் இந்த இரண்டு தொழில்களையும் இரண்டு கண்களாகக் கருதி, இந்தத் தொழில் வளர்ச்சிக்கு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் குறித்து நான் வரவேற்கிறேன். தமிழகம் இன்று அமைதிப் பூங்காவாக இருக்கின்ற நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தொழில்களின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது தொழில் அமைதி. அந்தத் தொழில் அமைதி இன்றைக்குத் தமிழகத்தில் காக்கப்பட்டு வருகிறது, அந்தத் தொழிலுக்கு அடுத்து தேவைப்படுவது மூலப்பொருள்களும். அந்த ஆலைகளை இயக்குவதற்கு வேண்டிய விசை உற்பத்தியும் ஆகும். அந்த மூலப் பொருள்களை உற்பத்தி செய்வதிலும். விசையை உற்பத்தி செய்வதிலும் இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கையானது பாராட்டுக்குரிய வகையிலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே



தெரிவித்துக் கொள்கிறேன், விசை உற்பத்திதான் தொழிலதிபர்களைத் தொழிற்சாலைகளைத் துவங்குவதற்கு தூண்டுகோலாக இருக்கும் அம்சம் என்று அறிந்து. ஜெயங்கொண்டத்தில் 7.000 கோடி ரூபாய் செலவிலே 1,500 மெகாவாட் மின் உற்பத்தித் திறனை தனியார் ஒத்துழைப்புடன் உற்பத்தி செய்ய இருப்பது வரவேற்கத்தக்க முயற்சி, இன்று மத்திய அரசு புதிய தொழிற் கொள்கையை அறிவித்திருக்கிறது.

முற்பகல் 11-15

அந்தப் புதிய தொழில் கொள்கையில் தொழில் உரிமங்கள் பெறுவதில் இருக்கிற இடையூறுகள் போன்றவற்றை நீக்கியிருக்கிறார்கள், தொழிலை. Liberali atien globalisation என்ற முறையில் தொழிலுக்குத் தாராள மனப்போக்கும், உலகளாவிய பொருளாதாரக் கொள்கைகளும் இப்போது கடைபிடிக்கப்பட்டு வருகிறது. வெளிநாட்டிலே இருப்பவர்களை முதலீடு செய்ய அழைக்கிறோம், பன்னாட்டு நிறுவனங்களை முதலீடு செய்ய அழைக்கிறோம், இப்போது மார்க்கெட் எக்கானமி பொருளாதார கொள்கைக்கு இந்திய நாடு வந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அந்தத் தொழில் கொள்கையைப் பின்பற்றி நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் தமிழகத்திற்குப் பொருத்தமான புதிய தொழில் கொள்கையை அறிவித்து இன்றைக்கு செயல்படுத்தி வருகிறார்கள். ஒரு தொழிற்சாலை என்றால், அதற்கு மூலப் பொருட்களை உற்பத்தி செய்பவர்கள், அந்தத் தொழிற்சாலைக்கு முதலீட்டைப் போடுபவர்கள், அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் அதன்பிறகு உற்பத்தியாகும் பொருட்களை வினியோகிப்பவர்கள் ஆகிய இந்த நான்கு தரப்பும் இணைந்ததுதான் ஒரு தொழில், அந்த நான்கு தரப்பும் அந்தத் தொழிற்சாலையில் கிடைக்கின்ற லாபத்தை சரிவிகிதமாக பகிர்ந்துகொள்கின்ற முறை உருவானால்தான் எல்லா மக்களும் அந்தத் தொழிற்சாலையின் பலனை அடைய முடியும்.

நம்முடைய நாட்டிலே இருக்கின்ற தொழிற்சாலைகளில் மூன்றில் இரண்டு பங்கு தொழிற்சாலைகள், வேளாண்மை மூலப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன. அப்படிப்பட்ட அந்த வேளாண்மைப் பொருட்களை மூலப் பொருளாக, அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளிலே இன்று அந்த மூலப் பொருளான விவசாய உற்பத்திப் பொருளை — உதாரணமாக கரும்பு, பருத்தி, எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றை தொழிற்சாலைக்குக் கொடுக்கிறபோது. அந்த தொழிற்சாலை லாபத்தை அடைகிறது, அந்தத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள் அமைப்பு ரீதியாக தொழிற்சங்கங்களின் மூலமாக சம்பள உயர்வு போன்றவற்றை

[திரு. நா. சா. பழனிசாமி] [1992 ஏப்ரல் 3

பெறுகிறார்கள் அந்த தொழிற்சாலையின் உற்பத்திப் பொருள்களுக்கும் நல்ல விலை கிடைக்கிறது, அதை விநியோகிப்பவர்களும் லாபத்தையே அடைகிறார்கள், ஆனால் அந்தத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற விவசாயப் பெருமக்கள் — அவர்கள் ஆர்கனைஸ்டு செக்டார் இல்லாத காரணத்தினால் அவர்களுடைய மூலப் பொருளுக்கு நல்ல விலை பெற முடியவில்லை, அப்படித் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருளை உற்பத்தி செய்கின்ற விவசாயப் பெருமக்களுக்கு, அவர்கள் உற்பத்திப் பொருளுக்கு நல்ல விலை கிடைக்கின்றபோதுதான் அந்த முடிந்த பொருளுக்கு வேண்டிய சந்தை (மார்க்கெட்) கிடைக்கும். அந்த விவசாயிகள்தான் கன்சூமர்களாகி அவர்கள் சமுதாயத்தில் பெரும் பகுதி இருக்கிற காரணத்தால் அந்த மூலப்பொருள்கள் முடிந்த பொருளாக வெளியே வருகிறபோது அதிலே நல்ல விலை கிடைக்கிற நல்ல வாய்ப்பு ஏற்படும், அந்த வகையில் நம்முடைய 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில். 'எஸ்கார்ட்' நிறுவனத்தின் சேர்மனாக இருக்கிற திரு. எச். சி. நந்தா அவர்கள் சமீபத்தில் சொல்லியிருக்கிற கருத்தை நான் மேற்கோளாகக் காட்ட விரும்புகிறேன், —

The Industry has to look beyond its note. Its role is not just to manufacture what is needed today is that we go back to the villages and start developments from there. These are the areas which will create demands for what the Industry produces. The Industry should help them to become wealth centres and create a purchasing power in these areas.

"தொழில்துறை தன்னைத்தாண்டி பார்வையைச் செலுத்த வேண்டும், அதனுடைய வேலை வெறும் தயாரிப்பு மட்டுமல்ல, இப்போது தேவைப்படுவதெல்லாம் நாம் திரும்பவும் கிராமங்களுக்குச் சென்று வளர்ச்சியை அங்கிருந்து துவங்க வேண்டும், தொழிற்சாலைகள் என்ன உற்பத்தி செய்கிறதோ அதற்கான தேவையை உருவாக்குகின்ற இடமும் அதுதான், கிராமங்கள் வளமுள்ள மையமாக மாற தொழில்துறை உதவ வேண்டும். கிராம மக்களிடத்தில் வாங்கும் சக்தியை உருவாக்க வேண்டும் ......" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அந்த விவசாயப் பெருமக்களுக்கு வாங்குகின்ற சக்தியை உருவாக்குவதற்கு மூலப் பொருட்களுக்கு நல்ல விலை கொடுக்கப்பட வேண்டும். அந்த வகையில் நம்முடைய சர்க்கரை ஆலைகளில் இப்போது கரும்புக்குக் கொடுக்கிற விலையானது விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடியதாக இல்லை. ஆனால் சர்க்கரை உற்பத்தியில் நமது மாநிலம் முழு அளவிலே இருக்கிறது.



1992 ஏப்ரல் 3] [திரு. நா. சா. பழனிசாமி]

முன்பு நான்கு ஆலைகள் இருந்தன. இப்போது 34 சர்க்கரை ஆலைகளாக உயர்ந்திருக்கிறது. இந்தியாவில் கரும்பு உற்பத்தி ஒரு ஹெக்டேருக்கு சராசரி 60 டன் என்று இருக்கிறபோது, தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தி 80 டன்னாக இருக்கிறது. அகில இந்திய சராசரியிலே தமிழகம்தான் கரும்பு உற்பத்தியிலே உலகத்திலே ஒரு உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. அந்த வகையில் விவசாயிகள் தங்களுடைய மூலப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இவ்வளவு திறமை காட்டியிருக்கிறபோது அந்த சர்க்கரை ஆலையிலிருந்து நமக்கு சர்க்கரைக்கு மட்டும்தான் விலை கணக்கிடப்படுகிறதே அல்லாமல் அதிலேயிருந்து கிடைக்கிற மொலாசஸ், அதிலேயிருந்து கிடைக்கின்ற 'பக்காஸ்' போன்றவற்றுக்கு, பல பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உதவுகின்ற அவற்றின் விலையிலிருந்து விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்துக் கொடுக்கப்படுவதில்லை. அதிலேயும் பகிர்ந்து கொடுக்கக்கூடிய ஒரு நடைமுறையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்,

முற்பகல் 11-20

அந்த கரும்பு ஒப்பந்தத்திலேகூட இருபுறத்து ஒப்பந்தம் இல்லாமல் ஒன்-சைடெட் அக்ரிமென்டாக போடப்படுகிறது, அதனால் கரும்பை உற்பத்தி செய்து கொடுக்கிற விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். உதாரணமாக ஒரு தொழில் விவசாயியால் எப்படி வளர முடியும், வாங்கும் சக்தியால் எப்படி வளர முடியும் என்பதற்கு கோவை மாவட்டத்திலே ஒரு உதாரணத்தைக் காட்ட விரும்புகிறேன். கோவை மாவட்டத்திலே பல புதிய ஆழ்குழாய்க் கிணறுகளை விவசாயிகள் நிலத்தடி நீரை எடுப்பதற்காக போட்டதன் காரணமாக, கோவையிலே இருந்த பம்பு-செட் தயாரிக்கிற ஃபவுண்டரி தொழிலானது— ஒரு காலக் கட்டத்திலே ஸ்டாட்சுரேஷன் பாயிண்ட் என்கிற அளவிற்கு, வாங்குவோர் இல்லாத நிலைமை ஏற்பட்டது, ஆனால் ஆழ்குழாய் கிணறுகளை அதிக விவசாயப் பெருமக்கள் போட்டதன் காரணமாக 'ஏர் கம்ப்ரெஸர்' என்ற புதிய பம்பு-செட்டைப் பொருத்தும் முறையைக் கொண்டு வந்ததன் காரணமாக. 'ஏர் கம்ப்ரெஸர் இண்டஸ்ட்ரீஸ்' கோவையிலே ஒரு பெரிய தொழிலாக இன்று வளர்ந்திருக்கிறது, இப்படி தொழில்கள் வளருவதற்கு விவசாயப் பெருமக்கள் புதிய முறையை, யுக்தியை கையாளுகின்றபோது தொழில் வளர்கின்றது. அப்படி வளர்கின்றபோது அந்த விவசாயத்தை செய்பவர்களுக்கும், அவர்கள் உற்பத்தி பொருளுக்கும், அந்தத் தொழிற்சாலை பொருளுக்கு நிகரான சம ஊதிய விலை கிடைக்கும்போதுதான் விவசாயம் வளர முடியும், அந்த விவசாயிகளுக்கும் அந்த இலாபத்தின் பங்கை கொடுப்பதற்காக

நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

எனது கிணத்துக்கடவு தொகுதியிலே பல புதிய தொழில்களை துவங்கியிருக்கிறார்கள். தொழிலில் மிகவும் பின்னடைந்த பகுதி என்ற காரணத்தால் மிகப் பெரிய தொழிற்சாலைகள் கட்டப்பட்டு வருகின்றன, கட்டிக்கொண்டிருக்கிறார்கள், நடந்து கொண்டிருக்கின்றன. துவங்க இருக்கின்ற ஆலை முதலாளிகள் மிகப் பெரிய தொழிலதிபர்கள் என்ற காரணத்தால், அவர்கள் பத்து ஏக்கர், 20 ஏக்கர் பரப்பளவிலே துவங்குகின்ற அந்த ஆலைகளில் 50 பேர்களுக்குத் தான் வேலை வாய்ப்பு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அங்கே கட்டிடம் கட்டும் சித்தாள் வேலைக்குத்தான் உள்ளூர் மக்களை பயன்படுத்துகிறார்களே அல்லாமல், அந்த தொழிற் சாலையிலே அவர்களுக்கு வேலை கொடுப்பதில்லை. (மணி அடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம். அவர்கள் எல்லாம் எம்.எல்.ஏ.க்கள் போன்றவர்களை மதிக்கின்ற அளவிலே இல்லை. ஜனாதிபதியை பார்க்கக்கூடிய அந்தஸ்திலே உள்ளவர்கள், எனவே அப்படி தொழில்களைத் துவங்கும் போது உள்ளூரிலே உள்ள, அந்த பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கொடுக்கக் கூடிய அளவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் தென்னை மரம் அதிகமாக இருக்கின்றது. தேங்காய் அதிகமாக விளைகிறது, அந்த தேங்காயை புவுடர் ஆக்கி அந்த வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற ஒரு ஆலையை துவங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே தென்னை நார் நிறைய கிடைக்கிறது, அங்கே நார் தொழிற்சாலை இருக்கிறது, ஆனால் தென்னை நார் எல்லாம் அங்கேயிருந்து கேரள மாநிலத்திற்கு அனுப்பப்படுகிறதே அல்லாமல் அவை தமிழ் நாட்டிலே, அந்தப் பகுதியிலே ஃபினிஷ்ட் புராடெக்டாக மாற்றப்படாததால் நமக்கு கிடைக்க வேண்டிய பெரும் இலாபம் கேரள மாநிலத்திற்குச் செல்லுகிறது. தென்னை நார் கழிவு இப்போது உபயோகமற்றதாக சாலைகளில் கொட்டி நெருப்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை ஏதாவது பயன்படும் பொருளாக மாற்றுவதற்கான முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொருவரும் தங்களுடைய தொகுதியில் தொழிற் சாலை துவங்க வேண்டும் என்று எல்லோருமே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வேண்டுகோள் வைத்துக் கொண்டிருக் கிறார்கள், அந்த வகையிலே நான் வேண்டுகோளாக வைக்



கிறேன், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் திருப்தி படுத்தும் வகையில் 'தொகுதிக்கு ஒரு தொழிற்பேட்டை' என்ற அளவில் அந்தந்த பகுதியிலே இருக்கின்ற 'ரா-மெட்டீரியல்களை' பயன்படுத்தி அந்த தொகுதியில் உள்ள அனைவருக்கும் வேலை வாய்ப்பும், தொழிற்சாலை வசதியும் கொடுக்கின்ற, 'தொகுதிக்கு ஒரு தொழிற்பேட்டை' என்ற அமைப்பை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம்,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. கோ. காளன்,

<u>திரு. கோ. காளன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மற்றும் தொழில் வளர்ச்சி பற்றிய மானியக் கோரிக்கையில் சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் தமிழகத்திலே தொழில் புரட்சி ஏற்பட வேண்டும் என்ற அவசியத்தைப் பற்றியெல்லாம் உணர்ந்த தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற சனவரி மாதத்திலே புதிய தொழில் கொள்கையை அறிவித்திருக்கிறார்கள், அந்த தொழில் கொள்கையிலே தொழிலை வளர்ப்பதற்கான பல்வேறு அடிப்படை வசதி களையும், பல்வேறு சலுகைகளையும். பல்வேறு மானிய வசதி களையும் அறிவித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

முற்பகல் 11.25

தமிழகத்திலே மட்டுமல்லாமல் இன்றைக்கு மாறி வரக்கூடிய உலகப் பொருளாதாரச் சூழலிலே, இந்தியாவிலேயே ஒரு பெரிய புதிய மாற்றங்கள் தொழிற் கொள்கையிலே மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது, கடந்த 25 ஆண்டுக் காலமாக இருந்து வந்த பல்வேறு இடுக்கண்களையும், பல்வேறு சட்ட திட்டங்களையெல்லாம் அகற்றி, தொழில்கள் தாராளமாக வளருவதற்கும், நம் நாட்டிலே மட்டுமல்லாமல் அந்நிய முதலீடுகளும் தாராளமாக இந்தியாவிலே கொண்டுவந்து அதன் மூலமாக தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய வகையிலே இன்றைக்கு இந்திய அரசு திட்டவட்டமான ஒரு தொழிற் கொள்கையை அறிவித்து இருக்கின்றது. அதே போன்று, தமிழகத்திலே இன்றைக்கு தொழில் வளர்க்க வேண்டுமென்று பார்க்கிறபோழுது, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தொழில்கள் வளருவதிலே மத்திய அரசு குறுக்கீடாக இருக்கிறது என்றெல்லாம் அல்லது சரியான ஊக்கம் தரவில்லை என்றெல்லாம் சொல்லி இருக்கின்றார்கள். ஆனால், அதிலே நாம் ஆராய்ந்து பார்க்கிறபோது இன்றைக்கு மத்திய அரசு என்பது ஏதோ வேறு ஆட்சி அல்ல; மத்திய அரசு என்பது இந்திய ஆட்சி ; இந்தியாவை ஆளக்கூடிய ஆட்சி, அந்த ஆட்சி நீடிப்

பதற்கும் நிலைத்து இருப்பதற்கும் தமிழகத்திலே இருந்து நம்முடைய உதவியினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த ஆட்சியை வலுப்படுத்தி இருக்கின்றார்கள்; அந்த ஆட்சி தொடர்ந்து நல்லாட்சியாக இருப்பதற்கு உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே, இன்றைக்கு மாறி இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலையில் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆளும் கட்சிக்கும், இந்திய அரசிலே இருக்கக்கூடிய ஆளும் கட்சிக்கும் ஒரு சிறந்த உறவு இருந்து வரக்கூடிய அளவிலே, இந்த உறவை நாம் வளப்படுத்தி, வலுப்படுத்தி தமிழகத்திலே நிச்சயமாக தொழில்களை வளர்ப்பதற்கு நாம் முயற்சி செய்யலாம்.

உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராசர் அவர்கள் இருந்தபோது, அவர்களின் நெருங்கிய உறவினரான அன்றைக்கு இராணுவ அமைச்சராக இருந்த கிருஷ்ணமேனன் அவர்கள், இராணுவத் தளவாடத் தொழிற்சாலைகளை வடநாட்டிலேதான் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தபோது, காமராசர் அவர்களிடத்திலே இருந்த பற்றும் பாசத்தின் காரணமாக பெருவாரியான இராணுவத் தளவாடத் தொழிற்சாலைகளை தமிழகத்திலே கொண்டு வந்தார்கள் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். ஆனால், அந்தத் தொழிற்சாலை அமைப்பதற்கு ஆவடியிலே—ஆவடியை 30 ஆண்டுகளுக்கு முன்பு புரட்டிப் பார்க்கிறபோது அது வெறும் பொட்டல் காடாக இருந்த பிரதேசம்— இன்றைக்கு பிரம்மாண்டமான தொழில் வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னால், அன்றைக்கு தமிழக அரசு கொடுத்த உறுதி—புழலிலே இருந்து தண்ணீர் தங்கு தடையின்றி வழங்குவோம் என்று சொல்லி இருந்தோம். ஆனால், அதற்காகப் போடப்பட்ட தண்ணீர்த் திட்டம் இன்றைக்கு அம்பத்தூர் நகராட்சிக்கும், அம்பத்தூர் சிட்கோவுக்காகவும் பகிர்ந்து அளிக்கப்பட்ட பிறகு, இராணுவத் தளவாடத் தொழிற்சாலைகளுக்கு இன்றைக்கு பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கின்றது; தொடர்ந்து அந்தப் பகுதியிலே தொழிலை மேலும் பலப்படுத்துவதற்கு, விரிவாக்கம் செய்வதற்கு தடை ஏற்பட்டு இருக்கிறது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, தமிழகத்திலே தொழில் வளமைக்கு மிக முக்கிய காரணம், நான் சென்ற சட்டமன்றத் தொடரிலே கூறி இருக்கின்றேன். கடந்த 20 ஆண்டுக் காலமாக தமிழகத்திலே தொழில்கள் வளருவதற்கு சில தடங்கல்கள் இருந்து இருக்கின்றது. அது என்னவென்று சொன்னால், முதலாவதாக மின்சாரப் பற்றாக்குறை. இருக்கக்கூடிய மின்சாரத்தை விநியோகிப்பதற்குத் தான் நாம் திட்டம் தீட்டிக்





கொண்டு இருக்கிறோமே தவிர, மின் திட்டம் வளர்ச்சி பெறுவதற்காக நாம் திட்டமிடவில்லை. ஆனால், ஒன்றை நான் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய மின் பற்றாக்குறையை நீக்குவதற்கு அவர்களுடைய தொழிற் கொள்கையிலே பல்வேறுவிதமான நடவடிக்கைகளை அறிவித்து இருப்பதை நான் முக்கியமாக வரவேற்க விரும்புகின்றேன். குறிப்பாக வட சென்னையில் ஏற்படுத்தக்கூடிய மின் திட்டம். அதைப்போல தூத்துக்குடியில் தனியார் துறையில், ஜெயகொண்ட சோழபுரத்தில்—இன்னும் பல்வேறு இடங்களில் ஏற்படுத்தக்கூடிய மின் நிலையங்கள் நிச்சயமாக தமிழகத்தினுடைய மின்சாரப் பற்றாக்குறையைத் தீர்க்கும். தொழிலதிபர்களை ஈர்க்கும் என்பதால் அதனை மிகவும் பாராட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன். அதைப்போல தண்ணீர் பற்றாக்குறை. தொழிற்சாலை என்று சொன்னால் இரண்டாவது வருவது தண்ணீர். இந்தத் தண்ணீரை தங்குதடையில்லாமல் வழங்க நாம் முயற்சி செய்ய வேண்டும். அடுத்தபடியாக நிலம். நிலம் வழங்குவதில், நிலத்தை கையகப்படுத்துவதில் பல்வேறு சிரமங்கள் இருந்து வருகின்றன. எனவே இப்படிப்பட்ட அத்தியாவசியமான பல வசதிகளை செய்ய தமிழக அரசு முன் வருமானால் நிச்சயமாக தமிழகத்தில் தொழில்களை வளர்க்க முடியும். இன்றைக்கு தமிழக அரசு தொழில்களை விரைந்து மேம்படுத்துவதற்காக டிட்கோ, சிட்கோ இன்னும் பல்வேறு தொழில் அபிவிருத்திக் கழகங்களையெல்லாம் நிறுவி இருக்கிறது. இவைகள் எல்லாம் தொழில் முனைவர்களை ஊக்குவிப்பதற்காக, தொழில்களை அடையாளம் காட்டுவதற்காக, தொழில்களைப் பெருக்குவதற்காக, தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுவதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால் இவைகளை எந்த அளவுக்கு வரவேற்று இருக்கிறார்கள், எந்த அளவுக்கு பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது நிச்சயமாக நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

பல பெரும் தொழில் அதிபர்கள், பணத்தை முதலீடு செய்பவர்கள் தமிழகத்தில் முதலீடு செய்வதற்கு தயங்குகிறார்கள். அதற்கு காரணம் இதுவரையில் இருந்த ஆட்சியாளர்கள் தொழில் துறையில் அமைதியை நிலைநாட்ட தவறி விட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக தமிழகத்தில் ஆளுங்கட்சி மாறுகிறபோது எல்லாம் தங்களுடைய ஆளுங்கட்சி தொழிற்சங்கத்தை நுழைப்பதற்காக அங்கேயிருக்கிற தொழில் சங்கங்களை அகற்றிவிட்டு, வன்முறை மூலம் தங்கள் தொழிற்சங்கத்தை புகுத்தும் கொள்கையை பிரதானமாகக் கொண்டிருந்ததால் தமிழகத்தில் தொழில்

அமைதி இல்லையென்று சொல்லி, பல தொழிலதிபர்கள் தமிழகத்திற்கு வரத் தயங்கினார்கள். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் திடமான சிறந்த கொள்கையை தமிழகத்தில் ஏற்படுத்தி இருக்கிறார்கள் என் பதை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

குறிப்பாக இன்றைக்கு பின்னி தொழிற்சாலையை எடுத் துப் பார்க்கிறபோது நம்முடைய சரித்திர வரலாற்றில் மட்டு மல்லாமல், உலக வரலாற்றில் ஒரு புகழ்பெற்ற தொழிற் சாலை அது என்றால் மிகையாகாது. அந்தத் தொழிற் சாலை இன்றைக்கு திறக்கப்பட இருக்கிறது என்று பார்க்கும் போது, எப்படி திறக்கப்பட இருக்கிறது என்பது தான் முக்கிய மான பிரச்சினை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தைத் திறக்க ஒப் பந்தம் போட்டார்கள். 3,000 தொழிலாளர்களில் 1,000 தொழிலாளர்கள் குறைப்பு. இருக்கக்கூடிய தொழிலாளர் களுக்கு வேலை பளு திணிப்பு. மூடப்பட்ட காலத்திற்கு சம் பளம் இல்லை. படிப்படியாகத் தான் வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் பின்னி தொழிற்சாலை திறக்கப்படுகிறது என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி)—நான் ஏறக்குறைய 30 ஆண்டுக்காலமாக தொழிற் துறையில் தொழிற் சங்க இயக்கத்தில் பணியாற்றி வந்திருக்கிறேன். இதுவரையில் எத்தனையோ தொழில் அமைச்சர்களையும், முதலமைச்சர்களையும் பார்த்து இருக் கிறேன். சென்ற ஆட்சியில்கூட ஓசூர் டி.வி.எஸ். சுசுகி தொழிற்சாலையில் ஏற்பட்ட பெரிய கிளர்ச்சியின் காரணமாக அன்றைய முதல்வர், திராவிட முன்னேற்றக் கழக முதல்வர் அவர்களைக் கூட இரண்டு மூன்று தடவை பார்த்து பேசி யிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு நான் பார்க்கிறபோது ஒரு 'நியு டெக்னிக்' பின்னி தொழிற்சாலையில் போட்டி சங்கத்திற்கு இடமில்லாமல், ஆள் குறைப்பு இல்லாமல், சம்பள வெட்டு இல்லாமல், இன்றைக்கு ஆள் கூட—இன்குலூ டிங் டெப்பரரி தொழிலாளர் ஆள் குறைப்பு இல்லாமல்— அந்தத் தொழிற்சாலை திறக்கப்படுகிறது என்றால்—இதுவரை யில் தமிழக வரலாற்றில் (மேசையைத் தட்டும் ஒலி) எத்த னையோ நலிவடைந்த தொழிற்சாலைகள், பஞ்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. என்ஜினியரிங் தொழிற்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. நலிவடைந்த தொழிற்சாலை களைத் திறக்கும்போதெல்லாம் சம்பள வெட்டையும், ஆள் குறைப்பையும் ஏற்றுக்கொண்ட பின்னால் தான் தொழிற் சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பின்னியில் இவை இரண்டும் இல்லாமல் திறக்கப்படுகிறது என்பதுதான் இன்றைக்கு





பாராட்டப்படக் கூடிய ஒன்று. இதற்கு கைத்தட்டமாட்டேன் என்கிறீர்கள். (மேசையைத்தட்டும் ஒலி) எனவே, இன்றைக்கு தமிழக ஆட்சியில், புரட்சித் தலைவி ஆட்சியிலே மூடப்பட்ட தொழிற்சாலையான ஸ்டான்டர்டு மோட்டார்ஸ் திறக்கப்பட்டு இருக்கிறது. பின்னி ஆலை திறக்கப்பட்டு இருக்கிறது. கடந்த ஆட்சிக்காலத்திலே பார்த்திருக்கிறோம். இரண்டு ஆண்டுக்காலம், மூன்று ஆண்டுக்காலம் ஆகியிருந்தாலும்கூட, மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறக்கவேண்டும், திறக்க வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்து சளைத்துத்தான் போய் இருக்கிறோமே தவிர, வேறல்ல. சென்ற சட்டமன்றத் தொடரிலே நான் எடுத்துச் சொல்கிறபோது, வாக்குறுதி கொடுத்தீர்கள். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே குறுகிய காலத்திலே திறந்திருக்கிறீர்கள் என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11–35

அதேபோன்று இன்னொரு வேண்டுகோளை நான் விடுக்க விரும்புகிறேன். அலுமினியம் தொழிற்சாலை, மால்கோ, மேட்டூரிலே உள்ளது. நம்முடைய தொழில் வளர்ச்சிக்கு மிகமிக முக்கியமானது அலுமினியம். அந்த அலுமினியத் தொழிற்சாலையை விரைவில் திறப்பதற்கு அதனுடைய பைல்கள் முதலமைச்சரிடத்திலே தேங்கியிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன்—அதை உடனடியாக விரைந்து செயல் படுத்த, மேட்டூர் ஆலையை நீங்கள் விரைவிலே திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று இன்னும் பல பஞ்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. அதைப்பற்றி அவ்வப்போது கோரிக்கைகளும் எழுந்து வருகின்றன. ஆனால், அந்த மூடப்பட்ட தொழிற் சாலைகளில், ஏறக்குறைய 10, 16 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவைகளைத் திறப்பதற்கு ஏதாவது வழிவகைகள் இருக்கின்றனவா என்பதையும் அல்லது திறக்க முடியாவிட்டாலும்கூட, அந்தத் தொழிலாளர்களுக்கு வேறு ஏதாவது மாற்றுத் திட்டங்களை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில், நாம் ஒரு தன்னிறைவு பெற்ற மாநில மாக இருக்கிறோம். எனவே, இங்கே ஹை-டெக் மூலமாக புதிய தொழிற்சாலைகளை, புதிய முறையிலே, ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிலே தொழிற்சாலைகளைக் கொண்டு வந்து, அந்தத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கக்கூடிய வகையிலே திட்டமிட வேண்டும் என்று நான் பணிவன்போடு

கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது) இன்னும் இரண்டு நிமிடங்கள் எனக்குக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழிலாளர் நல மானியம் பற்றி இன்னொரு நாள் விவாதிக்கப் போகிறோம்.

திரு. கோ. காளன் : இன்றைக்கு ஜப்பான் தேசத்திலிருந்து மிக முக்கியமான ஒரு தொழில் கேந்திரத்தை உருவாக்கு வதற்கு இங்கே முதலீடு செய்ய வந்தார்கள். ஆனால் அவர்கள் பெங்களூருக்குச் சென்று விட்டார்கள். குறிப்பாக "ஜப்பான் இண்டஸ்ட்ரியல் பார்க்'' என்ற திட்டத்தினை உண்டாக்கி, அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் ஒரு திட்டம் இருந்தது. ஆனால் இந்தத் திட்டம் தமிழகத்திற்கு வரவில்லை. இன்னும் இது போன்று பல திட்டங்கள் வர இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். டெல்லியிலே இதற்காக ஒரு கமிஷனர் ஒருவரை, அதிகாரி ஒருவரை நியமனம் செய்து, முதலீட்டாளர்களையும், புதிய தொழில்களையும் ஊக்குவிப்பதற்காக நடவடிக்கை எடுத் திருக்கிறோம் என்று. இது, மிக மிக வரவேற்க வேண்டிய விஷயமாக இருந்தாலும் கூட, தமிழகத்திலே இன்றைக்குப் பார்க்கிறபோது, நான் ஏற்கெனவே சொன்ன, நிலத்தைக் கையகப்படுத்துவதிலேயும், தண்ணீர்ப் பற்றாக்குறையின் காரண மாகவும், மின்வெட்டின் காரணமாகவும், தடைகள் இருந்தன. ஆனால், அந்தத் தடைகள் இன்றைக்கு நீக்கப்பட்டு இருக் கின்றன. எனவே, புதிய தொழிற்சாலைகள் பல வருவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கலாம் என்று.

குறிப்பாக, எல்காட் என்று நீங்கள் ஒன்றை வைத்து இருக்கிறீர்கள். சமீப ஆண்டுகளிலே மிகப் பிரமாதமான வளர்ச்சியை அது பெற்றிருக்கிறது. இது இன்னும் ஊக்கு விக்கப்பட வேண்டும். இதன் மூலமாக நான் குறிப்பிடுவது என்னவென்று சொன்னால், எலக்ட்ரானிக் தொழிலிலே குறிப்பாக பெண்களுக்கு அதிகமாக வேலைவாய்ப்பு கிடைக் கிறது. முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும், பெண் களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, எலக்ட்ரானிக் தொழிலை அதிகமாக வளர்ப்பதன் மூலமாக, பெண்களுக்கு நிறைய வேலை வாய்ப்பு அளி க்க முடியும்.

நான் சமீபத்திலே லூதியானாவிற்குச் சென்று இருந்தேன். அங்கே அன்றாடம் பத்து பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு இருந்தாலும்கூட, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, நாம் பார்க்கிறபோது, இரண்டு கிலோ மீட்டர் தூரம் வரையில் அங்கே தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட்டு இருக்கிறது. பலாத்காரம்



ஒரு பக்கத்திலே இருந்தாலும், வன்முறைகள் ஒரு பக்கத்திலே இருந்தாலும், தொழில்கள் வளர்க்கப்பட்டு இருக் கின்றன என்பதை நாம் உணரவேண்டும். எனவே, தமிழக அரசின் சார்பிலே நிபுணர் குழுக்களையும், அல்லது சட்ட மன்ற உறுப்பினர்களை எல்லாம் அங்கே அனுப்பிகூட, ஏன் அங்கே தொழில்கள் வளர்கின்றன, அங்கே வளர்வதற்கு என்ன அவசியம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை எல்லாம் நீங்கள் அறிந்து பார்த்து, அத்தகைய முறைகளிலேகூட, தமிழகத் திலே தொழிலை வளர்ப்பதற்கு நீங்கள் முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், இன்றைக்கு தொழில் வளர்ச்சியிலே சில சிக்கல்கள் இருக்கின்றன என்று சொன்னாலும்கூட, இன்றைக்கு நரிமணத்திலே, தஞ்சாவூர்ப் படுகையிலே ஆயிலைத் துரிதப் படுத்துவதற்காக நீங்கள் முனைப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒன்றை மட்டும் நான் கூறிக் கொள்ள விரும்பு கிறேன். இன்றைக்கு தமிழகத்தின் சார்பிலே மத்திய அமைச்சர்கள் சில பேர்கள் இருக்கிறார்கள். நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே இருக்கிறார்கள். ஏதோ கோரிக்கை என்று சொல்வது மட்டுமல்லாமல், உரிமைக்காக நாம் குரல் கொடுப்பது மிக அவசியம்தான். அதைத் தவறு என்று நாம் சொல்லமுடியாது. ஒரு காலத்திலே ஒரு பழ மொழிகூட இருந்தது. ' வடக்கே சிந்தரி தென்னகத்திலே முந்திரியா ' என்று. அதேபோன்றுதான் இன்றைக்கு நாமும் சில கேள்விகளை கேட்க வேண்டியிருக்கிறது. தமிழகத் திலே நாம் தொழிற்சாலைகளைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால், அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசில் இருக்கக் கூடிய அமைச்சர்களும், தமிழகத்தில் இருக்கின்ற அமைச்சரவையும் ஒருங்கிணைந்து செயலாற்றினால் தான் இதை நாம் சாதிக்கமுடியும். அதேபோல் நாடாளு மன்றத்தில் இருக்கக் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வரவழைத்து ஒரு தேநீர் விருந்தையாவது அவர் களுக்குக் கொடுத்து அவர்களை எல்லாம் தமிழகத்தின் சார்பில் உரிமைக் குரல் எழுப்பக் கூடிய வகையில் அல்லது தமிழகத்தினுடைய நலனுக்காக பாடுபடக் கூடிய வகையில் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக நம் முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு இணக்கமான சூழ் நிலையை மேற்கொள்ளுவதன் மூலமாக நிச்சயமாக தமிழகத் திலே தொழிலை வளர்க்க முடியும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–40

போளூர் சர்க்கரை ஆலையை ஏற்படுத்துவதற்கு ஏற் கெனவே திட்டமிட்டார்கள். உலக வங்கியும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் கடன் கொடுப்பதற்குத் தயாராக இருந் தும், இந்தச் சர்க்கரை தொழிற்சாலையைக் கொண்டுவர

முடியவில்லை. அது ஏன் தாமதப்பட்டிருக்கிறது என்பது தான் தெரியவில்லை. எனவே நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் போளூர் பகுதியில் அந்த சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று முதலமைச்சருடைய புதிய தொழில் கொள்கையில் சிறு தொழிலுக்கு மூலதன மானியம், விற்பனை வரி சலுகை, மின்சார மானியம் என்றெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அதிலே இருக்கக் கூடிய சில ஷரத்துக்கள் தொழிற்சாலை துவங்கி ஒரு வருடகாலத்திற்குள்ளாக அதற்கெல்லாம் 'அப்ளை' செய்ய வேண்டும். அப்போதுதான் அது கிடைக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. தொழிற்சாலை துவங்குவதற்கே பல சிரமங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு வருடம் என்பது ஒரு குறிப்பிட்ட நாள் என்பதை நீக்கி, அந்தத் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், அந்தச் சலுகைகள் அவர்களுக்குக் கிடைப்பதற்கான வகையிலே அந்த திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடை பெறுகின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் காளன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே மால்கோ தொழிற்சாலையைப் பற்றி பேசுகின்ற நேரத்திலே சொன்னார்கள். முதலமைச்சர் அலுவலகத்திலே தேக்க நிலையில் இருப்பதாகச் சொன்னார்கள். மால்கோ தொழிற்சாலை பிரச்சினை என்பது நெடுநாட்களாக இருக்கின்ற பிரச்சினை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்ற எண்ணத்தோடு ஏற்கெனவே பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே முதலமைச்சருடைய அலுவலகத்திலே எந்தத் தேக்க நிலையும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சர் அலுவலகத்திலே தேக்கம் என்று சொன்னார்கள். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'பைல்' என்னிடத்தில் தேங்கி உள்ளது என்று சொன்னதை நானும் கூர்ந்து கவனித்தேன். நான் பேசுகின்றபோது அதற்குப் பதில் சொல்லலாம் என்று இருந்தேன். இந்தப் பிரச்சினை குறித்து இப்போதே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் கூற முன் வந்ததால் இப்போதே என்னுடைய விளக்கத்தையும் கூறுவது நல்லது என்று கருதுகிறேன். 'பைல்' முதலமைச்சர் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கவில்லை. அந்த பைலில் ஏற்கெனவே கையெழுத்து இட்டுவிட்டேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. எஸ். திருநாவுக்கரசு.

முற்பகல் 11-45

**திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் சம்பந்தமான மானியக் கோரிக்கையின் மீது கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

பொதுவாக ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சி அந்த மாநிலத்தினுடைய நிதி ஒதுக்கீட்டை மட்டும் வைத்து அதிக அளவிலே நடைபெறக் கூடிய ஒன்றல்ல. ஒரு மாநில அரசு அதிகபட்சம் சுமார் ரூ. 6,000 கோடி வருமானம் என்கின்றபோது, தொழில்களுக்காக ரூ. 40 கோடி, ரூ. 50 கோடி அளவிற்குத்தான்—ஒவ்வொரு துறையிலேயும் ஒதுக்கப்பட்டது போக, ஒட்டுமொத்த தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்க முடியாது. அவ்வளவு தான் முடியும். சம்பளம் போக, கல்விக்கென்று ஏறக்குறைய கால் பங்கு என்று இப்படி ஒவ்வொரு இலாக்காவிற்கும் போக—ஒதுக்க முடியும். எனவே ஒரு மாநிலம் தொழில் வளர்ச்சியிலே முன்னேற வேண்டுமென்று சொன்னால் அது மத்திய அரசினுடைய கையிலே தான் அதிகமான பங்கு இருக்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக கடந்த காலங்களிலே 1967-க்கு பின்னாலே தமிழ்நாட்டிலே மத்திய அரசினுடைய தொழில் முதலீடும் குறைந்துக் கொண்டே வருகிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது, உத்திரபிரதேசம் போன்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது அங்கே ஏறக்குறைய 20 சதவீதத்திற்கு மேலே தொழில் முதலீடு செய்யப்படுகிறபோது தமிழ்நாட்டிலே சுமார் 4 சதவீத அளவுக்குத்தான் மைய அரசினுடைய முதலீடு இருக்கிறது.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1992 ஏப்ரல் 3

அதுமட்டும் அல்லாமல் பெரிய தொழில்கள் என்று எடுத்துக் கொண்டால் இங்கே காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது ஏற்பட்ட ஒன்றிரண்டு மிகப்பெரிய தொழில்களைப் போல கடந்த 1967-க்குப் பின்னால் இந்த ஆண்டு வரை 500 கோடி, ஆயிரம்கோடி என்று சொல்லக்கூடிய அளவுக்கு, வடநாட்டில் துவங்கப்படுவதைப் போல மிகப் பெரிய தொழில்கள் எதுவும் தமிழ்நாட்டிலே தொடங்கப்படவில்லை. ஒரு பெரிய தொழில் ஒரு இடத்திலே தொடங்கப்படுமேயானால் அதைச் சுற்றி பல ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்பும், பெரிய அளவிலே சிறிய தொழில்களும் அதை ஒட்டி ஏற்பட முடியும். மைய அரசு இதிலே தமிழகத்தை—ஒருவேளை திராவிட இயக்க ஆட்சி ஏற்பட்டதற்கு பின்னாலே வேண்டுமென்றே வஞ்சித்ததா அல்லது பல்வேறு அரசியல் காரணங்களினாலே ஒதுக்கப்பட்டு விட்டதா என்று நான் வாதிக்க விரும்பவில்லை. ஆனால் நான் சொன்னவை அனைத்தும் உண்மை என்பதை காங்கிரஸ் கட்சியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள்கூட ஒத்துக் கொள்வார்கள். எனவே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. உதவியோடு மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி நடைபெறுகிற இந்தச் சூழ்நிலையில், தமிழக அரசும் தமிழக முதலமைச்சர் அவர்களும் மத்திய அரசினுடைய தொழில் முதலீட்டை அதிக மாக்கவும் மத்திய அரசினுடைய தொழில்கள் இங்கே தொடங்கவும் அதிகமான அளவிலே வற்புறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்து இந்த தொழில் கொள்கை குறிப்பேடுகளிலே தமிழ்நாட்டிலேயிருந்து கடந்த ஓராண்டு காலத்திலே எத்தனை தொழில்களுக்கு உரிமம் கேட்டு மத்திய அரசுக்கு மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கிறது, பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது எத்தனை தொழில்களுக்கு உரிமங்கள் கிடைத்திருக்கிறது எத்தனை மனுக்கள் டெல்லியிலே இன்னும் நிலுவையிலே தேங்கியிருக்கிறது, இது போன்ற விவரங்கள் எதுவும் கொள்கை குறிப்பிலே கொடுக்கப்படவில்லை, இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுகிறபோது சென்ற ஓராண்டில் எத்தனை மனுக்களை தமிழக அரசு தொழில்களுக்கு பரிந்துரை செய்திருக்கிறது, என்ற விவரங்களையும் மத்திய அரசு எத்தனை உரிமங்களை தந்திருக்கிறது என்பதையும், எத்தனை நிலுவையில் இருக்கிறது என்பதையும் தெரிவிக்கவேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார உற்பத்தி தொழில் வளர்ச்சிக்கு மிக அத்தியாவசியமான ஒன்று ஆகும். மின் உற்பத்தியை பொறுத்தவரையில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், சுரங்கம் மற்றும் அனல் மின் நிலையம் முதல் இரண்டாவது கட்டத்திற்கான விரிவாக்கங்கள், மூன்றாவது கட்டத்திற்கான துவக்கம் ஆகியவற்றை இந்த அரசு கடுமையாக வற்புறுத்த வேண்டும். அதே



1992 ஏப்ரல் 3] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

போல மாநில அரசு தொழில் வளர்ச்சியிலே கவனம் செலுத்துகிற
போது மின்சாரத்தை அதிகம் உபயோகப்படுத்தாத மற்ற
தொழில்களுக்கு முன் உரிமை கொடுத்து, சிறப்பு உரிமைக்
கொடுத்து, எலக்ட்ரானிக்ஸ் போன்ற தொழில்கள் மற்றும் அது
போன்ற பல்வேறு வகையான மின்சாரத்தை அதிகம் செலவிடாத
தொழில்களுக்கு முன் உரிமை தந்து அரசு அவற்றிற்கு சலுகைகள்
அறிவிக்க வேண்டும். சென்ற காலங்களில் மத்திய அரசினுடைய
நிலை தான் அப்படி இருக்கிறது என்று சொன்னால் தமிழக
அரசினுடைய ஒதுக்கீடுகளும் கூட தொழிற்சாலைகளுக்கு மிகக்
குறைந்து இருப்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

(முற்பகல் 11.50)

திட்ட ஒதுக்கீட்டிலே நீங்கள் பார்த்தால் திட்டத்தில்
சேர்ந்தவை, திட்டத்தில் சேராதவை இப்படி மொத்தமாக
1990-91லே ஆகியிருக்கின்ற உண்மையானச் செலவு ஏறக்
குறைய 46 கோடி ரூபாய், 1991-92லே திட்ட மதிப்பீடு
45.35 கோடி. 1992-93லே இது 41.50 கோடியாக குறைந்திருப்பது
வேதனைக்குரியது. எனவே இதுபோன்ற ஒதுக்கீட்டை குறைத்து
விட்டால் தொழில் வளர்ச்சி அதிகரிக்க வாய்ப்பு இல்லை. அது
போல டிட்கோவிற்கு பட்ஜெட் எஸ்டிமேட்டிலே நீங்கள்
பார்த்தால் 1991-92க்கு சர்க்கரைத் தொழில், அவற்றிற்கு
ஒதுக்கியிருப்பது ஏறக்குறைய ஆயிரம் இலட்சம் அல்லது 10
கோடி. 1992-93க்கு வெறும் 5 கோடி. டிட்கோவிற்கு ஒதுக்கி
யிருப்பது 91-92க்கு ஏறக்குறைய 19 கோடி. 1992-93க்கு
ஒதுக்கியிருப்பது 16.9 கோடி. சிப்காட்டிற்கு ஒதுக்கியிருப்பது
1991-92க்கு ஏறக்குறைய 2150 இலட்சம். அதாவது 21.5
கோடி. 1992-93லே 16.3 கோடி தான். அதுபோல
எல்காட்டிற்கு ஒதுக்கியிருப்பது 200 இலட்சம். இந்த ஆண்டும்
200 இலட்சம் தான். எனவே அதிலே அந்தத் தொகை போதாது,
அதிகமாக அதிகரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
அதுபோல மாவட்ட தொழில் மையங்களுக்கு, டிஸ்ட்ரிக்ட்
இண்டஸ்ட்ரியல் சென்டர்ஸ்க்கு ஐ.எஃப்.எஸ்.டி. லோன்
கொடுப்பதற்காக 1991-92லே ஒதுக்கியது 200 இலட்சம். இந்த
ஆண்டு 1992-93க்கு ஒதுக்கியிருப்பது 100 இலட்சம் தான். அதே
மாதிரி ஸ்டேட் கேப்பிடல் சப்ஸிடிக்கு மாநில அரசு தருகின்ற
மானியத்திற்கு டி.ஐ.சி.க்கு ஒதுக்கியிருப்பது 1991-92லே 500
இலட்சம். இந்த ஆண்டு 1992-93க்கு 600 இலட்சம். இதுவும்
போதாது. ஏனென்றால் தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சி
பெரும்பாலும் டி.ஐ.சி.-டிக் மூலமாகத்தான் அதிகமான தொழில்
வளர்ச்சி ஏற்படுத்த முடியும், சிறிய, மிகச் சிறிய தொழில்களுக்கு
கடன் தருவதன் மூலமாக. எனவே அந்தத் தொகை போதாது
என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்
கிறேன். அதுபோலவே ஒவ்வொரு தலைப்பின் கீழும்

ஒதுக்கீடுகளை நீங்கள் பார்த்தால், தொலைத் தொடர்பு மின்னணுவியல் தொழில்கள் என்று பார்த்தால் 1991க்கு ஒதுக்கப்பட்டது ஏறக்குறைய 300 இலட்சம். 1992க்கு வெறும் 200 இலட்சம். பொறியியல் தொழில்களுக்கு கடன்கள் என்ற தலைப்பின் கீழே 1991லே 209 இலட்சம். 1992க்கு ஒன்றும் இல்லை. ஏனைய தொழில்கள் என்ற தலைப்பின் கீழே கடன்கள் ஒதுக்கப்பட்டிருப்பது ஏறக்குறைய 30 கோடி. இந்த ஆண்டு ஒதுக்கியிருப்பது 23 கோடி. சிப்காட் மூலமாக விற்பனை வரி கடன்களுக்கு 91லே வழங்கப்பட்டது ஏறக்குறைய 409 இலட்சம். 1992லே வழங்கப்பட்டிருப்பது சுமார் 309 இலட்சம் தான், அதாவது 1992 பிப்ரவரி முடிய. அதுமாதிரி சென்ற 1991–ஐவிட கடந்த ஆண்டு தொழிற் துறையிலே தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். தொழில் வளர்ச்சி அதிகமாக அதிலே ஏற்படவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். டிட்கோ ஜாயின்ட் செக்டாரிலே தொழில்களை ஆரம்பிப்பதற்காக நிறுவப்பட்ட நிறுவனம், அது ஏறக்குறைய 27 ஆண்டுகளிலே சுமார் 61 தொழில்களைத்தான் இதுவரை துவங்கியிருக்கிறது. இந்த வளர்ச்சி போதாது. (மணியடிக்கப் பெற்றது) பேச வேண்டாம் என்றால் உட்கார்ந்துவிடுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 11 நிமிடம் ஆகியிருக்கிறது. 10 நிமிடத்திற்கு மேலே உங்களுக்கு கிடையாது. நான் நா. சா. பழனிசாமி அவர்களுக்கு எந்த வாய்ப்பைக் கொடுத்தேனோ அந்த வாய்ப்பைத்தான் உங்களுக்குக் கொடுக்க முடியும்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> ஒன்றுமே சொல்லவே இல்லையே.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதற்கு நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் ஏதோ விரிவாகப் புள்ளி விவரம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். 11 நிமிடம் ஆகியிருக்கிறது. இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிட வேண்டும்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> சீக்கிரம் முடித்து விடுகிறேன். டிட்கோவைப் பொறுத்தவரை ஏறக்குறைய 61 தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. அதிலே அதிக கவனம் செலுத்த வேண்டும், அதிகமான தொழில்களைத் துவங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சிப்காட்டை பொறுத்தவரைக்கும் சென்ற ஆண்டிலே கொடுக்கப்பட்ட கடன்கள் குறைந்திருக்கிறது. 1989-90, 1990-91— நான் வரிசையாகச் சொன்னால் நேரமாகும். ஒரு வருடத்தை மட்டும் கம்பேர் பண்ணுகிறேன். லாஸ்ட் இயரை நீங்கள் பார்த்தால் தொழில்களுடைய எண்



ணிக்கை 60 என்று கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட ரூபாய் 36.58 கோடி. 1991-92ல் பிப்ரவரி வரைக்கும் 64 தொழில்களுக்கு 30.38 கோடி தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலேயும் குறைவு.

முற்பகல் 11-55

டோட்டல் சப்சிடியை எடுத்துக் கொண்டால் கூட மொத்தம் 120 தொழில்களுக்கு 1991ல் ஏறக்குறைய 5.19 கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 1991–92-இல் 82 தொழில்களுக்கு வெறும் 3.83 கோடி தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலேயும் குறைவு. அதேபோல் தமிழ்நாடு இன்டஸ்ட்டிரியல் இன்வெஸ்டுமென்ட் கார்ப்பரேஷனைப் பார்த்தால் அதிலேயும் குறைவு. 1990-91ல் ஏறக்குறைய 7,800 தொழில்களுக்கு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற ஆண்டு 1991-92 ஆம் ஆண்டில் சுமார் 4,070 தொழில்களுக்குத் தான் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலேயும் குறைவு.

சிறு தொழில்களை எடுத்துக் கொண்டால் 1990-91ல் 7,549 தொழில்களுக்கு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1991-92ல் வெறும் 3,903 தொழில்களுக்குதான் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அதிலேயும் குறைவு. இதை வரிசையாகச் சொன்னால் ஒவ்வொரு ஸ்கீமிலும் டெக்னோகிராட்ஸ் ஸ்கீம் என்று சொன்னாலும் டி.ஐ.ஐ.சியில் லோன் தருகிறார்கள். அதில் 91ல் எவ்வளவு பேருக்கு கடன் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொன்னால் 755 பேருக்கு கொடுத்து இருக்கிறார்கள். 1991-92ல் வெறும் 49 பேருக்குத்தான் கடன் கொடுத்து இருக்கிறார்கள். இதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். ஒவ்வொரு துறையிலும் என்ன என்ன ஆகியிருக்கிறது என்பதை ஆய்வு செய்கிறபோது பார்த்தால் தான்..(மணியடிக்கப் பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். அந்த மாதிரி டிரான்ஸ்போர்ட் ஸ்கீமில் நீங்கள் லோன் கொடுப்பதைப் பார்த்தால் 20,299 பேருக்கு 90ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1991-92ல் வெறும் 1,315 பேருக்கு தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி ஒவ்வொன்றாகச் சொன்னால் மெடிக்கல் பேக்கல்டிஸ் 598 பேர், வெறும் 80 பேர் தான். வரிசையாக எல்லாவற்றையும் பார்த்தால் 10 தலைப்புகள் இருக்கின்றன. படித்தால் நேரம் ஆகும். 10, 12 தலைப்புகளில் கொடுக்கப்பட்ட கடன் சென்ற ஆண்டைவிட மிகக் குறைவாக இருக்கிறது. இதிலே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி சிப்காட், டிட்கோ, டி.ஐ.ஐ.சி. இதுதான் பெரிய அளவில் கடன் தருகிற நிறுவனங்கள். இதிலே தொழிலுக்கு கடன் தருகிற அளவு குறைந்து இருக்கிறது. இன்றைக்கு இதற்கு முக்கியமான காரணம் அரசாங்கத்தில் இருக்கிற பணப் பற்றாக்குறை. டி.ஐ.ஐ.சி.யைப் பார்த்தால் 3 மாதத்திற்கு முன்னாலேயே மார்ச்சுக்கு மேல் அப்ரோச் பண்ணுங்கள் என்று சொல்லி வாருங்கள் என்று சொல்லி கடிதம் எழுதியிருக்கிறார்கள்; யார் யார் கடன் கேட்டு இருக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம். மத்திய அரசு நிதி ஒதுக்கவும் இல்லை. தமிழக அரசால் நிதி ஒதுக்கீட்டைச் செய்ய முடியாத சூழ்நிலையில் தொழில் வளர்ச்சி குறைந்து இருக்கிறது என்று சொல்ல வேண்டும்.

அடுத்து, இன்டஸ்ட்ரீஸ் செகரட்டரி, அதேபோல் மின்சார வாரியம் இவற்றிற்கு எல்லாம் கடந்த ஒரு ஆண்டில்; 8 மாதத்தில் 4 செகரட்டரிகள் மாறியிருக்கிறார்கள். அதிகாரிகளை மாற்றாமல் ஆட்சி நடத்த முடியாது என்றாலும் கூட அடிக்கடி மாற்றிக் கொண்டு இருந்தால் நிச்சயமாக அதனால் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும், உற்சாகம் குறையும். அவர்களுக்குக் கீழே இருக்கிற கார்ப்பரேஷன்களில் சரியாகப் பணியாற்ற மாட்டார்கள். அவர்களால் கண்காணிக்க முடியாது. எனவே, யார் உங்களுக்கு நம்பிக்கைக்கு உரியவரோ, யாரை நம்பிக்கைக்கு உரியவராக நீங்கள் தேர்ந்தெடுத்தாலும் ஒரு ஆண்டு, 2 ஆண்டுகள் அவர்கள் முழுமையாக எந்த நிர்வாகத்தில் போடுகிறீர்களோ சிப்காட்டாக இருந்தாலும் சரி, டி.ஐ.ஐ.சி.யாக இருந்தாலும் சரி, இன்டஸ்ட்ரீஸ் செகரட்டரியாக இருந்தாலும் சரி... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியுங்கள். 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. எஸ். திருநாவுக்கரசு: முடித்து விடுகிறேன். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிலே அக்கறை செலுத்த வேண்டும். அந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடைசியாக என்னுடைய தொகுதியில் அறந்தாங்கி தொகுதியில் சர்க்கரை ஆலைக்கு லைசன்ஸ் வாங்கி துவங்கப்படாமல் இருக்கிறது. இந்த அறந்தாங்கித் தொகுதியில், சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது நிச்சயமாக ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த உத்தரவாதத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை அறந்தாங்கியில் இல்லை என்றாலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார்.



திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அவர் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார்கள். போன நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தது 250 கோடி. ஆனால் கொடுத்தது 130 கோடி என்று தவறான தகவலை அவைக்கு அளித்து அது சபைக் குறிப்பேட்டில் பதிவேட்டில் ஏறியிருக்கிறது. ஆனால் 225 கோடி சேங்ஷன் டார்கெட் பிக்ஸ் செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் 235 கோடிக்கு இன்று கிராஸ் ஆகியிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் டிஸ்பர்மெண்டு டார்கேட் 160 கோடி பிக்ஸ் செய்து 160 கோடியும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த டார்கேட்டை ரீச் செய்த காரணத்தால் அந்த பிப்ரவரிக்குள் ரீச் செய்ததால் மார்ச் வரை வந்ததை அடுத்த வருடத்திற்காக நிறுத்தி வைத்து இருக்கிறார்கள் என்ற ஒரு நிகழ்ச்சியை இந்தச் சபையில் தெரிவிக்க விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன, நான் இதுவரை பேசிய குறிப்புகளிலே ஏதாவது ஒன்றிலே தவறு இருந்தாலும்கூட, அதற்கு நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெர்பாமென்ஸ் ரெவ்யூ—மேஜர் இண்டஸ்ட்ரீஸ் என்கிற 1991—92-ஐ எடுத்து ரெவ்யூ பண்ணினால் நான் சொன்ன, ஒவ்வொரு ஸ்கீமிலேயும் எவ்வளவு கொடுத்திருக்கிறது; எவ்வளவு குறைக்கப்பட்டிருக்கிறது; எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது; எவ்வளவு கொடுக்கவில்லை என்பதெல்லாம் கிளியராக இருக்கிறது, அதை எடுத்துப் படித்துப் பார்க்கட்டும். அவர் மொத்த அலாட்மெண்டைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார். ஏற்கனவே, கொள்கைக் குறிப்பிலே இருப்பதைச் சொல்கிறார் அவர். இந்த ரெவ்யூ பட்ஜெட்டை எடுத்து படித்தார் என்று சொன்னால், நான் சொன்ன புள்ளி விவரங்கள் எல்லாம், நான் எடுத்துக்காட்டி சொன்ன புள்ளி விவரங்கள் அல்ல; அரசு கொடுத்த புள்ளி விவரங்களிலே இருந்து எடுத்து சொன்னவைதான். அதைப் பார்த்தால் தெரியும். நான் சொன்னது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார், எந்தப் புள்ளி விவரங்களிலிருந்து நீங்கள் சொல்கிறீர்கள்?

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விவரப் புள்ளி விவரங்களைத்தான் நானும் குறிப்பிடுகிறேன். அவர் பேசிய குறிப்புகளும் என்னிடம் இருக்கின்றன. அதற்கு ஸ்பீக்கர் இடம் அனுமதி பெற்று, அதையும் வாங்கி வந்துதான் பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் பேசியதில் தவறு இருக்கிறது. அது அவைக் குறிப்பில் ஏறியிருக்கிறது. அதை எடுக்க வேண்டுமென்றுதான் நான் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, அதை இப்போது எடுக்கிறதிலே வராது, உங்களுடையதும் இப்போது சேர்ந்து வரும்.

திரு. எஸ். ஜெயக்குமார் : அவர் பேசிய குறிப்பு என்னிடம் இருக்கிறது. அதை அவர் மறுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பதில் சொல்லட்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் சொன்னது அனைத்தும், சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலே நான் பேசியதைச் சொன்னதாக அவர் சொன்னார். பட்ஜெட் கூட்டத் தொடரிலே பேசினாலும் சரி, அதற்குப் பின்னாலே பேசினாலும் சரி, இன்றைக்குப் பேசி இருந்தாலும் சரி, நான்சொன்னது பூராவும் 100க்கு 100—சரியான புள்ளிவிவரங்கள். அவர் சொல்வது மொத்த அமௌண்ட். நான் ஏற்கனவே ஒப்பிட்டு, குறை என்று சொன்னது பூராவும், கம்பேரிட்டிவ்வாகச்சென்ற ஆண்டு இருக்கிற இன்கம்க்கும் அதற்கு அடுத்த அலாட்மெண்ட்டுக்கும் சொன்னேன். பட்ஜெட்டிலே, அதே மாதிரி இந்தக் கொள்கைக் குறிப்பிலேகூட தொழில்களைப் பொறுத்தவரை 1991—92-லே, 1990-க்கு எவ்வளவு? ஒவ்வொரு இனத்தின் கீழ் எவ்வளவு ஒதுக்கப்பட்டது? எத்தனை பேருக்குக் கடன் ; எவ்வளவு தொகை, 1991-லே இருந்ததை புள்ளிவிவரங்களை நான் இதிலேயிருந்து எடுத்துக் கொடுத்து இருக்கிறேன். அது தவறு என்று சொன்னால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இரண்டையும் சரி பார்த்து, தவறாக இருந்தால் அதற்குப் பிறகு அறிவிக்கிறேன். உட்காருங்கள். திரு. என். ஜி. வேணுகோபால்,

*திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, தமிழகத்திலே 1967-க்குப் பிற்பாடு பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று



சொன்னார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலே பி.எச்.இ.எல். என்ற நிறுவனம் சமீபத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது பெரிய மூலதனத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவர் சொன்னது விரிவாக்கம், அங்கே ஏற்கனவே பி.எச்.இ.எல். நிறுவனம் இருக்கிறது. அதிலே, 10, 20 கோடியிலே எக்ஸ்பான்ஷன் பண்ணியிருப்பார்கள், எக்ஸ்பான்ஷன்தான் அங்கே நடந்திருக்கிறது. அல்லது இரண்டாவது கட்டத்தைத் தொடங்கி இருப்பார்கள். நான் சொன்னது, மத்திய அரசினுடைய பெரிய தொழில்கள் ஒன்றும் துவங்கவில்லை என்று. நான் இப்போது திருப்பியும் சொல்கிறேன், எதுவும் துவங்கவில்லை என்பது உண்மைதான், எனவே அறந்தாங்கியிலே நான் ஏற்கனவே சொன்னபடி. என்னுடைய தொகுதியிலே நாகுடி பகுதிக்காக லைசன்ஸ் பெற்று, ஷேர் கேப்பிடல் எல்லாம் கலெக்ட் பண்ணப்பட்டு விட்டது. கம்பெனியும் ஆரம்பித்து ஆயிற்று, ஆனால் இரண்டு ஆண்டாக அப்படியே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ரொம்பப் பேசி இருக்கிறீர்கள், உட்காருங்கள், திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஜெயக்குமார்,

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த பொழுது, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக சாங்ஷன் லிமிட் 120 கோடிதான். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்த பிறகு 1990—91-இல் 145 கோடி சாங்ஷன் செய்திருக்கிறார்கள். இந்த வருடம், 1991—92-இல் 225 கோடி சாங்ஷன் செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா? அத்தோடு இல்லாமல் அவர் பேசியபோது, நான் அவ்வாறு பேசவில்லை என்று குறிப்பிடுகிறார். அவருடைய பேச்சுகூட இப்போது என்னிடம் இருக்கிறது. '' தொழில் துறையில் ஒன்றும் முன்னேற்றம் ஏற்படவில்லை. உதாரணத்திற்கு சென்ற ஆண்டு நீங்கள் அறிவித்தது ஏறக்குறைய 250 கோடிக்கு. டி.ஐ.சி-இல் கடன் கொடுப்போம் என்று கூறியிருக்கிறீர்கள், ஆனால் 130 கோடிதான் கடன் கொடுத்து இருக்கிறீர்கள்.'' என்று குறிப்பிட்டு இருக்கிறார். அது அவைக் குறிப்பிலும்

[திரு. எஸ். ஜெயகுமார்] [1992 ஏப்ரல் 3

இருக்கிறது. It is only a sanctioned limit not disbursement limit.
இதுபற்றி உறுப்பினர் நன்கு அறிய மாட்டார் என்று கருது
கிறேன். அவர் நன்கு படித்துவிட்டு சபைக்கு வரவில்லை
என்று அறிகிறேன்.

திரு. எஸ், திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அவர் எதுவானாலும் சொல்லட்டும். அவர் மிகப்
பெரிய மேதாவியாக இருக்கட்டும். அதிலே எனக்கு ஒன்றும்
ஆட்சேபணை இல்லை. அவர், பெரிய உலக மகா மேதாவியாக
இருக்கட்டும். எல்லாவற்றையும் படித்துவிட்டு வரட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியில்லை, விளக்கம்
மட்டும் சொல்லுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : அவர் அப்ப'டியே இருக்
கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள்
எழுப்பிய கேள்விகள் அனைத்திற்கும் என்னுடைய பதிலுரையில்
விரிவாக நான் பதில் அளிக்க உள்ளேன். எனவே இந்த
விவாதத்தைத் தாங்கள் மேலும் வளர அனுமதிக்க வேண்டாம்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. தங்கமுத்து.
(குறுக்கீடு) நீங்கள் சொன்ன இதே பிரச்சினைக்கு மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள்.
அவர் ஒரு சந்தேகத்தைக் கிளப்பி இருக்கிறார். (குறுக்கீடு)
இல்லை. இந்தப் பிரச்சினைக்கு மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள். திரு. கு. தங்க
முத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே,. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள், ஒன்றைப்
பார்த்துச் சொல்கிறேன் என்கிறீர்கள். அவர் இன்னொரு
கோணத்திலிருந்து சொல்கிறார். இரண்டுக்கும் நான் பதில்
சொல்லப் போகிறேன் என்று முதலமைச்சர் சொல்லியிருக்
கிறார், (குறுக்கீடு) ஏற்கனவே நேரமாகிவிட்டது. உட்
காருங்கள். திரு. கு. தங்கமுத்து.



1992 ஏப்ரல் 3]

பிற்பகல் 12-05

திரு, கு, தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தத் தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று,
தமிழகத்தினுடைய காவல் தெய்வம் எங்களுடைய இதய
தெய்வமான டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முத
லமைச்சர் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, அவருடைய
மானியக் கோரிக்கையான தொழில் துறை மானியக் கோரிக்
கையில் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நான் பெருமை
யாகக் கருதி, முதலிலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்,

இந்த வகையில் கடந்த இரண்டாண்டுக் காலமாகத்
தொழில் துறையிலே அமைதியில்லாமல் நிரந்தரமற்ற
தன்மையைப் போக்கி, நிரந்தரமான தன்மையை உருவாக்கு
கின்ற வகையில், இந்தியாவிலேயே முதல் நிலை மாநில
மாகத் தொழில் துறையை முன்னேற்றுவோம் என்ற
நம்பிக்கையை வைத்து, கொள்கையாக, நோக்கமாக, இலட்சிய
மாக அதைக் கையில் எடுத்துக்கொண்டு, பாடுபடுகின்ற இதய
தெய்வம் புரட்சித் தலைவியினுடைய இந்தத் தொழில்
கொள்கையைப் பொறுத்தவரை, இந்த மானியக் கோரிக்கை
யிலே அறிவிக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள், இத்தனை
உதவிகளைப் பொறுத்தவரையில் நான் வரவேற்கக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலேயே இன்னும் சில மாநிலங்கள், கடந்த
காலங்களிலே தொழில் துறையிலே முன் நோக்கி இருக்கின்ற
மாநிலமாக இருந்தன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று
சொன்னால், பஞ்சாபைப் பொறுத்தவரை தொழில் துறை
யிலே முன்னேறிய மாநிலங்களிலே குறிப்பிடத்தக்க ஒரு
மாநிலமாக இருந்தது. ஆனால், அங்கே தொழிற்சாலைகள்
நலிவுற்ற சூழ்நிலை உருவானது, காரணம், அமைதியில்லாத
காரணத்தால், ஆயுதக் கலாச்சாரம் வளர்ந்த காரணத்தால்.
தொழிலதிபர்களுக்கு நம்பிக்கை இல்லாமல்போன காரணத்
தால் அங்கே தொழில் நலிவுற்ற தன்மையானது ஏற்பட்டது.
அத்தகைய சூழ்நிலைகள் தமிழகத்திலே வந்துவிடுமோ என்ற
எண்ணம் பரவிடுகின்ற வேளையில் தொழில் நிறுவனங்
களைத் தொடங்குபவர்களுக்கு அவநம்பிக்கை வருகின்ற
வேளையில், அதனைத் தகர்த்திடுகின்ற வகையில் ஆட்சிப்
பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னால் இதய தெய்வம்
டாக்டர் புரட்சித் தலைவி தன்னுடைய உயிருக்குக் குறி
வைக்கின்ற நேரத்திலே உயிரையும் துச்சமென மதித்து,
இந்த நாட்டிலே அமைதி நிலவப் பெறச் செய்கிற வகையில்
அமைதியை ஏற்படுத்திய காரணத்தால் அமைதியான சூழ்

[திரு. கு. தங்கமுத்து] [1992 ஏப்ரல் 3

நிலை இருக்கின்ற இந்த நேரத்தில் தொழிலை நம்பிக்கை யோடு தொடங்குவதற்கு முன்வருகின்ற இந்த நிலைமையை உருவாக்கியதற்காக நான் முதலிலே பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நாட்டிலே தொழில் துவங்க வேண்டுமென்றால் அமைதி இருக்க வேண்டும், தேவையான மின்சாரம், தண்ணீர் இந்த மூன்றும் இருந்தால்தான் தொழிலைத் தொடங்குவதற்கு நம்பிக்கை வரும். அந்தவகையில் தமிழ கத்தைப் பொறுத்தவரையில் அடித்தளமாக இருக்கின்ற, அடிப்படைத் தேவையாக இருக்கின்ற நாட்டு அமைதியை உருவாக்கியும், இந்த ஆண்டைப் பொறுத்தவரை மின் வெட்டே இல்லை என்று அறிவிப்பினை வெளிப்படுத்தி, மின்சாரம் தாராளமாகக் கிடைக்கும் என்ற சூழ்நிலையை உருவாக்கி, அதைப்போல அடிப்படைத் தேவையான தண் ணீரும் பெறுகின்ற வகையில் இப்படி அடித்தளத்தைப் பொறுத்தவரையில், அடிப்படைத் தேவைகளைப் பொறுத்த வரையில் மிகச் செம்மையாக அடித்தளம் அமைத்ததற்குப் பின்னால் இங்கே தமிழகத்திற்குத் தொழிலதிபர்களை, வெவ்வேறு நாடுகளில் இருக்கின்ற தொழிலதிபர்களை அழைத்து இரண்டு முறை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பேசியிருக்கிறார்கள். எனவே, இப்படிப் பட்ட செய்கையெல்லாம் தொழில்களை ஊக்குவிக்கின்ற தன்மையிலும், தொழில்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு மற்றவர்களுக்கு வரவேற்பு கொடுக்கின்ற தன்மையிலும், ஊக்கம் கொடுத்து தமிழகத்திலே தொழில் தொடங்குவதற்கு அனைவரையும் அழைத்திருக்கிறார்கள். எனவே, இதை நான் கோடிட்டுக் காட்டுவதற்குக் காரணம், இந்த அரசு ஏற்பட்டதற்குப் பின்னால் இந்தியாவிலேயே முதல் நிலையாகத் தமிழகத்தைத் தொழில் துறையிலே உருவாக்குவோம் என்ற முழக்கம், இந்த நோக்கம் நிச்சயம் நிறைவேறுகின்ற வகையில் அல் என்றும் பகல் என்றும் பார்க்காமல் பாடுபடுகின்ற தன்மையை நான் இந்த நேரத் திலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, எவ்வளவுதான் ஒரு மாநில அரசு தன் னுடைய தொழில் கொள்கையில் முனைந்து பாடுபட்டாலும் மத்திய அரசு என்ன திட்டம் தீட்டுகிறதோ, என்ன நிலை யில் கொள்கை முடிவு எடுக்கிறதோ அதனையொட்டித்தான் உயர முடியும், வேகமாக முன்னேற முடியும் என்ற நிலை இருக்கும் நிலையில் மத்திய அரசைப் பொறுத்தவரையில் வறட்டுச் சித்தாந்தச் சிறையிலே அடைபடாமல், விடுவித்துக் கொண்டு, ஓரளவுக்கு இணக்கமாக இருக்கின்ற தன்மையை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனையொட்டி தன்னுடைய துணிவான முடிவினை எடுத்து தொழில் துறையை



1992 ஏப்ரல் 3] [திரு. கு. தங்கமுத்து]

முன்னேறுவதற்குச் செய்கின்ற அந்தத் தன்மையையும் இந்தக் கொள்கைக் குறிப்பேட்டிலே கொடுத்து, இந்த மானியக் கோரிக்கையிலே கொடுத்துள்ள சலுகைகளையும், மின்சாரம், அதைப்போல, மானியங்கள் மற்றைய சலுகைகளெல்லாம் தொழில் தொடங்குவதற்கு அளிக்கின்ற தன்மையை வர வேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்தில் என்னுடைய கருத்தாக, எண்ணமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், ஒரு தொழிலதிபர் அல்லது தொழில் நிறுவனம் தொழில்களைத் தொடங்கு கின்றபொழுது, அவருக்குத் தேவையான குடிநீர் வடிகால் வாரியத்திலேயிருந்து தண்ணீர் சப்ளை கொடுப்போம் என்று 25 விழுக்காடு அதற்காக ஒதுக்குகிறோம். ஆனால், பல்வேறு தொழில் நிலையங்களைப் பொறுத்தவரை யில், தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை இருந்தாலும் (குறுக்கீடு).

பிற்பகல் 12–10

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> டாக்டர் எம். கருப்புசாமி, இந்த மாதிரி குறுக்கே போகக் கூடாது.

<u>திரு. கு. தங்கமுத்து:</u> ஒதுக்கப்படுகிற குறிப்பிட்ட விழுக்காடு தண்ணீர், குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து ஒதுக்கப்படுவ தில்லை என்பதை மாத்திரம் நாம் கவனத்திலே கொள்ள வேண்டும். அந்தக் குறைகளைப் போக்குவதற்கு முயற்சிக்க வேண்டும்.

அதேபோல், நடைமுறைச் சிக்கல் எதார்த்தமான சூழ் நிலையில், ஸ்பிக் நிறுவனமோ, சிப்காட் நிறுவனமோ, இப்படி தொழில் முதலீட்டுக் கழகங்கள் கொடுக்கிற கடன் தொகை களை வாங்குகிறபோது பல்வேறு வகையான சிக்கல்கள் மானி யத்தைப் பெறுகிறபோது வருகிறது. அந்தக் கால தாமதத்தைத் தவிர்த்து, மானியம் இலகுவாக, எளிதாகக் கிடைக்கிற வகை யிலே கொடுக்க வேண்டும். அதுவும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தத் தொழில் முதலீட்டுக் கழகங்களைப் பொறுத்தவரையில், கடன் பெறுவதற்கு 'ஹை பவர் கமிட்டி' என்றோ, 'சிங்கிள் விண்டோ ஏஜன்ஸி' என்றோ இரண்டு நிலையைப் பெற்றிருக்கிறோம். இதிலே, மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே கூட்டம் நடக்கிறபோது, ஒவ்வொரு துறையிலேயிருந்து வந்திருக்கிறவர்கள்—அது மின்சார வாரியமாக இருந்தாலும் அல்லது ஹெல்த் டிபார்ட்மெண்டாக இருந்தாலும், தண்ணீர் வழங்குகிற குடிநீர் வடிகால் வாரியமாக இருந்தாலும், இந்தக் காலக் கெடுவை நீட்டித்துக் கொண்டு போகிற தன்மையால், தொழில் தொடங்குவது தாமதப்படுத்தப்

படுகிறது. எனவே, அதைத் தவிர்த்து, உரியகாலத்தில் ஒவ்வொரு துறையினரும் பதில் கொடுக்க வேண்டும், ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அதற்குக் காலக்கெடு நிர்ண யிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல், நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில், நாம் விவசாயத்தை முன்னுரிமையாகக் கொண்டு, விவசாயத் தைப் பெற்றிருக்கிற மக்களை 80 சதவிகிதம் பெற்றிருக்கிறோம். எனவே, தொழில் தொடங்கும்போது, விவசாயத்தைச் சார்ந்த ஒரு தொழிலுக்கு ஊக்கம் கொடுக்கிற வகையிலே கடல்படு பொருட்களையும் எடுத்து மூலப் பொருளாக வைத்துக் கொண்டு, தொழிற்சாலைகளைத் தொடங்குகிற தன்மையையும் நாம் எடுத்துக் கொண்டு தொடங்க வேண்டும். இதற்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், என்னுடைய கருத்தாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தஞ்சை மாவட்டம், முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி இருக்கிற மாவட்டம். தஞ்சை மாவட்டத்தில், விவசாயிகள் விவ சாயத்தைப் பொறுத்த வரையில், ஒரு தொழிலாக நினைக்காமல் மரபுத் தொழிலாக தங்களுடைய தாய், தந்தையர் முதற் கொண்டு செய்து வருகிறார்கள். எனவே, அதை மரபுத் தொழி லாக எடுத்துக் கொள்கிற தன்மையில், லாபம் கிடைப்பதற்கு வழி இல்லாதுபோன தன்மையில், தஞ்சை மாவட்டம் இருக்கிறது. 7, 8 ஆண்டு காலமாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மழையோ அல்லது காவிரி நீர்த் தட்டுப்பாட்டாலோ பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டு நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத் திற்கு முதலமைச்சராக வந்த இந்தச் சந்தர்ப்பத்தில், அதிர்ஷ்ட வசமாகத் தண்ணீர் வந்த நிலையிலும், மழை பெய்த நிலையிலும், இந்த ஆண்டு ஓரளவு விளைந்திருக்கிறது. எனவே, இப்படி அடிக்கடி இடர்ப்பாடுகள் ஏற்பட்டால், பாதிக்கப்படுகிற சூழ் நிலை தஞ்சை மாவட்டத்திற்கு வருகிறது. அதுமட்டுமல்ல; 7 மாதங்கள் வெறுமனே விவசாயிகள் இருக்கக்கூடிய சூழ்நிலை யும் அங்கே வருகிறது. எனவே 3 அல்லது 4 மாதங்கள்தான் தொழிலைச் செய்கிறார்கள். விவசாயிகளும், விவசாயத்தைச் சார்ந்த தொழிலாளர்களும் மற்றைய மாதங்களில் வெறுமனே இருக்கக்கூடிய சூழ்நிலையைப் போக்குகிற வகையில், இந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பணப்பயிர் எனப்படும் கரும்பைப் பயிரிடுபவர்களுக்கு, கூடுதலாக அவர்களுக்கு ஊக்கம் ஏற்படுத்துகிற வகையிலே, ஒரு கரும்புத் தொழிற்சாலையை ஏற் படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல், தென்னை மரம், தென்னையை ஒட்டியிருக்கிற கடலை விதைகள், கடலையிலிருந்து சாறு பிழிந்து எண்ணெய் எடுக்கிற தொழிற்சாலைகள் உருவாக்க முடியுமானால், அதனை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், உப்பைப் பயன்படுத்தி, நாகை காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பெரிய தொழிற்சாலையை உருவாக்குகிற வாய்ப்பு அங்கே இருக்கிறது. எனவே, உப்பைக் கொண்டு, பல்வேறு வகையான உபரித் தொழில்களைத் தொடங் கிட முடியும். நரிமணத்தில் கிடைக்கிற எரிவாயுவை— எண்ணெயைச் சுத்திகரிக்க எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை வர இருக்கிறது. அப்படி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை வருகிற போது, அதிலே பல்வேறு உப தொழில்களைத் தொடங்கு வதற்கு எல்லா வகையான நிலையிலும் முடிவெடுத்து, ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை, நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களைப் பொறுத்த வரையில், இப்படிப்பட்ட தொழில்களை நடத்த முடியும் என்று தங்களை நம்பியே அவர்கள் இருக்கிற காரணத் தினால், அவற்றை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தஞ்சையிலேதான் பிறந்தேன் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள், தஞ்சையிலே பிறந்தவன் எல்லாவற்றையும் சாதித்தேன் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருப்ப வர்கள் தங்களுடைய காலத்திலே வெறும் அறிவிப்பை மட்டும் செய்தார்களே தவிர, நடைமுறையில் புதிதாக செயல் ஒன்றுகூட செய்யவில்லை என்பதை இந்தத் தருணத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அப்படிப்பட்ட வெறுமையான, பொய்யான வாக்குகளைப் போல அல்லாமல், அவற்றை நிறைவேற்றுகிற வகையிலேதான், தஞ்சைக்கும், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கும் அங்கே கிடைக்கிற மூலப் பொருட்களான, உப்பு, வைக்கோல், கரும்புச் சக்கை யிலிருந்து கிடைக்கிற சக்கை. அதிலே இருக்கிற 'மொலாஸஸ்' போன்றவைகளைக் கொண்டு, தொழிற்சாலைகளை ஆரம் பித்துக் கொடுத்து, விவசாயத்தை மரபுத் தொழிலாக்கிக் கொண் டிருக்கிற விவசாயிகள், அவற்றில் லாபகரமாக ஈடுபட முடியு மென்ற நம்பிக்கையை, தன்னம்பிக்கையை உருவாக்குகிற விதத்தில் உதவிட வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

பிற்பகல் 12–15

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனிசாமி. 10 நிமிடம்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

தமிழகத்திலே புதிய தொழில் கொள்கை மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் . அவர்களுடைய முயற்சியால் பல புதிய தொழில்களைத் துவங்குவதாக இன்றையதினம் கொள்கைக் குறிப்பிலே அறிவித்திருக்கிறார்கள். சமீபத்திலே கூட, பெருந் தொழில்கள் தொடங்கக்கூடிய தொழிலதிபர்களுடன் கலந்து பேசி, தமிழகத்திலே புதிய தொழில்களைத் துவக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு மத்திய அரசு பின்பற்றக் கூடிய அந்தப் புதிய தொழிற் கொள்கையை, மாநில அரசும் பின்பற்றக் கூடிய நிலையை நாம் பார்க்கிறோம். அதே நேரத்தில் தொழில்களைத் தமிழகத்திலே வளர்க்க வேண்டும் என்பதில் யாருக்கும் எவ்விதக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. குறிப்பாக, மத்திய அரசு தமிழகத்திலே தொழில் வளர்ச்சிக்காக 1970ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவரையிலும் அதற்காக நிதி ஆதாரங்களை, உதவிகளைச் செய்தது கிடையாது என்பதனைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1977ஆம் ஆண்டுக்குப் பிறகு மத்திய அரசு மூலமாக பின்தங்கிய மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்களை, உதவி செய்கிற பெரிய திட்டங்களை மத்திய அரசு ஒதுக்கவில்லை. அதேநேரத்தில் காமராசர் காலத்தில்தான் பேர் சொல்லக்கூடிய பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெறுவதற்கும் புதிய தொழிற் சாலைகளைக் கொண்டு வருவதிலே, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கடும் முயற்சியை மேற்கொண்டார்கள். ஆனால், அதற்குப் பின்னர் தொடர்ந்து அப்படித் தமிழகத்தில் உருவாக்க முடியவில்லை. அதற்கு மாறாக, மகாராட்டிரா மாநிலம் இன்றைக்கு முன்னணிப் பாத்திரமாக, முதன்மை இடத்திலே, தொழில் துறையிலே இருக்கிறது. தமிழகம் 13ஆவது இடத்திலே இருக்கிறது. தொழிலிலே முன்னேற்றம் வேண்டும் என்றால் புதிய தொழில்கள், அதிலே தொழில் செய்யக் கூடியவர்களுக்கு வேலை வாய்ப்பு, அதே போன்று தொழில் உற்பத்தி, இதிலேதான் ஒரு மாநிலம் முன்னணி பெறுவதிலே இடம் பெறுகிறது. ஆனால், இன்றைக்கு இதிலே மிகக் குறைவான முறையில் தமிழகம் பின்னடைவு பெற்றிருக்கிறது என்பதனை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதே போன்று தமிழகத்தில் கூட, மூடி இருக்கிற தொழிற்சாலைகளை, நமது முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 1989ஆம் ஆண்டு மூடப்பட்ட ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்



நிறுவனத்தைத் திறந்து, அங்கே தொழில் செய்யக்கூடிய தொழிலாளர்களது வாழ்க்கைக்கு வளத்தை அளித்திருக்கிறார்கள். அதை நான் மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, பின்னி தொழிற்சாலையைத் திறப்பதற்கு தேதியை நிர்ணயித்திருக்கிறார்கள். தனியார் தொழிற்சாலைகளை வளர்க்க வேண்டும் என்று சொல்லுகிறபோது, இன்று தனியார் தொழிற்சாலைகளை மூடுவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக தொழிற் கொள்கையிலே, முதன்மைத் தொழில் என்று சொல்லக்கூடிய தோல் பதனிடும் தொழிற்சாலை, உஸ்மான் ஷெரீப் தொழிற்சாலை. இன்றைக்கு கேரளாவுக்கு, மேற்கு வங்கத்திற்கு அடுத்ததாகத் தமிழகம் இருக்கிறது. அங்கு கூட மாடுகளை அடித்து உணவாக உண்கின்ற நிலைமை உள்ளது. அப்படிக் கிடைக்கின்ற தோல்களைக் கொண்டு பல்வேறு தொழிற்சாலைகளைத் துவங்கியிருக்கிறார்கள். ஆனால் தமிகத்தில் இருக்கின்ற மாடுகளில் இருந்து கிடைக்கின்ற தோலை வைத்துத்தான் தொழிற்சாலைகள் நடக்கின்றன. இன்றைக்கு அந்தத் தொழிற்சாலைகளை மூடுகிற நிலைமை ஒரு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆக, இதையெல்லாம் உடனடியாகத் தமிழக முதல்வர் அவர்கள் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அரியலூரிலே இருக்கக்கூடிய சிமெண்ட் தொழிற்சாலை.

பிற்பகல் 12–20

இன்றைக்கு அரசினுடைய சார்பில் நடக்கின்ற அந்த சிமெண்ட் ஆலைகளில் முறைகேடுகள் பல நடப்பதன் மூலமாக அந்த சிமெண்ட் ஆலைகளைத் தனியாருக்கு விடுகிற ஒரு சூழ்நிலை வருகிறது என்று சொல்லி அதிலே வேலை செய்கிற தொழிலாளர்கள் மிகவும் அச்சத்தோடு இன்றைய தினம் இருக்கிறார்கள். குறிப்பாக அந்த சிமெண்ட் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில் 1986–87இல் 8 கோடியே 94 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டப்பட்டு இருக்கிறது. 1987–88இல் 7 கோடியே 48 இலட்சம் இலாபம் கிட்டி இருக்கிறது. 1988–89ஆம் ஆண்டு 3 கோடியே 69 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. 1990–91இல் அனேகமாக 3 கோடியே 99 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டப்பட்டிருக்கிறது. 1991–92இல் 5 கோடியே 59 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, அது இலாபம் இல்லாத தொழிற்சாலை. எனவே இலாபம் ஈட்டித் தரக்கூடிய அந்த சிமெண்ட் தொழிற்சாலைகளை ....................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டேன்சம் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். டேன்சம்-ஐ தனியாருக்கு விட்டுவிட வேண்டும் என்ற முடிவைக் கடந்த அரசாங்கம் தான் எடுத்ததே தவிர இந்த அரசாங்கம் அல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே நன்றி. இது போன்ற பொது நிறுவனங்களே நடத்தக்கூடிய தொழிற்சாலைகளை (குறுக்கீடு) அதுதான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி என்று சொன்னார். எதற்கு நன்றி என்று சொன்னால் பரவாயில்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது தனியாருக்கு விடுவதற்கு சென்ற அரசு (குறுக்கீடு) அதைத் தனியாருக்கு இந்த அரசு விடப்போவதில்லை என்று சொன்னார்கள். அதற்காகத்தான் சொன்னேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னது. அந்த முடிவை எடுத்தது இந்த அரசு அல்ல; இதற்கு முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு; அதுதான் அமலாகிக்கொண்டிருக்கிறது என்றுதான் சொன்னார்களே தவிர, அதற்கு மேல் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், இவர் நன்றி என்று சொன்னார். தனியார் வசம் ஒப்படைப்பதற்காக நன்றி என்று ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரே பாராட்டுகிறார் என்பதற்காக நாங்களும் அதற்கு நன்றி செலுத்துகிறோம்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். தனியாருக்கு விடுவதற்காக நான் நன்றி என்று சொல்லவில்லை; பொதுத் துறைகளைத் தனியாருக்கு விடவேண்டாம் என்றுதான் சொல்கிறேன். அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தனியாருக்கு விடப்போவதில்லை என்று.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் நான் சொன்ன பதிலைச் சரியாகக் கவனிக்கவில்லை





போல் தெரிகிறது. அதாவது டிட்கோவினுடைய நிறுவனம் டேன்சம். அந்த டேன்சம்-ஐ கவர்மெண்ட் டிஸ்இன்வெஸ்ட் செய்ய வேண்டுமென்ற முடிவினைக் கடந்த அரசாங்கம்தான் எடுத்தது என்பதை மட்டும்தான் நான் சொன்னேன்.

திரு. ஜி. பழனிசாமி : கடந்த அரசாங்கம் செய்தாலும் அது தவறுதான். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுத் துறையினை தனியாருக்கு விடக்கூடாது என்பதுதான் எங்கள் கொள்கை. பொதுத் துறைகளைத் தனியாருக்குக் தாரை வார்த்துக் கொடுப்பது என்பது எந்த அரசாக இருந்தாலும் சரியல்ல. அந்தத் தொழில்களை அரசு பாதுகாக்க வேண்டும் என்பதைத் தான் சொல்கிறேன். அதேபோன்று ..........

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கிறாரோ அந்த கட்சியின் கூட்டணி கட்சியாக உள்ள தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அப்போது திரு. பழனிசாமி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாரா இல்லையா என்பது எனக்கு நினைவில் இல்லை, (குறுக்கீடு) இருந்தார். அப்படி என்றால் அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப்பற்றி ஏன் தட்டிக் கேட்கவில்லை என்பதை அவர் விளக்குவாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அப்போதே நான் சட்டமன்றத்தில் பேசி இருக்கிறேன், (குறுக்கீடு) கட்சி சார்பாகக் கருத்துச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்போது இந்த அரசாங்கம் செய்துவிட்டது என்பது போன்று பேச வந்தவர் எப்படிச் சென்ற ஆட்சியைக் கண்டித்து இருப்பீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்தது, இந்த அரசாங்கம் இப்படிக் கொடுத்துவிட்டது என்று சொல்ல வந்தீர்கள். அதைத் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லை, இல்லை அது சென்ற அரசாங்கமே கொடுத்தது என்றார்கள். இப்போது, நீங்கள் அதை நான் அப்போது கண்டித்து இருக்கிறேன் என்று சொன்னீர்கள்,

திரு. ஜி. பழனிசாமி : அதைத்தான் நான் சொல்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். வி. சண்முகம்.

திரு. எஸ். வி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் பேசினேன் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், ஆனால் கடந்த அரசு முடிவெடுத்ததே அவருக்குத் தெரியவில்லை. கடந்த கூட்டத்திலே அவர் என்ன பேசினார் என்பதே தெரியவில்லை. ஏனென்றால் முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள் தி.மு.க. அரசுதான் தனியாருக்குக் கொடுத்தது என்று. அதுவே அவருக்குத் தெரியாமல் அப்போது என்ன பேசினார் என்பதே தெரியவில்லை.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. அரசு தனியாருக்குக் கொடுக்கவில்லை ; கொடுக்க வேண்டுமென்ற முடிவை எடுத்தது தி.மு.க. அரசு என்பதைத்தான் சுட்டிக் காட்டினேன். இதைப் பற்றி என்னுடைய பதிலுரையிலேயே குறிப்பிடலாம் என்றிருந்தேன். ஆனால் இதைப்பற்றி இப்போதே ஒரு சர்ச்சை எழுந்துவிட்டதால் இதைப்பற்றி விளக்கி விடுவது நல்லது என்று கருதுகிறேன்.

பிற்பகல் 12-25

கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு 'டிட்கோ வுக்குச் சொந்தமான 'டேன்செம்' நிறுவனத்தை தனியாருக்கு விற்றுவிடுவது என்ற கொள்கை முடிவினை எடுத்தது. அதன் பின்னர் நம்முடைய அரசு அமைந்த பிறகு, இதைப் பரிசீலித்துப் பார்த்ததில் தனியார் துறையில் பல்வேறு சிமெண்ட் தொழிற்சாலைகள் நல்ல முறையில் லாபகரமாகத் தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது, தனியார் துறையில் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்ற தொழில்துறையில் அரசாங்கம் போட்டியிடத் தேவையில்லை என்ற கருத்தினால் அந்த முடிவின் படியே நாம் செயல்படலாம், அந்த முடிவினைச் செயல்படுத்தலாம் என்று எண்ணினோம். காரணம் இந்த அரசினுடைய ஆழமான நம்பிக்கை, என்னுடைய தனிப்பட்ட நம்பிக்கையும் கூட ஏனென்றால் தொழில் துறையை பொருத்தவரையில், தனியார் துறையில் லாபகரமாக நல்ல முறையில் இயங்குகிற ஸ்பியர்ஸ் ஆஃப் இன்ட்ஸ்ட்ரீஸ் அத்தகைய துறைகளில் அரசாங்கம் போட்டி இடத் தேவையில்லை என்பதேயாகும். ஆனால் மக்களுக்கு தேவைபடுகிற பல துறைகள் இருக்கின்றன. அவற்றில் சில மிகுதியாக லாபம் கிடைக்கக் கூடிய ஈட்டக் கூடிய தொழில்களாகவும் இருக்காது. ஆனால் அத்தகைய துறைகளில் தனியார்கள் ஆர்வம் காட்டாத போது அத்தகைய துறைகளில் அரசாங்கம் நிச்சயம் ஈடுபட வேண்டும். அதற்குத்தான், பப்ளிக் செக்டர் பொதுத் துறை இருக்கிறது என்பது அரசாங்கத்தின் ஆழமான நம்பிக்கையாகும். ஆனால் அதே சமயம் இன்னொன்றையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கடந்த திராவிட





முன்னேற்றக் கழக அரசு டேன்செம் சிமெண்ட் தொழிற்சாலையை முழுவதுமாகத் தனியாருக்கு விற்றுவிட வேண்டுமென்று முடிவெடுத்தது. ஆனால் இந்த அரசாங்கம் அதனையொட்டி மாற்றி, modify செய்து கூட்டுறவுத் துறைக்கு அதனை மாற்றலாம் என்ற முடிவினை எடுத்திருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி பேசட்டும், (குறுக்கீடு) அவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) திரு. எஸ். திருநாவுக்கரசு, உங்களுக்குச் சம்பந்தம் இல்லாதது, திரு. ஜி. பழனிசாமி பேசட்டும் (குறுக்கீடு) ஒரு உறுப்பினரை இப்படித் தள்ளக்கூடாது, திரு. ஜி. பழனிசாமி (குறுக்கீடு) இல்லை, இல்லை இது சரியல்ல. அதாவது திரு. ஜி. பழனிசாமி அவர்களுக்கு அனுமதி கொடுத்து இருக்கிறபோது, நீங்கள் எழுந்து இடையிலே பேசுவது என்பது சரியல்ல. (குறுக்கீடு). உறுப்பினர் முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்குப் பிறகு விளக்கம் கேட்கலாம், திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'டேன்செம்' சிமெண்ட் தொழிற்சாலையை பொறுத்து ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு அப்படிப்பட்ட முடிவை எடுக்கிறபோதுகூட நான் எதிர்ப்பு தெரிவித்தேன். அதுவும் தொழிலாளர் மத்தியிலே அச்சம் இருக்கிறது என்று சொன்னேன். இப்போது முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். நன்றி. ஆக அதுபோன்ற தொழிலாளர்களை பாதுகாக்க வேண்டும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் கூட சொன்னார்கள், நான் தவறாக, புரிந்துகொள்ளாமல் சட்டமன்றத்தில் இருப்பதாகச் சொன்னார்கள், நிச்சயமாக அப்படி இல்லை. தொழிலாளர்களுடைய நலனுக்காக பேசியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பேர்களும் பாதி புரிந்துவைத்திருக்கின்ற காரணத்தினாலேதான். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : இல்லை, இல்லை.

[1992 ஏப்ரல் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பாதி புரிந்து
கொண்டிருக்கிறீர்கள், அவர் பாதி புரிந்துகொண்டிருக்கிறார்.
இருவரும் முழுமையாகப் புரிந்துகொண்டவர்களாக இருந்தால்
பரவாயில்லை,

திரு. ஜி. பழனிசாமி : மெட்ராஸ் அலுமினியம் பேக்டரி,
அதிலே 1,400 தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றார்கள்,
மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கூட அதைப்பற்றி குறிப்
பிட்டிருக்கிறார்கள். அந்த அலுமினியத் தொழிற்
சாலையைக்கூட இன்றைக்கு மூடக்கூடிய ஒரு அபாயம்
இருக்கிறது. அதற்கு அவர்கள் சொல்கின்ற காரணம் மின்
சாரம். இன்றைக்கு அரசாங்கத்தினுடைய மின்சார ரேட்டுகள்
அதிகரித்திருக்கின்ற காரணத்தினால் மூடுகிறோம் என்ற காரணங்
களை அவர்கள் இன்றைய தினத்திலே அறிவித்துக்கொண்டிருக்
கிறார்கள். ஆக மின்சாரம் தொழிற்சாலைகளுக்கு மிகவும்
தேவையானது என்றாலும்கூட இன்றைக்கு மின் உற்பத்திகளை
துவக்குகிற நிலையிலேகூட அநேகமாக நம்முடைய அரசு பல்
வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அது உண்மையி
லேயே வரவேற்க வேண்டியது.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அநேகமாக
தஞ்சை, காயிதேமில்லத் மாவட்டங்களில் விவசாயத்தையே
நம்பியிருக்கிறார்கள். அவை விவசாயத்தை நம்பியிருக்கின்ற
மாவட்டங்கள். அங்கே பல்வேறு தொழிற்சாலைகளை,
சிறிய தொழிற்சாலைகளை தொடங்குவதற்கு அரசு முயற்சி
எடுக்க வேண்டும், விவசாயத்தையே நம்பி இருக்கக்கூடிய அந்த
மாவட்டங்களில் இன்றைக்கு வைக்கோலைப் பயன்படுத்தி
பேப்பர் தொழிற்சாலை தொடங்கமுடியும். நல்ல மணல்
கிடைகின்றது. கண்ணாடித் தொழிற்சாலைகூட தொடங்கு
வதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. அதையெல்லாம்
கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

அதே மாதிரி கூட்டு குடிநீர் வாரியம். அநேகமாக கூட்டுக்
குடிநீர் வாரியத்தில் பணியாற்றக்கூடிய அந்த தொழிலாளர்கள்
இதை தனியார்களுக்கு இன்றைக்கு விடுவதாக அறிவிக்கப்பட்
டிருப்பதாக கேள்விப்பட்டு அவர்கள் அச்சப்பட்டுக்கொண்டிருக்
கின்றார்கள். அந்த கூட்டு குடிநீர் வாரியம் பொறுத்தமட்டில்
சமீபத்திலேகூட பட்டுக்கோட்டை வேதாரண்யம் கூட்டுக்
குடிநீர் திட்டம் இருக்கின்றதே அந்த திட்டத்திலேகூட
சிறப்பான முறையிலே, முன்னணி பாத்திரங்களாக இருந்து
அந்த தொழிலாளர்கள் நன்கு பணியாற்றினார்கள்.
அந்த திட்டத்தைக்கூட நீங்கள் நிறைவேற்றவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். மிக பிரதானமான திட்டம்
எனவே அந்த கூட்டுக் குடிநீர் திட்டத்திலே பணியாற்றக் கூடிய



1992 ஏப்ரல் 3] [திரு. ஜி. பழனிசாமி]

அந்த தொழிலாளர்கள் தனியாருக்கு விடுகிறோம் என்ற அச்சம்
அவர்களுக்கு இருந்துகொண்டிருக்கின்றது என்பதை இந்த
சந்தர்ப்பத்திலே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரு
கிறேன்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள், நேர
மாயிற்று.

திரு. ஜி. பழனிசாமி : அதேபோன்று தான் இன்றைக்கு,
சிறிய நடுத்தர தொழில்கள் என்று சொன்னால் சுமார் 2 ஆயிரம்
தொழில்கள் பெரிய தொழில்களிலிருந்து சிறிய தொழில்கள்
வரை தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதேபோல
டிக், சிப்காட் போன்ற நிறுவனங்களின்கீழ் இருக்கக்கூடிய
தொழிற்சாலைகள் தமிழகத்தில் 900 செட்டுகளுக்கு மேல்
கட்டி, அந்தப் பணிகள் உள்ளபடியே நடைபெறவில்லை.
வெறும் செட்டுகள் தான் கட்டியிருக்கிறார்கள். அதன் மூலம்
நிதிகளைப் பெற்றிருப்பவர்கள் அந்தத் தொழிற்சாலைகளை
நடத்த முடியவில்லை. ஆகவே, அரசு எதிர்பார்க்கிற அந்த
நோக்கம் நிறைவேறவில்லை. எந்த நோக்கத்தோடு அந்தத்
திட்டங்கள் தீட்டப்பட்டு தொழிற்சாலைகள் நடைபெற வேண்
டுமோ அதன்படி அந்த தொழில்கள் அந்த நிறுவனங்கள் வழங்கி
யிருக்கிற நிதியின்மூலம் நடைபெறுகின்றனவா என்று பார்க்கக்
கூடிய ஒரு கண்காணிப்பு குறைவின் காரணமாக 900 செட்
டுகளைக் கட்டியிருக்கிறார்களே தவிர உள்ளபடியே அந்த
தொழில்கள் எல்லாம் சரியான முறையிலே இயங்குகின்றன
என்று கவனிக்க முடியாத நிலை இருக்கிறது. சிறு தொழில்களில்
முன்னேற்றம் காண வேண்டுமென்று விரும்புகிற இந்த அரசு
உடனடியாக இதில் கவனம் செலுத்தி இவற்றை கண்காணிக்க
வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லி, மீண்டும் இவை
களைத் துவங்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

*திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தொழில் துறை, அரசுத் துறைகளில் மிகவும் முக்கிய
மான துறை. நாட்டின் செல்வத்தைப் பெருக்கவும், வாழ்க்கைத்
தரத்தை உயர்த்தவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப்
போக்கவும், தொழில் துறை பெரிதும் பயன்படுகிறது. குறிப்பாக
தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பெருகிவரும் வேலையில்லாத்
திண்டாட்டத்திற்கு தொழில் துறைதான் தக்க மருந்தாக இருக்
கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழில் கொள்கை
பற்றி அறிவித்த குறிப்பில் படித்து வேலையற்றோரின் தொகை
யைப்பற்றி குறிப்பிடுகிறபோது 1980 ஆம் ஆண்டு 5.58 லட்சம்
பேராக இருந்தவர்கள், 1991 ஆம் ஆண்டு 18.01 லட்சம்

பேராக, அது மூன்று மடங்குக்கு மேல் வேலையற்ற படித்தவர்கள் நாட்டிலே இருக்கின்றார்கள். ஆகவே தொழில் வளர்ச்சியின் மூலம் இந்த வேலையின்மைக்கு தீர்வு காணவேண்டுமென்ற குறிப்பை தந்திருக்கிறார்கள்.

இதை அடிப்படையாக பார்க்கிறபோது, அண்மையிலே இதற்கு பொதுத் துறை பெரிதும்உதவுகிறதா, தனியார் துறை பெரிதும் உதவுகிறதா என்ற ஒரு புள்ளிவிவரம் இந்திய அரசினாலே வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு அரசின் சார்பிலே எனக்கு அந்தப் புள்ளிவிவரம் கிடைக்கவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரையில் வேலைவாய்ப்பு என்று பார்க்கிறபோது 10 ஆண்டுகளில், 1979—ல் இருந்து 1989 வரை என்று கணக்கெடுத்துப் பார்க்கிறபோது, 146·75 லட்சம் பேரிலிருந்து 185.15 லட்சம் பேர், அதாவது 38 லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு பொதுத்துறை மூலம் வேலை கிடைத்திருக்கிறது. ஆனால் அதே காலக் கட்டத்தில் தனியார் துறை என்று பார்க்கிறபோது 1979—ல் 72.08 லட்சம், 1989-ல் 74.7 லட்சம். அதாவது 1 லட்சத்து 62 ஆயிரம் பேருக்குதான் வேலை கிடைத்திருக்கிறது.

ஆகவே, வேலையின்மைப் போக்குவது என்று பார்க்கிறபோது, எவ்வளவுக்கெவ்வளவு பொதுத் துறை வளர்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாட்டிலே படித்து வேலையற்று இருக்கின்ற இளைஞர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது என்பதை கடந்த கால புள்ளிவிவரங்கள் நமக்கு காட்டுகின்றன. ஆகவே, இந்த அரசை நான் கேட்டுக்கொள்வது எந்த அளவுக்கு பொதுத் துறையை வளர்க்க வேண்டுமோ அந்த அளவுக்கு வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே தமிழ்நாடு மட்டுமல்ல இந்திய அரசும் பெரும் பங்கு வகிக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கூட எடுத்துச்சொன்னார்கள். 1969 ஆம் ஆண்டில் 10 விழுக்காடாக இருந்த இந்திய அரசினுடைய முதலீடு இன்று 5.21 சதவிதமாக ஆகிவிட்டது. அதை தொகையிலே குறிப்பிடப் போனால் இந்திய அரசின் முதலீடு 1 லட்சத்து 13 ஆயிரத்து 254 கோடி ரூபாய். கடந்த ஆண்டிலே மட்டும் 13 ஆயிரத்து 905 கோடி ரூபாயை இந்திய அரசு முதலீடு செய்திருக்கிறது. இதிலே தமிழ்நாட்டில் எதுவும் இல்லை. அதுதான் உண்மை. பாரத பிரதமர் அவர்களே வேறு ஒரு இடத்திலே மாநிலங்களுக்கு இடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள் பற்றி குறிப்பிடுகிறபோது, மாநிலங்களுக்கு இடையே ஏற்றத்தாழ்வுகள் ஆழமாக உள்ளன. வளராத மாநிலங்களில் வஞ்சிக்கப்பட்டோம் என்ற உணர்வு வளர்கிறது. சமமின்மை ஒருங்கே வளர்ந்து இப்போது மேலோங்கி உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். மாநில ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும், பொருளாதார நீதி கிடைக்கவும் அமைப்பு முறையில் தானாகவே உறுதி செய்யும் ஒரு முறையே உருவாக்குவேன் என்று குறிப்



பிட்டுள்ளார். ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலை இனிமேல் இந்திய அரசினுடைய முதலீடு குறைந்து, தனியாருடைய முதலீடு அதிகமாகப் போகிறது. ( Globalisation,) liberalisation) என்ற இந்தக் கொள்கையின் விளைவாக மத்திய அரசினுடைய முதலீடு குறையப்போகிறது. தனியாருடைய முதலீடு அதிகமாகப் போகிறது. அதன் விளைவாக இந்தியாவினுடைய மேற்குப் பகுதியாகிய மகாராட்டிரம், குஜராத் போன்ற மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய வசதிகள் தமிழ் நாட்டுக்குக் கிடைப்பது அரிது. ஆகையால் இந்த முறையைப் பார்க்கின்றபோது எந்த அளவுக்கு ஒரு நல்ல சூழ்நிலையை தமிழ்நாட்டில் உருவாக்க வேண்டுமோ அதை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—35

Times of India பத்திரிக்கைக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு பேட்டி அளித்திருக்கிறார்கள். அந்தப் பேட்டியில் தொழில் துறை வளர்வதற்காக நல்ல சூழ்நிலையை அமைப்போம், அத்தகைய சூழ்நிலை அமைந்தால் சிறந்த செயல்பாடு இருக்குமென்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலை தமிழ் நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பொதுத் துறையிலே இருக்கக்கூடியவைகளில் ஒன்றை நாம் கருத்திலே கொள்ள வேண்டும். பொதுத் துறை லாபத்தில் நடக்கிறதா, நஷ்டத்திலே நடக்கிறதா என்ற அளவுகோலைப் பார்க்கும்போது, அதனுடைய சோஷியல் காஸ் என்ன என்று பார்க்க வேண்டும். சான்றாகச் சொல்ல வேண்டுமானால் நெய்வேலி நிறுவனம் இருக்கிறது. நெய்வேலி நிறுவனம், துவங்குகிறபோது அங்கே ஒரு நகரியம் அமைக்கிறார்கள், சாலைகள் அமைக்கிறார்கள், மின்சார வசதி செய்கிறார்கள், வீடுகள் கட்டுகிறார்கள். இவைகள் எல்லாம் திட்டத்திற்கு சோஷியல் காஸ், மக்களுக்கு சோஷியல் பெனிபிட்ஸ், அதைப்போல தனியார் துறையை எடுத்துக்கொண்டால் இப்போது தோல் தொழிற்சாலை இருக்கிறது. கழிவு நீரை அப்படியே விட்டுவிடுகிறார்கள். அது பொல்யூஷன், அதனுடைய விளைவு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்தப் பாதகத்திற்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கமும் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு திட்டம் என்று பார்க்கிறபோது, அந்தத் திட்டத்தினுடைய வரவு—செலவு மட்டும் பார்த்து, ஆதாயமா, இழப்பா என்று பார்ப்பதை விட, அதனுடைய சமூக நன்மையையும் கருத்திலே கொள்ள வேண்டும். அப்போதுதான் நஷ்டத்தில் நடக்கிறதா, லாபத்தில் நடக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே தெரிவிக்கின்ற கருத்துக்களிலிருந்து ஏதோ மாநில அரசாங்கம் பொதுத் துறைக்கு எதிராகவே இருக்கிறது, அதுதான் மாநில அரசின் கொள்கை என்பதுபோல அவர் பேசுவதாகத் தோன்றுகிறது. ஒன்றைத் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு பொதுத் துறைக்கு எதிரி அல்ல. பொதுத் துறை வளர்க்கப்பட வேண்டும், ஊக்குவிக்கப்பட வேண்டும், மேன்மேலும் வளர்ச்சி அடைய வேண்டும், வளர்ச்சி அடையச் செய்யப்பட வேண்டும் என்பதிலே இந்த அரசுக்கு இரண்டாவது கருத்தில்லை. ஆனால் சிலவற்றை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும், சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம் நாடு விடுதலை அடைந்தபோது அன்றைய சூழ்நிலையில் தனியார் துறையில் அதிகப்படியான பணம் இருக்கவில்லை, நிதி வசதிகள் இருக்கவில்லை. எனவே அரசாங்கமே தொழில் முதலீடு செய்து, தொழில் துறையை வளர்க்க வேண்டியதொரு சூழ்நிலை இருந்தபடியால் அன்றைக்குப் பொதுத் துறைக்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அன்றைய சூழ்நிலையில் அதைத் தவிர வேறு வழியில்லை. அன்றையதினம் தனியார் துறையில் முதலீடு செய்ய அதிகப்படியான சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே தொழிற் துறையை வளர்க்க வேண்டுமென்பதற்காக அரசாங்கமே எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால் இன்று சுதந்திரம் அடைந்த பின்னர், 40 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்ட இன்றைய சூழ்நிலையில் தனியார் துறையில் நிறைய நிதி வசதி இருக்கிறது. ஆனால் அரசாங்கத்திற்கோ நிதிநிலை நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மத்தியில் ஃபைனான்ஷியல் எக்கனாமிக் கிரைசிஸ் உள்ளது. மாநிலத்திலும் எக்கானமிக் கிரைசிஸ் உள்ளது. மத்திய அரசைப் பற்றி நான் பேசவில்லை. மாநில அரசைப் பற்றி மட்டும் இப்போது பேசுகிறேன். இங்கே ஏற்பட்டிருக்கின்ற நிதிநிலை நெருக்கடி இந்த அரசாங்கத்தால் ஏற்பட்டதல்ல. கடந்த அரசாங்கம் செய்த தவறுகளினால் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோதே மிகப் பெரிய நிதிப் பற்றாக்குறையை சமாளிக்க வேண்டியதொரு சூழ்நிலை இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி).

எனவே இருக்கின்ற நிலைமைகளை வைத்து, உண்மை நிலைகளைப் பார்க்கும்போது, இருக்கின்ற யதார்த்த நிலைமையைப்



பார்க்கிற போது, இன்றைய சூழ்நிலையில் தொழில் துறையை எப்படி வளர்ச்சியடையச் செய்யமுடியும்? இன்றைய சூழ்நிலை என்ன? நம்முடைய தவறு இல்லையென்றாலும், இந்த அரசாங்கத்திடம் இன்று நிதி இல்லை. நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. அதே சமயத்தில் தொழில்களை வளர்க்கவேண்டும். புதுப்புதுத் தொழில்களைத் துவங்கவேண்டும். இதற்கு என்ன வழி? இன்று நிதி யாரிடம் இருக்கிறது? அரசாங்கத்திடம் இல்லை. தனியார் துறையிடம் இருக்கிறது. எனவே இன்றைய சூழ்நிலையில், a pragmatic approach would be to encourage the private sector and to encourage more joint sector ventures, அதைத்தான் இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). பிரைவேட் செக்டாரை நசுக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. பிரைவேட் செக்டார் நிச்சயமாக இருந்தேயாகவேண்டும். அப்போதுதான் நாட்டின் எக்கானமி ஆரோக்கியமாக இருக்கும். அப்போதுதான் சமூகத்திற்கும் நன்மை பயக்கும். சமுதாயத்திற்கும் நன்மை பயக்கும். ஆனால் இன்றைய நிலைமை என்ன?. இந்த அரசாங்கத்திடம் போதிய நிதி வசதி இல்லை. எனவே இன்று நிதிவசதியுள்ள தனியார்களை ஊக்குவித்து தனியார் துறையில் பல்வேறு தொழில்களை துவங்கச் செய்வதுதான் இந்த அரசின் கொள்கை.

பிற்பகல் 12-40

அதுமட்டுமல்லாமல் joint sector ventures கூட்டுத் துறைத் தொழில்கள் பலவற்றை துவங்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது. இவற்றில் எல்லாம் அரசாங்கம் ஒரு சிறிய முதலீடு செய்கிறது. மற்றபடி தனியார் துறையினர் இதில் co-promoters ஆக வருகிறார்கள். இதில் என்ன தவறு இருக்கிறது? இதன் மூலமும் நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கப் போகிறது. இதுதான் ஒரு Sensible approach healthy approach ஆக இருக்கமுடியும் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத்துறைக்கு இந்த அரசு விரோதமாக இருக்கிறது என்ற உணர்வோடு நான் சொல்லவில்லை. பொதுத்துறைக்கு நாம் ஒரு பிரிபரன்ஸ்—ஒரு சலுகை கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலேயே என்னுடைய கருத்தை நான் குறிப்பிட்டேன். ஆகவே பொதுத்துறையா, தனியார் துறையா என்று வருகிறபோது, பொதுத்துறையினுடைய பிரிபரன்ஸ், அதன் லாப நஷ்டக் கணக்கைப் பார்க்கிறபோது, அதனுடைய சமுதாயக் கணக்கை எடுத்துப் பார்க்கவேண்டுமென்ற அந்தக் கருத்தைத்தான் சொன்னேன். ஏனென்றால், அரசாங்கமே ஒரு தொழிற்சாலையை நடத்துகிறது. உதாரணமாக ஒரு பஸ் கம்பெனியை நடத்துகிறது என்றால், ஒரு ரூட்டில் லாபம் வரவில்லை என்றாலும் அர

[திரு. ச. இராமச்சந்திரன்] [1992 ஏப்ரல் 3

சாங்கம் அந்த பஸ்ஸை அங்கே விடும். ஆனால் தனியார் அப்படி விடவேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆகவே, சோஷல் காஸ்ட் மற்றும் சோஷல் பெனிபிட்டையும் சேர்த்துப் பார்த்து, நஷ்டமாக நடக்கிறதே என்பதற்காக அரசாங்கத்தின் தொழில்துறையை நாம் விட்டுவிட வேண்டியது இல்லை என்ற அந்த அடிப்படையில்தான் இதை எடுத்துச் சொன்னேனே தவிர வேறல்ல. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் : சின்ன விளக்கம். அதாவது நஷ்டமாக நடக்கிறது என்பதற்காக மட்டும் அரசாங்கம் அதை விட்டுவிடவேண்டாம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அதே நேரத்தில்

'efficiency and inefficiency'—If there is more efficiency in the private, sector can the Government disinvest and give it to the private sector. That is the question posed by the Hon. Chief Minister That is the question. I am posing to the Hon. Member

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத்துறையைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள், அதாவது. Productivity efficiencyயை அங்கே இம்ப்ரூவ் செய்யவேண்டும். பெட்டர் மேனேஜ்மென்ட் கொண்டுவரவேண்டும். ஏற்கெனவே இருக்கக்கூடிய பப்ளிக் செக்டாரை நல்ல முறையில் நடத்தவேண்டுமென்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நானும் சொல்கிறேன். புரடக்ட்டிவிட்டி கூடாது. எபிசியன்சி கூடாது. பெட்டர் மேனேஜ்மெண்ட் கூடாது என்று நான் சொல்லவில்லை. அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். பொதுத்துறையில் இருக்கின்ற தொழில்களை நாம் தனியாரிடத்திலே கொடுப்பது என்பது அவ்வளவு சரியல்ல என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதற்குக் காரணம். அவர்கள் பணம் போட்டுத்தான் இந்தத் தொழிற்சாலையை வாங்க வேண்டும். அதே பணத்தைக்கொண்டு அவர்கள் வேறு ஒரு தொழிற்சாலையை அமைக்கலாமே. ஆகவே . . . (குறுக்கீடு) அரசாங்கம் ஒரு தொழிலை லாபகரமாக நடத்துகிற போது அந்தத் தொழிற்சாலையை தனியாரிடத்தில் விற்பதன் மூலம் தனியார் அதைப் பணம் கொடுத்து வாங்குகிறார். அதற்குப் பதிலாக அந்தப் பணத்தைக் கொண்டு வேறு ஒரு தொழிற்சாலையை அவர் ஆரம்பிக்கலாம், அரசாங்கத்தின்தொழிற்சாலையில் இருக்கிற , , , (குறுக்கீடு)



1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : நான் சொல்லி விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் பப்ளிக் செக்டார்ஸ்-இல் இருக்கிற யூனிட்டுகளையெல்லாம் பிரைவேட் செக்டாருக்கு மாற்றிவிட வேண்டுமென்று இந்த அரசாங்கம் முடிவெடுக்கவில்லை. அப்படி ஒரு கொள்கை முடிவை எடுக்கவில்லை, கேஸ் பை கேஸாக அனலைஸ் செய்து, ஒவ்வொரு யூனிட்டையும் எடுத்துக்கொண்டு, அதனுடைய லாப நஷ்டக் கணக்கை எடுத்து- ஒருவேளை அது நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தால். அதை மீண்டும் rehabilitate செய்வதற்கு சாத்தியக்கூறு இருக்கிறதா, அதற்கு எவ்வளவு செலவாகும், அதுமுடியுமா என்பதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்துத்தான், மதிப்பீடு செய்தபிறகுதான், தனியார் துறைக்கு விடுவது அல்லது கூட்டுத்துறைக்கு மாற்றுவது போன்ற கேள்விகள் எழுகின்றன.

பிற்பகல் 12-45

இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இலாபகரமாக நடக்கின்ற ஒரு தொழில் நிறுவனத்தை ஏன் தனியாருக்கு விட வேண்டும் என்று. டான்சம் பற்றி குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். 'டான்செம்'மில் உண்மையிலேயே இன்று வரை கணக்குகளைப் பார்க்கப்போனால் அவ்வளவு பெரிய நஷ்டம் ஒன்றுமில்லை. எனவே அது தான் உறுப்பினரின் கேள்வி என்று கருதுகிறேன். மிகப் பெரிய நஷ்டம் ஏற்படாத போது இந்த நிறுவனத்தை ஏன் நீங்கள் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும்; அதே பணத்தைக் கொடுத்து தனியார் யாராக இருந்தாலும் அவர்கள் வேறு ஒரு தொழிற்சாலையைத் துவங்கலாம் அல்லவா என்று கேட்கிறார். இன்று 'டான்செம்' பற்றிப் பேசுவதால் அதைப் பற்றி நான் விளக்க விரும்புகிறேன். இன்று வரை மிகப் பெரிய நஷ்டம் இல்லை என்பது உண்மைதான். ஆனால் இனி வரும் காலங்களில் மிகப் பெரிய நஷ்டம் ஏற்படும். காரணம், 'டான்செம்'-இல் உள்ள எக்யுப்மென்ட்ஸ், மெஷினரி எல்லாம் அவுட்-டேட்டெட் ஆகிவிட்டது. எனவே, அந்த 'டான்செம்'-இல் இருக்கின்ற மெஷினரி எக்யுப்மென்ட் அனைத்தையும் புதுப்பித்து நவீனமயம் ஆக்கப்பட்டால்தான் இனி மேல் அந்தத் தொழிற்சாலை இலாபகரமாக இயங்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஆனால் அந்த அளவிற்கு நிதி முதலீட்டினைச் செய்ய அரசாங்கத்திடம் போதிய வசதி இல்லை. அந்த மெஷினரிகள் எல்லாம் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று

சொன்னால் 200 கோடி ரூபாய் கூட ஆகும், அந்த அளவிற்கு அரசாங்கத்தால் இன்று முதலீடு செய்ய முடியாத நிலைமை இருப்பதால்தான் அதனைத் தனியாருக்கு விற்றுவிடுவது என்று கடந்த தி.மு.க. அரசு முடிவு எடுத்த பின்னரும்கூட அதனை மாற்றி இப்போது கூட்டுத் துறைக்கு மாற்றலாம் என்று இந்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கூட்டுத் துறையிலே கூட அரசாங்கத்தின் கொள்கை என்பது — 26 சதவீதம் அரசு அதிலே முதலீடு செய்கிறது. 25 சதவீதம் தனியார் அதிலே முதலீடு செய்கிறார்; மற்றது 'ஈக்குவிட்டி' — மற்றவர்கள் பணம் அதிலே வருகிறது. குறிப்பிட்ட அந்த தொழில் இலாபகரமாக இயங்கத் துவங்கியவுடனே அரசாங்கம் அதிலேயிருந்து 15 சதவீதத்தை திரும்ப பெற்றுக் கொண்டு தனியார் அதிலே முதலீடு செய்ய வேண்டும் என்பதுதான் 'கான்செப்ட் ஆஃப் ஜாயிண்ட் செக்டார்', இந்த நிதியை வேறு தொழிலுக்கு பயன்படுத்த வேண்டும். எனவே நண்பர் சொல்லுவதைப் போல முன்பிருந்த கொள்கை மாறி இன்று புதிய கொள்கை வரவில்லை. பழைய கொள்கைதான். கூட்டுத் துறையிலே இருக்கின்ற பணத்தை குறிப்பிட்ட தொழில் நிறுவனம் இலாபகரமாக இயங்கத் துவங்கியவுடனே அதிலே இருந்து 15 சதவீதம் திரும்ப பெற்றுக் கொண்டு அதிலே தனியாரே முதலீடு செய்ய அனுமதிப்பதுதான் இதுவரை இருந்து வந்திருக்கிறது. ஆனால் அரசாங்கம் மேலும், மேலும் நிதியை அதிலே முதலீடு செய்ய முடியாதபோது தனியாரிடத்திலே ஒப்படைப்பதிலே தவறு கிடையாது.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 'டான்செம்' பற்றி,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேகமாக முடியுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : முடித்து விடுகின்றேன். 'டான்செம்'-ஐ மனதிலே வைத்துக்கொண்டு நான் சொல்லவில்லை. பொதுவாக சொன்னேன். அதாவது இலாபகரமாக நடக்கக்கூடிய ஒரு தொழிலையே நாம் ஏன் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும். அவர் அந்த பணத்தை வைத்து இன்னுமொரு தொழிலை ஆரம்பிக்கட்டும்.



மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்தத் தொழிலைப் பற்றிச் சொல்கிறார் ? இலாபகரமாக நடக்கின்ற எந்தத் தொழிலையும் அரசாங்கம் தனியாருக்கு விற்றுவிடவில்லை. அப்படி இலாபகரமாக நடக்கிறது என்று சொல்லக்கூடிய ஒரே நிறுவனம் 'டான்செம்' தான். அதனால்தான் அதைப்பற்றிக் குறிப்பிட்டேன். அவர் மீண்டும், மீண்டும் இலாபகரமாக நடக்கிற தொழிலை ஏன் தனியாருக்கு விட வேண்டுமென்று கேட்கிறார். எந்தத் தொழிலைப் பற்றிக் குறிப்பிடுகிறார் ? அப்படி ஒரு முடிவை இந்த அரசாங்கம் எடுக்கவில்லை.

திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு முடிவை எடுக்கக்கூடாது என்பதைத்தான் நான் இந்த அரசாங்கத்தை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் நடத்துகிற தொழிற்சாலையை அரசிலே பெட்டர் மானேஜ்மெண்ட் என்றால் 'இன்ஸ்டிடியூஷனல் ஃபைனான்ஸ்' இப்போது கிடைக்கிறது. அதை வாங்கி செய்ய வேண்டியதுதான். அதற்காக நாம் அதை ஒருவரிடத்திலே ஒப்படைப்பது என்பது ..........

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை வைத்துத்தான் நான் ஏற்கெனவே பதில் சொன்னேன். இப்போது மீண்டும் தெளிவாக்க விரும்புகிறேன். இலாபகரமாக நடந்து கொண்டிருக்கிற எந்த ஒரு தொழிற்சாலையையும் இந்த அரசாங்கம் தனியாருக்கு விற்றுவிட முடிவு எடுக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலைத்தான் நானும் எதிர் பார்த்தேன். இன்னுமொன்று. டத்திலே இருந்து 'டிஸ்இன்வெஸ்ட்மெண்ட்' செய்கிறபோது இப்போது என்ன முறை இருக்கிறது என்றால், கூட்டுத் துறையிலே யார் அதிலே தனியார் இருக்கிறார்களோ அவருக்கே தருகிறோம். அதற்கு மாறாக, இப்போது இந்திய அரசாங்கம் 'மியூட்சுவல் ஃபண்டு' என்று செய்கிறார்கள் ; அதற்குப் பிறகு ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச், பங்கு மார்க்கெட்டின் மூலம் பங்குகளை விற்கிறார்கள் ; அந்த முறையின் மூலம் விற்றால் அரசாங்கத்திற்கு கூடுதல் ஆதாயம் வராதா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-50.

அதே போல 'சிக் இண்டஸ்ட்ரீஸ்' என்று சொல்லுகிற
போது அதிலே பல திட்டங்கள் இப்பொழுது வருகின்றன.
இந்திய அரசினுடைய நேஷனல் ரெனியூவல் ஃபண்டு இருக்
கிறது. அதே போல லேபர் கோவாபரேட்டிவ் என்கின்ற
முறையிலே பி.ஐ.எப்.ஆர். அவர்கள் மூலமாகவும் அதற்கு ஏற்
பாடு செய்கிறார்கள். கடனை எல்லாம் அரசாங்கம் பொறுப்பு
எடுத்துக் கொண்டு அந்தத் தொழிற்சாலைகளிலே உள்ள சொத்
துக்களை தொழிலாளர்களிடத்திலே கொடுத்து அந்தத் தொழிற்
சாலையை நடத்துவது என்கின்ற வகையிலேயும் வருகிறது.
அதே போல ரிசர்வ் வங்கியைப் பொறுத்த வரையிலே அவர்
களும் ஒரு 'டாஸ்க் ஃபோர்ஸ்' என்று ஏற்படுத்தி, இந்தியா
விலே 'சிக் இண்டஸ்ட்ரீஸ்' மிகவும் அதிகமாக ஆகி இருக்
கிறது ; அவைகள் நலிவுறுகின்ற ஆரம்பத் தருணத்திலேயே
அதற்கு உதவி செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே அவர்
களும் ஒரு குழுவை நியமித்து செய்து இருக்கிறார்கள். ஆகை
யினாலே அரசாங்கத்தின் சார்பில் நலிவுற்ற ஆலைகள் என்று
வருகிறபோது, அந்த நலிவுற்ற ஆலைகளின் நலிவை நீக்கு
வதற்கு இந்த வாய்ப்புகளை எல்லாம் அரசு பயன் படுத்த
வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இவற்றையெல்லாம்
சொல்வதற்குக் காரணம், அரசுக்கு தெரியாது என்பதல்ல ;
அரசு ஏற்கெனவே உதவி இருக்கிறது. ஆனாலும், அரசினி
டத்திலே நிதி வசதி இல்லை என்கிற ஒரு குறை ஏற்படலாம்.
நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். (மணி
அடிக்கப்பெற்றது).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 20 நிமிடம் ஆகி
விட்டது.

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> முடித்து விடுகிறேன். இந்தத்
துறையைப் பொறுத்த வரையிலே, அதே போல அரசாங்கத்
தினுடைய சிக் இண்டஸ்ட்ரீஸுக்கு நாம் பணம் போடுவதில்
அர்த்தம் இருக்கிறது. ஆனால், தனியார்கள் எல்லா சௌ
கரியத்தையும் பெற்று, அவர்கள் அந்த இண்டஸ்ட்ரீஸை நலிவு
பண்ணி விடுகிறார்கள். அதிலே இன்னும் என்ன வேடிக்கை
என்றால், ஒரு தொழிற்சாலை என்றால், அந்தத் தொழிற்
சாலைக்கு மூலப் பொருள் தருவது போன்ற துணை கம்பெனி
களை தனியார் முதலாளிகள் வைத்துக் கொண்டு இருக்கிறார்
கள். அந்தக் கம்பெனியிலே இருக்கிற பணத்தைக் கூட அந்த
'சேட்டிலைட் கம்பெனியிலே' எடுத்துக் கொள்கிறார்கள் ;
எடுத்துக் கொண்டு விட்டு, அது 'சிக்' ஆகிவிடுகிறது. அதற்கு



அரசாங்கம் பணம் போட வேண்டுமென்று மறுபடியும் வரு
கிறார்கள். அத்தகைய சூழ்நிலையை அரசாங்கம் பார்த்து,
'சிக் இண்டஸ்ட்ரீஸ்' என்றால் They must be made account
able; they must be made responsible. ஏனென்றால்
அவர்களுடைய வரவு செலவுக்கு, நன்றாக இருக்கின்ற வரை
யிலும் அவர்கள் நன்கு நடத்த வேண்டியது ; மோசமான
நிலையில் அரசாங்கத்தினுடைய தலையில் கட்ட வேண்டியது
என்கின்ற போக்கு இருக்கக் கூடாது. அது உலகத்திலே
எங்கும் கிடையாது. இந்தியாவிலே மட்டும் தான் அந்த
நிலைமை இருக்கிறது. அதற்குக் காரணம் ஜாயிண்ட் செக்
டார் என்பதே. 26 சதவிகிதம் என்று சொல்கிறோமே தவிர,
பப்ளிக் ஃபண்ட்ஸ் தான்- அதிலே ஃபைனான்சியல் இன்ஸ்டி
டியூஷன் பணம் இருக்கிறது ; அரசாங்கத்தினுடைய பணம்
இருக்கிறது, புரமோட்டர் பணம் 5 சதவிகிதம் கூட கிடை
யாது ; 5 சதவிகிதம் 10 சதவிகிதம் கூட வருவதில்லை.
ஆகையினால் பணம் எல்லாம் மக்களினுடைய பணம். கடைத்
தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கிற
மாதிரி தான் அந்த ஜாயிண்ட் செக்டாரிலே இருக்கின்றார்களே
தவிர, அதிலே கொஞ்சம் நஷ்டம் வந்தாலும் உடனே அர
சாங்கத்தினுடைய தலையிலே கட்டி வைத்துப் போய் விடு
கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ''சிக் யூனிட் களில் ஏற்
படுகின்ற நஷ்டங்களை அரசாங்கத்தின் தலையில் கட்டிவிடு
கிறார்கள்'' என்ற கூற்று உண்மையானதல்ல ; இது தவறான
தகவல் ஆகும். இப்பொழுது, மூடிக் கிடந்த ஸ்டாண்டர்டு
மோட்டார்ஸ் நிறுவனத்தைத் திறக்க இந்த அரசு உதவி
செய்தது. ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு
நிதி உதவி தேவைப்பட்டது. ஆனால், அதனைக் கடனாகத்
தான் இந்த அரசாங்கம் கொடுத்து இருக்கிறது ;
மானியமாகக் கொடுக்கவில்லை. எனவே, Once the
Factory starts working and begins earning profits in
a phase dmanner, they will be repaying the loans எனவே
இதுவரை 'சிக் யூனிட்'-ஐ திறப்பதற்கு இந்த ஆட்சி, இந்த
அரசு பொறுப்பேற்ற பிறகு யாருடைய தனியார் துறையில்
ஏற்பட்ட நஷ்டத்தையும் இந்த அரசு தன் தலையின் மீது
ஏற்றுக் கொள்ளவில்லை. 'சிக்யூனிட்' களைத் திறப்பதற்கு
உதவி செய்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த

உதவியை எதற்காகச் செய்கிறோம் ? மனிதாபிமான அடிப்
படையில் சமுதாய நலனைக் கருதி, ஆயிரக் கணக்கான
தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்புக் கிடைக்க
வேண்டும் ; (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய
வீடுகளில் விளக்கு எரிய வேண்டும், அடுப்பு எரிய வேண்டும்
(மேசையைத் தட்டும் ஒலி) என்ற நல்லெண்ணத்தின் காரண
மாகத்தான் இந்த அரசாங்கம் உதவி செய்கிறது. அப்படிச்
செய்கிற உதவியைக் கடனாகத்தான் கொடுக்கிறோம் என்பதைத்
தெளிவாக்க விரும்புகின்றேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நாம் அப்படிக் கொடுக்கிற பணத்தை 'ஈக்கு
விட்டி' ஆக 'கன்வெர்ட்' பண்ண வேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அதுவும் செய்யப்பட்டு இருக்
கிறது (மேசையைத் தட்டும் ஒலி). என்னுடைய பதிலுரை
யில் இதையெல்லாம் தெளிவாக விரிவாகக் கூற இருக்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல்—12.55

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்தலைவர்
அவர்களே, சான்றாக இப்போது ஸ்டாண்டர்டு மோட்டார்சுக்கு
மெர்க்கன்டைல் கிரடிட் அண்ட் ஃபர்ஸ்ட் லீசிங் கம்பெனி
மூலமாக 6 கோடி ரூபாய் தருகிறேன் என்று அவர்கள் ஒத்துக்
கொண்டார்கள் அதனுடைய உரிமையாளர்கள்.
தரவில்லை. ஸ்ப்பிக்கிலே இருந்தும் தமிழ்நாடு ஆனால்
ப்ராடக்சிலிருந்தும் கொடுத்திருக்கிறார்கள். அந்த 6 பெட்ரோ
ரூபாயையும் அந்தத் தொழிற்சாலையின் பங்குகளாக கோடி
வேண்டும். மாற்ற

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பங்குகளாகத்தான் மாற்றப்
பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ச. இராமச்சந்திரன் : பங்குகளாக மாற்றப்பட்டால்
அதை நான் வரவேற்கிறேன் என்று கூறி என் உரையை முடிக்
கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. காந்திராஜன்.

*திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றையதினம் இந்த, தொழில் மானியக் கோரிக்கை
யின்மீது நான் பேசுவதற்கு வாய்ப்பளித்துத் தங்களுக்கு முதலில்
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



நாடு வளர, ஒரு நாடு சிறப்பான வளர்ச்சியைத் தொழில்
துறையிலே பெறுவதற்கு, அந்தத் தொழில் துறை மூலம் பெற்ற
வளர்ச்சியை வைத்து ,அந்த நாட்டினுடைய பொருளாதார
முன்னேற்றம் சிறப்படைவதற்கு தொழில்தான் மூலமுதல்
காரணம் என்கிற வகையிலே இன்றையதினம் தொழில் துறையைத்
தன்னிடத்திலே வைத்து, அதனுடைய முக்கியத்துவத்தை
உணர்ந்து, இந்தத் தொழில் துறை மானியத்தைப் படைத்திருக்
கிற மரியாதைக்குரிய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

இன்றையதினம் தொழில் துறையில் நம்முடைய தமிழ்
நாடானது மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கிறது என்பதை
எல்லாம் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்
காட்டினார்கள். இன்றைய நிலையில் தமிழகம் இருக்கிற சூழ்
நிலையை நான் சொல்லுகின்றபோது, இதற்கு முன்னாலே
அதாவது 1947 ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழ்நாடு குறிப்பாக
1963 ஆம் ஆண்டு தொழில் துறையைப் பொறுத்த வரையில்
4-வது இடத்திலே இருந்தது. முதலாவதாக மேற்கு வங்காளமும்,
இரண்டாவதாக மகாராஷ்டிரமும் மூன்றாவதாக பஞ்சாபும்
அதற்குப் பின்னாலே 4-வது நிலையிலே தமிழ்நாடும் இருந்தன.
ஆனால் 1967 ஆம் ஆண்டு பஞ்சாபை பின்தள்ளிவிட்டு 3-வது
நிலைக்கு தமிழ்நாடு வந்தது என்பதை இங்கே இருக்கிற மாண்பு
மிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அன்றையதினம் 3-வது
இடத்திலே இருந்த தமிழ்நாடு இன்றையதினம் இப்படிப்பட்ட
பின்தங்கிய நிலைக்கு, 13-வது நிலைக்கு போயிருக்கிறது என்று
சொல்லுகிறபோது இந்த நிலைக்குக் காரணம் என்ன என்பதை
நாம் அறிந்தாக வேண்டும். இதற்கு அரசியல் மாற்றங்கள்
ஒருபுறம் இருந்தாலும் அதற்கு மேலாக பல்வேறு மூல முக்கிய
பொருள்கள் கிடைக்கின்ற வாய்ப்புகளும் இங்கே காரணமாகச்
சொல்லப்பட வேண்டும். இருந்தாலும் கூட 1967 ஆம் ஆண்டுக்கு
பின்பு இன்றையதினம் ஏறத்தாழ 20 ஆண்டுகளில் நமது மாநிலத்
தில் மத்திய அரசினுடைய முதலீடு 10 சதவீதத்திலிருந்து 5.21
சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே
நாம் கொள்கை விளக்கக் குறிப்பிலும் நிதிநிலை அறிக்கையிலும்
பார்க்கின்ற சூழ்நிலையை நாம் சொல்லியாக வேண்டும். கடந்த
20 ஆண்டு காலத்திலே மத்திய அரசு இங்கே பெரிய தொழில்
களைத் தொடங்காததுதான் தமிழ்நாட்டில் தொழில் துறை
இந்த அளவுக்கு பின்தங்கிய நிலையில் இருக்கிறது என்பதை நாம்
குறிப்பிட்டாக வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் மாறு
வதற்கு மத்திய அரசானது பெரும் தொழில்களை எதிர்காலத்
திலே இங்கே தொடங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்க
விரும்புகிறேன்,

[திரு. ச. காந்திராஜன்] [1992 ஏப்ரல் 3

எதிர்காலத்தில் பெரும் தொழில்களை மத்திய அரசு இங்கே
தொடங்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, 8-வது ஐந்
தாண்டுத் திட்ட காலத்தில் நெய்வேலியில் 3-வது சுரங்கம்
வெட்டுவதற்கான பணிகளை எல்லாம் தொடங்குவதற்கு அவர்
கள் அறிவிப்புகளை வெளியிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்
பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, மத்திய அரசு பெரும் தொழில்களைத்
தொடங்க வேண்டுமென்று நாம் சொல்லி வருகிறபோதும் கடந்த
காலத்திலே ஊட்டியிலே கலர் ஃபிலிம் தொழிற்சாலை ஆரம்
பிக்காமல் அதை உத்தரப்பிரதேசத்திற்குக் கொண்டு சென்றார்
கள். அதற்குப் பின்னாலே ஐ.சி.எப். என்று சொல்லப்படுகிற
இரயில் பெட்டித் தொழிற்சாலையை ஆந்திராவுக்குக் கொண்டு
சென்றார்கள். அதை எல்லாம் கருத்திலே கொண்டு தான்
எதிர்காலத்திலே மத்திய அரசோடு நல்ல உறவை ஏற்படுத்த
வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இருக்கிற நம்முடைய
மாநில அரசு, மத்திய அரசு அதிக முதலீடுகளை தமிழ்நாட்டில்
செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்க வேண்டுமென்பதை
இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மத்திய அரசினுடைய கையிலேதான்
'லைசென்சிங் சிஸ்டம்' என்கிற தொழில்களைத் தொடங்கக்
கூடிய 'லெட்டர் ஆஃப் இன்டென்ட்' முறை இருக்கிறது. அதை
மாநில அரசுகளுக்கு வழங்குவதற்கான நடைமுறைகளை மத்திய
அரசு இனிமேலாவது செய்ய வேண்டுமென்று நான் சொல்லியாக
வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், மத்திய
அரசாங்கத்தை மட்டுமே நாம் நம்பியிருக்கக் கூடாது. மாநில
அரசாங்கங்களும் தொழில் துறையில் முக்கிமான விரைவான
மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியது அவசியமாகும் என்கிற
வகையில் ஏற்கெனவே மிகவும் பின்தங்கிய நிலையில்
இருக்கிற தமிழ்நாட்டை தொழில் துறையில் மிகவும் முன்னேறிய
நிலைக்குக் கொண்டு செல்வதற்கு நம்முடைய தமிழக முதல்வர்
மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்
புக்கு வந்த பின்னால் பல்வேறு புதிய தொழில் கொள்கைகளை
எல்லாம் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதை நான் பணிவோடு
வரவேற்கிறேன். தொழில் ஆரம்பிப்பவர்கள், ஏற்கனவே பெரிய
தொழிலை நடத்துகிறவர்கள், பெரும் தொழிலை நடத்துகிற
வர்களுடைய சிரமங்கள் என்ன என்று கேட்டு, அவர்களுடைய
சிரமங்களைக் குறைக்கிற விதத்தில், முதலீடுகளைப் பெருக்குகிற
விதத்தில் கொள்கையை அறிவித்தார்கள். அந்த வகையில்
பார்க்கிறபோது மூன்று முக்கிய கருத்துக்களை நாம் எடுத்துக்
கொள்ளலாம்,



1992 ஏப்ரல் 3] [திரு. ச. காந்திராஜன்]

பிற்பகல் 1-00

முதலாவதாக மூலதன உதவியை மாண்புமிகு முதல்வர்
அவர்கள் செய்வதாக இந்தக் கொள்கை விளக்கத்தில் சொல்லி
யிருக்கிறார்கள். அதற்கு அடுத்தபடியாக விற்பனை வரிச்
சலுகைகளையும் சொல்லியிருக்கிறார்கள். எளிய வகையில்
உரிமங்களைப் பெறுவதற்கான வழிவகைகளை இங்கே சொல்லி
யிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த விற்பனை வரிச் சலுகை
என்பதை ஏறத்தாழ இன்றையதினம் அந்தத் தொழில் தொடங்
கப்பட்டதிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு விற்பனை வரிச் சலுகை
என்று சொல்லியிருக்கிறார்கள். 10 ஆண்டுகள் வரையில்
'டெபர்ட் பேமெண்ட்' என்கிற அந்தச் சூழ்நிலையையும் சொல்லி
யிருக்கிறார்கள். இப்படியெல்லாம் நாம் பார்க்கிறபோது,
இங்கே மரியாதைக்குரிய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள்
தொழில் துறையில் இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுத்தால்
பல்வேறு தொழில்கள் வளரும் என்ற நம்பிக்கையில் அதைச்
செய்தாலும் கூட, இங்கே இருக்கிற 'பியூரோகிராட்ஸ்' எல்
லாம், எதிர்காலத்தில், 10 ஆண்டுகள் டெபர்ட் பேமெண்ட்
என்றால், 10 ஆண்டுகளுக்கு பின்னால் அவர்கள் கட்டுவார்
களா, யார் கட்டுவார்கள், என்கிற அந்தக் கேள்விகளையெல்
லாம் அவர்கள் எழுப்பக் கூடும். இந்தத் திட்டங்களுக்கு அவர்கள்
தடைக்கல்லாக இருக்கிற ஒரு நிலை ஏற்படக் கூடும். எனவே,
இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் ஒன்றை மட்டும் சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் உணவுத் துறைக்கு நாம் முக்கியத்துவம்
தருகிறோம். 350 கோடி ரூபாய் நமக்கு நஷ்டம் ஏற்படுகிறது.
நாம் அதை மானியமாகக் கொடுக்கிறோம். இருந்தாலும் கூட
பி.டி.எஸ். சிஸ்டம் என்கிற அந்த சிஸ்டம் நல்ல முறையில்
நடக்க வேண்டுமென்ற காரணத்தால் அந்த நஷ்டத்தை நாம்
ஏற்றுக்கொள்கிறோம். இருந்தாலும் கூட இந்தத் துறையைப்
பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம்
ஏற்கனவே நாம் கட்ட வேண்டிய வரி என்பது அந்த தொழிலி
னுடைய அசெட்ஸ்ஸோடு சேர்ந்துதான் வருகிறது. எனவே,
10 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த அசெட்சை கட்டாமல் விட்டு
விட்டுச் சென்றால் கூட, 'லையபிலிட்டி' என்பது அந்த அசெட்
சோடு சேர்ந்து தான் வருகிறது. எனவே, அதை பத்து ஆண்டு
களுக்கு பின்னாலே எப்படி கட்டுவார்கள் என்ற சூழ்நிலையை
நாம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால் நஷ்டம்
ஏற்பட்டால் கூட பரவாயில்லை. அதை அரசாங்கம் ஏற்றுக்
கொள்ள வேண்டுமென்ற அந்த கோரிக்கையை நான் இங்கே
முன்வைக்க ஆசைப்படுகிறேன்.

தொழில்கள் தொடங்குவதில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. முன்பெல்லாம் சாதாரணமாக 5 லட்சம் ரூபாய் முதலீட்டில் தொடங்க வேண்டிய தொழிலானது 1947-ஆம் ஆண்டு தொடங்குவோம் என்றால், இன்றையதினம் அதனை ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். வங்கிகளில் அப்போது 3 சதவீதம் வட்டி இருந்தது. இன்றையதினம் 17 முதல் 24 சதவிகிதம் வரை வட்டி இருக்கிறது. அதே நேரத்தில் சிறு தொழில்களைத் தொடங்குவதற்கு எஸ்.எஸ்.ஐ. சான்றிதழ் வாங்க வேண்டும். பாய்லரை உபயோகிக்க வேண்டுமென்றால் சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பாயிலர் அனுமதி பெற வேண்டும். Pollution Control Board-ன் அனுமதியைப் பெற்றாக வேண்டும். இதற்கு மேலே கட்டிடங்களுக்கு பிளான் அப்ரூவல் லோக்கல் . பாடிஸ் அனுமதியைப் பெற்றாக வேண்டும். இன்றும் மின் துறையினுடைய சாங்ஷனை நாம் வாங்க வேண்டும். இதெல்லாம் Statutory conditions நிச்சயமாக அதைப் பெற்றால் தான் இந்தத் தொழிற்சாலையை நாம் தொடங்க முடியும். எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஒவ்வொரு துறையிலும் அந்த பெர்மிஷன், அனுமதியை முழுமையாக வாங்குகிறபோது ஏறத்தாழ 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் என்றுகூட ஆகிவிடுகிறது. எனவே, ஒருவர் தொழிலை ஆரம்பிக்கிறபோது முதலீடாகப் போட்ட அந்தத்திட்ட மதிப்பீட்டை விட அதனை ஆரம்பிக்கிற நிலையில் முதலீடு ஏறத்தாழ 30 சதவீதம் 40 சதவீதம் கூடுதலாகிவிடுகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் சில திட்டங்கள் எல்லாம் தொடங்கப்படுவதற்கு முன்பே மூடப்படுகிற சூழ்நிலையெல்லாம் தமிழகத்தில் இருக்கிறது. இந்தச் சூழ்நிலை இருக்கிற காரணத்தால்தான் இன்றையதினம் பைனான்சிங் கம்பெனி, லீசிங் கம்பெனி எல்லாம் தமிழகத்தில் அதிக அளவில் வந்து கொண்டிருக்கின்றன. அல்லது பெரிய தொழிலதிபர்கள் ஷேர்சை எல்லாம் வாங்குகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட காரணத்தால் தொழிலதிபர்களும் வேறு மாநிலங்களுக்கு சென்று இருக்கிறார்கள். உதாரணமாக நான் சொல்ல வேண்டுமென்றால் கடந்த காலத்தில் இருந்த அரசாங்கத்தின் குறைபாடுகள் காரணமாக நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த பொள்ளாச்சி தொழிலதிபர் திரு. மகாலிங்கம் அவர்கள் ஒரிஸ்ஸாவில் சென்று அங்கே ஒரு சர்க்கரை ஆலையை ஆரம்பித்து இருக்கிறார்கள் தெங்கனால் என்ற இடத்திலே. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் இருக்கிற காரணத்தாலே, அதைக் களைவதற்கு இன்றையதினம் நம்முடைய மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் வரும் ஆண்டில், 4 அல்லது 5 சர்க்கரை ஆலைகளை அமைப்போம் என்று இங்கே சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன்.



பிற்பகல் 1—05

இரண்டாவதாக, தொழில் தொடங்குவதற்கு தடையாக இருக்கின்ற அனைத்து சிரமங்களைக் குறைத்து உடனடியாக இந்த டிபார்ட்மென்டிலே இருக்கிற குறைபாடுகளைக் களைவதற்கு, அந்தத் தொழில் அதிபர்களுக்கு சிரமம் ஏற்பட்டால், உடனடியாக அவர்கள் நேரடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே மனுவைக் கொடுத்து, அதன் மூலமாக அனுமதியைப் பெற வேண்டும் என்கிற ஒரு நடைமுறையைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கெல்லாம் வெளிநாடுகளிலே, உதாரணத்திற்கு மேற்கு ஜெர்மன், மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளிலே இருக்கின்ற அந்த சிஸ்டம்களை நாம் பின்பற்றலாம். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தொழில் மானிய விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகின்ற வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேசத்தின் முன்னேற்றமும் ஒரு நாட்டின் வளர்ச்சியும் அதன் தொழில் கொள்கையை வைத்தே வளம் மிக்கதாக ஆக்க முடியும். தொழில் துறையில் நிறைந்த முன்னேற்றம் ஏற்பட, புதிய தொழில்கள் நாடெங்கும் துவங்கவேண்டும் என்கிற கருத்தில், நம் மாநிலத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிறபோது, அதன் மறைமுக தொழில்கள், அதாவது இயந்திரங்கள், உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்கள் தயாரிப்புகள், உற்பத்தி செய்த பொருட்களை வாங்குபவர்கள், விற்பவர்கள், உற்பத்திப் பொருட்களை உபயோகிப்பவர்கள், இப்படி பல துறைகளிலே வேலைவாய்ப்பும் அரசுக்கு நிரந்தர வருமானமும் வர வாய்ப்புகள் உள்ளன. அந்த விதத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் , 1991 ஜூலை மாதத்தில் முதன்முதலாக தொழில் அதிபர்களை அழைத்துப் பேசியதையும், 20–1–1992 அன்று, 1992—ஆம் ஆண்டுக்கான புதிய கொள்கைத் திட்டங்களை தொழில் ரீதியாக அறிவித்தும் அடிப்படை வசதிகள், வரிச் சலுகைகள், ஊக்கச் சலுகைகள் அறிவித்தும், முந்தைய ஆட்சியில் தொழிற்சாலைகளை மூடுகின்ற விழாவாக நடத்திக் கொண்டிருந்தவர்கள் மத்தியில், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூடிய ஆலைகளை எல்லாம் திறக்கின்ற விதத்தில், திறப்பு விழாவாக நடத்திக் கொண்டு இருக்கிற இந்த புரட்சிகரமான நேரத்தில், தேச வளர்ச்சியிலே முழு கவனம் செலுத்தும் விதத்தில், 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்ற பழமொழிக்கேற்ப, தேச

நலனில் அக்கறை கொண்டு, தேச விரோத சக்திகளை ஊக்கு
வித்தவர்களை, தொழிற்சாலைகளை தனது குடும்பச் சொத்
தாக மாற்றியவர்களை, மக்கள் விரோத சக்திகளாகச் செயல்
பட்டவர்களை விலாசம் இல்லாத இடத்திற்கு அனுப்பி வைத்து,
தேச நலனில் அக்கறை கொண்டு, செயல்படும் தேசியத்
தலைவியாக பிரகாசிக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களைப்
பாராட்டுகிறேன், போற்றுகிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி.)

இன்றைக்கு தமிழகத்தில் தொழில் துறையில் மாபெரும்
மாற்றங்களைக் கொண்டு வந்து, தமிழகத்தை தன்னுடைய
வீடாக, தமிழக மக்களை தன் சகோதர சகோதரிகளாக
ஏற்று, மாநில முன்னேற்றத்திற்கு என்றே தன்னை அர்ப்பணித்
துக் கொண்டு, இரவு பகல் பாராது உழைக்கும், நம்முடைய
முதல்வர் அவர்களுடைய உழைப்புக்கு, இந்தியாவிலே முதன்மை
மாநிலமாக தொழில் துறையிலே தமிழகத்தைக் கொண்டு வர
எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும், செயல்பாடுகளுக்கும்
நானும், நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியும் துணை
நிற்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்
கிறேன்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், புதிதாகத்
துவங்குவதற்கு முன்பு, பெரிய சிறிய, கனரகத் தொழிற்
சாலைகள் நலிவுறாமல் உற்பத்தி பாதிக்காமல், தொடர்ந்து
செயல்பட, அரசு பலவிதங்களில், இன்றைய சூழ்நிலையில்,
தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, மின் கட்டண உயர்வு,
மூலப்பொருட்கள் விலை உயர்வு, உற்பத்தி பாதிப்பு, இப்படி
பழைய இயந்திரங்களைக் கொண்டு செயல்படுகிற பழைய
தொழிற்சாலைகளை எல்லாம் இன்றைக்கு அவர்கள் நடத்த
முடியாமல் உற்பத்தி பாதித்து, இன்றைக்கு அவர்களுடைய
பழைய இயந்திரங்கள் மூலம் செயல்படுத்த முடியாமல், நலிவு
அடையும் நிலையில் தொழிற்சாலைகளை நடத்திக் கொண்
டிருக்கிறார்கள்.

குறிப்பாக கோவை மாவட்டத்தில் உள்ள பஞ்சாலைகளைப்
பொறுத்தவரையில், சுமார் 400 சிறிய பெரிய தொழிற்
சாலைகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளினுடைய
இயந்திரங்கள் பழைய இயந்திரங்களாக இருப்பதால், உற்
பத்தி பாதித்து, ஊதிய உயர்வை அதிகப்படியாக்கிக் கேட்கின்ற
காரணத்தால், மின் கட்டணம் உயர்ந்துள்ள காரணத்தால்,
அவர்களால், அந்தத் தொழிலை நடத்த முடியாமல் பாதிப்
புக்கு உள்ளாகிறார்கள். அவர்களுடைய தொழில்கள் நசியா
மல் இருக்க, புதிய நவீன இயந்திரங்களை வாங்க, இன்றைக்கு
அரசு அவர்களுக்குக் கடன் வசதிகளைச்செய்து கொடுத்து





அவர்கள் இயந்திரங்கள் வாங்குவதற்கு பல விதங்களில் உதவி
கள் செய்தும், அந்தத் தொழிற்சாலைகளை நடத்த, அந்தப்
பஞ்சாலைத் தொழில் நலிவு அடையாமல் இருக்க உதவிசெய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது, ஏற்றுமதித் துறையில் நம் மாநிலத்திலிருந்து
தனியார் பல பொருட்கள், இயந்திரங்கள், ரெடிமேட் ஆடை
கள், தோல் பொருட்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்
கிறார்கள். அவர்களை ஊக்குவிக்கும் விதத்தில், வெளிநாடு
களின் தேவைகளை அறிந்து இன்னும் அதிகமான அளவில்
ஏற்றுமதி செய்ய, புதிய தொழில்கள் துவங்க முன்வருபவர்
களுக்கு உதவவும், ரெடிமேட் ஆடைகள், தோல் பொருட்கள்,
எலக்ட்ரானிக் பொருட்கள், சோப்புகள் தயாரித்து ஏற்றுமதி
செய்ய, படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை
வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களே தொழில்
துவங்க அரசு உதவி செய்து, அந்தத் தொழிலைச் செய்து,
அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்காக அரசே ஏற்றுமதி
வாரியம் என்ற ஒன்றை அமைத்து, அவற்றை ஏற்றுமதி செய்து
அரசுக்கு வருமானம் பெருக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில் பொதுமக்கள்
உயிர் காக்க உபயோகிக்கும் மருந்துகள் கூட பெரிய தொழி
லதிபர்கள் சிலர் லாபத்தின் அடிப்படையில் தரக் குறைவான
மருந்துகள் தயாரிப்பதைத் தடுக்க அரசே அந்த மருந்துகளை
தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு முன்வரவேண்டு
மெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் தமிழ்நாடு தொழில்
வளர்ச்சி நிறுவனம் 2,800 பேருக்கு வேலை அளிக்க ரூ. 755
கோடி முதலீட்டில் 9 புதிய திட்டங்கள் குறித்த பணிகளை
தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளதை வரவேற்று, தொழில்
துறையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு
கோவையிலே இருக்கின்ற லஷ்மி மெஷின் ஒர்க்ஸ், டெக்ஸ்
டூல்ஸ் கம்பெனி போன்ற பெரிய நிறுவனங்கள் தயாரிக்கும்
இயந்திரங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்
றன. நாம் உள்நாட்டில் இருக்கின்ற பஞ்சாலைகளை நவீனப்
படுத்த அந்த ஏற்றுமதிப் பொருட்களில் குறிப்பிட்ட சத
வீதத்தை உள்நாட்டில் இருக்கின்ற பஞ்சாலைகளுக்கு அளிக்க
வேண்டுமென்கிற ஒரு வரையறையினை தொழிற்துறையில்
மாண்புமிகு முதல்வர் அவர்கள் வைக்கவேண்டுமென கேட்டுக்
கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைகளிலிருந்து வெளிவரும் கழிவுப் பொருட் களிலிருந்து அந்தச் சக்கை பொருளிலிருந்து காகிதம் தயாரிக் கும் தொழிற்சாலையை இந்த ஆண்டு 1,000 கோடி திட்டத் தில் நடைமுறைப்படுத்த உள்ளதாக அரசு அறிவித்துள்ளது. அந்தத் திட்டத்தின் மூலம் தற்போதுள்ள 31 சர்க்கரை ஆலை களிலிருந்தும் பெற்று, காகிதம் தயாரிக்கும் ஆலைகளை அமைப் பதற்கு அரசு முன்வந்து, தொழிற்துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—10

தொழிற்துறையில் பல மேம்பாடுகளைக் கொண்டுவருவ தோடு, இந்தத் நொழில் செய்பவர்கள் முன்வந்தாலும், அந்தத் தொழில் அனுபவம் பெற, அரசு தொழில் பயிற்சியும் நலல ஆலோசனையும் வழங்குவதற்கு தனிப் பிரிவையும் நிறுவவேண்டும். தொழிற்சாலையில் உற்பத்தி செய்யும், பொருட்களுக்கு எப்போதும் சீரான விலையில் விற்கவும், மூல்தனப் பொருட்கள் சீரான விலையில வாங்கவும், அரசே நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்

படித்த ஆதிதிராவிட மக்களுக்கு வேலைகள் துவங்க அவர்களுடைய படிப்பிற்கும், அவர்களுடைய தொழில் வளர்ச் சிக்கும் உத்தரவாதம் அளிக்கும் வகையில் அரசு அவர்கள் தொழில் செய்ய இலவசமாக நிலங்களைக் கொடுத்தும், கொடுக்கவும், இலவசமாக அவர்கள் தொழில் பெறுவதற்கு அனைத்து வசதிகளைச் செய்து கொடுத்தும், வணிக நல் வாரியம் அமைத்தும், அதன்மூலம் தொழில்துறையில் பல ஆலோசனைகளைப் பெற்று தொழிற்சாலைகள் அமைக்க அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு முழு உறுதி அளித்து, என்னு-டைய உரையை முடிக்கின்றேன், நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> ; திருமதி கே. மரியமுல் ஆசியா

<u>திருமதி கே. மரியமுல் ஆசியா</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டு மக்கள் நலம் பெறவேண்டும், ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கையில் ஒளியை ஏற்றி அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லவேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தில் நமது மாண்புமிகு டாக்டர், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற எட்டு மாத காலத்திற்குள் அனைத்துத் துறைகளிலேயும் எந்த முதல்வரும் செய்ய இயலாத அளவிற்கு அனைத்துத் துறைகளிலும் பல புதுமை புகுத்தி, அன்று வெற்றி வீராங்கனையாகத் திகழ்ந்து கொண்டிருக் கின்ற நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய தலைமையின்கீழ் இருக்கின்ற தொழில்கள் மீதான மானியக்



கோரிக்கையினை நான் ஆதரித்து, எனக்குப் பேசுவதற்கு வாய்ப் பினை அளித்த தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று தேசியக் கவிஞர் பாரதி கண்ட கனவை நனவாக்கிக் கொண்டிருக் கின்ற நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழகத்தை தொழில் மயமாக்கி, தமிழகத்தை தொழிற்துறையில் இந்தியாவிலே யே முதல் மாநிலமாக ஆக்கவேண்டுமென்று அவர்கள் எடுத்து வருகின்ற செயல் திட்டங்களை நாம் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

குறிப்பாக வீட்டு நிர்வாகத்தில் மட்டும் கவனம் செலுத்தி வந்திருக்கின்ற படித்த பெண்கள் சுயமாக தொழில் செய்து, குடும்ப வருமானத்தைப் பெருக்கவும் அதன் மூலம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை உயர்த்தவும் பெண்களிடையே வேலைவாய்ப்பு களை பெருக்கவும், அதன்மூலம் சமுதாயத்தில் பெண்களை முன்ன ணியில் கொண்டுவரவும் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கை பாராட்டுக்குரியது.

மேலும் 30 சதவீதத்திற்கு மேல் பெண்களுக்கு வேலைவாய்ப் பைத்தரும் புதிய தொழில்களுக்கு அதிக அளவிலான 5 சதவீதம் வரை மூலதன உதவித்தொகை வழங்குவது, பெண்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்கவேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் உயர்ந்த எண்ணத்தைக் காட்டுகின்றது.

மேலும் மகளிர் தொழில் முனைவோருக்கு தங்களுடைய வீடுகளில்இருந்துகொண்டே அவர்கள் தொழில்அமைப்பதற்காக 50 மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு தொழில்முனைவோருக் கான பயிற்சியை அளித்து அவர்களுக்கு கணிப்பொறி சாதனங்கள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற் பிரிவை சொந்தமாக நடத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய தொழில் கொள்கை குறிப்பிலே குறிப்பிட்டு இருப்பது பாராட்டுக்குரியதாகும்.

பிற்பகல் 1—15

அதேபோன்று மற்ற தொழில் பிரிவுகளிலும் பெண்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்து பெண்கள் தொழில் தொடங்குவதற்கு சிறப்பு மானியத்துடன் தாராளமாக கடன் உதவிகளையும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்று ஜப்பான் நாடு தொழில் துறையிலும் பொருளாதாரத்திலும் மற்ற நாடுகளோடு போட்டிப் போட்டுக்கொண்டு அதிக முன்னேற்றம் அடைந்துக் கொண்டிருக்கிறது. அது இயற்கை வளம் இல்லாத நாடு, அது ஒரு

[திருமதி கே. மரியமுல் ஆசியா] [1992 ஏப்ரல் 3

எரிமலை நாடு. மேலும் 2—ஆம் உலகப் போரில் இடுப்பு உடைக்கப்பட்டு சின்னாபின்னமாகப் போயிருந்த நாடு. ஆனால் இன்று தொழில் துறையில் அதிக முன்னேற்றத்தை அடைந்துக் கொண்டு இருக்கிறது. அதற்கு காரணம் கல்வித் துறையிலும் தொழில் துறையிலும் மிகப் பெரிய மாற்றங்கள் ஜப்பான் கொண்டு வந்ததே அதனுடைய மாபெரும் வெற்றிக்கு காரணம் என்று உலகவங்கியின் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கான நடவடிக்கைகளை ஜப்பான் நாடு மேற்கொண்டபொழுது, ஆரம்பத்தில் பல குழுக்களை உலகின் பல இடங்களுக்கும் ஜப்பான் அரசு அனுப்பியது. விஞ்ஞானம் தொழில் நுட்பம் நிர்வாகம் ஆகியவைப் பற்றி அக்குழுக்கள் நிறைய விஷயங்கள் அறிந்துக்கொண்டு வந்தன. அவற்றை ஜப்பானிலே பயன்படுத்தி முன்னேற்றம் கண்டது. இயந்திரங்களை இறக்குமதி செய்துள்ளது. வெளிநாட்டு நிபுணர்கள் சேவை பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. மாதிரி தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன என்று உலக வங்கியினுடைய ஆய்வு அறிக்கை கூறியுள்ளது. அதைப்போல நம்முடைய தமிழ் நாடும் தொழில் துறையில் முன்னேற வேண்டுமென்ற அந்த உயர்ந்த கொள்கையைக் கொண்ட நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு தொழிலதிபர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்டக் குழுவை வெளிநாடுகளுக்கு அனுப்பி அங்கே தொழில்துறையில் எப்படி முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து அந்த தொழில் நுணுக்கம் விஞ்ஞானம் மற்றும் நிர்வாகம் ஆகியவைப்பற்றி முழுமையாக அறிந்துக் கொண்டு வந்து அதை தமிழகத்தில் தொழில் துறையில் பயன்படுத்திக்கொண்டால் அது ஏதுவாக இருக்கும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நமது முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய மகத்தான இந்த தொழில் கொள்கை - புதிய தொழில் கொள்கை - நாட்டில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி. மேலும் மத்திய கிழக்கு நாடுகள் தமிழகத்திலே தனியார் துறையிலும் அரசுத் துறையிலும் தங்களுடைய முதலீட்டை பெறும் அளவுக்கு செய்வதற்கு தயாராக இருக்கின்றன. இதை எப்படி சொல்லுகிறேன் என்றால் இந்திய - அரபு நட்புறவு கழகத்தில் அகில இந்திய அளவில் நான் ஒரு பொறுப்பில் இருப்பதன் காரணமாக - மேற்கு ஆசிய நாடுகளுடைய பிரதிநிதிகள், அந்நாட்டின் முக்கியஸ்தர்கள் தொழில் அதிபர்கள் ஆகியோருடன் கலந்துரையாடுகின்ற வாய்ப்பினை பெற்றிருப்பதால் அந்த எண்ணத்தை என்னால் உணர முடிந்தது. மேலும் மேற்கு ஆசிய நாடுகளுடைய அரசுகளும் அந்நாட்டினுடைய தனியார் துறைகளும், தொழில் அதிபர்களும் தமிழ்நாட்டில் தங்களுடைய நாடுகளுக்கு இறக்குமதி செய்வதற்குரிய தேவையான பொருட்களை உற்பத்தி செய்ய தொழில்களில் அதிகம் முதலீடு செய்வதற்கு ஆர்வம் கொண்டுள்ளனர். எனவே



1992 ஏப்ரல் 3] [திருமதி கே. மரியமுல் ஆசியா]

தொழில் துறையில் மாபெறும் புரட்சியை செய்து கொண்டிருக்கும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மகத்தான தலைமையின் கீழ் இயங்கும் தமிழக அரசு வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள் குறிப்பாக தமிழர்களுடைய முதலீட்டை தமிழ்நாட்டில் தொழில் துறையில் பயன்படுத்திக் கொள்ள முயற்சிகள் மேற்கொண்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். மேலும் வர்த்தக தொழில் உறவை பலப்படுத்த அறிஞர்கள் வல்லுநர்கள் அந்த நாடுகளுடன் தொடர்புடைய செல்வாக்கு பெற்ற தொழில் அதிபர்கள் ஆகியவர்களைக் கொண்ட குழு அமைத்து ஆவன செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

மேலும் வீட்டிற்கு ஒரு நூல் நிலையம் அமைத்து வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம் என்ற நிலை இருப்பதைப் போல வீட்டிற்கு ஒரு தொழில் அமைப்போம் என்ற புரட்சிகரமான புதிய நிலையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய மகத்தான ஆட்சியில் உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் நாட்டினுடைய எதிர்காலம் இளைஞர்களுடைய கையில் இருக்கிறது என்கிறோம். உண்மையில் அவர்களுடைய நம்பிக்கையில் தான் இருக்கிறது. அத்தகைய இளைஞர்களுடைய இதயங்களில் நம்பிக்கை விதைகள் தூவப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இளைஞர்களுடைய தொழில் ஆர்வத்தைப் பெருக்கவும் நாட்டில் தொழில் வளர்ச்சி நிறுவவும் தேவையான சுவையான செய்திகளை பத்திரிகைகளில் வெளியிட வேண்டும். மேலும் பெரிய தொழில்களுக்கு மத்திய அரசு தொழில்களுக்கு மற்றும் சிறு தொழில்களுக்கு நாட்டினுடைய பங்கு பற்றி நல்ல செய்திப்படங்களை அரசு தொடர்ந்து வெளியிட வேண்டும். மேலும் தொலைக்காட்சியும் வானொலியும் அரசாங்கத்தின் தொழில் கொள்கைகளையும் அரசாங்கம் தரும் சலுகைகளையும் தொடர்ந்து அல்லது குறிப்பிட்ட நாட்களில் ஒலி ஒளி பரப்ப வேண்டும்.

மேலும் இப்போது சிமென்டினுடைய தேவை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அதன் காரணமாக சிமென்ட் தொழிற்சாலைகள் மேலும் துவக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னுடைய அரவக்குறிச்சி தொகுதியிலுள்ள சின்னதாராபுரம் பகுதியில் விவசாயம் செய்வதற்கு பயன்படுகின்ற ஆர்.சி.சி. பைப் கம்பெனிகள் அதிகமாக இருக்கின்றன. அங்கிருந்து கேரளா போன்ற வெளி மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த ஆர்.சி.சி. பைப்புகள் செய்வதற்கு உரிய அனைத்து வசதிகளும் இருக்கின்றன. ஆகவே, தமிழக அரசு ஆர்.சி.சி. சிமென்ட் தொழிற்சாலையை சின்ன தாராபுரத்தில் துவக்க வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அரவக்குறிச்சி பகுதியில் மிகவும் கடுமையான வறட்சி நிலவுகிறது. இங்கு எந்த தொழிலும் இல்லை. ஆகவே அரவக்குறிச்சியை வறட்சிப் பகுதியாக அறிவித்து, அரவக்குறிச்சியில் தொழிற்பேட்டையைத் துவக்கி வேலையில்லாத மக்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு காலத்தின் அருமை கருதி இத்தோடு முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்..

பிற்பகல் 1–20

<u>மாண்புமிகு பேரவை தலைவர் :</u> திரு. பி. வி. இராஜேந்திரன்.

<u>திரு. பி. வி. இராஜேந்திரன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தொழில் மானிய கோரிக்கையின் இறுதியில் இந்த வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

“ குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும் பாணிகள் செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்.

வெட்டுக் கணிகள் செய்து தங்கமுதலாம்
வேறு பலபொருளுங் குடைந்தெடுப்போம்
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவைவிற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டுவருவோம்.”

என்று மகாகவி சுப்பிரமணிய பாரதி அன்று பாடினார். இன்றைக்கு பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக நமது தமிழக முதல்வர் அவர்கள் இருக்கின்றார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி).

நான் கூட யோசித்துப் பார்த்தேன். 7 மாதங்களுக்கு முன்னால் இந்த அரசு பொறுப்பு ஏற்றபோது எங்களைப் பார்த்து, எதிரிக் கட்சி வரிசையிலே இருக்கின்ற ஒரு உறுப்பினர் சொன்னார். நீங்கள் டமாரம்; நீங்கள் ஜால்ரா போடுகிறீர்கள் என்று. அப்போது சொன்னேன். காங்கிரஸ் இந்த ஆட்சிக்கு, அரசுக்கு டமாரம் அடிக்கக்கூடத் தயாராக இருக்கிறது. பொருத்தம் இருந்தால் என்று சொன்னேன். இன்று கூட மீண்டும் பரிசீலனை செய்து பார்த்தால் தொழில் துறை மானியத்திலே மட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு

**When she was crossing Sword with the Honourable Member Paruti Ramachandran, she proved her efficiency.**





(மேசையைத் தட்டும் ஒலி). 20 ஆண்டுக்கால 25 ஆண்டுக்
கால நாடாளுமன்ற நடவடிக்கைகளிலே அனுபவம் மிக்கவர்
களால் கூட அவ்வளவு எளிதிலே மடக்க முடியாதவர்களை
எல்லாம் வீழ்த்துகின்ற திறமை. (மேசையைத் தட்டும் ஒலி)
இவற்றையெல்லாம் பார்த்த பிறகு உள்ளபடியே பாராட்டத்
தகுந்தவர்கள் தான். பத்திரிகைகள் எதை வேண்டு
மானாலும் எப்படி வேண்டுமானாலும் எழுதிக்கொள்ளட்டும்.
நாளைக்கு அவர்கள் எழுதுவார்கள். காங்கிரஸ் கட்சி
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு
ஜால்ரா போடுகிறது என்று வேண்டுமானாலும் எழுதலாம்.
டமாரம் அடிக்கிறது என்று வேண்டுமானாலும் எழுதுங்கள்.
இதைப் பொறுத்தவரையில் நாங்கள் பாராட்ட மிகவும் கடமைப்
பட்டிருக்கிறோம். காரணம் அவர்கள் இன்றைக்கு தொழிற்
கொள்கை முழுவதும் பிரதமர் நரசிம்மராவ் அவர்களால்
அறிவிக்கப்பட்ட புதிய தொழிற் கொள்கை, பொருளாதார
கொள்கைகளைத் தழுவிய தமிழக தொழிற் கொள்கை
களையும், அதைக் கையாளுகின்ற முறையையும் நாங்கள்
பாராட்டாமல் இருக்க முடியாது. குறிப்பாக இந்த நேரத்தில்
ஒன்றைச் சொல்ல வேண்டும். இறைவன் சொன்னாராம்.
'You shall have joy or you shall have power, said
God 'you shall nct have both.' இரண்டுமே
இருக்க முடியாது என்று சொன்னாராம். ஆனால்
இன்றைய முதல்வர் அவர்களிடம் ஆனந்தமும் இருக்கிறது.
அதிகாரமும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)
அதிகாரம் இருப்பதால் அவர் தூக்கம் இல்லாத இரவுகளை
கழிக்கின்றார் என்கின்ற நிலைமை இன்றைக்கு கிடையாது.
காரணம் ஒழுக்கம் உள்ள ஒரு கட்சி. சிறந்த பொறுப்புள்ள
எதிர்க் கட்சி.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு உழைப்பதிலே ஆனந்தத்தை எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் காண்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>திரு. பி. வி. இராஜேந்திரன் :</u> அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து கூட கிடையாது. அந்த ஒரு நிலைமையிலே இன்றைக்கு தமிழக முதல்வர் அவர்கள் இருக்கின்றார்கள் என்று சொன்னால், இந்த நிலைமை தான் தமிழகத்தை தொழில் துறையிலே முன்னுக்கு கொண்டு வரும். 1967 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே தொழில் துறை முன்னேற்றத்தில் நான்காவது

இடத்திலே இருந்த தமிழகம் இன்றைக்கு 12 அல்லது 14 வது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது என்று சொன்னால், ஒரு மிகப் பெரிய பணி, பொறுப்பு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு முன்னால் காத்துக்கொண்டு இருக்கிறது என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். அதனை உணர்ந்து தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் The New Industrial policy 1992 ஏற்கெனவே வெளியிட்டிருக்கிறார்கள். அதுவும் அவசரமாக வெளியிட்டது ஏன் என்கின்ற காரணத்தையும் இந்த அவைக்குச் சொல்லி. . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன் அவர்கள் பேசுகின்ற போது நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால், தொழில் துறையில் தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு 12-வது இடத்திற்கோ, 14—வது இடத்திற்கோ தள்ளப்பட்டுவிட்டது என்பது உண்மையான தகவல் அல்ல. சரியான தகவல் அல்ல. இதற்கான எந்த அதிகாரப்பூர்வமான ஒரு ஆய்வும் நடத்தப்படவில்லை, எனவே இதைப்பற்றிய முழு விளக்கத்தை என்னுடைய பதிலுரையில் தர இருக்கிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் (மேசையைத்தட்டும் ஒலி)

திரு. பி. வி. இராஜேந்திரன் : தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்புகள் எல்லாம் இன்றைக்கு தொழில் துறையில் தமிழகம் முன்னேற வேண்டும். இதனை இந்த அரசு எப்படி செய்யப் போகிறது என்பதைத் தான் இன்றைக்கு தமிழக மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு தன்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்பது தான் எங்களுடைய ஆசையும் கூட. அதிலே ஒருசில ஆலோசனைகள் சொல்வதற்கு நாங்கள் இந்த நேரத்தில் கடமைப்பட்டிருக்கிறோம்.

முக்கியமாக தமிழகத்தினுடைய இன்றைய தொழில் கொள்கை இண்டஸ்ட்டிரியல் பாலிசியில் திரஸ்ட் ஏரியா என்று சொல்லியிருக்கிறார்கள். முன்னுரிமை வழங்கப்படக்கூடிய, முக்கியத்துவம் தரக்கூடிய ஏரியாக்கள் அதிலே Salt and Marine basea industriess sea-food இவற்றை அதிலே இணைத்து இருக்கிறார்கள். இந்த இரண்டு பற்றியும் சொல்லுவதற்குத்தான் எனக்கு தாங்கள் வாய்ப்பு அளிப்பீர்கள் என்று நம்பிக்கொண்டிருக்கிறேன். அந்த இரண்டோடு என்னுடைய கோரிக்கைகளை முடித்துக் கொள்கிறேன். இன்றைக்கு Salt and Marine based industries என்று சொன்னால் வேதாரண்யத்தை மறந்து விட முடியாது. கார



ணம் அன்றைக்கு மகாத்மா காந்தி அவர்கள் தண்டியிலே. . . . (குறுக்கீடு).

பிற்பகல் 1—25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முடித்து விடட்டும். 1:30 மணிக்குள் முடிக்க வேண்டும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பற்றி அதிகமாகப் பாராட்டிப் பேசினார்கள். ஆனால் சமீபத்தில் வேதாரண்யம் பொதுக் கூட்டத்தில். . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுவெல்லாம் வேண்டாம். அரசியல் வேண்டாம். (குறுக்கீடு).

திரு. பி.வி. இராஜேந்திரன் : தலைவர் அவர்களே, வேதாரண்யம் பொதுக் கூட்டத்தில் நான் எதைப் பேசினேன் என்பது தங்கள் வசமே டேப் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம் பொதுக் கூட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் இங்கே வேண்டாம். மானியக் கோரிக்கைக்கு வாருங்கள்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : தலைவர் அவர்களே, இந்த அவையில் நான் பேசியதற்கும், அங்கே வெளியே சென்று மாறிப் பேசுகின்ற இரட்டை நாக்கு எனக்கு நிச்சயமாக கிடையாது என்பதைச சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அது வேண்டாம் என்று சொல்லி விட்டேன். நீங்கள் அதையெல்லாம் பேச வேண்டாம். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே. . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அது வேண்டாம்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : தலைவர் அவர்களே, என்னுடைய வேகமே நின்று போய் விடுகிறது இந்த மாதிரி குறுக்கீடு வருவதால். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைக்குள் செல்லுங்கள்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி ஆதாரம் இருந்தால் நான் எதையோ ஒன்றை அரசிற்கோ.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. நான் அதைத்தான் வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன். பிறகு ஆதாரம் கேட்டால் அவருக்கு நான் வாய்ப்புக் கொடுக்க வேண்டிவரும். மணி 1-30 க்குள் நான் முடிக்க வேண்டும்.

திரு பி.வி. இராஜேந்திரன் : தலைவர் அவர்களே, குறிப்பாக வேதாரண்யத்திலே ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் மகாத்மா காந்தி அவர்கள் தண்டியிலேயும் குனிந்து உப்பு, அள்ளியதால்தான் இன்றைக்கு நாம் நிமிர்ந்து நிற்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது. இன்றைக்கு அந்த உப்புத் தொழில் நசிந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு உற்பத்திச் செலவு ஒரு குவிண்டால் 6½ ரூபாயாக இருக்கின்ற போது விற்பனை செலவு இன்றைக்கு 5½ ரூபாயாக இருக்கிறது. ஒரு குவிண்டால் ஒன்றுக்கு ஒரு ரூபாய் நஷ்டம். காரணம் இன்றைக்கு உப்பை மூலப் பொருளாகக் கொண்டு இயங்குகின்ற தொழிற்சாலைகள் அங்கே கிடையாது.

தி.மு.க. தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே manuifecto-ல் உப்புத் தொழில் மரணப் படுக்கையில் இருக்கிறது, காங்கிரஸ் எதையும் செய்யவில்லை ; கவர்னர் ஆட்சி எதையும் செய்யவில்லை ; நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 220 கோடி ரூபாயில் காஸ்டிக் சோடா தொழிற்சாலை கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். தொடர்ந்து நாங்கள் இந்த அவையிலே 3, 4 ஆண்டுகளாக பாலிசி நோட்டில்தான் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அசுரன்சே தந்தார்கள். விரைவில் அந்தத் தொழிற்சாலை டிட்கோ மூலமாக தமிழ்நாடு பெட்ரோ புராடக்ஸ் மூலமாகக்கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் இலவு காத்த கிளி போல வரும் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது இன்று வரை எங்களுக்குக் கிடைக்கவில்லை. கிடைக்காதது மட்டுமல்ல, எங்களுக்கு ஒரு சிறிய சந்தேகமேவந்து விட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலே





வேறு எங்கு வேண்டுமானாலும் காஸ்டிக் சோடா தொழிற்சாலை அமைப்பதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. அதை வரவேற்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இருந்தாலும் எங்களுக்கு வரவேண்டியது ஏதோ ஒன்று அந்தப் பக்கத்துக்கு பர்கூர் தொகுதிக்குப் போய் விட்டதோ என்கின்ற அச்சம் எங்களுக்கு வந்தால் இந்த நேரத்தில் அதுவும் 33 ஆயிரம் டன் பெர் ஆனம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு இத்தகைய அச்சமே தேவையில்லை. பர்கூரில் காஸ்டிக் சோடா தொழிற்சாலை தொடங்குகின்ற எண்ணமே இந்த அரசுக்கு இல்லை. அவருடைய வேதாரண்யம் தொகுதியிலே விரைவில் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). அதைப் பற்றிய விளக்கத்தை என்னுடைய பதிலுரையில் கூறஇருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : தலைவர் அவர்களே, இத்தோடு பேச்சை முடித்துக் கொள்ளலாம் போல் இருக்கிறது. (சிரிப்பு). கிடைக்காத ஒன்று கிடைத்து விட்டது என்பதைப் போல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மிகவும் நன்றி சொல்ல, கரம் கூப்பி நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல 'சீஃபுட்டை' பொறுத்த வரையில் குறிப்பாக நீங்கள் பார்த்து பிறந்த பிள்ளை, நீங்கள் பெயர் சூட்டிய பிள்ளைதான் நாகை-காயிதே மில்லத் மாவட்டம். அது வளர்வதிலே உங்களுக்கு அக்கறை இருக்கிறது. இன்றைக்கு மயிலாடுதுறைக்குப் பக்கத்திலே இருந்து குரோத் சென்டரை நரிமணம் பக்கத்திற்கு தந்து இருக்கிறீர்கள் அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பகுதியிலே இன்றைக்கு கேஸ் டர்பைன்களை துவக்கி வைத்து இருக்கிறீர்கள், மேலும் துவக்கி வைப்பதற்கு இன்றைக்கு, அடிப்படை இன்ஃப்ராஸ்டக்சரை தாண்டிவிட்டு இருக்கிறீர்கள். அதற்கெல்லாம் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு சொல்லப் போனால் நாகைப் பகுதியில் இருக்கின்ற மீனவர்களுடைய பிரச்சினை [illegible] ஃபுட் என்றால் மீனவர்கள் [illegible]

[1992 ஏப்ரல் 3

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஸீஃபுட் என்றாலே மீனவர்கள் என்று ஆகிவிடாது. பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸீ ஃபுட் எங்கேயிருந்து வரும்? மீன் எங்கேயிருந்து வரும்? மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே என்ன சொல்லப் போகிறார்கள் என்பதை தமிழ்நாட்டு மக்களெல்லாம் இன்றைக்கு எதிர்பார்க்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸீ ஃபுட் என்றால் கடல் பொருள் உணவு.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஸீ ஃபுட் என்றால் அது மீனவர்களுடைய பிரச்சினை. அதனால்தான் சொன்னேன் இன்றைய 'ஹிந்து' பத்திரிகையிலே ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். aide memoire நம்முடைய அரசாங்கத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். அதிலே தெளிவாக சொல்லியிருக்கின்றது இலங்கை அரசாங்கம். நாங்கள் எந்த மீனவர்களையும் சுடவில்லை. அத்தோடு மட்டுமல்ல, 17-ஆம் தேதி கே. கே. தமிழ் என்ற கப்பல் சுடப்பட்ட சம்பவம் பற்றி எங்களுக்குத் தெரியாது; இது அவர்கள் சொல்லியிருப்பது. அத்தோடு மட்டுமல்ல, ஒரு படகு, காங்கேசன் துறைக்கும் பருத்தித்துறைக்கும் இடையே தென்பட்டது. அதிலிருந்து எங்களைச் சுட்டார்கள். மீனவர்கள் எங்களைச் சுட்டார்கள்; நாங்கள் திருப்பிச் சுட்டபொழுது அந்தப் படகு வெடித்துச் சிதறியது. காரணம், அதிலே எக்ஸ்ப்ளோசிவ் அல்லது ஏதோ இருந்தது என்று சொல்லி இருக்கின்றார்கள். தங்களுடைய கப்பல் எண். 463 என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசு எழுதியிருப்பது, 403 என்று சொல்லியிருக்கிறது. இரவு நேரத்திலே மீனவர்கள் பார்த்தது 403 அல்லது 463. மொத்தத்தில் சொல்லப்போனால் இன்றைக்கு மீனவர்களுடைய உடல்களெல்லாம் வேதாரண்யம் பகுதியிலே ஒதுங்கியிருக்கின்றன. அதிலேயிருந்து தெரிந்துகொள்ள வேண்டியது, அந்தப் படகு இந்திய எல்லைக்குள் வைத்து சுடப்பட்டது. அது பருத்தித் துறைப் பகுதியிலே, காங்கேசன் துறைப் பகுதியிலே வைத்து சுடப்பட்டிருந்தால், அந்த உடல்கள், டிசக்கேன், ஐஸ்பாக்ஸ் இவைகளெல்லாம் நம்முடைய பகுதியிலே





ஒதுங்க முடியாது. முற்றிலும் நமது பகுதியிலே வைத்து சுடப்பட்டதால்தான் அந்த உடல்களும், எஞ்சிய படகின் பொருள்களும் நம்முடைய பகுதியிலே வந்து நுழைந்து இருக்கின்றன. அது ஒரு முக்கியமான விஷயம். அதிலே இன்னொன்று நமது மாண்புமிகு பாரதப் பிரதமர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையை விட்டுவிட்டு, இப்போது நீங்கள் ஸீ ஃபுட் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றிக் கேட்டீர்கள். இப்போது மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடந்தது பற்றிப் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) இல்லை. இந்த மானியத்திலே அதுபற்றிப் பேசி யார் உங்களுக்குப் பதில் சொல்ல முடியும்?

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு பதில் வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதிலே வேண்டாம் என்பதற்கு நீங்கள் கடைசி நேரத்திலே ஏன் நேரத்தை வீணாக்குகிறீர்கள்? முடித்துக் கொள்ளுங்கள். அதை வேறு வகையில் எழுப்புங்கள். மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு, டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மரைன் பேஸ்டு இண்டஸ்ட்ரியை கூறுகிறாரா அல்லது இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதிக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி இடையாது. மீனவர்களுக்கு இப்படிப்பட்ட தொந்தரவுகள் வருகின்றபோது, நம்முடைய தொழில் வளர்ச்சி, குறிப்பாக, ஸீ ஃபுட் உடைய வளர்ச்சி, பேக்கேஜிங் இண்டஸ்ட்ரி எல்லாம் எங்கேயிருந்து வர முடியும்? நீங்கள் இந்தப் பிரச்சினையை தட்டிக் கழிப்பதற்குப் பார்த்தீர்கள் என்றால் அதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தொழில் மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது, இலங்கையில் இருக்கிற கப்பல் படையினர் சுட்டார்களா அல்லது எல்.டி.டி.ஈ.-யினர் சுட்டார்களா என்பதைப்போன்ற பிரச்சினைகளை இதிலே இணைத்துபேசுகிறபோது உங்களுக்கு நேரிடையான பதில் கிடைக்காது என்பதற்காகச் சொன்னேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : பதில் வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் வேண்டாம் என்பதற்கு நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்? பதில் பெறுவதற்குத்தான் இங்கே பேசுவது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மீனவர்களுக்கு நல்ல முறையில் ஒரு வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதில் இந்த அரசுக்குத் தட்டிக்கழிக்கிற எண்ணமே கிடையாது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நம்முடைய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் தொல்லையால், தொந்தரவினால் மீன் பிடிக்க ஆழ்கடலில் செல்ல முடியவில்லை என்பதை நானே பலமுறை இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்டி இருக்கிறேன், மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டு சென்று இருக்கிறேன், எனவே நம்முடைய மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற ஒரு புதிய திட்டத்திற்கு ஏற்பாடு செய்து வருகிறேன். ஆனால் அதனை அறிவிக்கின்ற சந்தர்ப்பம் இன்று அல்ல. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்று தொழில் துறைக்கான மானியக் கோரிக்கை மீது தன்னுடைய கருத்துக்களை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அளவுக்கு சொன்னதுகூட அங்கேயிருக்கின்ற பதட்டம்தான். அந்தத் தொழில் வளர வேண்டுமென்பதற்காகத்தானேயொழிய வேறு அல்ல. காரணம், அவர்கள் இன்டர்நேஷனல் வாட்டருக்கே போகவில்லை. நம்முடைய தண்ணீருக்குள்ளேயே சுடுகிறார்கள். அதற்குத்தான் .... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதோடு முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : முடித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கின்ற புதிய இண்டஸ்டிரியல் பாலிசியிலேகூட அடிப்படை வசதிகள், ஒரு தொழில் வளர்வதற்கான அடிப்படை வசதிகளுக்கு, தண்ணீருக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதனை ஐட்டம் 4 ஆக வாட்டர் என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு தண்ணீர் இல்லாமல் பல தொழில்கள்— எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீஸ் வேண்டுமென்றால் வந்துவிடலாம்—வரமுடியாது. இன்றைக்கு வேதாரண்யத்திலே இருக்கின்ற கெம்ப்ளாஸ்ட் நிறுவனம். வெஸ்ட்டன் இண்டியா மேட்ச் கம்பெனி லிமிடெட் இவர்களுக்கெல்லாம் தண்ணீர் தர வேண்டும். அங்கே இருக்கின்றக் குடி



மக்களுக்கும் தண்ணீர் தர வேண்டுமென்ற ஒரு உன்னத நோக்கத்தோடு ஒரு மிகப்பெரிய குடிநீர்த் திட்டம்—கூட்டுக் குடிநீர்த் திட்டம். அதிலே இண்டஸ்ட்ரியலும் சேர்ந்திருக்கிறது. There was also earlier investment in that project 19 கோடி ரூபாய்த் திட்டம். மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இன்றைக்கு ஆறு ஆண்டுக் காலமாகியும் 19 கோடி ரூபாய்த் திட்டத்திலே 4 கோடி ரூபாய்க்குக் குழாய்களெல்லாம் வாங்கியும் இன்னும் அங்கே தொழிற்சாலைகளுக்கோ, மக்களுக்கோ தண்ணீர் கிடைக்கவில்லை. காரணம், பட்டுக்கோட்டையிலிருந்து தண்ணீர் வர வேண்டும். எம்.ஜி.ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டியபொழுது திராவிட முன்னேற்றக் கழகம் பட்டுக்கோட்டையிலே அந்த நகர்மன்றத் தலைவர் அங்கே உண்ணாவிரதம் அமர்ந்திருந்தார். மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு, காங்கிரஸ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் இன்றைக்கு அதிலே எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே If there is reason, we should respond, if there is threat, we should not respond, அதற்கு இந்த அரசாங்கம் உறுதியான அரசியல் முடிவை எடுக்க வேண்டும். 4 கோடி ரூபாய்க்கு பைப்பு வாங்கி இரண்டாண்டுக் காலமாக தூங்கிக் கொண்டிருக்கிறது. மக்களுக்குக் குடிநீர் கிடையாது; தொழிற்சாலைகளுக்கும் குடிநீர் கிடையாது. அதற்கு ஒரு டெக்னிக்கல் கமிட்டி போடுவதாக 'ட்வாட் போர்டு' அன்றைக்கு அறிவித்தது. திரு. பஞ்சநாதன் அவர்கள் தலைமையிலே. இன்றைக்குக் கிட்டத்தட்ட 400 அடி..

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தண்ணீர் வேகமாக வரவேண்டும் என்கிற அளவு வரைக்கும் இது சரி. நீங்கள் அந்த 'ட்வாட்' போர்டுக்குள்ளே போக வேண்டுமானால் இந்த மானியத்தை விட்டுவிட்டு குடிநீர் மானியம், திங்கட்கிழமை வருகிறது. அதிலே பேசுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : அதிலே மேலும் சொல்லி இருக்கின்றார்கள், ஒரு desalination plant தமிழ் நாட்டிலே கடற்கரையோரங்களிலே அமைப்பதைப் பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு அப்படித் தண்ணீர் கிடைக்காத இடங்களிலே ஒரு பைலட் பிளானை உடனடியாக வேதாரண்யம் பகுதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தர

வேண்டும். desalination plant வேதாரண்யம் பகுதிக்கு உடனடியாகத் தந்து உதவ வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது). ஒரு நிமிஷம். பப்ளிக் செக்டார்.

பப்ளிக் செக்டாரைப் பொறுத்தவரையில், பப்ளிக் செக்டார் பாலிசி மிகத் தெளிவாக இந்த அரசு சொல்லியிருக்கின்றது. காங்கிரஸை விட இந்த நாட்டிலே யாருமே பப்ளிக் செக்டாரை உயர்த்திப் பிடித்தவர்கள் இருக்க முடியாது. பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களைவிட, அவர்கள் சொன்னார்கள். இந்த பப்ளிக் செக்டாருடைய ரோலைப்பற்றிச் சொல்கிறபொழுது "If should be assigned the commending heights of the economy என்று சொன்னார்கள்.

"The means of production should be in the hands go the public sector," என்று சொன்னார்கள். விலை நிர்ணயம் பொதுமக்கள் நிர்ணயிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இன்றைய நிலைமை என்ன இந்த அரசாங்கம் சொல்லியிருப்பது மிகத் தெளிவாக இருக்கிறது. Disinvestment intheexisting public sector undertakings will beiaken up by the Government in the event that stcee ful restructuring is not possible முடியாதபொழுது disinvestment பண்ணுகிறேன் என்று சொன்னால் அதற்கும் பழைய சித்தாந்தத்திற்குஉள்ளே கிடந்து கொண்டிருக்கின்ற பழைய பெருங்காயமாக இருக்கின்றவர்கள் எதிர்ப்பு தெரிவித்தால் நாம் காதிலேயே வாங்கக் கூடாது. இந்த நாட்டுக்குச் செய்கின்ற துரோகமாகத் தான் அது முடியும். Disinvestment வேண்டுமென்றால் disinvestment பண்ணித்தான் ஆக வேண்டும். நான் இப்பொழுதுகூடச் சொல்வேன். நீங்கள் ஒரு அதிகாரிகள் குழுவை அமைத்து இருக்கிறீர்கள். நீங்கள் கிட்டத்தட்ட 24 பப்ளிக் செக்டார் அன்டர்டேக்கிங்ஸ் இன்றைக்கு 77.22 கோடி ரூபாய் நஷ்டத்திலே போய்க்கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஷேர் மார்க்கெட்டிலே ஷேர்கள் வரவில்லை. மத்திய அரசினுடைய புதிய பொருளாதாரக் கொள்கையினால் இன்றைக்கு ஷேர் விலை மார்க்கெட் எங்கேயோ போய் விட்டது. 10 ரூபாய் ஷேர் 1,000 ரூபாய்க்குப் போய்க்கொண்டிருக்கிறது. ஷேர் இல்லாத பொழுது இப்பொழுது நீங்கள் ஷேர் மார்க்கெட்டுக்கு அனுப்புங்கள் ; விற்று விட்டுப் போகலாம். disinvestment இன்றைக்கே ஆரம்பிப்போம். நாம் என்ன துரோகமா செய்கிறோம்?

40 ஆண்டுக்கால இந்திய அனுபவம் நம்மை வழி நடத்த வேண்டும். அதற்காக ஏதோ பழைய சித்தாந்தத்திலே முடங்கிக் கொண்டு கிடந்தால், இன்றைக்குக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று இரண்டுதான் உட்கார்ந்திருக்கிறார்கள். உலகத்திலேயே கம்யூனிஸ்ட் கட்சி போச்சு.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசியலுக்குப் போக வேண்டாம். முடியுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : அந்த நிலைமைதான் நமக்கும் வந்து சேரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கம்யூனிஸ்ட் கட்சியை இழுத்தீர்கள் என்றால் அவர் (குறுக்கீடு) எழுந்திருக்கிறார். திரு. ஜி. பழனிசாமி உட்காருங்கள். நீங்கள் முடியுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : இருக்கின்ற தொழிலாளர்களை அதிலே விரட்டியடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இருக்கின்ற தொழிலாளர்களுக்கும் இன்றைக்கு நல்ல திட்டம். பல அரசியல்வாதிகளுக்கு கூட இன்றைக்கு வேண்டும். 20, 25 ஆண்டுகள் இருந்தால் golden hand-shake கொடுத்தனுப்ப வேண்டும். பிரைம் மினிஸ்டர் அவர்கள் சொன்னார். golden hand-shaked என்னென்ன கொடுக்க வேண்டுமோ கொடுத்தனுப்ப வேண்டும் என்று. அதை போல இன்றைக்கும் பல தொழிற்சாலைகள் golden hand shake என்ற திட்டத்தை அறிவித்து இருபதாண்டுக் காலமாக அதிகத் தொழிலாளர்கள் இருந்தால் instead of retrechement golden hand shake என்ற முறையை, தெளிவான முறையைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

அதைப்போல, இன்றைக்கு நம்முடைய பப்ளிக் செக்டார்கள் நஷ்டத்திலே போவதற்கான காரணங்கள் பல இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள். இதோடு முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் இதோடு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் காரணத்திற்குள்ளே போக முடியாது. நேரம் ஆகிவிட்டது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : அப்படிப்பட்ட golden hand shake திட்டத்தைக் கூட தமிழகத்திலே இருக்கின்ற பப்ளிக் செக்டார் அண்டர்டேக்கிங்ஸ்குள்ளே கொண்டு வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலேகேட்டுக் கொண்டு வாய்ப்புதந்தமைக்கு உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, அமர்கிறேன்.

[1992 ஏப்ரல் 3
பிற்பகல் 1.40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் அருமை நண்பர் திரு. பி. வி. ஆர். அவர்கள் பேசுகிறபோது, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நாங்கள் எதிர்ப்பதாகச் சொன்னார்கள்: பேராவூரணி, பட்டுக்கோட்டை, திருவோணம் ஆகிய 3 தொகுதிகளிலே உள்ள மக்களெல்லாம் சேர்ந்துதான் எதிர்த்தோம். அது உண்மைதான். அங்கே தண்ணீரே இல்லாமல் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினாலேதான் அதை எதிர்த்தோம் என்பதைச் சுட்டிக்காட்டி, இறுதியாக சர்க்கரைப் போல தித்திக்கும் இந்தப் புரட்சித் தலைவியார் ஆட்சியில், பேராவூரணி தொகுதியில் ஒரு சர்க்கரை ஆலையை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன். ஜெய்ஹிந்த்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விரிவான பதிலுரையைத் தர வேண்டுமென்று தெரிவித்திருக்கிற காரணத்தினால், அதற்கு இப்போது கால அவகாசம் இருக்காது என்று கருதி, 6-4-92 அன்று திங்கட்கிழமை அவர்களுடைய பதிலுரை இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் தீர்மானம்
விதி 32—ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவரின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்—விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32 ஐ, 6-4-1992, அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்.' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை ; தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. மேஜையை தட்டும் ஒலி



1992 ஏப்ரல் 3] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன, பேரவை மீண்டும் (6—4—1992) திங்கட்கிழமை, காலை 9—30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

53. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1990—91 ஆம் ஆண்டிற்கான நாற்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம்—1956) 619-எ பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது (தமிழ், ஆங்கிலம்.)

அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

76. கோரிக்கை எண். 24—பெருந் தொழில்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1992—93. (தமிழ், ஆங்கிலம்.)

77. தொழில்கள் பற்றிய சாதனைச் திட்டம். 1992—93. (தமிழ், ஆங்கிலம்).

78. சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம் 1992—93. (தமிழ், ஆங்கிலம்).

79. புவியியல் மற்றும் சுரங்கத்துறை பற்றிய செயல் முறைத் திட்டம். 1992—93. (தமிழ், ஆங்கிலம்.).

இணைப்பு

1992 ஏப்ரல் 3]

529-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

619
164974
600 008

## கொள்கை விளக்கக் குறிப்பு

## பெருந்தொழில்கள்

## 1992–93

அனைத்திந்திய அளவில் தொழில் துறையில் முன்னணி மாநிலமாகத் தமிழகம் திகழ வேண்டும் என்பதே இவ்வரசின் நோக்கமாகும். இது ஒரு கடினமான பெரும் முயற்சியுடன் செய்து முடிக்க வேண்டிய பணியானாலும், இந்தக் குறிக்கோளை அடைவதில் இந்த அரசு நம்பிக்கையையும் உறுதியையும் கொண்டுள்ளது.

புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் உடனடியாக மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஒன்றாக தொழிலதிபர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை அறிந்து கொள்ளவும் அவற்றிற்கு தீர்வுகாணும் வழிவகைகள் குறித்து விவாதிக்கவும் 1991 ஜூலைத் திங்களில், முன்னணி தொழிலதிபர்களின் கூட்டமொன்று என்னால் கூட்டப்பட்டது. இவ்விதம் தகுந்த முறையில் செவ்வனே எடுக்கப்பட்ட முயற்சிகளின் அடிப்படையில் தொழில்களின் அனைத்துக் கூறுகள் குறித்தும் தொழிலதிபர்களுடன் விரிவாகத் தொடர்ந்து விவாதிக்கப்பட்டது. அவர்கள் தெரிவித்த கருத்துரைகள், ஆலோசனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் நான் 20—1—1992 அன்று 1992ஆம் ஆண்டுக்கான புதிய தொழில் கொள்கையை அறிவித்தேன். இப்புதிய தொழில் கொள்கை, அடிப்படை வசதி மேம்பாடுகள், முதலீட்டு மேம்பாடு, ஊக்கச்சலுகைகள், வரிச்சலுகைகள், சிறு தொழில் வளர்ச்சி, தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறையைக் கொண்டுள்ளது. மாநிலப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் தேவைப்படுகிற பன்மடங்கு பலனை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிற இப்புதிய தொழில் கொள்கையைச் செயல்படுத்துவதற்கு அரசு, தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அரசின் நிதி ஆதார வரம்பிற்குட்பட்டு தொழில் வளர்ச்சியை அதிக அளவில் உடனடியாக ஏற்படுத்த அரசு முனையும். இதற்காக,

(அ) தொழில்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் உருவாக்கப்படும்.

(ஆ) ஆரோக்கியமான தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு சாதகமான சூழ்நிலைகள் உருவாக்கப்படும்.

முதன்மைத்துவம் அளிக்கப்படும் தொழில்கள் :—

ஜவுளித் தொழில், தோல் தொழில் போன்ற தொழில்கள் இம்மாநிலத்தில் ஏற்கனவே நன்கு செயல்பட்டு வருகின்றன. ஏற்கனவே இருக்கும் வளங்கள், பல்வகை நிர்வாகத்திறமைகள் மற்றும் தற்போதுள்ள அடிப்படை வசதி ஆகியவற்றின் அடிப்படையில், பின்வரும் தொழில்கள் முதன்மைத்துவம் அளிக்கப்பட வேண்டிய தொழில்களாக முடிவு செய்யப்பட்டுள்ளன:—

(i) தோல் தொழில்

(ii) துணிகள்—நூல் பின்னலாடை

(iii) மின்னணுவியல் சாதனங்கள் கணிப்பொறி அடிப்படைத் தகவல் குறிப்பீட்டுச் சாதனம்

(iv) மோட்டார்வாகன பாகங்கள்

(v) மருந்துகளும் மருந்தாக்கப் பொருட்களும்

(vi) பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள்

(vii) தொழில்களுக்குத் தேவைப்படும் சாரா[illegible] அடிப்படையாகக் கொண்ட கரிம வேதியியல் பொருட்கள்



(viii) வேளாண் அடிப்படையிலான தொழில்களும், உணவு பதனிடு தொழில்களும்

(ix) உப்பு மற்றும் கடல்படு பொருட்களை அடிப்படையாகக்கொண்ட தொழில்கள்

(x) செயற்கை வைரம்—ஆபரணங்கள்

(xi) பொறியியல் பொருட்கள்

(xii) கடல்படு உணவு

(xiii) ஏற்றுமதி நோக்குடைய தொழிற் [illegible]வுகள்

தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம்

தொழில்கள் அமைந்துள்ள இடங்களிலும் அதன் அருகில் உள்ள வெளியிடங்களிலும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் ஒன்றினை அரசு ஏற்படுத்தியுள்ளது.

இந்நிறுவனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு—

(i) ஏற்கெனவே தொழில்கள் பெருமளவில் அமைந்துள்ள பகுதிகளின் விரைவான வளர்ச்சிக்காக விடுபட்டுப் போன அடிப்படை வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் கண்டறிந்து அவைகளை அளித்தல்.

(ii) கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், பள்ளிகள், கல்லூரிகள், பொழுதுபோக்கு வசதிகள், வணிகப் பகுதிகள் போன்ற பொதுவான வசதிகளை தொழில் வளர்ச்சி மையம் மற்றும் வளாகங்கள் ஆகியவைகளில்

தொழில்களை நடத்திவரும் தொழில் அதிபர்கள் தாமாகவே கூட்டு முயற்சியில் அமைத்துக் கொள்வதற்கு தகுந்த ஊக்கமும், உதவியும் அளித்தல்.

(iii) தனியார் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் அமைக்கப்படும் தொழில் வளாகங்கள் மற்றும் தொழிற்பேட்டைகளில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக்காக கடன்கள் ஏனைய நிதி உதவிகள் அளித்தல்.

(iv) அடிப்படை வசதிகள் அமைத்துத்தரவும், தொழில் வளாகங்களையும் தொழில் வளர்ச்சி மையங்களையும் மேம்படுத்துவதற்கும் தேவையான நிலத் தொகுதி/தொகுதிகளைக் கையகப்படுத்துதல்/வாங்குதல்

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் பனங்குடியிலும், திருநெல்வேலி— கட்டபொம்மன் மாவட்டத்தில் கங்கை கொண்டானிலும், பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையிலும், தருமபுரி மாவட்டத்தில் பர்கூரிலும் நான்கு பெரிய தொழில் வளர்ச்சி மையங்களை இந்நிறுவனம் அமைக்கும். திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில், நிலக்கோட்டை வட்டத்தில் ஒரு வேளாண் தொழில் வளாகத்தையும் இந்நிறுவனம் அமைக்கும். அரக்கோணம் பகுதியிலுள்ள அடிப்படை வசதிகளைப் பயன்படுத்தியும் கொடுங்கையூர் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குழாய்கள் மூலம் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை வழங்க சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் முன்வந்துள்ளதைக் கருத்திற்கொண்டும், அரக்கோணத்தில் தொழில் வளாகம் ஒன்றை இந்நிறுவனம் அமைக்கவுள்ளது. இத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவி கோரப்பட்டுள்ளது. இத்தொழில் வளர்ச்சி மையங்களில், பணிகளைத் தொடங்க இந்நிறுவனத்திற்கு 1992–93ஆம் ஆண்டில் ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெருந்துறை, கங்கைகொண்டான், நிலக்கோட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ள. தொழில் மையங்களுக்கு, நிலம் கையகப்படுத்த தேவையான பணியாளர்களை நியமிக்க அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.



## தமிழ்நாடு தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு

சென்ற ஆண்டு நான் அறிவித்ததைத் தொடர்ந்து, தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவை அமைப்பதற்கு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இப்பிரிவு தொழில்கள் தொடங்குவதற்கான நடைமுறைகள் பற்றிய தகவல் அளித்தல், ஆலோசனை வழங்கல் மற்றும் தொழிற்சாலைகள் தொடங்குவதற்குத் தொழில் முனைவோர்களை ஊக்குவித்தல் போன்ற பல பணிகளை மேற்கொள்ளும். தொழில் வளர்ச்சி தொடர்பான தகவல்களைப் பரப்புதல், அறிக்கைகள், துண்டு வெளியீடுகள் முதலியவற்றை வெளியிடுதல், தொழில் கொள்கை- நிருவாகம் குறித்த செயல்முறை ஆய்வு நடத்துதல் போன்ற பிற பணிகளையும் இப்பிரிவு மேற்கொள்ளும். மேலும், வெளிநாட்டில் விற்பனை செய்வதற்கான சாத்தியக் கூறுகளைக் கண்டறிதல், ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்கிற தொழில்களுக்குத் தனிக்கவனம் செலுத்துதல் போன்ற பணிகளும் இப்பிரிவின் நடவடிக்கைகளில் அடங்கும்.

தொழில் தொடங்க உரிமம் பெறுவதிலிருந்து பல தொழில்களுக்கு மத்திய அரசு விலக்களித்துள்ளதின் விளைவாக, இப்பிரிவு, மாநிலத்திற்குள்ளும் மாநிலத்திற்கு வெளியேயும் உள்ள ஆர்வமுடைய தொழில் முனைவோர்கள்-முதலீட்டாளர்கள் ஆகியோரைக் கண்டறிவதில் தீவிரப் பங்கேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நம் மாநிலத்திலுள்ள தொழில் பிரிவுகளின் உற்பத்திப் பொருட்களை வெளிநாட்டில் விற்பனை செய்வதற்கு வாய்ப்புகளைக் கண்டறியும்.

## வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு/ஒருங்கிணைப்புப் பிரிவு :

மத்திய அரசின் புதிய தாராள பொருளாதாரக் கொள்கை அறிவிப்பினைத் தொடர்ந்து மாநிலத்திற்கு வரக்கூடிய மூலதனத்தை அதிகரிக்கவும், தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. வெளிநாடு

களில் உள்ளவர்கள் முதலீடு செய்வதையும் ஊக்கு விக்க வேண்டும். இதற்காக புதுடில்லியிலுள்ள தமிழக அரசின் சிறப்பு ஆணையரின் கீழ் இயங்கும் வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு ஒருங்கிணைப்புப் பிரிவு ஒன்றை புதுடில்லியில் அரசு ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவு வெளிநாட்டு முதலீட்டு வாரியத்துடனும், மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களுடனும் தொடர்பு கொள்ளும்.



## ஊக்கச் சலுகைகள்.

இம்மாநிலத்தை தொழில் மயமாக்கும் முயற்சியில் தொழில்களுக்கு அளிக்கப்படும் ஊக்கச் சலுகைகள் முக்கிய பங்கினை வகித்து வருகின்றன. மேலும் இச்சலுகைகள் தொழில்கள் அமைவதை பரவலாக்கி அவைகள் பின்தங்கிய பகுதிகளில் அமைவதற்குத் தூண்டுகோலாக செயல்படுகின்றன. தமிழகத்தில் அளிக்கப்படும் மூலதன உதவித்தொகை, விற்பனை வரி செலுத்துவதை ஒத்திவைப்பது அல்லது தள்ளுபடி செய்தல் போன்ற சலுகைகள், நாட்டில் அளிக்கப்படும் இத்தகைய சலுகைகளுள் சிறந்த இடத்தை வகிக்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். அரசின் வாயிலாக வழங்கப்படும் ஊக்கச் சலுகைகள், வரிச் சலுகை ஆகியவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.—

### தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் ஊக்கச் சலுகைகள்

| | மூலதன உதவித் தொகை. | விற்பனை வரியை தள்ளுபடி செய்தல்/ ஒத்தி வைத்தல். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மிகவும் பின்தங்கிய வட்டங்கள் (31). | ரூ. 20 லட்சம் என்ற உயரளவிற்குட்பட்டு நிலையான சொத்து வகையில் செய்யப்படும் முதலீட்டில் 20 சதவிகிதம். | விற்பனை வரியை 5 ஆண்டுகளுக்கு தள்ளுபடி செய்தல் அல்லது விற்பனை வரி செலுத்துவதை 9 ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்தல் |

| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை ஆகிய இடங்களில் உள்ள சிப்காட் தொழில் வளாகங்கள். | ரூ. 15 இலட்சம் என்ற உயரளவிற்குட்பட்டு நிலையான சொத்து வகையில் செய்யப் படும் முதலீட்டில் 15 சதவிகிதம். | விற்பனை வரியை 5 ஆண்டு களுக்கு தள்ளுபடி செய்தல் அல்லது விற்பனை வரி செலுத்துவதை 9 ஆண்டு களுக்கு ஒத்தி வைத்தல். |
| பின் தங்கிய வட்டங்கள் (76) சிட்கோ, (SIDCO) சென்னை ஏற்றுமதி வர்த்தக மண்டலம் (MEPZ) மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (MMDA) உட்பட்ட அரசு முகவரமைப்புகள் மூலம் மேம்படுத்தப் பட்ட சிப்காட் தொழில் வளாகங்கள், வளர்ச்சி மையங்கள், தொழிற் பேட்டைகள். | ரூ. 15 இலட்சம் என்ற உயரளவிற்குட்பட்டு நிலையான சொத்து வகையில் செய்யப்படும் முதலீட்டில் 15 சதவிகிதம் | விற்பனை வரி செலுத்து வந்த 9 ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்தல். |



மாநிலத்தில் எந்தவொரு பகுதியிலும் அமைக்கப்படும் கீழ்க்காணும் தொழில்களுக்கு சிறப்பு சலுகைகள்.

| | | |
| --- | --- | --- |
| (1) மின்னணுவியல் | ரூ. 35 இலட்சம் என்ற உயரளவிற்குட்பட்டு நிலையான சொத்து வகையில் செய்யப் படும் முதலீட்டில் 20 சதவிகிதம். | (i) மிகவும் பின்தங்கிய வட்டங்களிலும், கடலூர், புதுக் கோட்டை, மானாமதுரை ஆகிய இடங்களில் உள்ள சிப்காட் தொழில் வளாகங்களிலும் அமைக்கப்படுமாயின் விற்பனை வரியை 5 ஆண்டுக்கு தள்ளுபடி செய்தல் அல்லது விற்பனை வரி செலுத் துவதை 9 ஆண்டு களுக்கு ஒத்தி வைத் தல்.<br>(ii) பின் தங்கிய வட்டங் களில் விற்பனை வரி செலுத்துவதை 9 ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்தல். |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | (iii) இதர பகுதிகளில் நிலையான சொத்து வகையில் செய்யப் படும் முதலீட்டில் 60 சதவிகிதம் வரை ஐந்தாண்டுகளுக்கு விற்பனை வரி செலுத் துவதை ஒத்தி வைத் தல். |
| (2) தோல் | ரூ. 20 இலட்சம் என்ற உயரளவிற்குட்பட்டு நிலையான சொத்து வகையில் செய்யப் படும் முதலீட்டில் 20 சதவிகிதம். | மேலே உள்ள இனங்கள் (i)-லிருந்து (ii)-ல் குறிப்பிட்டுள்ளபடி. |

சிறப்பிடம் அளிக்கப்படும் ஏழு குறிப்பிட்டுள்ள தொழில்கள்.

| | | |
|---|---|---|
| 1 மோட்டார் வாகன உதிரி பாகங்கள். | ரூ. 15 இலட்சம் என்ற உயரளவிற்குட்பட்டு நிலையான சொத்து | நிலையான சொத்து வகையில் மொத்த முதலீட்டில் 60 சதவிகிதம் என்ற உயரளவு வரை |



| | | |
|---|---|---|
| 2. மருந்துகளும் மருந்தாக்கப் பொருட்களும். | வகையில் செய்யப் படும் முதலீட்டில் 10 சதவிகிதம். | விற்பனை வரி செலுத்துவதை 5 ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்தல் (இத்தகைய தொழில்கள் மிகவும் பின் தங்கிய (அல்லது) பின் தங்கிய வட்டங் கள் அல்லது சிப்காட் தொழில் வளாக வளர்ச்சி மையங்களில் மற்றும் சிறு தொழில் வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனம் (SIDCO) சென்னை ஏற்றுமதி வர்த்தக மண்டலம். (MEPZ) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (MMDA) ஆகிய வற்றின் தொழிற் பேட்டைகளில் அமைந் திருக்குமாயின் அவை கள் அந்தந்த பகுதி களுக்கு அளிக்கப்படும் |
| 3. சூரிய சக்தியைக் கொண்டு இயங்கும் சாதனங்கள் மற்றும் மரபு சாரா சக்தி சாதனங்கள். | ,, | |
| 4. ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைரத் தொழில் பிரிவுகள். | ,, | |
| 5. மாசு கட்டுப்பாட்டுச் சாதனங்கள். | ,, | |

| (1) | (2) | (3) உதவித் தொகைகள் தள்ளுபடி/ ஒத்திவைப்பு ஆகிய சலுகைகள் பெறத்தகுதியுடையவை |
| --- | --- | --- |
| 6. அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.) மதுரை (மதுரை மாவட்டம்) முசிறி (திருச்சி மாவட்டம்) கும்பகோணம் (தஞ்சாவூர் மாவட்டம்) பண்ருட்டி (தென் ஆற்காடு மாவட்டம்) செங்கல்பட்டு (செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்) ஆகிய 6 வட்டங்களில் அமைந்துள்ள சணல் தயாரிப்பு தொழில்கள் | ,, | |
| 7. விளையாட்டுப் பொருள்கள் மற்றும் துணைப் பொருள்கள். | ,, | ,, |
| 8. உணவுப் பொருட்களை பதப்படுத்தும் தொழில்கள் | ,, | |
| 9. அலுமினியம் அல்லது பி.வி.சி. கதவுகள்— சன்னல்கள், சன்னல் சட்டங்கள் போன்ற விலைக்கேற்ற பயன் தரும் கட்டுமானப் பொருட்கள். | ,, | ,, |

மாநிலத்தில் எந்தவொரு பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ள மிகப் பெருந் தொழில்களுக்கான சலுகைகள்.

| | மூலதன உதவித்தொகை. | விற்பனை வரி. |
| --- | --- | --- |
| (i) ரூ. 50 கோடிக்கு மேல் ரூ. 100 கோடிக்குள் நிலையான சொத்து வகையில் செய்யப்படும் முதலீடு. | ரூ. 25 இலட்சம் | 5 ஆண்டுகளுக்கு தள்ளுபடி அல்லது 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பு. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| (ii) ரூ. 100 கோடிக்கு மேல் ரூ. 200 கோடிக்குள் செய்யப்படும் முதலீடு. | ரூ. 50 இலட்சம் | 6 ஆண்டுகளுக்கு தள்ளுபடி அல்லது 12 ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பு. |
| (iii) ரூ. 200 கோடிக்கு மேல் ரூ. 300 கோடிக்குள் செய்யப்படும் முதலீடு. | ரூ. 1 கோடி | 6 ஆண்டுகளுக்கு தள்ளுபடி அல்லது 12 ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பு. |
| (iv) ரூ. 300 கோடியும் அதற்கு மேலும் செய்யப்படும் முதலீடு. | ரூ. 1 கோடி | 7 ஆண்டுகளுக்கு தள்ளுபடி அல்லது 14 ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பு. |

மின்சாரம் :

(i) சென்னைப் பெருநகர் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொழில்களைத் தவிர தமிழ்நாட்டில் எந்தவொரு பகுதியிலும் அமைக்கப்படும் எல்லா புதிய தொழில்கள், ஏற்கனவே உள்ள தொழில்கள் விரிவாக்கம் செய்யப்பட்டாலும் அவைகள் பின்வருமாறு 3 ஆண்டுகளுக்கு மின் கட்டணச் சலுகை பெற தகுதியுடையவைகளாகும்:—

I ஆம் ஆண்டிற்கு 40 சதவிகிதம்.

II ஆம் ஆண்டிற்கு 30 சதவிகிதம்.

III ஆம் ஆண்டிற்கு 20 சதவிகிதம்.



(ii) 100 சதவிகிதம் உற்பத்தியை ஏற்றுமதி செய்யும் தொழில் பிரிவுகளுக்கு மின்வெட்டிலிருந்து முழுவதும் விலக்களிக்கப்படுகிறது.

தொழிற் பணியில் மகளிர் :

| | |
|---|---|
| 30 சதவிகிதம் மகளிரை பணியமர்த்தியுள்ள தொழில்கள். | ரூபாய் 5 இலட்சம் என்ற உயரளவிற்குட்பட்டு 5 சதவிகிதம் கூடுதல் மூலதன உதவித் தொகை. |

உதவித் தொகை வழங்குவதை சீரமைத்தல்.

உதவித்தொகை வழங்குவதில் ஏற்படுகின்ற கால
தாமதத்தைத்தவிர்க்க, ஆண்டொன்றில்மூலதன உதவித்
தொகைக்காக வரவு-செலவுத் திட்டத்தில் செய்
யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு முழுவதையும் ஒட்டு மொத்
தமாக அனுமதிக்க அரசு நிலைஆணைகளைப்
பிறப்பித்துள்ளது. இவ்விதம் அனுமதிக்கப்படும்
தொகை காலாண்டு அடிப்படையில் வழங்கப்படும்.
இம்முறை புதிய தொழில் கொள்கையில் அறிவிக்கப்
பட்டதின் படி செயல்படுத்தப்படுகிறது. இதே
போன்று, 1992-ஆம் ஆண்டு புதிய தொழில் கொள்கை
யில் அறிவித்துள்ளவாறு சிறு தொழில்களுக்கான மூல
தன உதவித் தொகை, இனிமேல் படிப்படியாக வழங்
கப்படும். கட்டுமானப் பணிகள் முடிந்த பின்னர்
அல்லது நிலம் வாங்குதல், புதிய கட்டிடத்தைக் கட்டு
தல் அல்லது ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டிடத்
தைக் குத்தகைக்குப் பெறுதல் ஆகிய இனங்களில்
விற்பனை/கொள்முதல் பத்திரத்தை பதிவு செய்த
பின்னர் உதவித் தொகையில் 25 சதவிகிதம் வழங்கப்
படும். அடுத்த கட்டமாக தளவாடம், எந்திரம் ஆகிய
வற்றை நிறுவிய பின்னர் 50 சதவிகித உதவித் தொகை
வழங்கப்படும். எஞ்சியுள்ள 25 சதவிகித உதவி தொகை
வணிக ரீதியிலான உற்பத்தி தொடங்கிய
பின்னர் வழங்கப்படும். புதிய கட்டுமானப் பணிகள்
ஏதுமின்றி பெறப்படும் வளாகங்களைப் பொறுத்த
வரையில் தளவாடம், எந்திரம் ஆகியவற்றை
நிறுவிய பின்னர் 50 சதவீத உதவித் தொகையும்,
எஞ்சியுள்ள 50 சதவீத உதவித் தொகை, வணிகரீதியி
லான உற்பத்தியைத் தொடங்கிய பின்னரும் வழங்கப்
படும்.

மகளிருக்கான வேலைவாய்ப்பை அதிகரிக்க எடுக்கப்படும்
நடவடிக்கைகள்:

மகளிருக்கான வேலை வாய்ப்பை அதிகரிக்கும்
நோக்கத்துடன் 30 சதவிகிதத்திற்கு மேல் பெண்களுக்கு
பணி தரும் புதிய தொழில்களுக்குச் சிறப்புக் கூடுதல்
உதவித் தொகை வழங்கப்படுகிறது. 19—9—1991
முதல் இத்தொழில்கள் அதிக அளவாக ரூபாய்
5 இலட்சம் வரை 5 சதவிகிதம் கூடுதல் மூலதன உதவித்
தொகை பெறத் தகுதியுடையவை ஆகும். அனைத்து



புதிய தொழில் பேட்டைகளில்/ வளாகங்களில், 30 சத
விகித தொழிற்கூடங்கள்/மனைகள் மகளிருக்கென
ஒதுக்கப்பட்டுள்ளன.

'எல்காட்' நிறுவனத்தின் கீழுள்ள அனைத்து உற்பத்திப் பிரிவுகளில் பணிபுரியும் மொத்தம் சுமார் 1,600 பணியாளர்களில் 750 பேர் மகளிராவர். மகளிர் தங்கள் இல்லங்களில் இருந்துகொண்டே தகவல் பகுப்புத் தொகுப்பு மற்றும் கணிப்பொறி பிரிவுகள் அமைக்க, எல்காட் நிறுவனம் அதனுடைய கூட்டுத் தொழில் பிரிவு ஒன்றின் மூலம் உதவி செய்யும் திட்டம் ஒன்றினை நிறைவேற்ற உள்ளது.

இரவு நேரங்களில் மகளிர் பணியாற்ற நேரிட்டால், அவர்களை தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்புடன் அழைத்து வருவதற்கும் பின்னர் அவரவர் இல்லத்திற்கு பாதுகாப்புடன் கொண்டு சேர்ப்பதற்கும் போக்குவரத்து வசதிகள் செய்து தருவது நிர்வாகத்தினரின் முழுப் பொறுப்பாகும் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. இந்த நிபந்தனைகளை நிறைவு செய்யும் நிர்வாகத்தினருக்கு தொழிலாளர் தொடர்பான விதிகளிலிருந்து தகுந்த விதி விலக்கு அளிக்கப்படுகிறது.

மகளிர் நலன் குறித்த இந்த அரசின் கொள்கையை கருத்திற் கொண்டு, பெண் தொழில் முனைவோர்களை உருவாக்குவதற்காக தனியானதொரு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொழில் வணிகத்துறை நடத்தி வருகிறது. 1991–92 ஆம் ஆண்டில் 800 மகளிர் தொழில் முனைவோர் இந்த பயிற்சியில் சேர்க்கப்பட்டனர். இந்த திட்டம் 1992–93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்
(டிட்கோ).

இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) முக்கியபணி ஆற்றுகிறது. இரும்பு, உருக்கு, சிமெண்ட் பொறி

யியல் பொருட்கள், மருந்துகள், தோல், இரசாயனப் பொருட்கள் போன்ற பல்வேறு தொழில்களை இந் நிறுவனம் உருவாக்கியுள்ளது. மத்திய அரசின் புதிய தொழில் கொள்கைப்படி, உரிமம் வழங்குவது மிகவும் எளிதாகிய பின்னர், டிட்கோ நிறுவனம் 11 சதவிகிதம் பங்கு முதலீட்டில் கூட்டுத் துறையில் திட்டங்கள் அமைப்பதில் தற்போது கவனம் செலுத்தி வருகிறது. சிறு தொழில்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் தாய்த்தொழில்களாகச் செயல்பட இயலும் வண்ணம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழில் பிரிவுகளின் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. புதிய தொழிற் பிரிவுகளுக்கு வழிகாட்டும் சேவைகள் அளிக்கும் நோக்கத்துடன் 1 சதவீதம் மூலதன பங்கேற்கும் 'வழிகாட்டிப் பிரிவு திட்டங்கள்' (Escort Sector Projects) என்ற புதிய முயற்சியில் டிட்கோ நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

[illegible]ற ஆண்டில் 9 புதிய தொழில் திட்டங்கள் கண்ட[illegible]பட்டன. 1994-95 ஆம் ஆண்டில் அவைகளை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த 9 தொழிற் திட்டங்களுக்கான கூட்டு முனைவர்களை தேர்வு செய்யும் முயற்சிகளும் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கைகளைத் தயாரிக்கும் பணியும் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டம் மேட்டூரில் மொத்தம் ரூ. 159 கோடி செலவில் தேனிரும்பு தயாரிக்கும் திட்டம் ஒன்றை இணைத்துறையில் அமைக்கும் பணியில் டிட்கோ ஈடுபட்டுள்ளது. சரக்குக் கட்டண சரிசம திட்டத்தை மத்திய அரசு அகற்றியுள்ள நிலையில் இம்மாநிலத்தில் வார்ப்படத் தொழிலுக்கு இத்திட்டத்தினால் பெரிதும் நன்மை கிட்டும் வாய்ப்பு உள்ளது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் 522 ஏக்கர் புன்செய் நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப உத்தியும், வெளிநாட்டு இணைப்பும் முடிவுறும் நிலையில் உள்ளன. இத்திட்டம் 1993-94ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



கீழ்க்காணும் புதிய திட்டங்களும் டிட்கோவினால் நிறைவேற்றப்பட உள்ளன.

| தொழில் திட்டம். | உற்பத்திப் பொருள் திறனுடன் | திட்ட மதிப்பீடு. | டிட்கோவின் முதலீடு. | அமையும் இடம். | வேலை வாய்ப்பு பெறும் நபர்கள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் | கோடியில்) | | |
| 1. கூட்டுத்துறையில் 100 சதவித ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட காளான் உற்பத்தி தொழிற்சாலை. | ஆண்டுக்கு 3,000 டன்கள் பட்டன் காளான் | 19.50 | 2.24 | செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம். | 300 |
| 2. இணைத்துறையில் ஆர் கானோ பாஸ்பரஸ் பூச்சிக்கொல்லி மருந்து தயாரிப்புத் திட்டம். | ஆண்டுக்கு 1,600 டன் பூச்சிக் கொல்லி மருந்து. | 17.00 | 0.86 | கடலூர். | 350 |
| 3. இணைத்துறையில் புகைப் படம் நகல்களுக்கான இரசாயனப் பொருட்கள் தயாரிப்புத் திட்டம். | புகைப்பட இரசாயனப் பொருட்கள் அதாவது டோனர்ஸ் (Toners) டெவலப்பர்ஸ் (Developers) ஆண்டுக்கு 3,000 டன்கள். | 25.00 | 1.10 | முடிவு செய்யப்படவில்லை. | 70 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 4. கூட்டுத்துறையில் லாக்டிக் அமிலம் தயாரிப்புத் திட்டம். | ஆண்டுக்கு 4,000 டன்கள் லாக்டிக் அமிலம். | 5.60 | 0.49 | பர்கூர் (தர்மபுரி மாவட்டம்) | 100 |
| 5. இணைத்துறையில் பாலிதின் டெரிப்தலேட் (பெட் பாட்டில்கள்) தயாரிப்புத் திட்டம். | ஆண்டுக்கு 18 மில்லியன் பெட் பாட்டில்கள். | 12.00 | 0.49 | கிருஷ்ணகிரி வட்டம் (தர்மபுரி மாவட்டம்) | 65 |
| 6. இணைத்துறையில் காஸ்டிக் சோடா குளோரோ கெமிக்கல்ஸ் தயாரிப்புத் திட்டம். | *காஸ்டிக் சோடா ஆண்டுக்கு 33,000 டன்கள். குளோரோ சல்பூரிக் அமிலம் ஆண்டுக்கு 7,500 டன்கள். எதிலைன் டை குளோரைடு ஆண்டுக்கு 24,000 டன்கள். | 160.00 | .. | பர்கூர் (தர்மபுரி மாவட்டம்) | 300 |
| | | 239.10 | 5.18 | | 1,185 |



*(காஸ்டிக் சோடா தயாரிப்பு தொழிற்சாலையில் ''டிட்கோ'' வின் முதலீடு இறுதி செய்யப்படவில்லை ஆதலால் இதில் அடங்காது.)

பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்வதற்காக 1992–93ஆம் ஆண்டிற்கான நிதித் திட்டத்தில் ரூ. 70.49 கோடி முதலீடு செய்ய டிட்கோ உத்தேசித்துள்ளது. அரசு தரப்புக் கடன் ரூ. 12.50 கோடி மற்றும் பொது மக்கள் வங்கிகள், அங்காடிகள் முதலீயோரிடமிருந்து பெறப்படும் கடன் ரூ. 4.40 கோடி ஆகியவை உட்பட 1992–93 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி டிட்கோவிற்கு ரூ. 16.90 கோடி நிதியுதவி கிடைக்கும். குறைந்த கால வைப்பீடுகள் திரட்டுதல், கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுதல், சொந்த நிதி ஆதாரங்களைத் திரட்டுதல் ஆகியவை மூலம் 'டிட்கோ' எஞ்சிய தொகையை திரட்டும்.

கூட்டுத் துறை / தனியார் துறை மின் திட்டங்கள் :

தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் மிகவும் இன்றியமையாத அடிப்படைத் தேவையாகும். மின்சாரத்தின் உபயோகம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், தேவைக்கும் கிடைக்கும் அளவுக்கும் இடையே இடைவெளியுள்ளது. மின் உற்பத்தி அளவையும் வழங்கப்படும் மின்சாரத்தின் அளவையும் பெருக்க பெருமளவில் முயற்சிகள் தேவை. மின் உற்பத்தியில் தனியார் தொழில் முனைவோரையும் அரசுடன் கூட்டு சேர்த்துக் கொள்வது மின் உற்பத்தியை அதிகரிப்பதற்குரிய வழிகளில் ஒன்றாகும்.

1992 ஆம் ஆண்டு புதிய தொழில் கொள்கை பொதுத் துறையில் உள்ள முக்கிய மின் உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதுடன் தனியார் துறைகளிலும் கூட்டுத் துறைகளிலும் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வகை செய்கிறது. ஜெயங்கொண்ட சோழபுரம் பகுதியில் ஏராளமாக உள்ள பழுப்பு நிலக்கரி, கூட்டுத் துறையில் மின் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும். இதற்காக திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. 1500 மெ.வா.

மின்சாரம் உற்பத்தி செய்யும் இப்பெரிய திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 7,000 கோடியாகும். இதற்காக முன்னணி நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் ஒன்றை 'டிட்கோ' செய்து கொண்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தொழில் நுட்ப ஒத்துழைப்பை முடிவு செய்வது பற்றிய நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு முதலீடு செய்ய 1992-93 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் டிட்கோவிற்கு பங்கு மூலதன உதவித் தொகையாக ரூ. 250 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில், தனியார் துறையில் 500 மெகாவாட் திறனுள்ள நிலக்கரி அடிப்படையிலான புதிய மின் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு முன் வந்துள்ளது. திட்ட விபரங்களை இறுதியாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்)

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் பணி நடுத்தர மற்றும் பெருந் தொழில்களை வளர்த்தலும், மேம்படுத்துவதும் அத்தொழில்களை மாநிலத்தின் பின் தங்கிய பகுதிகளில் பரவலாக்குவதும் ஆகும். இந்நிறுவனம் ஏழு தொழில் வளாகங்களை நிறுவியுள்ளது. அவ்வளாகங்களில் மின்சாரம் தண்ணீர், தகவல் தொடர்பு போன்ற அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் அமைக்கப்பட்டுள்ளன.

1991-92 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய 56 தொழில் பிரிவுகளுக்கு ரூ. 47.55 கோடி நீண்ட காலக் கடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் நவீனமாக்குதல், விரிவாக்கம் புதிய தொழில்கள், ஏற்கனவே உள்ள தொழில்களில் உற்பத்தி மாற்றம் செய்தல் முதலியன அடங்கும். 1992-93ல் புதிய திட்டங்கள், விரிவாக்கம், உற்பத்தி மாற்றம், நவீனப்படுத்துதல், பழுதடைந்த சாதனங்களை மாற்றியமைப்பதால் ஏற்படும் கூடுதல் செலவு முதலியவற்றிற்காக 80 தொழில் பிரிவுகளுக்கு ரூ. 66 கோடி கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. துணி ஆலைகளுக்கும், இரசாயனப் பொருட்கள், மருந்தாக்கப் பொருட்கள், உணவுப் பொருட்கள், மின்னணுப் பொருட்கள், கனிமப் பொருட்கள், சிமெண்ட், உலோகப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில் பிரிவுகளுக்கும் நிதி உதவி அளிக்கப்படும். இவற்றிற்காக மொத்த முதலீடு செய்ய எதிர் பார்க்கப்படும் தொகை ரூ. 200 கோடி ஆகும். இதனால் 4,250 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

சிப்காட் அமைத்துள்ள தொழில் வளாகங்கள்.

| தொழில் வளாகத்தின் பெயர். | | சிப்காட்டின் முதலீடு (ரூபாய் இலட்சத்தில்). | விற்பனை செய்யத் தக்க நிலத்தின் பரப்பளவு (ஏக்கரில்). | ஒதுக்கப் பட்ட பரப்பளவு (ஏக்கரில்) | ஒதுக்கீடு செய்யப் பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) |
| இராணிப்பேட்டை I | .. | 1,52.37 | 595.82 | 587.99 | 100 | 9,050 |
| இராணிப்பேட்டை II | .. | 33.71 | 123.60 | 118.74 | 40 | 1,220 |
| ஓசூர் I | .. | 3,69.21 | 977.56 | 977.56 | 144 | 15,000 |
| ஓசூர் II | .. | 2,41.37 | 326.82 | 40.51 | 17 | 191 |
| மானாமதுரை | .. | 1,69.23 | 382.20 | 199.77 | 55 | 2,700 |
| புதுக்கோட்டை | .. | 2,00.19 | 311.49 | 186.01 | 51 | 17,000 |
| கும்மிடிப்பூண்டி | .. | 9,19.36 | 663.00 | 560.67 | 201 | 14,000 |
| கடலூர் | .. | 4,29.47 | 454.00 | 422.81 | 56 | 4,000 |
| தூத்துக்குடி | .. | 4,19.59 | 670.15 | 188.84 | 34 | 3,000 |
| மொத்தம் | .. | 2,934.50 | 4,504.71 | 3,288.90 | 698 | 56,161 |



## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிக்)

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறிய, மிகச் சிறிய, நடுத்தரப் பிரிவுகளில் உள்ள தொழில் வளர்ச்சியின் தேவையை நிறைவேற்றி வருகிறது. இந் நிறுவனம் 1992 பிப்ரவரி 29 ஆம் நாள் வரை 4,070 தொழில் பிரிவுகளுக்கு ரூ. 239 கோடி கடன் வழங்கி யுள்ளது. 1991-92ல் ரூ. 225 கோடி கடன் வழங்க வேண்டும் என்ற இலக்கை அது எய்திவிட்டது. 1992-93-இல் ரூ. 250 கோடி கடன் வழங்கவேண்டும் என இலக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1991-92-ல் இந் நிறுவனத்தின் உதவி பெறும் தொழில் பிரிவுகள்மூலம் 40,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டியது. 1992-93-ல் 48,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடைமுறைகளை எளிதாக்குதல், ஒரே இடத்தில் அனைத்து அனுமதிகளையும் பெறுதல் ஆகியவற்றுக் காக, இந்நிறுவனத்திடமிருந்து உதவிபெறும் தொழில் பிரிவுகளுக்கு வட்டியில்லா விற்பனை வரி, கடன் மற் றும் விற்பனைவரி செலுத்துவதை ஒத்திவைத்தல் போன்ற சலுகைகளை செயல்படுத்த 1-4-1991 முதல் இந்நிறுவனம் முகவரமைப்பாக செயல்பட்டு வருகிறது. இப்பணியை இதற்கு முன்னர் மாவட்ட தொழில் மையங்கள் செய்து வந்தன. மாநில மூலதன உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறு வதற்கும், விற்பனை வரி செலுத்துவதற்கும், வட்டி யில்லாக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் கடன் பெறு வதற்கும், தொகை செலுத்துவதைத் தள்ளிப் போடு வதற்குரிய சலுகையைப் பெறுவதற்கும், சிறு தொழில் முனைவர்கள் தற்போது ஒரே ஒரு முகவரமைப்பான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தை மட்டுமே அணுக வேண்டும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், 1992 பிப்ரவரி மாதம் முடிய ரூ. 82 கோடி மட்டுமே வசூல் செய்தது. இது, ஆண்டிற்கான வசூல் இலக்கில் 55 சதவீதம் மட்டுமே ஆகும். கடன் வசதி வழங்கலில் இறுக்கமும், தொழில் வளர்ச்சி மொத்தத்தில் மந்தமாக

இருந்ததுமே குறைவான வசூலுக்குக் காரணம என தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதி ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு வசூலை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தீவிர முழு பங்கு அவசியம் ஏற்படாத தொழில் பிரிவுகளில் இக் கழகம் செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெறு வதன் மூலம் நிதி ஆதாரங்கள் திரட்டப்படும்.

நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்ப உத்திகளைக் கொண்டுள்ள தொழில் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கான செயற்குறிப்புகளை நிதி நிறுவனங்கள் ஏற்கின்றன. இச் செயற் குறிப்புகள் குறித்து முடிவெ டுக்க, தொழில்நுட்ப நிதி மற்றும் வணிக சாத்தியக் கூறுகள்பற்றி விரிவாக ஆய்வுசெய்யப்படுகின்றன. இருப்பினும், தொழில் உத்திகளை உருவாக்க, மேம் படுத்த விரும்புகிற அல்லது வணிக ரீதியில் ஆய்வுக்கூட தொழில்நுட்ப உத்திகளை மேம்படுத்த விரும்புகிற தொழில் முனைவோருக்கு நிதி நிறுவனங்களிலிருந்து நிதியைப் பெறுவதில் பிரச்சினைகள் இருக்கின்றன. ஏனெனில், இவற்றில் உறுதியற்ற தன்மையும், துணிந்து செயல்பட இயலாத தன்மையும் நிலவுவதேயாகும். 1992 ஆம் ஆண்டின் புதிய தொழில் கொள்கையின்படி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் தொழில் நுட்ப உத்தி மூலதன நிதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புதிய அல்லது தற்போது உள்ள தொழில் நிறுவனங் களுக்கு கீழ்க்காணும் நோக்கங்களுக்காக தொழில் நுட்ப உத்தி மூலதன உதவி அளிக்க இத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.—

(அ) புதிய தொழில்நுட்ப உத்திகளைக் கொண்டு அல்லது மேல் நாடுகளில் கடைப்பிடிக்கப் படும் தொழில் நுட்ப உத்திகளைக் கொண்டு முன் னோடித் திட்டம் ஒன்றை உருவாக்குதல் ;



(ஆ) மேற்சொன்ன தொழில்நுட்ப உத்திகளை வணிக ரீதியில் பயன்படுத்துவதற்கு ஊக்கமளித்தல் ;

(இ) மேல் நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் தொழில்நுட்ப உத்திகளை அதிக அளவில் உள்நாட்டில் கடைப்பிடித்தல் ;

(ஈ) மேற்கூறிய திட்டங்கள் தொடர்பான அனைத்துப் பணிகளுக்கும்.

இத் திட்டத்தின் நிதிக்கு மாநில நிதியிலிருந்து ரூ. 1 கோடி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத் தில் வளர்ந்து வரும் நிறுவனங்கள், இந் நிதிக்கு பங்கு தொகை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படும்.

சிறு தொழில் நிறுவனங்கள் புதிய தொழில்நுட்ப உத்திகளை அறியவும், தங்களுடைய தொழில் பிரிவு களை நவீனப்படுத்தவும் தொழில்நுட்ப வளர்ச்சி நிதி ஒன்று உருவாக்கப்படும். புதிய தொழில் கொள்கை யில் வெளியிடப்பட்ட அறிவிப்பில் இதுவும் ஒன்றாகும். இதுகுறித்து தேவையான மேல்நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

## தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்).

தமிழ்நாட்டில் மின்னணுவியல் (Electronics) துரிதமான வளர்ச்சியடைய சாதகமான சூழ்நிலை உள்ளது. தமிழ்நாட்டில் இருக்கும் தொழில்நுட்ப முன்னேற்றம், தொழில் அடிப்படை வசதிகள், கிடைக் கின்ற திறமைவாய்ந்த, மனித உழைப்பாற்றல் ஆகியவற்றால் மின்னணு சாதனங்களும், கணிப்பொறி அடிப்படைத் தகவல் குறியீட்டுத் துணை சாதனங்களும் ஏற்றுமதிக்கு ஊக்கமளிப்பவையாக உள்ளன, என்று கண்டறியப்பட்டுள்ளது. மின்னணு சாதனங்களையும், கணிப்பொறி அடிப்படைத் தகவல் குறியீட்டுத் துணைச் சாதனங்களையும் தயாரிப்பதில் தமிழ்நாடு மின்னணு வியல் நிறுவனம் முக்கியமான ஆக்கப் பணியைச் செய்து வருகிறது.

தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனத்தால் மேம்படுத்தப்பட்ட கீழ்க்காணும் இரு திட்டங்கள் 1991-92-ம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கின :—

| | | திட்டச் செலவு. (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | திருவாளர்கள் இண்டு செம் கம்யூனிகேஷன் லிமிடெட் (18 ஜி இசட்ஷார்ட் ஹால் மைக்ரோ ஜில் கம்யூனிகேஷன்ஸ் சிஸ்டம்). | 3.80 |
| 2 | திருவாளர்கள் எ.ஜி.டி. எலக்ட்ரானிக் லிமிடெட் (பாய்ண்ட் ஆப் சேல்ஸ் டெர்மினல்ஸ்). | 1.24 |



1992–93 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ள திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர். | உற்பத்திப் பொருளின் பெயர். | திட்டச் செலவு (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | பிரிண்டெட் சர்க்யூட் போர்டு (100 சத வீத ஏற்றுமதிக்காக) சென்னை. | பிரிண்டெட் சர்க்யூட் போர்டு. | 12.25 |
| 2. | எல்னெட், சென்னை | கணிப்பொறி அடிப்படைத் தகவல் குறியீட்டுத் துணைச் சாதனம். | 8.05 |
| 3. | திருவாளர்கள் சிடிசன் எல்காட் லிமிடெட், சென்னை. | ரேடியா பேஜிங் சிஸ்டம் கார்டு—லெஸ் சிஸ்டம். | 2.57 |
| 4. | திரிசூல் எலெக்ட்ரானிக்ஸ், பொள்ளாச்சி | மின்னணுவியல் தொழில்களுக்குரிய கனெக்டர்கள். | 2.98 |

சாஃப்ட் ஃபெர்ரைட் (Soft ferrite) பிரின்டெட் சர்க்யூட் போர்டு (Printed Circuit Boards) ஆகிய வற்றைத் தயாரிக்கும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழில் பிரிவுகளை அமைக்க எல்காட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. பின்வரும் திட்டங்கள் உருவாக்கத்தில் உள்ளன.

(a) உபகரணங்கள் அறை

மின்னணுவியல் தொழில்களுக்குத் தேவைப்படும் உபகரணங்கள், வார்ப்புகள் முதலியவற்றை வழங்கு வதற்கு சென்னையில் ஒன்றும், கோயம்புத்தூரில் மற்றொன்றுமாக கூட்டுத்துறையில் உபகரணங்கள் தயாரிக்கும் தொழில் திட்டங்கள் அமைக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது. சென்னைக்கருகே செயல்படுத்தப் படும் இத்திட்டத்திற்கு ரூபாய் 9.68 கோடி. செலவாகும்

(b) மெல்லிய தாமிரத்தகடு

100 சதவீத ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட இத் தொழிற்பிரிவு இராணிப்பேட்டையில் அமைக்கப்படவுள்ளது. இங்கு தயாரிக்கப்படவுள்ள மெல்லியத் தாமிரத் தகடு பிரின்டெட் சர்க்யூட் லேமினேட் (Printed Circuit Laminate) தயாரிப் பில் பயன்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான செலவு ரூ. 51.63 கோடி ஆகும்.

(c) டயமண்ட் வார்ப்புகள் (Diamond Dies)

இணைத்துறையில், மின்னணுவியல் / மின்னியல் தொழில்களுக்குரிய டைமண்ட் வார்ப்புக்களைத் தயா ரிக்கும் திட்டம், ரூ. 3.57 கோடி செலவில் தயாரிக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் மறைமலைநகரில் அமைக்கப் படவுள்ளது.

(d) மைக்ரோ மோட்டார்கள் (micro motors)

கூட்டுத்துறையில், மின்னணுவியல் தொழில்களில் பயன்படுத்துவதற்காக, ஆண்டொன்றுக்கு 1.35 மில்லியன் வெவ்வேறு வகையான மைக்ரோ மோட்டார்



களைத் தயாரிப்பதற்குரிய திட்டம் ரூ. 5.22 கோடி செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், சென்னை அருகே செயல்படுத்தப்படவுள்ளது.

அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

சென்னையில், கணிப்பொறி அடிப்படை தகவல் மையம் ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கணிப்பொறி தொழில் முனைவோருக்கு இடவசதியும், கணிப்பொறி சாதனங்களும் வழங்கப்படும். தங்கு தடையற்ற மின்சாரமும் (Fail Proof Power) டிஜிடல் வகை தகவல் தொடர்பு வசதிகள் மற்றும் பொதுவான வசதிகள் ஆகியவைகள் செய்து கொடுக்கப்படும். கணிப்பொறி சாதனங்களை ஏற்றுமதி செய்யும் நிறு வனங்களுக்கு உதவும் பொருட்டு கணிப்பொறி கூட்டு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கூட்டுத்திட்டம் :

எட்டாம் ஐந்தாண்டுக் காலத் திட்டத்திற்குரிய கூட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனத்திற்குச் சொந்தமான தொழிற்பிரிவு களின் பங்குத் தொகை ரூ. 30 கோடியையும் கூட்டுத் துறை நிறுவனங்களின் பங்குத்தொகை ரூ. 420 கோடி யையும் சேர்த்து, 1997-ஆம் ஆண்டிற்குள் இந்த நிறு வனத்தின் விற்பனைத் திறன் ரூ. 450 கோடி என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான எல்காட் நிறுவனத்தின் பங்கு முதலீடு ரூ. 16.50 கோடியாகும்.

எல்காட் நிறுவனத்தில் கூட்டு முயற்சியை மாவட்டங் களுக்கும் பரவலாக்குதல் :

எல்காட் நிறுவனம் சென்னையிலும், சென்னை யைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மின்னணுத் தொழிற் பிரிவுகளை அமைப்பதுடன் நிறுத்திக்கொள்ளாமல், இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளான ஓசூர், மதுரை, கோயம்புத் தூர், பொள்ளாச்சி போன்ற இடங்களிலும் கூட்டுத்துறையில், மின்னணுத் தொழிற்பிரிவுகளை ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. மின்னணு துறையில் தொழிற்பிரிவுகளை ஏற்படுத்தும் ஒரு பகுதி

யாக மாநிலத்திலுள்ள பல்வேறு பகுதிகளில், கருத்தரங்குகள், பொருட்காட்சிகள் முதலியவற்றை எல்காட்' நிறுவனம் நடத்தி வருகிறது. இதனால் மின்னணுவியல் தொழில் மேம்பாடு பற்றிய தகவல்கள் தமிழ்நாடு முழுவதும் பரவ இயலும்.

## மகளிர் தொழில் முனைவோரை ஊக்குவித்தல் :

மின்னியல், மின்னணுத் தொழில் பயனுக்குத் தேவைப்படும் ஒயர்களுக்கான தொழில் டைமண்ட் வார்ப்புகளைத் தயாரிக்க மகளிர் தொழில் முனைவோர் ஒருவரைக் கொண்டு, கூட்டுத்துறையில் ரூ. 357 இலட்சம் செலவில் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த 'எல்காட்' நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

சென்னையில் கணிப்பொறி அடிப்படைத் தகவல் குறியீட்டுத் துணைச் சாதனங்களைத் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்திவரும் 'எல்காட்டின்' கூட்டுத்துறை நிறுவனமான திருவாளர்கள் எல்நெட் டெக்னாலாஜீஸ் லிமிடெட் நிறுவனம் மூலம் மகளிர் தொழில் முனைவோர் தங்களுடைய வீடுகளில் இருந்து கொண்டே தகவல்தொகுப்பு தொழில் பிரிவுகளை அமைப்பதற்காக 50 மகளிர் தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தொழில் முனைவோருக்கான பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக்குப்பின் இவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், இந்தியன் வங்கி ஆகியவற்றின் நிதியுதவி மூலம் கணிப்பொறிச் சாதனங்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழில் பிரிவுகளை சொந்தமாக நடத்தலாம்.

## தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்)

தமிழ்நாடு கனிம நிறுவனம் வணிக முக்கியத்துவம் வாய்ந்த, ஆதாயம் தரத்தக்க பல்வேறு கனிம படிவங்களை வெட்டியெடுத்துப் பயன்படுத்தி வருகின்றது. 1991-92 ஆம் ஆண்டில் 13,000 கன மீட்டர் பாறைகளையும் மற்றும் 42,000 மெட்ரிக் டன் உயர் கனிமங்களையும் உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படு



கின்றது. கருப்பாறையின் விற்பனையில் சரிவு ஏற்பட்ட போதிலும் தமிழ்நாடு கனிம நிறுவனம் 1991-92—ல் சாதனை அளவாக ரூ. 25 கோடி விற்பனையிலும் மற்றும் ரூ. 12 கோடி இலாபமும் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நாடு அந்நியச் செலாவணி நெருக்கடியிலுள்ள சூழ்நிலையில் தமிழ்நாடு கனிம நிறுவனம் போன்ற நிறுவனங்கள் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. 1991-92-ல் டாமின் ரூ. 25 கோடி அந்நியச் செலாவணி ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## எதிர்காலத் திட்டங்கள் :

மதிப்புயர்ந்த உற்பத்திப் பொருட்களை கூடுதலாக ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற மாநில அரசின் கொள்கைக் கிணங்க, டாமின் தற்போதைய கற்பலகை மற்றும் நினைவுக் கற்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை விரிவாக்குவதுடன் ஒரு புதிய கிரானைட் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலையையும் அமைக்க உள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

## டாமின் கிரானைட்ஸ், மணலி விரிவாக்கம்—நினைவுக் கற்களின் உற்பத்திப் பெருக்கம் :

நினைவுக் கற்களின் ஆண்டு உற்பத்தித் திறனை தற்போது உள்ள 8,600 ச.மீ. அளவிலிருந்து 17,600 ச.மீ. ஆக உயர்த்த ரூ. 117 இலட்சம் செலவில் இயந்திரங்களை இறக்குமதி செய்துள்ளது. இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. உற்பத்தி விரைவில் தொடங்கப்படும்.

## தர்மபுரி மாவட்டத்தில் கிரானைட் தொழிற்கூடங்கள்:

தர்மபுரி மாவட்டம், பர்கூர் பகுதியிலுள்ள மாடப்பள்ளி கிராமத்தில் ஒரு கிரானைட் தொழிற்கூடம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டியது, 1991 ஆம் ஆண்டின்

பெரிய சாதனை ஆகும். இந்தக் கிரானைட் தொழிற்கூடங்கள் ரூ. 15 கோடி அளவில் கீழ்க்கண்ட பிரிவுகளாக அமைய உள்ளது.

(1) கிரானைட் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை ;

(2) அறுத்து மெருகேற்றிய பலகைகள் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும்

(3) பாளக் கற்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

தமிழ்நாடு மாநில கட்டிடங்கள் கட்டும் நிறுவனத்திடம் தொழிற்சாலை கட்டுவதற்கான பணி ஒப்படைக்கப்பட்டு வேலை துவங்கியுள்ளது. ஓடுகள் தயாரிப்பதற்கான முக்கிய இயந்திரங்கள் வந்துள்ளன. இத்தொழிற்சாலை உற்பத்தியை விரைவில் துவங்கும். இத்திட்டத்தினால் 300 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

சிவகங்கை கிராபைட் சுத்திகரிப்புத் திட்டம் :

தமிழ்நாடு கனிம நிறுவனம் சிவகங்கை வட்டாரத்தில் கிடைக்கும் கிராபைட் தாதுப்பொருளைப் பயன்படுத்தி கிராபைட் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை சிவகங்கையில் சுமார் ரூ. 15 கோடி மதிப்பீட்டில் நிறுவ திட்டமிட்டுள்ளது. இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 200 மெட்ரிக் டன் தாதுப் பொருளில் 96 விழுக்காடு உயர்ரக கரிச்சத்துக் கொண்ட 28 மெட்ரிக் டன் சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டை உற்பத்தி செய்யும் செயல்திறன் கொண்டதாக இருக்கும். இத்திட்டப் பணி விரைவில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டை உபதொழிற்சாலைகள் அமைப்பதற்காகப் பயன்படுத்தலாம். இது கிராமப் பகுதி மக்களுக்கு பெருமளவில் வேலை வாய்ப்புகளை அளிக்கும். மேலும், சிவகங்கைப் பகுதியின் விரைந்த தொழில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.



## தமிழ்நாடு செய்திததாள்—காகித நிறுவனம் (டி.என்.பி.எல்).

நவீன தொழில் நுட்பத்துடன் கரும்பு சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு. செய்தித்தாள், எழுதுதாள் ஆகியவற்றை உற்பத்தி செய்ய ரூ. 240 கோடி மொத்த முதலீட்டுடன் 1985ஆம் ஆண்டில் தமிழ் நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அமைக்கப்பட்டது,

இந்நிறுவனம் படிப்படியாக முன்னேறி குறிப்பிடத்தக்க அளவிற்குச் சாதனையை எய்தியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்நிறுவனம் முழு உற்பத்தித்திறன் பயன்பாட்டை எய்தியுள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ. 75.93 கோடி மொத்த ஆதாயத் தொகையையும், ரூ. 36.44 கோடி நிகர ஆதாயத் தொகையையும் ஈட்டியிருக்கையில், நடப்பு நிதியாண்டில் ஒன்பது மாத செயல்பாட்டில் (1991 ஏப்ரல் முதல் டிசம்பர் வரையில்) ரூ. 64.83 கோடி மொத்த ஆதாயத் தொகையையும், ரூ. 33.50 கோடி நிகர ஆதாயத் தொகையையும் ஈட்டி குறிப்பிடத்தக்க அளவு சாதனையை எய்தியுள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தில், தற்போதுள்ள செய்தித்தாள் உற்பத்தித்திறனான ஆண்டொன்றுக்கு 50,000 மெட்ரிக் டன் என்னும் அளவை 1,00,000 மெட்ரிக் டன் அளவிற்கும் தற்போதுள்ள அச்சுத்தாள், எழுதுத்தாள் உற்பத்தித் திறனான ஆண்டொன்றுக்கு 40,000 மெட்ரிக் டன் அளவை 80,000 மெட்ரிக் டன் அளவிற்கும் ரூ. 475 கோடி மதிப்பீட்டுச் செலவில் விரிவாக்கம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. உலக வங்கியும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி உள்ளிட்ட இந்திய நிதியுதவி நிறுவனங்களும் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. செய்தித்தாள் இறக்குமதியைக் குறைப்பதன் மூலம், இத்திட்டம் ஆண்டொன்றுக்கு ரூ. 75 கோடி அந்நியச் செலாவணி மிச்சப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு செய்தித்தாள்

உற்பத்தியில் இந்நிறுவனத்தின் பங்கு 15 சதவீத மாகும். இந்நிறுவனம் செயல்படத் தொடங்கி இது வரையில் ரூ. 407 கோடி அளவிற்கு அந்நியச் செலா வணியை மிச்சப்படுத்தியுள்ளது.

தென்னாற்காடு மாவட்டத்தில்ரூ 1,000 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் மெட்ரிக் டன் நிறுவுதிறனுடன் கரும்பு சக்கையி லிருந்து செய்தித்தாள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்று உள்ளது. தொடக்க ஆய்வுப் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

### சர்க்கரைத் தொழில்.

சர்க்கரை உற்பத்தித் தொழில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழிலாகும். இது தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இம்மாநிலத்தில் மொத்தம் 31 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றில் 14 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையிலும், எஞ்சியுள்ள 17 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவு, பொதுத் துறைகளிலும் உள்ளன. கூட்டுறவு, பொதுத் துறைகளைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகளின் கரும்பு பிழி திறன் நாளொன்றுக்கு 35,950 டன்னாகும். 1990-91 கரும்பு அரவை பருவத் தில் இவ்வாலைகள் 100 சதவீதம் பயன்பாட்டுத் திறனை அடைந்தன. தனியார் துறையைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகளின் கரும்பு பிழி திறன் நாளொன் றுக்கு 36,950 டன்னாகும். இந்த ஆலைகள் 107 சத வீதம் பயன்பாட்டுத் திறனை அடைந்தன.

2. அரூரில், தற்போது அமைக்கப்பட்டு வரும் எஸ். கந்தப்பன் கூட்டுறவு சர்க்கரை ஆலை 1992 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மதுராந்தகம், கள்ளக் குறிச்சி பிரிவு-I, திருத்தணி, மயிலாடுதுறையில் என்.பி.கே.ஆர்.ஆர். ஆகிய 4 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தங்களுடைய கரும்பு பிழி திறனை விரிவு படுத்தி வருகின்றன. சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை



நவீனப்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இத்திட்டங்கள் தொடர்பான மொத்த மூலதனச் செலவு ரூ. 99.27 கோடியாகும். எந்திரங்களை வாங்குவதற்குரிய தேவைக்குறிப்புகள் இறுதி செய்யப் பட்டுள்ளன. இப்பணி விரைவில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. சேத்தியாத்தோப்பில் உள்ள எம்.ஆர். கிருஷ்ண மூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலும், செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையிலும் உபரியாக உள்ள கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி இணை மின் உற்பத்தி செய்யும் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த ஒவ்வொரு நிலையத்திற்கும் ஆகும் செலவு ரூ. 5.34 கோடியாகும். எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி சர்க்கரை ஆலை 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்தும், செய்யாற்றிலுள்ள சர்க்கரை ஆலை 1992-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியிலும் மின் உற்பத்தியை தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

4. 1990-91 கரும்பு பிழியும் பருவத்தில் சர்க்கரை உற்பத்தி அதிக அளவில் இருந்ததாலும், சர்க்கரையின் விலை குறைந்ததாலும், கூட்டுறவு-பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் சர்க்கரையின இருப்பு அதிக அளவில் தேங்கி விட்டது. உள் நாட்டில் சர்க்கரைத் தட்டுப்பாடு ஏற்படா வண்ணம், 1992-ஆம் ஆண்டில் 25,000 மெட்ரிக் டன் அளவுள்ள சர்க்கரையை ஏற்றுமதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. தற்போது மாநிலத்தில் கிடைக்கும் கரும்பின் அளவு பற்றி முழுவதுமாக மறு ஆய்வு செய்து, புதிதாகச் சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்கு அளவு கோலை அரசு கொள்கையளவில் வரையறுக்கும். இனிவரும் ஆண்டுகளில், போதுமான கரும்பு கிடைக்கும் பகுதிகளில் 4 அல்லது 5 புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்க அரசு முயலும்.

[1992 ஏப்ரல் 3

## புவியியல் மற்றும் சுரங்கத்துறை.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை, உலோகம் சார்ந்த மற்றும் உலோகம் சாராத கனிமப்பொருள்கள், புவியியல்-தொழில் நுட்ப ஆய்வுகள் ஆகியவற்றை மலைப் பகுதிகளில் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (TANCEM), தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN) தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் (TANMAG) ஆகிய அரசு நிறுவனங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனை நல்குதல், பெரிய-சிறிய அளவிலான நிறுவனங்களுக்கு சலுகைகள் வழங்குதல் உட்பட தமிழ்நாட்டில் கனிமப்பொருட்கள் நடவடிக்கைகளை முறைபடுத்துதல் ஆகிய பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிலச்சரிவுகள் அடிக்கடி ஏற்படக்கூடிய பகுதிகள் குறித்து ஆராயவும், தீர்வு நடவடிக்கைபற்றி கருத்துக் கூறவும், நீலகிரி மாவட்டத்தில், 1340 சதுர கிலோ மீட்டருக்கு மேற்பட்டபரப்பில் புவியியல்-தொழில் நுட்பஆய்வை, இத் துறை 1985, ஏப்ரலில் மேற்கொண்டது. இதுபற்றிய விரிவான அறிக்கை, 1992-ஆம் ஆண்டு மத்தியில் இறுதியாக்கப்படும்.

இத்துறை, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம், சிவகங்கையில் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் குத்தகைப் பகுதியிலுள்ள கிராபைட் படிவுகள் குறித்து 1989, அக்டோபரில் மறு ஆய்வு மேற்கொண்டு, 1991 ஆகஸ்டில் முடிக்கப்பட்டது. இதன் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. கிரா பைட்டும், ஏனைய கனிமப் பொருட்களும் எவ்வளவு ஆழத்தில் காணப்படுகிறது என்பது பற்றியும், கனிமப் பொருள்களின் தன்மை பற்றியும் ஆய்வு செய்வதற் காக இத்துறை புவியியல், இயற்பியல் ஆய்வு ஒன்றை திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள பணகுடியில் நடத்தக் கருதியுள்ளது.

கர்நாடகத்திலுள்ள கோலார் தங்க வயலின் தொடர்ச்சியாக தருமபுரி மாவட்டத்திலுள்ள நாரளப்பள்ளியிலும், மகாராஜாகடையிலும், தங்கம் கண்டறிதல் தொடர்பான ஆய்வை இத்துறை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதற்காக, ஐந்து துளைகள் போடப்பட்டன. 1 ஆம் எண் துளை, நல்ல விளைவுகளை அளித்துள்ளது. மேற்கொண்டும் ஆய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி திறவெளி இரண்டாவது, மூன்றாவது சுரங்கப்பணிகளின் மேற்கில் 28 சதுர கிலோ மீட்டர் பரப்பில் பழுப்பு நிலக்கரி தேண்டுதல் பற்றிய விரிவான ஆய்வை, இத்துறை, 1987 ஆகஸ்டில் மேற்கொண்டு, 1990 மே திங்களில் முடித்துள்ளது. இப்பகுதியில், தோராயமாக 200 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, திருச்சி மாவட்டத்திலுள்ள ஜெயங்கொண்டசோழபுரத்திலும் அதனைச் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் பழுப்பு நிலக்கரியுள்ளதென்று உறுதியாக்கப்பட்ட 40 சதுர கிலோ மீட்டர் வட்டாரத்தில் பழுப்பு நிலக்கரி குறித்த விரிவான ஆய்வை, இத்துறை 1991 டிசம்பரில் மேற்கொண்டுள்ளது.

புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி, காமராஜர், ஆகிய மாவட்டங்களில் பல வண்ணங்களைக் கொண்ட கருங்கற்கள் பற்றிய விரிவான ஆய்வுகள் 1991 மார்ச்சில் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய கருங்கற்கள், 175.65.5 ஹெக்டேர் பரப்பில் இருப்பது கண்டறியப்பட்டது. திருவண்ணாமலை,—சம்புவராயர், சேலம், தருமபுரி, வடஆற்காடு—அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பகுதிகளில் 223.55.0 ஹெக்டேரில் பல்வேறு தரங்களில் கருங்கற்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி—கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் பொன்வண்ணப் பச்சை நிற மணிக்கல் வகை ( Chrysoberyl ) பச்சைக்

கல்வகை (Alexandrite) முதலியன மற்றும், சேலம் மாவட்டத்திலுள்ள புரோன்சைட் (Bronzite) அபாடைட் (Apatite) சபையர் (Sapphire) முதலியன போன்ற முழுமை பெறா மணிக்கற்கள் குறித்து, இத்துறை 1991 நவம்பர்-டிசம்பரில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது. மேலும், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல்-அண்ணா, மதுரை, திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் புவியியல்-இரசாயனம், புவியியல்-இயற்பியல் ஆய்வையும் மேற்கொண்டுள்ளது.

## எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1992–97)

மாநில அரசின் குறைந்த மூலதன உதவியுடன் தொழில்களைப் பெருக்குவது எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாகும். மேம்படுத்தும் நிறுவனங்களுக்கும் துறைகளுக்கும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. சுரங்கம் உட்பட பெருந்தொழில்களுக்கு ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 155 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டது. எனினும் திட்டகாலத்தில் ஏற்பட்ட செலவு ரூ. 237.69 கோடியாகும். எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ 281 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கிராமப் பகுதிகளில் பெருமளவு வேலை வாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை/தோட்டக் கலையை அடிப்படையாகக் கொண்ட தோட்டங்கள் அமைக்கும் தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இதற்கு ரூ. 25 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.



| முக்கியமான இனங்களுக்கு திட்டப் பணியின் கீழ் செய்யப்பட்ட நிதி ஒதுக்கங்கள். | 1991-92ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1992–93ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. சர்க்கரை : | | |
| (1) புதிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு மாநில அரசின் பங்கு மூலதனம் | 1,000.00 | 500.00 |
| (2) இணைந்த மின் உற்பத்திக்கு நிதியுதவி | 50.00 | 193.00 |
| 2. பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடுகள் : | | |
| (1) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் | 1,900.00 | 1,690.00 |
| (2) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் | 2,150.00 | 1,635.00 |
| (3) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (மூலதனத்திற்குப் பதிலாக கடன்) | 600.00 | 700.00 |
| (4) தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் | 200.00 | 200.00 |

| | | |
|---|---|---|
| 3. தொழில் துறை ஆணையாளர் மற்றும் தொழில் வணிக இயக்குநர். | | |
| (1) மாவட்ட தொழில் மையங்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன், | 200.00 | 100.00 |
| (2) தொழில் பிரிவுகளுக்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மாநில அரசின் மூலதன நிதியுதவி | 500.00 | 600.00 |
| 4. புவியியல் மற்றும் சுரங்கத் துறை | | |
| ஜெயங்கொண்ட சோழபுரத்தில் பழுப்பு நிலக்கரி கிடைப்பதை ஆய்வு செய்தல். | 15.12 | 13.47 |
| 5. கூட்டுத் துறையில் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுத்தலும் மின் உற்பத்தி செய்யும் ஒருங்கிணைந்த திட்டத்திற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு பங்கு மூலதன நிதியுதவி | — | 250.00 |
| 6. அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனத்திற்கு பங்கு மூலதனம். | — | 500.00 |



**மத்திய அரசின் முதலீடுகள் :**

முக்கியத் திட்டங்கள் சிலவற்றிற்கு விரைவில் ஒப்புதல் அளிக்குமாறு இந்த அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறது. தேசிய வேதிய நறும்பொருள் நிறுவனத்தின் வேதிய நறும் பொருள் தொழிற்சாலையை சென்னை மணலியில் அமைப்பது, துணைத் தொழில்கள் வளரவும், வேலைவாய்ப்பு பெருகவும் வழிவகுக்கும். இத்திட்டத்திற்கு நிலங்களைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளன. தற்போது, இத்திட்டத்திற்கு, மத்திய அரசின் இறுதி அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி விரைவில் கிடைக்க இந்த அரசு பெருமுயற்சி மேற்கொள்ளும்.

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த மின்உற்பத்தியை பெருக்குவது அவசியமாகும். மத்திய அரசு நிறுவனமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் இம்மாநிலத்திற்கு அதிக அளவில் மின்சாரம் வழங்கும் ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் அதன் முதலாவது, இரண்டாவது சுரங்கங்கள் மற்றும் அதனுடன் இணைந்த I மற்றும் II அனல் மின் நிலையங்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்குத் தேவையான விரிவாக்கத்தை மேற்கொள்ள மிகுந்த ஆவல் கொண்டுள்ளது. மூன்றாவது சுரங்கம் வெட்டும் பணி, மூன்றாவது அனல் மின்நிலையம் அமைத்தல் ஆகியவை உள்ளிட்ட நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டங்களை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கும்படி இந்த அரசு, மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

காவிரி வடிநிலப்பகுதியில் கிடைக்கும் இயற்கை எரிவாயு, மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும், இரசாயனம் மற்றும் உரத் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்த உதவும். மத்திய அரசு அண்மையில்

அளித்துள்ள மதிப்பீடுகளின்படி, காவிரி வடிநிலப் பகுதியில் தற்போது நாளொன்றுக்கு மொத்தம் 0.25 மில்லியன் கனமீட்டர் இயற்கை எரிவாயு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசு, இயற்கை எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி திட்டத்திற்கு நாளொன்றுக்கு 2 மில்லியன் கனமீட்டர் ஒதுக்கீட்டளவு உட்பட மொத்தமாக நாளொன்றுக்கு 2.33 மில்லியன் கன மீட்டர் ஒதுக்கீடு செய்யக் கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இத்தகையஒதுக்கீடுகள் கடல் பகுதி யில் உள்ள PY-1 மற்றும் PY-3 சோதனைக் கிணறுகள் பலன் தருவதைப் பொருத்து இருக்கும். இத்திட்டங்கள் எண்ணெய்-இயற்கை எரிவாயு நிறுவனத்தால் செயல் படுத்தப்படுவதாக இருந்தது. ஆனால் தற்போது இந்த எண்ணெய் கிணறுகளில் சோதனை ஆராய்ச்சிப் பணி களை பன்னாட்டு எண்ணெய் நிறுவனங்கள்மூலம் மேற் கொள்வதற்காக, மத்திய அரசு நான்காவது சுற்று ஒப்பந்தப் புள்ளிகளில் சேர்த்துள்ளது. ஒப்பந்தப் புள்ளிகோரும் பட்டியலில் PY -3 திட்டத்தைச் சேர்த் திருக்கையில் PY-1 திட்டம் சேர்க்கப்படாமல் விடப் பட்டுள்ளது. PY-3 திட்டத்திற்கான ஒப்பந்தப் புள்ளியை விரைந்து இறுதியாக்கும்படியும், அடுத்த சுற்று ஒப்பந்தப் புள்ளியில் PY -1 திட்டத்தைச் சேர்க்கும்படியும் மத்திய அரசு கேட்டுக் கொள்ளப் படும். PY -1 மற்றும் PY -3 திட்டங்கள் தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி பெறுவது சரியாக பலன் அளிக்காமல் போகுமாயின், இவ்விரு திட்டங்களை யும், எண்ணெய்-இயற்கை எரிவாயு நிறுவனத்தின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும்படி மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்படும். இது தவிர இயற்கை எரிவாயு கண்டுபிடித்தலும், அதனைக்கொண்டு மின் உற்பத்தி செய்வதும் ஆகிய இவ்விரு பணிகளையும் ஒரு கூட்டுத்துறை நிறுவனம் மேற்கொள்வது பற்றிய சாத்தியக் கூறுகள் பரிசீலிக்கப்படும்,



## எதிர்கால வாய்ப்புகள்

இம்மாநிலத்தில் மேலும் விரைவான தொழில் வளர்ச்சியடைய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க அரசு உறுதி பூண்டுள்ளது. நாடு முழுவதும் பரவிவரும் பொருளாதார தாராளக் கொள்கை யினால் தொழில் மேம்பாடு அனைத்து கூறுகளையும் உள்ளடக்கி புதிய தொழில் கொள்கையை உருவாக்க விழையும் மாநிலங்களில் தமிழ் நாடு முதலிடம் வகிக்கிறது. புதிய தொழில் கொள்கையை உளப் பூர்வமாகவும் முனைப்பாகவும் செயற்படுத்துவதற் கான அனைத்து முயற்சிகளையும் தமிழக அரசு மேற்கொள்ளும். எதிர்காலத்தில் தொழில் முன்னேற் றத்திற்கு ஊக்கம் தருவதே மாநில அரசின் கொள்கையாக இருக்கும். தொழில் முதலீடுகள் ஆதாயம் தரத்தக்கதாக இருப்பதற்கு, மாநில அரசு அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வதுடன் தேவையான களப் பணியையும் சுற்றுச் சூழலையும் ஏற்படுத்திக் கொடுக்கும். இம்முயற்சியில் மாநில அரசு, தொழில் முன்னேற்றத்திற்குகுறிப்பாக தனியார் துறை, இணைத் துறை மற்றும் கூட்டுத் துறைக்கு அனைத்து ஊக்கமும் அளிக்கும். பங்கு மூல தனத்தைத் திரும்பப் பெறுதல் மற்றும் தனியார் மயமாக்கல் ஆகியவை தொடர்ந்து செயல்படுத்தப்படும். இம்மாநில அரசு, ஏற்கெனவே வலுவான அடிப்படை ஆதாரத்தைக் கொண்டுள்ள பிரிவுகளான தோல், மின்னணு, ஜவுளி, இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனம், உப்பு மற்றும் கடல் சார்ந்த பொருட்கள், மருந்துப் பொருள் தயாரிப்பது, வேளாண்மை முதலிய தொழில்களில் இம்மாநிலத்திலுள்ள தொழில் வாய்ப்பு களை முழு அளவில் பயன்படுத்த சிறப்பு கவனம் செலுத்தப்படும். மாநில அரசு மூலதன முதலீட்டை அதிகரிப்பதற்கான கோட்பாட்டில் தனியாரிடமிருந்தும் இம்மாநிலத்திற்குள் இருக்கும் நிதி நிறுவனங்களிட மிருந்தும், நம் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் முதலீடுகளைத் திரட்டுவதும் அடங்கும். அடிப்படை வசதிகளை அளிக்கும் பிரிவு களில் முதலீடுகளை செய்வதற்கு நிதியுதவி அளிக்கும்

பல்வேறு தனிப்பட்ட முகவரமைப்புகளில் உதவி நாடப்படும். இத்தகைய ஆற்றல்மிகு கொள்கைகள், புதிய முதலீடுகளை கவர்ந்து இம்மாநிலத்தை தொழில்மயமாக்குவதை விரைவுபடுத்தும் என்று நம்பப்படுகிறது.

164974
600 008.

D
V 211,31 N92
N92 2.22,3

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

## IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.